Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்

சேக்கிழார் அடிப்பொடி
முதுமுனைவர். தி.ந.இராமச்சந்திரன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்

சேக்கிழார் அடிப்பொடி

முதுமுனைவர் **தி.ந.இராமச்சந்திரன்**

தெய்வச் சேக்கிழார் சைவ சித்தாந்தப் பாடசாலை

5-D, செல்வம் நகர், தஞ்சாவூர்-7

2014

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூற்குறிப்பு

நூற்பெயர்	:	சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்
ஆசிரியர்	:	முதுமுனைவர் தி.ந.இராமச்சந்திரன்
மொழி	:	தமிழ்
முதற்பதிப்பு	:	2014
அளவு	:	1/8 தெம்மி
பக்கம்	:	224
நூற்பதிப்பு	:	தெய்வச் சேக்கிழார் சைவ சித்தாந்தப் பாடசாலை 5-D, செல்வம் நகர், தஞ்சாவூர்-7
நூல் அச்சாக்கம்	:	அகரம் தஞ்சாவூர் - 613 007. செல் : 9443159371.
விலை	:	ரூ. 150/-

சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர் தி.ந.இராமச்சந்திரன்
அவர்களின் சதாபிஷேக சிறப்பு வெளியீடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னுரை

சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர் தி.ந.இராமச்சந்திரன் அவர்கள் பல்வேறு கருத்தரங்குகளில் ஆற்றிய உரைகள், சமர்ப்பித்த கட்டுரைகள் ஆகியவற்றில் சில இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

கருத்தரங்க அழைப்பிதழ்களில் சேக்கிழார் அடிப்பொடியின் பெயர் இடம் பெற்றுவிட்டால் அவர் உரையைக் கேட்பதற்காகவே ஆர்வலர்கள் பலர் குழுமிவிடுவார்கள். அவருடைய உரைகளில் புதிய தகவல்கள் கிடைக்கும் என்று நம்பி வருவார்கள். அவர்கள் நம்பிக்கை வீண்போனதில்லை.

தன்னைத் தானே செதுக்கிக் கொணட பேரறிஞர் சேக்கிழார் அடிப்பொடி. இளமையிலிருந்தே ஆங்கில இலக்கியத்தில் ஈடுபாடு காட்டி வந்த இவரை கவிஞர் திருலோக சீதாராமின நட்பு தமிழ் நவீன இலக்கியத்தின் பாலும் ஈர்த்தது. இதனால் மொழிபெயர்ப்புக் கலையிலும், ஒப்பிலக்கிய ஆய்விலும் இவர் தடம் பதித்தார்.

ஒருமுறை மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்களைப் பற்றிப் பேசுவதற்கு கேரள பல்கலைக்கழகம் அழைப்பு விடுத்திருந்தது. இவரும் திருவனந்தபுரம் சென்று உரை நிகழ்த்தினார். ஆனால், அக்கூட்டத்தில் கலந்து கொள்ள பெரிதும் விழைந்த வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் வர முடியாமல் போயிற்று. எனினும் இவருடைய கட்டுரையின் படி ஒன்றினை வ.அய்.சு. அவர்கள் பெறுமாறு கொடுத்துவிட்டு வந்தார்.

பேராசிரியர் வ.அய்.சு. அவர்கள் ஊர் திரும்பிய உடனே விழாவைப் பற்றி விசாரித்துவிட்டு சேக்கிழார் அடிப்பொடியின் கட்டுரைப் படியை வாங்கி வைத்துக் கொண்டார். உடனே படிக்க நேரமில்லாமல் போயிற்று. பின் பொருநாள் கட்டுரையைப் படிக்க நேர்ந்தபோது அதன் கருத்தாழத்தில் பிரமிப்புற்ற வ.அய்.சு. அவர்கள் உடனே சேக்கிழார் அடிப்பொடிக்கு மிகப் பெரிய பாராட்டுக் கடிதத்தை எழுதியனுப்பினார். தாம் கருத்தரங்கில் பங்கு கொள்ள முடியாததற்கு வருத்தத்தையும் தெரிவித்திருந்தார். மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை பற்றிய அவ்வுரை இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

கருத்தரங்க அமைப்பாளர்கள் சில சமயம் இவர் மீது காட்டும் அதீத அன்பு இவருடைய உரையை பாதித்துவிடுவது உண்டு. மதுரை தியாகராயர் பொறியியல் கல்லூரியில் டாக்டர் ராதா தியாகராசன் ‘பெருமைமிகு இதிகாசங்கள்’ பற்றிப் பேச இவரை அழைத்திருந்தார். கூட்டம் தொடங்க தாமதமாயிற்று. கூட்டம் தொடங்கிய உடனே வரவேற்பாளர் இவரைப் பற்றியும் இவர் பெருமையைப் பற்றியும் பேச மிக நீண்ட நேரம் எடுத்துக் கொண்டார். இவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. இவர் இரவே மதுரையிலிருந்து தஞ்சை திரும்ப வேண்டியிருந்தது. இவர் பேசத் தொடங்கிய போது காலம் கடந்து விட்டதால் சுருக்கமாகவே உரையை முடித்துக் கொண்டார். பேசுபவருக்கு உரிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கால அவகாசம் கொடுக்காமல் அவரை அழைப்பதில் என்ன பயன்? பல கருத்தரங்குகளில் இவ்வாறு நிகழ்ந்து கொண்டுதான் வருகிறது. இவருடைய 'பெருமைமிகு இதிகாசங்கள்' கட்டுரை இந்நூலில் முழுமையாக இடம்பெற்றுள்ளது.

சேக்கிழார் அடிப்பொடிக்கு இளமையில் ஆங்கில இலக்கியத்தின் மீதிருந்த ஈடுபாட்டால் ஷேக்ஸ்பியரும், மில்டனும், ஷெல்லியும், கீட்ஸும் படைத்த இலக்கியங்கள் மனத்தில் பதிந்துவிட்டிருந்தன. எனவே, இவர் சைவசித்தாந்தத்தில் ஈடுபட்டு சைவ சாத்திரங்களைப் பயின்றபோதும் ஆங்கில இலக்கியங்களில் மிளிர்ந்த ஒத்த தத்துவங்களை இவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

சைவ சித்தாந்த மாநாடு ஒன்றில் 'ஷேக்ஸ்பியரும் சைவ சித்தாந்தமும்' என்ற தலைப்பில் இவர் பேசுகிறார் என்பதை அறிந்த சைவ சித்தாந்திகளின் புருவங்கள் உயர்ந்தன. இவர் உரையைக் கேட்டபின்னர், 'இவர் பயிலாத இலக்கியமே இல்லை போலும்' என்று சைவசித்தாந்தப் பெரும் பேராசிரியர் வஜ்ரவேலு முதலியார் அவர்கள் இவரை மனமாரப் பாராட்டி மகிழ்ந்தார்.

'தூய மில்டனாரின் துகளறு போதம்' என்ற தலைப்பும் இவருடைய புதுமையான அணுகுமுறைதான். தத்துவங்கள் உலகில் எங்கு தோன்றினாலும் அவற்றில் அடிப்படையாக மனித நேயமும், அன்புடைமையுமே அமையுமாதலால் இலக்கியங்களில் ஒப்புமைக் கருத்துகள் இருப்பன இயல்பே. ஆனால் ஆங்கில இலக்கியத்திற்கும் சைவ சித்தாந்தத்திற்கும் அமைந்த அறிஞர் பெருமக்கள் ஒருவரையொருவர் அறியார். இவர்களுக்குப் பாலம் அமைத்தவர் சேக்கிழார் அடிப்பொடியே. இவருக்குப் பெருமை சேர்த்த 'ஷேக்ஸ்பியரும் சைவசித்தாந்தமும்' 'தூய மில்டனாரின் துகளறு போதம்' என்ற இருகட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

பன்னெடுங்காலமாக ஆங்கிலேயரின் பிரித்தாளும் சூழ்ச்சியில் பிறந்த ஒரு கட்டுக்கதை 'ஆரியப் படையெடுப்பு' என்பதாகும். வடமொழி வெறுப்பையும், பிராமண துவேஷத்தையும் விதைத்தவர்களுக்கு இந்த ஆரியப் படையெடுப்பு கொள்கை ஒரு வரப்பிரசாதமாயிற்று. மாக்ஸ்முல்லர் என்பவர் திணித்த இக்கொள்கை அடிப்படையும் ஆதாரமும் அற்ற ஒன்றாகும். பின்னொரு சமயம் அவர் கிளப்பிவிட்ட பூதத்தை ஒடுக்க நினைத்தும் அவரால் முடியவில்லை. தம் தவறை நினைத்து அவர் வருந்தவே செய்தார்.

தமிழ்நாடு பிராமணர் சங்கம் 'தமிழக பிராமணர் வரலாறு' என்ற நூலைத் தொகுக்க முனைந்தது. 'ஆரியப் படையெடுப்பு' குறித்த கட்டுரையினை எழுத சேக்கிழார் அடிப்பொடியிடம் கேட்டுக்கொண்டது. மறுக்க முடியாத ஆதாரங்களுடன், பாபாசாஹேப் அம்பேத்காரின் வாதங்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடிப்படையில் இவர் 'வியத்தகு ஆரிய நாகரிகம்' என்று ஓர் அத்தியாயம் எழுதிக் கொடுத்தார். அதன் முழு வடிவமும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது.

சேக்கிழார் அடிப்பொடியாகத் தம்மை அறிவித்துக் கொண்டதிலிருந்து பெரியபுராணத்தை முற்றுமாக இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். பெரியபுராண நாயன்மாரின் பெருமைக்கு அவரவர் துணைவியாரே காரணம் என்பது இவருக்கு அனுபூதி ஆயிற்று. ஏனென்றால், இவருடைய பெருமைக்கு ஆதார சுருதியாக அமைந்தவர் இவருடைய துணைவியார் கல்யாணி அம்மையார் ஆயிற்றே! எனவே பெரியபுராணப் பெண்டிர் குறித்து ஓர் அற்புத உரையை, சென்னை சைவசித்தாந்தக் கருத்தரங்கம் ஒன்றில் ஆற்றி அனைவர் பாராட்டையும் பெற்றார். அவ்வுரை இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. இதுபோன்றே 'பெரியபுராணத்தில் பாசம்' என்ற தலைப்பில் சென்னை பல்கலைக்கழகத்தில் இவர் ஆற்றிய உரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது.

மகாகவி பாரதியார் பாடல்களில் கொண்ட ஆழ்ந்த ஈடுபாட்டால் இவர் விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய நான்கு பெரும் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நூல்களாக வெளியிட்டார். பாரதி நூற்றாண்டு விழாவில் பாராட்டும் பெற்றார்.

மகாகவி பாரதியாரின் பாடல்களைப் பற்றிய இவரது ஆய்வுநூல் 'வழி வழி பாரதி' ஆகும். அது பலரின் பாராட்டையும் பெற்ற நூல் ஆகும். தமிழக அரசு இவருக்கு பாரதி விருது கொடுத்து கௌரவித்தது.

சைவ சித்தாந்தியான இவருக்கு மகாகவியின் தத்துவஞானம் வசப்பட்டது. இந்நூலில் இடம்பெற்றுள்ள 'தத்துவஞானி பாரதியார்' என்ற கட்டுரை இதனை விளக்கும்.

கவிஞர் திருலோக சீதாராம் வாழ்ந்த காலத்தில் சேக்கிழார் அடிப்பொடி தி.ந.இராமச்சந்திரன் அவர்கள் அவருடைய 'Alter Ego' ஆகத் திகழ்ந்தார். கவிஞரின் பாடல்களை அவரைப் போன்றே இசைக்கும் திறனை இவர் பெற்றிருந்தார். அவர் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 'சிவாஜி' இதழ்களில் வெளியிட்டார். கவிஞரை முற்றும் அறிந்தவராக இவரைத்தாம் குறிப்பிடமுடியும். 'திருலோக சீதாராம் வாழ்வும் தமிழ்த் தொண்டும்' என்ற தலைப்பில் இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரை தமிழுலகம் அறிந்து கொள்ளத் தவறிய மாபெரும் கவிஞரை நமக்கு அடையாளம் காட்டும்.

இந்த நூல் சேக்கிழார் அடிப்பொடியின் சதாபிஷேக விழாவில் வெளியிடப்படுகிறது. இதிலுள்ள கட்டுரைகள் இவருடைய பன்முக ஆளுமையை வெளிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன. இந்நூல் ஓர் ஆய்வுச் சுரங்கம். அரிய கருவூலம். தமிழ் மக்கள் பயன்பெறத்தக்க அறிவு விருந்து. இதனைத் தமிழகம் பயன் கொள்ள வேண்டுகிறேன்.

– இரா சுப்பராயலு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருளடக்கம்

1.	ஷேக்ஸ்பியரும் சைவ சித்தாந்தமும்	7
2.	தூய மில்டனாரின் துகளறு போதம்	18
3.	வியத்தகு ஆரிய நாகரிகம்	35
4.	பெருமைமிகு இதிகாசங்கள்	80
5.	பன்னிரு திருமுறைகள் சாற்றும் அருட்செய்திகள்	111
6.	பெரியபுராணப் பெண்மணிகள்	132
7.	பெரியபுராணத்தில் பாசம்	145
8.	பண்கள்	163
9.	மனோன்மணீயம் சாற்றும் தத்துவச் செய்தி	176
10.	தத்துவஞானி பாரதியார்	193
11.	திருலோகசீதாராம் – வாழ்வும் தமிழ்த்தொண்டும்	211

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. ஷேக்ஸ்பியரும் சைவ சித்தாந்தமும்

சைவசித்தாந்த மகா சாமாஜம்
70 ஆம் ஆண்டு விழா, சிவகங்கை.

சைவ சித்தாந்தம் வல்ல சகமுணர் சான்றோராகும்
மெய்வளர் சுவீடன் பார்க்கும் மேதகு ஹாய்சிங்டன்னும்
பொய்தபு புலமை போப்பும் போற்றுகௌதி ஷோமரசும்
மையறு மோக்ஷமூலர் மாக்நிகோல் பார்னெட் மார்ஷல்

என்றசர் ஜானும் ஏன்ற குட்விலும் மில்டனாரும்
ஒன்றிய சகப்பிரி யன்னும் ஓங்குமேல் நாட்டாரோடு
நன்றறி புலமை சான்ற நம்பியாம் நல்லசாமி
துன்றிய ரமண சாஸ்திரியும் துதி எனது ஏற்பாராக.

சொற்களின் மர்மங்களை உணர்ந்த மஹான்கள் உதிர்க்கின்ற சொற்கள் வஜ்ர சரீரம் உடையன. இவற்றை சாதாரண வ்யாக்யானங்கள் ஊடுருவ மாட்டா. இவற்றின் பொருளை அனுபூதிமான்கள் மட்டுமே உணர்வர். அங்ஙனம் அனுபூதிமான்களால் உணர்ந்து இவை உரைக்கப்பட்டாலும், உரைக்கபட்டனவற்றையும் உணர்வதற்கு அனுபூதி தேவைப்படும். அனுபூதி இன்றி, அறிவுத் திறம் மட்டுமே கொண்டு அச்சொற்கள் மீது படை எடுத்தல் பயன் பயவாத வெற்றுச் செயலாகி ஒழியும். பெற்ற அறிவே இடையூறாக மூண்டு குறுக்குச் சுவராகப் படர்ந்துவிடும்.

கற்றபின் அதற்குத் தக நிற்றலே நெறியாகும். இதைத் தான் மகாகவி பாரதியார், 'யான் கற்ற கல்வி எல்லாம் பலிக்கச் செய்தான்' என்ற வாசகத்தில் சூசிப்பிக்கின்றார். பலித்த நிலையில் கற்பனவும் இனி அமையும்.

ஆணவமலம் சிவணிய ஆன்ம நிலையை, பொற்காசுப் புலவர் இப்படி வருணிக்கின்றார்;

...... செய்கை ஒன்றறியேன்
சிறுமை மடமை சினம் பொய் காமம்
விலங்குகள் வாழும் வேட்டைக் களமாய்
வெறியாட்டயரும் வேதனையல்லால்
உலைத்திடும் நெஞ்சத்து ஒளி சிறிதேனும்
ஒட்டுவதுண்டோ? உற்றதிங் கிருளே!

இவ்விருளை அருள்தான் கடிய முடியும். அருளைப் பெற்றால்தான் “செற்றில் என்? செஞ்சாந்து அணியில் என்?” என்று பேச முடியும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இச்சமநிலை பெற்றார் அரியதில் அரியர். அவ்வரியாரே வழிபடத் தக்கவர். ஆகவே ஷேக்ஸ்பியர் கூறுகிறார்:

"A man that fortune's buffets and rewards
Hath ta'en with equal thanks; blest are those
Whose blood and judgement are so well com-
mingled
That they are not a pipe for Fortune's finger
To sound what stop she please. Give me that
man
That is not passion's slave, and I will wear him
In my heart's core ay, in my heart of hearts."

விதி தந்த தாக்குதல்கள் மற்றவ்விதியே தந்த வெகுமதிகள் (buffets and rewards of Fortune) அனைத்துமே சரிநிகர் சமானமான உள்ளமொடு (hath taken with equal thanks) கொள்ளுமவன் இருக்குமிடம் யாதோ?

வேட்டபடி விதி ஊதும் குழலாக மாறாமல் (a pipe for Fortune's finger), உணர்வும் அறிவும் கலந்த அத்துவிதக் கலவையாய் (whose blood and judgement are so well commingled), திகழுமவன் இருக்கும் இடம் யாதோ? ராகவிராகங்களுக்குக் கொத்தடிமையாகாமல் (not passion's slave) ஒளிரும் ஒரு புருடன் இருக்குமிடம் யாதோ?

அன்னாளைக் காட்டுதி (show me that man). என் இதயம் அவன் சிங்காதனமாம். என் உள்ளார்ந்த ஆனந்தப் பொந்திடை வைத்தவனைப் பேணுவன். I will wear him in my heart's core, ay, in my heart of hearts.

"குலக்குமரா! காடுறையப் போ" என்று தசரதன் தன் தனயனிடம் சொன்னான்.

தாதை அப்பரிசு உரை செயத்
தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன்; இகழ்ந்திலன்
'கடன் இது' என்றுணர்ந்தும்
'யாது கொற்றவன் ஏவியது
அது செயல் அன்றோ
நீதி எற்கு' என நினைந்தும் அப்
பணி தலை நின்றான்.

பாதகங்கள் செய்திடினும் கொலை களவு கள்ளுப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பயின்றிடினும் நெறியல்லா நெறிபயிற்றி வரினும்
சாதிநெறி தப்பிடினும் தவறுகள் வந்திடினும்
தனக்கென வோர் செயலற்றுத் தான் அதுவாய் நிற்கில்
நாதன் இவன் உடல் உயிராய் உண்டுறங்கி நடந்து
நானா போகங்களையுந் தானாகச் செய்து
பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன்

அந்த அம்மையப்பன்.

இதுவே வேறின்மை காணப்பெறுதல் என்று விதந்து ஓதப்படும். அணுவாகிவிட்ட ஆன்மாவிற்கு, இவ்வேறின்மையை நல்குதற்கே 'மஹத்' அருள் உள்ளம் கொண்டுள்ளது.

இதற்காக,

அவையே தானே யாய்இரு வினையின்
போக்கு வரவு புரிய - ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

இங்ஙனம் ஆன்மாவோடு இறைவன் கொண்டுள்ள உறவை அத்துவிதம் என்ற சொல் கொண்டு, ஆன்றோர் துலக்குகின்றனர். முன்னம் யாம் மொழிந்தது போல இந்த அத்துவிதம் என்ற சொல்லும் வஜ்ர சரீரம் கொண்ட ஒரு சொல்லாம். இதன் பொருளை ஷேக்ஸ்பியர் தரும் வெளிச்சத்தில் காண முனைவோம்.

"ந" என்பதும் "துவைதம்" என்பதும் சேர்ந்து "அத்வைதம்" என்று ஆகியிருக்கிறது.

"நஞ்ஞுக்கு, சாமியம்-இன்மை-பேதம்-சிறுமை-இழிவு-மறுதலை, என்னும் ஆறு பொருள்கள் உண்டு." இது சப்தகற்பதுருமம் நுவலும் செய்தி.

சாமியம் - சாதிருசியம் என்பன ஒரு பொருட்சொற்கள். இவற்றிற்குச் சரியான தமிழ்ச் சொல் "அன்மை" என்பதாகும்.

மேலே கூறப்பட்ட ஆறு பொருள்களுக்குள்ளே நஞ்ஞுக்கு, ஏகான்ம வாதியரால் இன்மைப் பொருளும், மத்துவர்களால் பேதப் பொருளும், சிவாத்துவிதிகளாலும், சைவசித்தாந்திகளாலும் சாமியப் பொருளும் கொள்ளப்படுகின்றன. சாமியப் பொருளே அன்மைப் பொருளில் செல்வதாகும்.

"நஞி வயுக்த மந்ய சதிருசாதி கரணே
ததாஹ்யார்த்த கதி:"

என்னும் பாரிபாஷேந்துசேகர இலக்கணத்தால் இது உணரப்படுகின்றது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பர் காசிவாசி செந்தி நாத ஐயர் அவர்கள். இந்த பரிபாஷையை விளக்க வந்த ஐயர் கூறுவதாவது:

" 'அநசுவத்தைக் கொணர்க' என்று தேவதத்தனுக்கு யஞ்ஞதத்தன் ஆஞ்ஞாபிக்குங்கால் தேவத்தத்தன் (அநசுவம்) – அதாவது குதிரை அல்லாதது மண்ணாங்கட்டியும் ஆகலாம் என்று கொண்டு, அம்மண்ணாங்கட்டியை எடுத்துக் கொடுப்பான் அல்லன். பின், குதிரை அல்லாததாயும் – அதாவது – குதிரையுடன் பேதப்பட்டதாயும், எனினும் குதிரை செய்யவல்ல பணி செய்ய வல்லதாயும், அந்தக் குதிரையின் தோற்ற முதலியன ஒருவாறு ஒப்பதாயும், அதாவது, அபேதமாயும் உள்ள கோவேறு கழுதையை கொணர்ந்து விடுவன் எனப் பொருள் கொள்ளப்படும்."

இங்ஙனம் வேறாயும், வேறு அன்மையாயும் இருக்கும் அன்மைப் பொருளே சைவ சித்தாந்திகளால் அத்து விதத்தில் உள்ள அகரத்துக்குப் பொருளாகக் கொள்ளப்படுகின்றது. மேலே கூறப்பட்ட ஆறு பொருள்களில் முதற்கண் நிற்கும் பொருள் இதுவே. சாமியம் என்றும், சாதி ருசியம் என்றும், அன்மைப் பொருள் என்றும் பேசப்படும் இப்பொருளிலேயே இது விளக்கப் படுகின்றது. பதஞ்சலி மஹாபாஷ்யகாரரும் அன்மைப் பொருளையே எடுத்து ஆண்டிருக்கின்றார் என்று கூறுகிறார் ஐயர். இந்த சாமியப் பொருளே முண்டக உபநிடதத்திலும் கொள்ளப்படுகின்றது என்றும் அவர் அறிவிக்கின்றார்.

யஜுர் வேதமும், சுவேதாசுவதர உபநிடதமும், "ஏகோ ருத்ரோ நதுவிதீயாய தஸ்து!" (உருத்திரர் ஒருத்தரே; அவர் அத்துவீதியராய் இருந்தார்) என்று பேசுகின்றன. மேலும், அத்துவிதம் என்ற சொல்லே பிறிது காரணம் வேண்டாமல் முதல்வன் உயிர்களோடு பிரிப்பின்றி நிற்றலை உணர்த்தி நிற்கும். இச்சொல் பிரிவு அற்றதான அரிய ஒருமையை உணர்த்தும் திறன் உடையது. இதை "பிரிவு அரும் அத்துவிதம் ஆகும் சிறப்பினது" என்பர் உமாபதி சிவாசாரியார்.

அத்துவிதம் என்ற சொல்லில் வருகின்ற அகரம், அன்மை–இன்மை–மறுதலை என்கின்ற மூன்று அர்த்தங்களை உணர்த்த வல்லதாகும். இதற்கு நூலாசிரியர்கள் அப்பிராமணன், அமலம், அநீதி என்கிற மூன்று சொற்களை உதாகரிக்கின்றனர். இவற்றுள் அப்பிராமணன் என்னும் சொல், பிராமணன் அல்லாத ஏனையோரைக் குறிக்காது. ஆனால் பிராமணனாயிருந்தும் பிராமணத்தன்மை இல்லாமையைக் குறிக்கும். இங்கு அகரம் அன்மைப் பொருளில் வந்ததைக் காணலாம்.

அமலம் என்ற சொல்லில் உள்ள அகரம் அடியோடு மலத்தன்மை இல்லாமையைக் குறிப்பதாகும். இங்கு அகரம் அபாவமாம் இன்மைப் பொருளில் வந்தது. அபோஜனம் என்பது உணவின் அபாவம் என்பர் ஐயர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதாவது அபோஜனம் என்பது உபவாசம் என்ற பொருள் தரும். உணவு இன்மை இங்கு கொள்ளப்பட்டது.

அகரம் மறுதலைப் பொருளில் வருங்கால் அதர்மம் என்பது தருமத்துக்கு மறுதலையாகிய பாவம் எனப் பொருள்படும். அநீதி என்பது நீதியின் மறுதலை. இதை விளக்க வந்த John H Piet, "The one (நீதி) means "righteousness" and the other "aniti" (அநீதி) unrighteousness. One is the exact opposite of the other. This idea is used in English in such words as typical and atypical, where the "a" stands for the contrary idea. Atypical is not a mere negation of typical but a positive statement in which the presence of variant qualities is postulated".

Piet அவர்கள் மறுதலைக்கு ஆங்கிலத்தில் உதாரணம் தந்தார். அன்மைக்கும், இன்மைக்கும் அவர் எந்த உதாரணமும் தரவில்லை. இன்மைக்கு இணையாக "amoral" என்ற சொல்லைச் சொல்லலாம் என்று தோன்றுகிறது. Amoral does not mean immoral; it only means non-moral.

அன்மைக்கும் ஆங்கிலத்தில் ஓர் உதாரணம் காண்பம். ந + துவைதம், அத்வைதம் ஆனாற்போல் ந+நாமம், அநாமம் ஆயிற்று. நாமம் என்ற வடசொல்லுக்கு இணையான இலத்தீன் சொல் nomen என்பதாம். இங்கு அநாமம் என்பது anomen என்று நிற்கும். இதனடியாகப் பிறந்ததே anonymous என்ற சொல்லாம். அனாமதேயம் என்பதில் வருகின்ற அகரம் அன்மைப் பொருளில் வருவதாக எமக்குத் தோன்றுகிறது.

அன்மைப் பொருளுக்கான விளக்கத்தை இன்னம் சற்று ஊன்றிக் காண்பம். துவிதம் என்பது எண்ணுப் பெயர். It refers to number. துவிதம் என்னும் எண்ணுப் பெயருக்கு முன் அகரம் எய்தி, அத்துவிதம் என்று நிற்குங்கால், அது இன்மை, மறுதலைப் பொருள்களில் நிற்காமல் பொதுமையில் நிற்கும். இதை ஓர் உதாரணம் கொண்டு விளக்கலாம்.

"என்னிடம் இரண்டு மாங்கனிகள் இல்லை" என்று நான் சொன்னால், இதற்குப் பின்வருமாறு பல பொருள்கள் கூறலாம்.

1. என்னிடம் மூன்று, நான்கு முதலிய அநேக மாங்கனிகள் உள.

2. என்னிடமிருப்பது ஒரு மாங்கனியே.

3. என்னிடம் மாங்கனியே இல்லை. அதாவது, என்னிடம் ஒரு மாங்கனிகூட இல்லாததால் இரண்டு மாங்கனிகள் இல்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆகவே, இரண்டில்லை என்றால், இருக்கும் மாங்கனி ஒன்றுதான் என்று வரைவு படுத்திப் பொருள் கொள்ளுதற்கு இடம் இல்லை. ஆகவே தான் J.M. நல்லசாமிப்பிள்ளை அவர்கள் "Advaita means non-dualism and not monism" என்று கூறினார். ஆகவே, ஏகான்ம வாதிகள், அத்துவிதம் என்பதற்கு இன்மைப் பொருள் கூறி ஒன்று என்பதும், மத்துவர்கள் மறுதலைப் பொருள்கூறி இரண்டு என்பதும் ஒவ்வாதாம். அத்துவிதம் என்ற சொல் மாத்திரையானே, ஒரு பொருள் என்று கொள்ளுதல் பொருத்தமுடைத்தன்று.

தானே தன்னை ஒன்று என்று கருதவும் வேண்டுமோ? வேண்டாம். வேண்டாமையின், அவ்வாறு கருதும் பொருள் வேறு உண்டு என்று பெறப்படுகின்றது.

ஒன்று என்றது ஒன்றே காண்; ஒன்றே பதி, பசுவாம்
ஒன்று என்ற நீ பாசத்தோடு உளை காண்

என்பது மெய்கண்டார் அருள் வாசகம்.

கடவுளோடு ஆன்மா கொண்டுள்ள உறவு பேத, அபேத, பேதா பேதங்களில் ஒன்றாம் என்று கொள்ளுகின்றனர் சிலர்.

மத்துவர் கொள்கை பேதம்.
சங்கரர் கொள்கை அபேதம்.
இரோமாநுஜர் கொள்கை பேதாபேதம்.
மெய்கண்டார் கொள்கை யாது?

புறச்சமயத்தவர்க்கு இருளாய், அகச்சமயத்து ஒளியாய்
புகல்அளவைக்கு அளவாகி பொன்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய், இருள்வெளிபோல் பேதமும், சொல் பொருள் போல்
பேதா பேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய் உடல் உயிர், கண், அருக்கன்,
அறிவு ஒளி போல் பிறிவரும் அத்துவிதமாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்கல் உற்றாம்.

சிவப்பிரகாசம் செப்பும் செய்தியிது.

மாயா இயந்திர தனுவினுள் இயங்குகின்ற ஆன்மா சுதந்திரஹீனன் 'அதாவது, ஒரு செயலைச் செய்வதற்கோ' அல்லது செய்யாமல் இருப்பதற்கோ, ஆன்மாவிற்குச் சுதந்திரம் இல்லை என்பதில்லை இதன் பொருள். வினை தொழில், கருமம் செய்ய, ஆன்மாவிற்ச் சுதந்திரம் உண்டு. இதை "Soul is the mistress of her choice" என்று ஷேக்ஸ்பியர் கூறுவார். ஆனால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வினையைச் செய்த பிறகு, வினை விளைவைப் புசிக்காமல் இருப்பதற்கு அதற்குச் சுதந்திரம் இல்லை.

சத்தும் அசத்தும் சிவணிய சதசத்து நிலையே ஆன்ம நிலை. இது சார்ந்ததன் வண்ணமாய் இருக்கும். பாசத்தால் பந்திக்கப்பட்டிருப்பதால், இதற்குச் சுதந்திர ஹீனம் ஏற்பட்டுள்ளது. பாசப்பட்டுக் கிடப்பதாலே ஆன்மாதி பசு என்று பேசப்படுகிறது. "ஒன்றே பதி" என்ற மெய்கண்டார், "ஒன்று என்ற நீ பாசத்தோடு உளை காண்" என்றும் அருளியுள்ளார். பாச நீக்கத்திற்குத் தரப்பட்டதே பதி வழிபாடு. அந்நியம் இன்மை உணர்தலே அரன் கழல் அடைதற்கான உபாயம்.

தன்னை நேசிக்கும் பசுவை, பதியும் நேசிப்பன். நேயத்தே நிற்கும் நிமலன் அவன். தாள் நயந்த தலைவியை தோள் நயக்கும் தலைவன் காதலிப்பன். இந்தக் காதல் இரு திறப்பட்டதாகவே இருக்கும். அன்பெனும் பிடியில் அகப்படும் மாமலையாம் இறைவனை பக்த பக்திமான் என்று பாகவதம் பேசும். இந்த நேசத்தை ஷேக்ஸ்பியர் வாசகம் கொண்டு,

"So they loved as love in twain" என்று வருணிக்கலாம்.

கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி, உடந்தையுடனே நின்றும்
எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக் கொண்டே நின்றும்

ஆன்மா செயல்பட்டு வந்தால், சித்தமும் கரணமும் சித்திலே ஒத்துப்போம். தற்போதம் தொலைந்து, சிவபோதம் தலைப்படும். இந்நிலையை,

"So they loved as love in twain,
Had the essence but in one"

என்ற ஷேக்ஸ்பியர் வாசகம் தெளிவுபடுத்தும்.

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்த ஆன்மாவிற்குப் பிண்டத்தில் வேலையில்லை. அத்துவிதத் தித்திப்புக் கலப்பு அதற்குச் சித்தித்துவிடும். என்றாலும், முக்தியிலுங்கூட மும்முதல் உள என்னும் சைவ சித்தாந்தம். முக்தி நிலையிலும் பதி, பதிதான்; பசு, பசுதான். அப்படியாயின் இப்பசு–பதி கலப்பை எப்படித்தான் பேசுவது? இது அத்துவித கலப்பு என்று மட்டுமே பேசப்படும்.

அத்துவிதம் என்னும்சொல். தானே, வேறு காரணம் வேண்டாது வேறன்மையை உணர்த்தி நிற்கும். வேறன்மை does not mean non-difference; but only non-separateness. இந்நிலையை ஷேக்ஸ்பியரைப் போல் துல்லியமாக விளக்கவல்லார் யாரும் இல்லை போலும்! அவர் கூறுவதாவது:-

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"Two distincts; division none."

திருவாளர் நல்லசாமிபிள்ளை கூறும் வாசகத்தையும் உடன் வைத்து ஓதுவோம்.

"The word (advaita) does not mean one, or non-existence of two or more, but is used to express the peculiar relation that exists between two distinct things which can become one..."

இவ்விருவர் மரபில் வருகின்ற நாம் கூறுவதாவது:- Advaita relationship is not one of one oneness; but one of oned togetherness. It is losing oneself in a togetherness.

ஷேக்ஸ்பியர் பாஷையில் வருணிப்போம்:-

"Thou and I am one."

Advaitam postulates a unity, a union despite differences.

பிள்ளை அவர்கள் கூறுவதாவது:-

"Though in all these cases, an identity is perceived, a difference in substance is also felt. It is this relation which could not be easily postulated in words, but which may perhaps be conceived, and which is seen as two (Dvaitam) and at the same time as not two (Advaitam). It is this relation which is called advaitam, 'a unity in duality' and the philosophy which postulates it, the Advaita philosophy."

சைவசித்தாந்தத்தின்படி அத்துவிதம் என்பது ஓர் உறவு. ஆன்மா அத்துவிதப்பட்டிருப்பது. கேவல நிலையிலும், சகல நிலையிலும், முத்தி நிலையிலும் ஆன்மா பூண்டிருப்பது அத்துவித உறவே. கேவல, சகல நிலைகளில் ஆன்மா ஆணவ மலத்தோடு கட்டுண்டு கிடக்கும். ஆணவ மலம் என்பதை the ancestral blindness of the soul என்று வருணிக்கலாம். ஆணவ மலத்தோடு கூடியிருப்பதோ, பிரிந்திருப்பதோ ஆன்மாவின் சுதந்திரத்திற்கு விடப்பட்ட விஷயம். Soul is the mistress of her choice. இருட்பாவையாம் ஆணவ மலத்தின் சக்தி பலதிறப்பட்டது. மாசறு காட்சி வேட்கின்ற ஆன்மாவே, இருளைக் கடக்க எண்ணம் பூண்டு செயல்படத் தொடங்கும். வள்ளுவர் பெருமானும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு

என்று அருளியுள்ளார். தவராஜ யோகியரான தாயுமானவர்,

ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோடு அத்துவித மாகுநாள் எந்நாளோ?

என்றார்.

தாயுமானவர் என்ற சொல்லைக் கவனியுங்கள். தாயும் ஆனவர் என்பதே அத்துவித நிலைதான்.

அத்துவிதம் என்று சொல்லுக்குப் பொருள் ஒன்றா, இரண்டா என்றால், ஒன்று என்றோ, இரண்டு என்றோ, ஒன்றும் இரண்டும் இன்று என்றோ சொல்ல முடியாது. ஆகவேதான் ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்று மிரண்டுமாகாமல் என்றிந்நிலையை சர்வ ஜாக்ரதையுடன் பேசுகிறார் அருள்நந்தி சிவாசார்யர்.

அத்துவிதம் என்ற சொல்லை எண் என்ற சிறையில் இருத்தி வைக்க முடியாது. ஏகம், இரண்டு என்னாமல் சும்மாயிரு என்கிறார் ஒழிவிலொடுக்க ஆசிரியர். கேட்பான் புகில் அளவில்லை, கிளக்க வேண்டா என்ற ஆளுடைய பிள்ளையார் மரபில் வந்தவர் அவர். ஆகவே ஏகம், இரண்டு என்னாமல் சும்மாயிரு என்றார் அவர்.

ஏன் அங்ஙனம் சும்மா இருத்தல் வேண்டும் என்பதற்கான காரணங்களை ஷேக்ஸ்பியரிடம் தெரிந்து கொள்ளலாம். எண் என்ற பேச்சுக்கு இங்கு இடமில்லை என்பதே ஷேக்ஸ்பியரின் சித்தாந்தம்.

"Two distincts, division none
Number there in love was slain."

எண் என்பது இங்கு மாண்டு போகிறது; இல்லை, இல்லை, கொலையுண்டு போகிறது.

"தந்தது என் தன்னை கொண்டது உன் தன்னை"
என்பதை அடியொற்றிச் சொல்லுமா போலே, "Either was the other's mine" என்கிறார் ஷேக்ஸ்பியர்.

பதியினைப் போல் பசு, பாசங்களும் அநாதி. ஆகவே பாசத்தை அறவே ஒழித்தல் என்பது இல்லை. பாச க்ஷயமே உண்மை. பாச க்ஷயம் ஏற்பட பசுத்வம் நசுக்கப்படும். அதாவது பொருளுக்குப் பண்டு இருந்த தன்மை நசுக்கப்படுகிறது. இதை "Property was thus appalled" என்று பேசுகிறார் ஷேக்ஸ்பியர். Property என்பது பொருளின் விசேஷகுணம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பசுபோதம் நீங்கப் பெற்ற ஆன்மா புதிய ஆன்மா, "இன்று புதிதாய்ப் பிறந்தோம்" என்ற மஹாகவி பாரதியாரின் வாசகம் பொருள் பொதிந்தது. "என்னைப் புதிய உயிராக்கு" என்று அவர் வேண்டுவார். பழையது கழிய புதிது பிறக்கும்.

"Property was thus appalled that the self was not the same" என்பது ஷேக்ஸ்பியரின் கூற்று.

இந்த அத்துவிதம் ஒன்று என்றோ, இரண்டு என்றோ பேசப்படாது. பின் எப்படி? ஷேக்ஸ்பியர் கூறுகிறார்.

"Single nature's double name
Neither two nor one was called."

மதியில்லார் இதை ஆராயத் தலைப்பட்டால் இடருற்று, தட்டுண்டு, மாழாந்து போவர். "Reason, in iteself confounded" என்பதே ஷேக்ஸ்பியர் வாசகம். பதி, பசுக்கள் இரண்டாக இருந்தன. அத்துவிதத்தில் இரண்டற்றநிலை. என்றாலும் பசு பதியாகிவிடவில்லை; பதி பசுவாகிவிடவில்லை. அப்படியோர் பேரதிசயக் கலப்பு.

"Reason in itself confounded
Saw division grow together
To themselves yet either neither
Simple were so well compounded"

என்பதே ஷேக்ஸ்பியர் கண்டுணர்ந்த காட்சி.

இரண்டாக இருந்த பொருள்கள் ஒன்று போல் ஆகிவிட்டன. ஒன்றுபோல் தோற்றம் என்பதே ஷேக்ஸ்பியர் தரும் குறிப்பு.

"How true a twain
Seemeth this concordant one!"

இந்தக் கலப்பே அத்துவிதக் கலப்பு.

பெத்த நிலையில் முதல்வன் உயிராய் ஒற்றுமைப்பட்டு நிற்பதும், முக்தி நிலையில் உயிர் சிவமாய், ஒற்றுமைப்பட்டு நிற்றலும் அத்துவித சம்பந்தம். இதன் நுணுக்கத்தை "அகக் கண் ஒரு பதினாயிரம் உடையார்" என்று கவிவாணர் கோலரிட்ஜால் போற்றப்படும் ஷேக்ஸ்பியர் மிக அழகாகக் காட்டியுள்ளார். இந்த அத்துவிதக் கலப்பு காலாதீதமானது. ஆகவே, "To eternity doth rest" என்றிதை ஷேக்ஸ்பியர் விளக்குகிறார்.

பாசத் தோற்றத்துக்குத் தொடக்கம் இல்லை. என்றாலும் பாச க்ஷயத்திற்குத் தோற்றம் உண்டு. அந்த வகையில் பாசத்திற்கு முடிவு உண்டு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முக்திக்குத் தோற்றம் உண்டு, ஆனால் அதற்கு முடிவில்லை. இதை, the soul's state of bondage has no beginning; but has an end, while the soul's spiritual freedom has a definite beginning, but no end என்பார் ரமண சாஸ்திரிகள்.

ஆகவே அத்துவித முத்தி காலம் கொன்ற விருந்து காண்!

"To eternity doth rest" என்பது ஷேக்ஸ்பியரின் தரிசனம்.

சைவசித்தாந்தம் வாழ்க! ஷேக்ஸ்பியர் வாழ்க!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. தூய மில்டனாரின் துகளறு போதம்

ஷேக்ஸ்பியர் ஆங்கிலமொழியின் ஒப்பற்ற ஒரு தனிக்கவிஞன் எனபது அறிஞர் பல்லோரின் துணிபு. என்றாலும், ஷேக்ஸ்பியருடைய கீர்த்தியையும் உண்டு தேக்கெறிந்த சீர்த்தியை உடையவன் மில்டன் என்பது எம்முடைய மதம். கீர்த்தி புகழ்; சீர்த்தி மிகு புகழ். (தொல்காப்பியம்)

உபநிடதங்கள் இதிகாசங்களைவிட எவ்வளவு உயர்வு உடையனவோ, அவ்வளவு உயர்வு ஷேக்ஸ்பியரைக் காட்டிலும் மில்டனுக்கு உண்டு என்ற நம் கொள்கையைத் தஞ்சை மில்டன் கழகத்தில் நிறுவியிருக்கிறோம்.

தந்த தலைப்பில் நுழையுமுன், உபோற்காதமாக, அனுபவத்தில் யாமறிந்த உண்மை ஒன்றை இங்குப் பிரகடனம் செய்தல் அவசியமாக இருக்கிறது. கிறித்துவர்தம் வேதமாகிய விவிலியம் கிறித்துவர்களால் முறையாக அறியப்படவில்லை. குறிப்பாக கிறித்துவ தமிழ் அன்பர்கள் விவிலியத்தில் ஆழங்கால் படவில்லை. யாரையும் தாக்கிப் பேசுதல் நம் கருத்துமன்று; கடனுமன்று. எம்மதமும் நமக்குச் சம்மதமே. ஆனால் எம்மதமும் சம்மதமேயன்றி சமமதம் அன்று என்பதே எமது கோட்பாடு.

கிறித்துவர்களுக்கு விவிலியம் விளங்காத நிலைக்கு எடுத்துக்காட்டாக இரண்டு செய்திகள் செப்புவோம்.

மத்தேயு சுவிசேஷம் அதிகாரம் மூன்றில், “John had his rainment of Camel’s hair and a leathern girdle about his loins; and his meat was locusts and wild honey” என்றொரு வாசகம் வருகின்றது. இந்தியா, இலங்கை வேதாகமச் சங்கத்தார் வெளியிட்டிருக்கும் பரிசுத்த வேதாகமத்தில், இந்த வாசகத்தை “இந்த யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக் கொண்டிருந்தான்; வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தது” என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. “Locusts and wild honey” என்பதை “வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும்” என்று ஆக்கியிருக்கிறார்கள். இது பிழைபட்ட பெயர்ப்பு. Locusts என்ற சொல் வெட்டுக்கிளியையும், Locust-bean என்ற தானியவகை ஒன்றையும் குறிக்கும். W.H.Emmerson என்பார் ஓர் சிறந்த விவிலிய ஆராயச்சியாளர். யோவான் உணவு என்ன? என்பதை அவர் விளக்கி இருக்கிறார். “The sole furnishings of his cave shelter were a pot filled at intervals from the nearer water course, and one or two other earthen vessels to hold his meagre store of dried pods from the locust or carob tree, called “St.John’s bread” by

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

pilgrims in later centuries, and wild honey from honeycombs he found among the rocks" என்று Footprints of Jesus என்ற தம் நூலில் கூறியுள்ளார். ஆகவே locust என்பது தினை போன்றதொரு தானியம். யோவான் உணவு தேனும் தினைமாவும் ஆகும். இது பற்றிக் கந்தர்வ கானம் எனும் சிறுகாப்பிய ஆங்கில மொழிபெயர்ப்பில் நாம் பண்டே கூறி உள்ளோம். ஆண்டுக் காண்க.

மற்றும் ஒரு நறுக்கு. மத்தேயுவின் சுவிசேஷம், அதிகாரம் 19இல் "And again I say unto you, it is easier for a camel to go thro' the eye of a needle, than for a rich man to enter into the kingdom of God" என்ற வாசகம் காணப்படுகிறது. இதைத் தமிழில் "மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது, ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" என்று பெயர்த்திருக்கிறார்கள். இதுவும் பிழைபட்ட மொழி பெயர்ப்பாகும்.

கிறித்து பேசிய மொழி Aramaic என்பது. பின்னர் அப்பேச்சுக்கள் எபிரேயத்திலும் கிரேக்க மொழியிலும் பெயர்த்துப் பொறித்து வைக்கப்பட்டன. சொல்லின் பொருள்மொழி பெயர்ப்பின் விபரீதத்தால் சிதைந்தும் கெட்டும் போகும். கிறித்து பிரான் கூறியதுதான் என்ன?

ஆடை நெய்ய நூல் வேண்டும். கோணிகளைத் தைக்கச் சணற் கயிறு வேண்டும். தேர் இழுக்க தேர்வடம் வேண்டும். நூல், கயிறு, தேர்வடம் அனைத்தும் ஓர் இனந்தான். ஆடை தைக்கும் ஊசியில் கயிறு நுழையாது; தேர்வடம் நுழையவே நுழையாது.

தேர்வடம் போல் பெருத்த, அழுத்தமான கயிற்றையும் ஒட்டகத்தையும் குறிக்கும் ஒரு கிரேக்கச் சொல்லை (Kamilos) (rough rope) சரியாகப் புரிந்து கொள்ளாததால் அனைத்து மொழிபெயர்ப்பிலும் விபரீதம் நேர்ந்துவிட்டது. பருத்த கயிறு எங்ஙனம் ஊசியின் காதில் நுழைய முடியாதோ அங்ஙனமே செல்வத்தால் அகங்கரித்திருப்பவன் இறைவன் பதங்களில் நுழைய முடியாது என்பதே கிறித்து பிரான் அருளிய வாசகத்தின் பொருள்.

பல சொல்ல நாம் காமுறவில்லை. விவிலியச் செம்பொருளை கிறித்துவர்கள் முறையாக உணரத் தலைப்படாத காரணத்தினால்தான், மாமுனி மில்டன், கிறித்துவ சித்தாந்த விளக்கம் வரைந்தான். De Doctrina Christiana என்ற சிறந்த நூலை மில்டன் இலத்தீன் மொழியில் (தேவபாஷையில்) எழுதி வெளியிட்டான். கிறித்துவ மதக் கோட்பாடுகள் அனைத்தையும் பேணிக்காக்கும் பெட்டகம் இந்நூல். இந்நூலில் காணப்படும் பல உண்மைகள் சைவ சித்தாந்தத்தை அரண் செய்வனவாக இருக்கின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தூய மில்டனாரின் துகளறு போதம் என்று நாம் எடுத்துக்கொண்ட தலைப்பில், இறையருள் துணைகொண்டு இழிவோம்.

De Doctrina Christiana என்னும் நூலில், மில்டன் "Under the name of Christ are also comprehended Moses and the prophets, who were his forerunners and the Apostles whom he sent" என்று குறிப்பிடுகிறான். கிறித்து என்ற நாமம் மோஸஸையும், முன்னோடிகளான தீர்க்கதரிசிகளையும், அப்போஸ்தலர்களையும் குறிக்கும் என்றான். அது போலவே துகளறுபோதம் என்ற சொற்றொடர், அப்பெயர் கொண்டு இலங்கும் நூலையும் அந்நூலுக்குப் பல்லாண்டுகள் முன்பே நம்மை உய்விக்கத் தோன்றிய திருமுறைகளையும், திருமறைகளையும், அதாவது, தோத்திரங்களையும் சாத்திரங்களையும் குறிக்கும் என்று கொள்ளுகிறோம்.

துகளறு போதம் என்பது குற்றமாகிய துகள் அறுதற்கு ஏதுவாகிய போதம் என்று பொருள்படும். குற்றம் என்பது உயிர்க்குற்றமே. அதாவது ஆணவ மலமே. இத்தொல்லை மலம் அறுதற்கு ஏதுவாகிய சிவஞானத்தை விளைவிப்பது துகளறு போதம் ஆகும்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் உவமையிலா கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம் என்றெல்லாம் சேக்கிழார் பெருமானால் பேசப்படுவது துகளறு போதம் என்றே கொள்ளுகிறோம்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் உவமையிலா கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம் தவமுதல்வர் சம்பந்தர், தாம் உணர்ந்தார் அந்நிலையில், என்பது சேக்கிழார் திருவாக்கு.

உணர்ந்தவர் ஆளுடைய பிள்ளையார். கிறித்துவும் பிள்ளையாரே; ஆளுடைய பிள்ளையாரே. ஆளுடைய பிள்ளையார் என்ற திருநாமத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வைத்துப் பேசுமாப் போலே, Milton, கிறித்துவைப் பற்றிக் குறிப்பிடும்போது "This man of men, attested Son of God" என்று துறக்க மீட்சியில் குறிப்பிடுகிறான்.

சிவஞான சம்பந்தரின் ஞானம் விளங்குதல் போல் கிறித்துபிரானின் ஞானம் விளங்குதலை "With more than human gifts from Heaven adorned perfections absolute, grace divine and amplitude of mind to greatest deeds" என்று குறிப்பிடுகிறான்.

With more than human gifts from Heaven, என்ற சொற்கள் பொற்றாளம், முத்துச்சிவிகை முதலியவற்றை நினைவு கூர்வன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உவமையிலா கலைஞானம் என்பது perfection absolute graces divine என்பன, சிவஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்; க்ஷீர வடிவில் கிடைத்த அருள்ஞானம் ஆகியவை.

Amplitude of mind to greatest deeds, அனல் புனல் வாதங்களில் வெற்றி, கூன் நிமிர்த்தியது, என்பைப் பெண்ணாக்கியது முதலியவற்றைக் குறிப்பன.

மேலே நாம் கூறிய மில்டனுடைய அடிகள் சிவனடியே சிந்திக்கும் என்று தொடங்கும் பெரியபுராணப் பாடலுக்கு ஆங்கிலத்தில் விளக்கம் அமைத்துத் தருகின்றன. Milton தந்த விளக்கத்திற்கு விளக்கம் தர இப்போது நேரமில்லை. ஆகவே இவ்வளவில் இதனை நிறுத்திக் கொள்வோம்.

மில்டன் வாழ்க்கை வரலாற்றை சாங்கோப சாங்கமாகப் பேச நேரமில்லை. சுருக்கமாக ஓரிரு குறிப்புகள் மட்டும் தருகிறோம்.

தன் பிள்ளைப் பிராயத்தில், பள்ளியில் பயிலும்போதே, பாக்கள் பல தொடுத்துப் பரமனைப் பரவி வந்தவன் மில்டன். தேர்ந்த கல்விமானாக, கல்லூரியை விட்டு வந்த சில ஆண்டுகளில் அரசியலில் ஈடுபட்டான். தன் முழு நேரத்தையும் அரசியலுக்குத் தத்தம் செய்தான். ஆண்டுகள் பல உருண்டோடின. எந்த முடி ஆட்சியை, வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் வெட்டிப் போடுவதில் தன் காலமெல்லாம் செலவிட்டானோ, அம் முடி ஆட்சி, மண்ணின் முழையிருட்டில் மக்கி மடியாமல், ஜீவ சத்துப் பெற்று, மண் கீறி, முளைவிட்டு, மென் தண்டெடுத்துப் பின் கப்பும் கிளையுமாகிப் பூத்துக் குலுங்கத் தொடங்கியது. சிறிது காலம் சிறையிருந்தான் மில்டன்.

பலர் பழி வாங்கப்பட்டனர். சிறையில் வாடிய மில்டன் இறையருளால் உயிர் தப்பினான். இதற்கிடையில் அவன் கண்ணொளி குன்றிக் குருடனாகிப் போனான். போகவே ஊனக் கண்பாசம் உணராப் பதியை ஞானக் கண்ணினில் சிந்தை நாடுதல் தலைப்பட்டான். பாசம் ஒருவத் தண்ணிழலாம் பதியை அணைந்திருந்தான். ஏகனாகி இறைபணி நின்றான். பதி புண்ணியங்கள் பல புரிந்தான். பதியின் பெருமையைப் பாரறியப் பரக்கப் பேசவே, துறக்கம் நீக்கம் என்னும் சித்தாந்த காவியம் தீட்டினான்.

ஆன்மா உணர்த்த உணர்வது. இதை உள்ளவாறு உணர்ந்தவன் மில்டன். சுழுத்தி நிலையில் அவனுக்கு இறையருளால் உணர்வு முகிழ்த்தது. இச்செய்தியை "... thou visitest my slumbers nightly' என்று அவன் குறிப்பிடுகிறான்.

மன்பதை பசுபாச அறிவு கொண்டு அறிந்திருந்ததை விளக்க அவன் முயலவில்லை. மன்பதை மாலுற்று மயங்கி அறியாது மம்மர் எய்தியதைப் போக்கவே அவன் தவமிருந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"ஊனக் கண் போனால் போகட்டும். இறைவா உள்ளொளியாய் ஓங்கி நீ என்பால் சுடர்விடு. ஞானக் கண்களை என்னகத்தே, என் ஹ்ருதய ஆகாசத்தில் ஊன்று. இருளை அறவே ஓட்டு. அந்நிலையில் நின் அருளால் அனைத்தும் யான் காண, மானுடர் காண ஒண்ணா உண்மைகளை யான் உரைத்திட அருள்" என்று வேண்டினான்.

"thou celestial light Shine inward, and the mind thro'all her powers Irradiate, there plant eyes, all mist from hence purge and disperse, that I may see and tell of things invisible to mortal sight" என்பது மில்டனின் பிரார்த்தனை.

காட்சி அளவைகளால் காண முடியாததை ஞானக் கண்ணினில் சிந்தை நாடி நான் கண்டு பேச அருள்வாய் என்று Celestial light இடம் மன்றாடுகிறான் மில்டன். "Celestial light" என்று மில்டன் குறிப்பிடுவது ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ்சோதியே ஆகும்.

இறையருள் பிடர்பிடித்து உந்த மில்டன் பெருங்காப்பியம் சமைக்க முற்பட்டான்.

பொல்லார் இணைமலர் வணங்கிச் சாத்திரம் சமைக்கும் நம் பெரியோர் போல, தூய ஆவியைத் தொழுது செயலில் இழிய நினைத்த மில்டன்

"And chiefly thou O spirit that dost prefer
Before all temples the upright heart and pure,
Instruct me, for thou know'st: thou from the first
Was present, and with mighty wings outspread,
Dove-like sat'st brooding on the vast abyss
And madest it pregnant; what in me is dark
Illumine, what is low raise and support;
That to the highth of this great argument
I may assert eternal providence
And justify the ways of God to men"

என்று கூறி வணங்கினான்.

துறக்க நீக்கம் முற்காண்டம் 1985 ஆம் ஆண்டு மூதறிஞர் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அவர்களால் தமிழாக்கம் பெற்று வெளிவந்தது. அதே ஆண்டுதான் மெய்கண்ட பெருமானுடைய சிவஞான போதம், சைவப் பேரறிஞர் J.M.நல்லசாமி பிள்ளை அவர்கள் திருக்கரத்தால் ஆங்கிலவாக்கம் பெற்று வெளிவந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மில்டனை வெள்ளேகால் முதலியார் அவர்கள் பின்வருமாறு மொழிபெயர்த்துள்ளார்.

மக்கள் கைத்தலத்து இயற்றிவைத்த கோயில் யாவினும்
மிக்கது என்று, வாய்மை தூய்மை மேய நெஞ்ச ஆலயம்
புக்க தேவ ஆவியே! புரிந்து யான் சொலப் புகும்
தக்க காதை முற்றுமே தகத் தெரிந்துளாய் அரோ;

ஆதலான் விசேடமா ஐய நீ, நிகழ்ந்த யான்
ஓதிடத் தெரித்தி; ஏதும் உள்ளது ஆய நாள் முதல்
பேது உறாது உளாய்; புறா பிறங்கு தன் சிறைக்கு மேல்
ஏதம் ஓவு சிறை விரித்து இறுத்த தோற்றம் என்னவே

உருஇலா அகண்ட பாதலத்து மீது உனாது நீள்
பரிய பார சிறை விரித்து இருந்து, பாய பாதலம்
கரு உயிர்த்து உயிர்க் கணங்கள் காட்டிடச் செய்தாய்; எனது
அருஅகத்து இருண்ட யாவை அன்னவை வயக்கியும்

தாழ்மனத் திறன்கள் ஓங்கித் தாழ்ந்திடாது தாங்கியும்
ஏழைகூறு காதை மாண்புக்கு ஏற்ப, ஈறு இலாதவன்
மாள்வு இல் ஞானமும் மனித்தர் மாட்டு நாதன் காட்டிய
ஆழி நீதமும் தெரிக்கும் ஆறு அருள் செய்வாய் அரோ.

"And chiefly thou O spirit, that dost prefer
Before all temples the upright heart and pure"

என்ற மில்டன் வாக்கு வேதசாரமான தேவார சாரம் ஆகும்.

மக்கள் கைத்தலத்து இயற்றிவைத்த கோயில் யாவினும்
மிக்கது என்று, வாய்மை தூய்மை மேய நெஞ்ச ஆலயம்
புக்க தேவ ஆவியே!

என்று மனமுருகி மொழிபெயர்க்கிறார் முதலியார் அவர்கள்.

மில்டன் பிரார்த்தனையைப் படிக்கும் ஒவ்வொரு சைவ உள்ளத்தலும் எழும் எண்ணம் யாதாக இருக்க முடியும் என்பதை சேக்கிழார் திருவாக்கு கொண்டு துலக்குவோம்.

அன்றினார் புரமெரித்தார்க்கு ஆலயம் எடுக்க எண்ணி ஒன்றும் அங்கு உதவாதாக உணர்வினால் எடுக்குந் தன்மை நன்றென மனத்தினாலே நல்ல ஆலயந்தான் செய்த நின்ற ஊர்ப் பூசலார் தம் நினைவினை உரைக்கலுற்றோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல்லும், மண்ணும், மருந்தும் இன்றி கோயில்கட்டத் தேவையானது நல்ல மனம் ஒன்றே. "கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே" என்பது சித்தர்வாக்கு. உள்ளமே கோயில். அந்த நல்ல உள்ளம் பெறவே,

"thou celestial light
Shine inward, and the mind thro'all her powers
Irradiate"

என்று வேண்டுகிறான். உள்ளம் சிவப் பிரகாசமாக இருத்தல் வேண்டும் என்பது இதன் பொருள்.

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன். அவ்விறைவன் எங்குப் புகுவான் என்று ஞானியர் அறிவர்.

வேயுறு தோளி பங்கன்விட முண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து
எம் உளமே புகுந்த அதனால்

என்பது ஆளுடைய பிள்ளையாரின் அமுதவாக்கு. பதி எங்கு விரும்பிப் புகுவான் என்று மில்டன் பேசியது கேட்டோம். தாம் எங்குப் புகுவோம் என்று பதி பேசும் வாக்கையே இப்போது கேட்போம். காடவர் கோமானிடம் பசுபதி

நின்ற ஊர்ப் பூசல் அன்பன் நெடிது நாள் நினைந்து செய்த
நன்று நீடாலயத்து நாளை நாம் புகுவோம்

என்கின்றார்.

மக்கள் கைத்தலத்து இயற்றிவைத்த கோயில் யாவினும்
மிக்கது என்று, வாய்மை தூய்மை மேய நெஞ்ச ஆலயம்
புக்க தேவ ஆவியே

பசுபதி அன்றோ. மில்டன் சொற்களை. . .

இதை விளக்க மேலும் பல கருத்துக்கள் உள. நேரமின்மையால் மனமில்லாமல் அடுத்து வருகின்ற அடிகளுக்கு விளக்கம் காண விரைகிறோம்.

யஹோவாவையும், தூய ஆவியையும் வேறு பிரித்துக் காணும் கொள்கை கிறித்துவர் மாட்டு உண்டோ கிடையாதோ என்று நாமறியோம். ஆனால் நாம் கண்ட மில்டன் மாட்டு இவர்களிடையே வேறின்மை காண முடியும். யஹோவாவும் தூய ஆவியும் சிவமும் சக்தியும் போல்வர். அம்பிகையைப் போல் தூய ஆவியும் ஞான வடிவம். அத்தூய ஆவி உணர்த்தினால் ஆன்மா உணர முடியும். ஆகவேதான் "Instruct me" என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆவியை இறைஞ்சுகிறான் மில்டன். தூய ஆவி ஞான ஸ்வரூபமானது என்றோம். "Thou know'st" என்ற பதப்பிரயோகத்தில் ஞானம் பிரதிஷ்டையாகி இருக்கிறது.

. . . உயர்ஞானம் இரண்டாம், மாறா
மலமகல அகலாது மன்னு போதத்
திருவருள் ஒன்று

என்பது உமாபதி சிவாசாரியாரின் திருவாக்கு. ஞானம் இரண்டு வகைப்படும்.

ஆன்மாக்களை அநாதியே பந்தித்து
நீங்காதிருக்கும் ஆணவ மலம் விட்டு நீங்கும்படி செய்து
அவ்வான்மாக்களைத் தான் ஒருபொழுதும்விட்டு
நீங்காத நிலை பெற்ற ஞானமாகிய திருவருள் ஒன்று

என்று இதற்குப் பொருள்.

ஆணவ மலம் இருள் என்று பேசப்படும். இந்த இருளை அகற்றி ஒளி உதவ இருப்பது திருவருள். அருள் என்பது சக்தியே.

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி

என்பது உமாபதி சிவாசாரியரின் வாக்கு. மாறா மலம் அகல, அகலாது மன்னு போதம் தருவது திருவருள். ஆகவே இதைத்தான் மில்டன் "Thou from the first was present" என்று பேசுகிறான். மெய்கண்ட தேவநாயனாரின் நீக்கம் இன்றி நிற்கும் அன்றே என்ற சொற்றொடர் மேற்சொன்னபடி மில்டனால் ஆங்கிலத்தில் பேசப்பட்டிருக்கின்றது.

யஹோவா, தூய ஆவியுடன் நீக்கம் இன்றி நிற்பது எற்றுக்கு எனில், அத்தூய ஆவியே, உயிர்க்கு உயிராய், ஆவிக்கு ஆவியாய் அதாவது ஆன்மாவிற்கு ஆன்மாவாய் நின்று உயிர்களுக்கு இன்பம் அருத்துவதற்குத்தான்.

இடர்தீர்ந்து
'இரவு பகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில் கொண்மின்' என்று
சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே

என்று இந்நிலையை விவரிக்கின்றார் தாயுமான சுவாமிகள். இதையே,

"Statietas gaudiorum in conspectu tuo" (in thy presence is the fullness of joy) என்று De Doctrina Christianaவில் பேசுகிறார். கிறித்துவ சித்தாந்தத்தில் சக்தி வழிபாடு கிடையாது; பெண் தெய்வம் என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒன்றில்லை என்பர். இக்குறையை நீக்கத்தான் கன்னிமரி வழிபாடு தோன்றியது என்றும் கூறுவர். விக்கிரக வழிபாட்டை மறுத்து ஒதுக்கும் கிறித்துவத்தில் கன்னிமரி வழிபாடு அதாவது Mariolatry என்ற பெயரில் idolatry புகுந்துவிட்டது. நல்லது. கிறித்துவக் கடவுளுக்கு ரூபம் உண்டா? இந்தக் கேள்விக்கு நேரிடையாக ஒளிவு மறைவு இல்லாமல் "உண்டு" என்று விடையிருக்கிறான் மில்டன். ஆதாமை, யஹோவா தம்முருவால் தானே படைக்கிறார். ஆகவே அவருக்கு உருவமும் உண்டு.

Milton, De Doctrina Christianaவில்... "If God habitually assign to himself the members and form of a man, why should we be afraid of attributing to him what he attributes to himself" என்று கேட்கிறான். மனித உருவும் கரணங்களும் தனக்கு வழக்கமாகக் கொண்டு இறைவன் இலங்கி நிற்பன்.

அவன் அவள் அது எனும் அவையாம் பிரபஞ்சத்தை ஆறு நாட்களில் தோற்றுவித்த இறைவன் ஏழாம்நாள் ஓய்வெடுத்துக் கொண்டான் என்றால், அதை மில்டன் பூர்ணமாக நம்பி ஏற்றுக் கொள்வான். பரமனுக்கும் ஓய்வு தேவையா என்று ஆராய வேண்டாம்.

சூரனைத் தடிந்த முருகவேள், செய்த போரின் வெக்கை நீங்கத் தங்கிய இடம் தணிகை அன்றோ! "அமர்தணிதலின் தணிகை" என்று தணிகைப் புராணமும், "செருத்தணி" என்று கந்தபுராணமும் பேசவில்லையா!

ஆகவே இறைவன் எவ் எவ் செயல்கள் புரிந்தாரோ அவ்வவற்றை உள்ளவாறே ஏற்றிப் போற்றுதலே நம் கடன். "கேட்பான் புகில் அளவில்லை; கிளக்க வேண்டா" என்பதனையே நாமறிந்து கொள்ளல்வேண்டும்.

ஈசன் மகன் இயேசு. இயேசுவின் தாய் கன்னிமரி. பவன் பிரமசாரி; பால் மொழி கன்னி.

ஆனால் பால்மொழிக் கன்னி மரியம்மை என்று மில்டன் கொள்ளவில்லை. அவன் சித்தாந்தமே ஒரு தனிச்சிறப்புடையது. அவன் யஹோவாவை அம்மையப்பனாகவே கொள்ளுகிறான்.

துறக்க நீக்கத்திற்கு உரை வகுத்த பேராசிரியர் Alstair Fowler என்பார், "And madest it pregnant" என்ற மில்டன் சொற்களைப் பற்றிப் பேசும்போது இது ஒரு கதம்ப உருவகம் அன்று; ஆண்டவன் அர்த்தநாரீ என்னும் ஹெர்மடிக் கொள்கை பற்றி மில்டன் காட்டும் தீர்மானமான குறிப்பு. - "Not a mixed metaphor, but a deliberatre allusion to the Hermetic doctrine that God is both masculine and feminine" என்று குறிப்புரை ஆசிரியர் பேசுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடுத்து ஆணவ மலம் பற்றி மில்டன் கூறுவது பார்ப்போம். ஆணவம் இருள் என்று பேசப்படும். இருட்பாவை என்று இதனை உமாபதி வருணிப்பார். துறக்க நீக்கத்தில் மில்டன் கூறும் "Original darkness" ஆணவமே. Chaos என்னும் குழப்பம், சக்ரவர்த்தி போல் ஒரு சாம்ராஜ்யத்தைப் பரிவாரங்களுடன் ஆண்டு வந்ததைத் துறக்க நீக்கம் இரண்டாம் காண்டத்தில் மில்டன் வருணிக்கிறான்.

behold the throne
Of Chaos, and his dark pavilion spread
Wide on the wasteful deep; with him enthroned
Sat sable-vested Night, eldest of things,
The consort of his reign

என்ற மில்டனின் வருணனையில் ஆணவ ஆதிக்கம் பற்றி நிறைய அறிந்து கொள்ளலாம். அதே காண்டத்தில் மில்டன் பேசுகின்ற "dubious light" என்பது மாயை தரும் சிறிது வெளிச்சமாகும்.

ஆணவத்திலிருந்து விடுதலை பெறுதல் வாழ்க்கையின் இலட்சியம். ஆழாமற் காப்பவன் பரமன். ஆகவே அவன் தான் தாங்கமுடியும். அதனாற்றான் மணிவாசகர், நீத்தல் விண்ணத்தில் "வெற்றடியேனை விடுதி கண்டாய்; விடிலோ கெடுவேன்" என்றார்.

மில்டன், இறைவன் ஆன்மாவைத் தூக்கிவிடுவான் என்பதை அறிவான். அந்நிலையில் ஆன்மா ஒரோவழி இறை அருளை மறந்து தருக்கித் திரிதல் கூடும். மணிவாசகர் கூறியது போல, தலையால் நடக்கத் தலைப்படும். பிறகு தன் செயலால் தலைகுப்புற வீழ்ந்துவிடும். இப்படி நடந்த நிகழ்ச்சியைத் தானே மில்டன் துறக்க நீக்கம் என்ற காப்பியமாகச் சமைக்க இருக்கிறான். ஆகவே நற்பதத்தில் தன்னை ஏற்றிவைத்த நாயகன் தன்னை யாண்டும் தாங்குதல் வேண்டும் என்று வேண்டுகிறான். "தன் கடன் அடியேனையும் தாங்குதல்" என்பது அப்பர் அருள்வாக்கு. பதம் பெற்ற ஆன்மா ஒரு மாத்திரைப் போதுகூட இறையருளை மறத்தல் கூடாது. மறந்தால் என்ன ஆகும்? மறந்தவர் கதியை மணிவாசகர் பேசுகிறார்.

என்னால் அறியாப் பதம் தந்தாய்
யான் அது அறியாதே கெட்டேன்
உன்னால் ஒன்றுங் குறைவில்லை

என்று. இதையே

Just are the ways of God
And justifiable to men

என்றும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"To vindicate the glory of his name" என்றும் தன்னுடைய சிறுகாப்பியமாம். Samson Agonistes இல் கூறுகிறான். ஈசன் செயல் அனைத்தும் நியாயமானவை; தர்மமானவை என்பதே மில்டனின் மதம். அவன் செயல் அனைத்தும் அருளே என்பதே சைவ சித்தாந்தம்.

இங்ஙனம் நம்பி ஒழுக வேண்டும். 'நம்பினால் மட்டும் போதாது; உணர்தல் வேண்டும்' என்கிறார் விவேகானந்த அடிகள். 'தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்' என்ற மெய்கண்ட தேவரின் திருவாக்கை நினைவு கூர்வோம். உணரார் உணரார். ஆகையினாலே அவர்கள் ஒதுக்கித் தள்ளத்தக்கவர்கள்.

தன்னையும் தன் தலைவனையும் உணராத ஆன்மா என்னென்ன செய்யும் என்பதை அப்பரின் திருப்பாடல் மூலம் உணருவோம்.

ஜைனனாகத்தாம் மாறி, பல ஜைன சாத்திரங்களை ஆராய்ந்து, சாரமற்ற முறையில், உமிக்குத்தி கை வருந்துமாபோலே, இருட்டறையில் மலடு கறந்து எய்க்குமா போலே, வாழ்க்கையை வியர்த்தமாக்கி விட்டதை நினைத்து நெஞ்சு புண்ணாகிப் புலம்புகிறார் ஆளுடைய அரசு.

'பப்பு ஓதி பவணனாய்' என்றதில், பவணன் என்ற சொல் பவணநந்தி என்று பொருள்படும். "கனகநந்தியும், புட்பநந்தியும், பவண நந்தியும், குமணமா சுனக நந்தியும், குனக நந்தியும் திவண நந்தியும் மொழிகொளா அநக நந்தியர்" என்பது ஆளுடைய பிள்ளையார் வாக்கு.

பவண நந்தியாய் அதாவது ஜைனனாய் இருந்து, 'தட்டிட்டே முட்டிக்கை தடுக்கிடுக்கி நின்றுணா வாழ்க்கை மேற்கொண்டு, பப்போதித் திரிந்தேனே' என்று பரிதவிக்கிறார் அப்பர் அடிகள்.

அறம் என்பது சாத்திரங்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். விலக்கியன ஒழிதல் செய்யாமல் அவற்றை விரும்பி ஏற்று ஒழுகி நின்றேனே என்று அப்பர் அடிகள் வருந்தி உரைக்கிறார்.

சொல் ஜாலத்தால் மாற்றார் நம்மை ஈர்க்கத்தலைப்படுவர். போலி ஞான மினுக்கால் நம் சிந்தையைத் திறை கொள்ளக் கருதுவார்கள்.

முதுசாத்தனின் தோழனாம் Belial என்பவனைப் பற்றிப் பேசவந்த மில்டன்

"A fairer person lost not heaven; he seemed
For dignity composed and high exploit
But all was false and hollow; tho'his tongue
Dropt manna and could make the worse appear

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

The better reason, to perplex and dash
Maturest counsels: for his thoughts were low;

ஆனால் அந்தோ அனைத்தும் பாழ்த்த பொய்யே ஆகும்;
உள்ளீ டென்பது ஒரு சிறிதுமில்லை;
அமிழ்தம் சொட்டும் அதர முடையான்;
ஆனால் அனைத்தும் பகட்டு மினுமினுக்கே.
பொய் மெய் ஆக்கிப் புறட்டி வைப்பான்;
புத்தி பேதலிக்க அறிவைத் திரிப்பான்;
கூர்த்த மதியும் கூம்ப வைப்பான்;
சிறுமையே என்றும் சிந்தித் திருப்பான்;
கொடுமையே குறி எனக் கொண்டு முயல்வான்;
நல்லது என்பது நனி சிறிதுமறியான்;
எனினும்
கேட்டார் கிறங்கப் பேச்சில் வல்லான்
ஈர்க்கும் வகையில் இதழ் அசைக்கின்றனனே.

இந்த இடத்தில் பூப்பிள்ளை அட்டவணை பேசுவது கேட்போம்.

ஆணவத்தால் உந்தப்பட்ட ஆன்மா பல தீச்செயல்களைப் புரியும். பப்பு ஓதும். பப்பு ஓதுவார் கல்வி மானாக இருந்தால் விளைவு பயங்கரமாக இருக்கும். இதை எண்ணித்தான், கல்லாரே நனி நல்லார் என்ற ஆப்த வாசகம் எழுந்தது.

கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும்
இனி அமையும்

என்றும், கல்வி என்னும் பல் கடல் பிழைத்தும் என்றும் இந்நிலை கருதித்தான் மணிவாசகர் அருளியுள்ளார்.

சமய சந்தான ஆசாரியர்கள்

கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்
தாம் வரம்பாகிய தலைமை யோர்.

அவர்தம் பெருநிலையில் மிளிர்பவன் தான் மில்டன் எனும் மாமுநி என்பது நம் மதம். சொற்காட்டிலும் கருத்துப் புதரிலும் சிக்காமல் உண்மையை நேரிடையாகத் தரிசித்த மஹான் அவன்.

கல்லானே ஆனாலும் உள் ஒளியின் வெளிச்சத்தில் வாழ்வாங்கு வாழ்பவனை மதித்தவன் மில்டன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பேரறிவு – ஞானம் என்பது sapientia என்பது மில்டன் கருத்து.

பப்பு ஓதுவதால் அதிக பக்ஷம் பெறுவது scientia. ஒப்பு ஓட ஓதுவித்தலால் பரமனிடமிருந்து பெறுவது. உவமையிலா ஞானமாம் sapientia. இதைத்தான் துறக்க மீட்சியில் "he who receives light from above, from the fountain of light No other doctrine needs" என்று மில்டன் குறிப்பிடுகிறான்.

"Light from above,
The fountain of light

என்ற மில்டன் சொற்றொடர்களை

'எரியலால் உருவம் இல்லை',
'ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே',
'விண்நிறைந்து ஓர் வெவ்வழலின் உரு',
'சோதியே சுடரே சூழொளி விளக்கே'
'மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே'

என்பன ஆதியாய திருவாக்குகளுடன் ஒப்பிட்டுப் பரவசப்படலாம்.

ஒப்போட வோதுவித்தல் என்ற அப்பர் பெருமானின் கருத்தையே, "he who receives light from above" என்பது தாங்கி நிற்கிறது.

பாசமான ஞானத்தாலும் பசு ஞானத்தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடி

என்ற சித்தியார் வாக்கு துறக்க மீட்சியில் மில்டனால் குறிக்கப்பட்டது காணலாகும்.

பதி அளித்த ஞான வெள்ளத்தைச் சமண்பாழிற் கிறைத்துச் சூலை கொண்டார் ஆளுடைய அரசு. ஆண்டவன் அருளிய ஞானத்தை அரசியலுக்கு அர்ப்பணித்து அந்தகனாகிப் போனான் மில்டன்.

பப்போதி பவணனாய்ப் பறித்தொரு தலையோடே
திரிதர்வேனை

என்று அப்பர் சுவாமிகள் தம்மை நொந்து கொண்டார்.

With other notes than to the Orphean lyre
I sung of Chaos and eternal Night

என்று தன்னிலை கண்டு கலுழுகிறான் மில்டன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொன்னது கேட்பையாகில் தொடர் பவம் தொலையும்

என்பது ஆன்றோர் அருளிய வாசகம்.

"தேசிகன் தான் சொன்னபடி கண்டிரு..." என்பது துகளறு போத ஆசிரியரின் உபதேசம்.

கிறித்துவ கோட்பாட்டின்படி, படைக்கப்பட்ட முதல் மனிதன் ஆதாம் ஆவான். மண்ணின் துகளிலிருந்து இந்த ஆதி மனிதன், பசு பாச போதத்துடன் படைக்கப்பட்டான்.

ஆதாம் பெற்ற போதம் துகள் உறு போதம்; துகளறு போதம் அன்று. தேசிகன் சொன்னபடி அவன் வாழ்ந்திருந்தால் அவன் பெற்ற துகளுறு போதம் துகள் அறு போதமாக மாறியிருக்கும். ஈசன் இட்டது ஒரே ஒரு கட்டளை. பானல் விழி பாகுமொழி பாவையாம் ஏவாள் செய்கையைப் பின்பற்றி ஈசன் மொழியை உல்லங்கனம் செய்தான் ஆதாம்.

Raphael என்னும் தேவதூதன், ஈசன் ஆணைப்படி ஆதாமை எச்சரிக்க வந்தவன். முதுசாத்தன் நிரயத்தினின்றும் தப்பி வந்த செய்தியும், அவனுடைய நோக்கம் ஆதாம் தம்பதியரை ஈசன் விதித்த கட்டளையை மீறவைத்தல் என்பதையும், எடுத்துச் சொல்ல இறைவனால் ஆதாம் தம்பதியரிடம் அனுப்பப்பட்ட தூதனே Raphael. அவனிடமிருந்து பல அரிய செய்திகளை ஆதாம் அறிந்து கொள்ளுகிறான்.

ஈசனார் திரோதித்து வைத்திருக்கும் பல செய்திகள் பற்றி ஆதாம் கேட்டபோது, "தேவையானவை பற்றி நீ ஆராய்ச்சி செய்யலாம். ஆனால் உனக்கும், ஏன்? எங்களுக்கும் கூட அப்பாற்பட்டனவாகவும், மறைத்தும் வைக்கப்பட்டிருப்பன பற்றி, நீ வியத்தல் செய்யலாமே அன்றி உசாவுதல் தவறு" என்கிறான் Raphael.

"the rest
From man or angel, the great architect (hid)."

"திரோதிக்கப் பட்டனவை பற்றி ஆய்தல் ஒழி; ஈசன் சித்தம் என்று விலகி, அவன் பணி புரி; அஞ்சி நட" என்று Raphael ஆதாமுக்குச் சொல்லுகிறான்.

இவ்வற உரைகளைக் கேட்டு மகிழ்ந்த ஆதாம், தன் பிறப்பின் வரலாற்றை உரைக்கின்றான்.

"நீள் சுழுத்தி கலைந்து ஜாக்ரம் தோற்றியவா
மென் மலர் மூலிகை மேல் நான் என் கிடக்கை கண்டேன்"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"As new waked from soundest sleep
Soft on the flower of herb I found me laid"

"கண்ணை விரித்து விண்ணை வெறித்து ஒரு சில
விந்தை நொடிகள் போக்கினேன்"

"Straight toward heaven my wondering eyes I turned
And gazed a while the ample sky..."

"ஆனால் நான் ஆர்?"

"But who was I"

"எங்ஙனம் வந்தேன்? எங்ஙனம் இங்குற்றேன்?"

"... how came I thus? how here?"

என்று பல பன்னினான் ஆதாம்.

பூர்ண வளர்ச்சியோடு பிறந்தவன் ஆதலினால் தத்துவ ஆராய்ச்சியில் தலைப்படுகிறான் ஆதாம்.

நான் எப்படித் தோன்றினேன்; சுயம்பு அல்லேன் நான்.
என்னைத் தந்தவன் ஒருத்தன் உளன்;
அவன் சர்வமும் வல்லவன்

என்று ஆதாம் எண்ணுகிறான்.

"Not of my self; by some great maker then
In goodness and power pre-eminent"

என்பன அவன் சொல்லிய சொற்கள்.

"தருபவன் ஒருவன் வேண்டும்;
தான் முதல் ஈறுமாகி, மருவிடும் அநாதி முத்த
சித்துரு மன்னி நின்றே"

என்னும் சித்தியார்.

எம் மரக் கனியை உண்டால்
நன்று - தீது ஞானம் தோன்றுமோ –
வாழ்வுத் தருவின் பக்கல் வைகும் –
அத் தருவைத் தவிர்தி; நம்மை நீ நம்பு;
நம்பி நீ நம்பியாங்கு ஒழுகு; நினக்கிட்ட பணி ஈதே;

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எந்தம் எச்சரிக்கை, ஏந்தலே, ஏன்று கொள்;
தவிர்த்த தருவை நாடாதே;
கடுங் கைப்பாம் புசிப் பொழி;
புசிப் புண்டேல் இறப் புண்டு

"The paradise I give thee, count it thine
To till and keep, and of the fruit to eat
Of every tree that in the garden grows
Eat freely with glad heart; fear here no dearth"

என்று யஹோவா ஆதாமிடம் கூறி, "தவிர்க்கப்பட்ட மரத்தின் கனியை உண்ணாதே; உண்டால் உனக்கு மரணம்" என்று எச்சரிக்கின்றார். மீறிச் செயல்பட்ட ஆதாம்,"ஆண்டவனே என்னை ஏன் படைத்தாய்? மண்ணின் மாசிலிருந்து என்னைப் படைக்குமாறு உன்னை நான் வேண்டினேனா?" என்று கேட்கிறான்.

"Did I request Thee Maker, from my clay
To mould me Man?"

துயர் உறும் ஒவ்வோர் உயிரும் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கும் என்பது கவிஞர் திருலோக சீதாராமனின் தர்சனம்.

மூலக் கருத்தின் மோனச் சிறையுள்
முடமாய்க் கிடந்தேனைக்
கோலச் சுடரில் கோணமெலாம் ஏன்
கொண்டு திரிய விட்டாய்?

புசிப்பின் கைப்பைத் தாங்க முடியாமல் உயிர் எழுப்பும் கூக்குரல் இது. இதைத் தாயுமானவர் விவரிக்கும் அழகு அதிரஸமானது.

'இரவு பகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில் கொண்மின்' என்று

சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்தி முதலே!
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே!
சின்மயானந்த குருவே!

"ஏரிட்ட தன் சுருதிமொழி தப்பின் நமனைவிட்டு இடர் உற உருக்கி" என்பதைக் கவனியுங்கள். ஆதாமிடம் யஹோவா சொன்ன மொழி சுருதிமொழி. அதைத் தப்பியவன் ஆதாம். விளைவு துறக்க நீக்கமாம் நரகானுபவம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்றாலும் முடிவு என்ன? இடர் உற உருக்கிவிட்டால், இடர் தீரும். இதுவே தாயுமானவர் தருகிற உத்திரவாதம். இடர் தீர்ந்தால், அதுவே மில்டன் மொழியில் paradise gained என்பதாகும்.

ஏனெனில் ஆன்மாவின் விடுதலைக்கே இறைவன் கிருத்தியம் இயற்றுகிறான்.

Fate, Free-will, Pre-destination என்பன பற்றிய மில்டன் கருத்துக்களைச் சொல்ல நேரமில்லை. ஊழ் என்பதற்கு மில்டன் தரும் விளக்கம் சைவ சித்தாந்த நிர்வஜனம் ஆகும். பல பேசுவானேன். "எக்கிரமத்திலும் இறைசெயல் அருளே என்றும்" என்பதுதான் மில்டனின் மதம்.

"Mercy first and last, shall brightest burn" என்பதே யஹோவாவின் உறுதிமொழி.

இடர்உற உருக்கி இடர்களைவதே இறைவன் அருள்விலாசம்.

"எக்கிரமத்தினாலும் இறைசெயல் அருளே என்றும்" என்பது சித்தியார்.

இந்த மஹா உண்மையின் முழுத் தூய்மையில் முக்குளித்துத் திளைத்து, தேனித்திருந்த தவராஜன் மில்டன். ஆகவேதான் கூறுகிறான்:

"I may assert eternal providence
And justify the ways of God to men."

மாமுனி மில்டன் வாழ்க. அவன் வழங்கிய துகளறு போதம் நம்மைக் காக்க என்று சொல்லி அமைகிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. வியத்தகு ஆரிய நாகரிகம்

- ❖ 'ஆரிய', 'ஆரியன்' என்பதற்கான பொருள் என்ன?
- ❖ ஆரியப் படை எடுப்பு என்று ஒன்று நிகழ்ந்ததா?
- ❖ மொஹஞ்சதாரோ – ஹரப்பா நாகரிகம் என்பது என்ன?

– இவை பற்றிய ஓர் ஆய்வு

மகாகவி பாரதியார் தாம் வரைந்த புதிய ஆத்திசூடியில் "சரித்திரத் தேர்ச்சி கொள்" என்று ஆணை இட்டார். பாரத நாட்டைப் பொறுத்த அளவில், அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், இங்கு உள்ள சரித்திரத்தின் தரித்திரத்திற்கு ஈடும் இல்லை; இணையும் இல்லை. நம் நாட்டின் சரித்திரத்தை எழுதி அமைத்தவர்கள் வெள்ளையர்கள். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அவர்கள் எழுதிய சரித்திரப் புத்தகங்களே பாட நூலாக விதிக்கப்பட்டன. பாரத நாட்டில் வெள்ளையர் ஆட்சி தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் நூல்கள் வரைந்தனர். மேலும் கிறித்துவ சமயமே உலகளாவி நிற்றல் வேண்டும் என்பதும் அவர்கள் கொண்ட கருத்து. நம் நாட்டின் தொன்மை பற்றியோ, வேத ஆகம இதிகாச புராண சாத்திரங்கள் பற்றியோ, கடுகளவும் அக்கறை காட்ட விருப்பம் இல்லாக் கூட்டத்தார் சாமர்த்தியமாக அமைத்து வைத்த நூல்களில் **உண்மைக்கு இடம் உண்டா?** மெகாலே பிரபு, நம் நாகரிகம், சமயம், பண்பாடு ஆகியவை அடியோடு அகற்றப்பட்டு, ஆங்கிலேயர் பின்பற்றி வருவனவற்றை இந்தியரும் மேற்கொள்ள வேண்டும் என்ற அழுத்தமான கொள்கையின் அடிப்படையில்தான், ஆங்கில வழிக் கல்வித் திட்டத்தை அமலாக்கினார். பல்கிக் கிடக்கும் கீழை நாட்டு இலக்கியங்கள் அனைத்துமே, மேலை நாட்டு நூல் நிலையத்தில் உள்ள ஒரு (சிறிய) தட்டில் அடுக்கப்பட்டிருக்கும் ஒரு சில நூல்களுக்கு இணையாகா என்று அறிவித்தவர் மெகாலே. அவரும் ஒரு சரித்திர ஆசிரியர். அவர் வகுத்துத் தந்த அடிப்படையில், இந்திய வரலாறு உருவாக்கப்பட்டது. நல்ல அறிவாளிகளாக இருந்தும், வெள்ளையர் மாயத்திற்கு உட்பட்ட நம் நாட்டுச் சரித்திர ஆசிரியர்களும் வெள்ளையர் உருவாக்கிய ஆதாரமற்ற புளுகு மூட்டைகளை அப்படியே ஏற்றனர். ஆகவே **நம் நாட்டிற்கான உண்மைச் சரித்திரம் இனிமேல்தான் ஆய்வு முறையில் அமைக்கப்பட வேண்டும்.**

கிறித்துவ சமயம் பற்றிப் பல நூறு ஆண்டுகளாக மக்கள் மீது திணிக்கப்பட்டு வந்த பொய்களே மேலைநாட்டிலும் நிலவி வந்தன. அங்ஙனம் அவை நிலைபெறுமாறு அதீத ஊக்கத்துடன் பாதிரிமார்களும், அவர்களின் சீடர்களும் கவனமாகச் செயல்பட்டு வந்தனர். பெட்ரண்ட் ரஸல் என்பார் ஒரு பெரிய எழுத்தாளர்; ஆய்வாளர்; தத்துவ சாத்திரி; கணித மேதை; அளவை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல் வல்லுநர்; அவர் ஒரு பேராசிரியரும் ஆவார். அவரைத் தத்துவப் பேராசிரியராக நியமனம் செய்ய, உரிய குழு ஒன்று ஏகமனமாகத் தீர்மானம் இயற்றியது. ரஸல் அவர்கள் உண்மை விளம்பி. அவ்வப்பொழுது அவர் வெளியிட்ட உண்மைகள் பாதிரியார் கூட்டத்தைக் கலக்கி வந்தன. ஆகவே அவர்கள் ஒன்றுகூடி, போர்க்கொடி உயர்த்தினர். இதற்கான அங்குரார்ப்பணம் பிஷப் மானிங் அவர்களால் நிகழ்த்துவிக்கப்பட்டது. சான்றோர் உலகம் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ரஸல் நியமனம் ரத்து செய்யப்பட்டது. இதனைப் பாதிரிக் கும்பல் விமரிசையாகக் கொண்டாடியது. இது நிகழ்ந்தது 1940 ஆம் ஆண்டு. பாதிரிமார் இயக்கத்தை நன்கு அறிந்தவர் ரஸல். அவர் அலட்டிக் கொள்ளவில்லை. நாளாக நாளாக ரஸல் பெருமை உலகெங்கும் பரவியது. ஆறும் ஜார்ஜ் மன்னர் அவருக்கு மிகப்பெரிய மரியாதையை (Order of Merit) வழங்கினார். இதன் பிறகு 1950இல் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இதிலிருந்து ஒன்று தெரிகிறது. மேதைமையைக் குடத்தில் அடைத்து மூடி விட முடியாது.

அதிகாரத்தில், ஆட்சியில் அமர்ந்திருப்போரே அனைத்துப் பாவங்களையும் கொடுமைகளையும் நிறைவேற்றுகின்றனர். வல்லான் வகுத்ததே வாய்க்கால். அதிகாரம் வெளியிடுவதே சரித்திரம்.

‘1984’ என்ற தலைப்பில் ஜார்ஜ் ஆர்வெல் என்பார் ஒரு நவீனம் வரைந்தார். அது உலகையே ஒரு கலக்குக் கலக்கியது. எதேச்சாதிகாரக் கொடுமையைத் துணிந்து அவர் சாடினார். ஹிட்லர், ஸ்டாலின் போன்றோரின் கொடுமைகளைக் கதை வடிவில் அவர் அமைத்து உலகவரைத் சிந்திக்க வைத்தார். அவர் வரைந்த அனிமல் ஃபார்ம் (Animal Farm) உலகின் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டது. தமிழிலும் ஒரு மொழிபெயர்ப்பு வரையப்பட்டது.

அவர் அவர் எழுந்து அவதிகள் எண்ணித்

தலைப் பொறியாகத் தவிப்பார்

சந்தை இரைச்சலில் கவிதை யாருக்கு வேணும்?

என்று சாற்றினார் அமரர் திருலோக சீதாராம். கவிதை மட்டுமா? சரித்திரப் பார்வை, சமய உணர்ச்சி, ஒழுக்கநெறி, சீலமான ஆட்சி, யாருக்குத் தேவை?

இங்குச் சரித்திரம் என்றால் என்ன என்பது பற்றிச் சிறிது மேலும் காண்பம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஜார்ஜ் ஆர்வல் ஒரு பெரிய உண்மையை உணர்ந்தார். சென்ற காலத்தின் மீது ஆளுமை செலுத்தி, அதைக் கட்டுப்படுத்த யார் வல்லவரோ, அவர்களே எதிர் காலத்தையும் கட்டுப்படுத்த வல்லவர்கள். யார் நிகழ்காலத்தைக் கட்டுப்படுத்த வல்லவரோ அவர்களே கடந்த காலத்தையும் கட்டுப்படுத்த வல்லார். "Who controls the past controls the future; who controls the present controls the past."

ஆட்சியில் அமர்ந்திருப்பார் படைப்பதே சரித்திரம் ஆகிவிடுகிறது. அப்படி அமையும் சரித்திரத்திற்கும் உண்மைக்கும் எவ்விதத் தொடர்பும் தேவையில்லை. அதிகாரம் பேசுகிறது. அதை ஏற்றே தீர வேண்டும். எதிர்ப்பவன் பழிக்கப்படுவான்; பலியிடப் படுவான். பாகிஸ்தான் உருவானதற்குப் பிறகு அதற்கு புதிது புதிதாகச் சரித்திரம் வரையப்படுகிறது. சென்ற ஆட்சியில் நிகழ்ந்தன அடுத்த ஆட்சியில் சரித்திரத்தில் இடம் பெறவில்லை. உண்மைகள் மறைக்கப்படுகின்றன. பொய்கள் வளர்க்கப்படுகின்றன. இந்நிலைகளுக்கு வருந்தி அஜீஸ் (K.K. Aziz) என்பார் சரித்திரக் கொலை (The Murder of History) என்று ஒரு நூல் எழுதியுள்ளார்.

கிறிஸ்தோஃபர் நைட் அவர்களும் லோமாஸ் அவர்களும் இணைந்து 'தி செகன்ட் மெஸையா' (The Second Messiah) என்ற ஆய்வு நூலை உருவாக்கினர். இவ்வாசிரியர்கள் கூறும் செய்தியைச் செவி மடுப்போம். சரித்திரம் என்பது பழைய நிகழ்ச்சிகளின் பதிவேடு என்பதை விட, தங்கள் ஆக்கத்திற்கு வலியைக் கூட்ட, தங்கள் ஒப்புதல்களுக்கு முன்னுரிமை தந்து, அக்கூட்டத்தார் தொகுத்து வைத்த பட்டியல் என்பதுதான் உண்மை. தம் நவீனமாம் '1984'இல் ஜார்ஜ் ஆர்வல் கூறியது போல, சரித்திரம் என்பது வெற்றி பெற்றோரால் வரையப்படுவதாகும். யார் சரித்திரம் வரைதலைக் கட்டுப்படுத்துகிறாரோ, அவர் சென்ற காலத்தைக் கட்டுப்படுத்துகிறார். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக மேற்கத்திய உலகில் தொடர்ந்து அதிகார பூர்வமாக விளங்குவது ரோமன் கத்தோலிக்க சர்ச் ஆகும். இதில் ஐயத்திற்கு ஏதும் இடமில்லை. **ஆகவே ரோமன் சர்ச் எதை விரும்புகிறதோ, அது சரித்திரம் ஆக்கப்படுகிறது**. (History, it seems, is not so much a record of past events, more a catalogue of preferred beliefs expounded by people who have a vested interest. As George Orwell observed in his novel 1984, history is always written by the victors and whoever controls the writing of history books controls the past. Without doubt, the most consistently powerful force in the western world over the last two thousand years has been the Roman Catholic Church and consequently history has often been what it wanted to be.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சரித்திர நூல்கள் வரைதலை யார் கட்டுப்படுத்துகிறாரோ அன்னவரே சென்ற காலத்தையும் கட்டுப்படுத்துகின்றார்.

நம் நாட்டில் சரித்திரம் வரைதல் யார் கையில் இருந்தது? அவர்களே கடந்தகாலச் சரித்திரத்தை இஷ்டம் போல் மாற்றியும், திரித்தும், கூட்டியும், குறைத்தும், மறைத்தும், புதைத்தும் சரித்திரம் என்ற பெயரால் நூல் வரைந்து தம் ஆட்சியில் அடங்கிய மக்கள் மீது திணித்தும் வந்தனர். இத்தகு சரித்திரத்தை வரலாறு என்று கூறலாமா?

விவிலியத்தில் வம்சாவளிகள் கூறப்பட்டிருக்கின்றன. அவை சரித்திரத்தோடு இசைவன அல்ல. என்றாலும் அவற்றின் அடிப்படையில் உலக உற்பத்தி எப்போது நிகழ்ந்தது என்று கணக்கிட அவர்கள் தயங்கவில்லை. ஆர்ச்பிஷப் யுஷர் (Archbishop Usher) என்பார் விவிலியத்தின் அடிப்படையில் க்ணக்கிட்டு இப்பிரபஞ்சம் கி.மு.4004 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 23 ஆம் தேதி சிருட்டிக்கப்பட்டது என்று அறிவித்தார். இக்கருத்து சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்கப்பட்டது. கிறித்துவ உலகில் இது பெருஞ்செல்வாக்குப் பெற்றது. கிறித்துவ அறிஞர்கள் இதன் அடிப்படையில் தங்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர். 1823இல் பிறந்த மாக்ஸ் முல்லர் இதை வேதவாக்காக எண்ணிச் செயல்பட்டார். அவருடைய சரித்திரக் கொள்கைக்கு இதுவே ஆதார உண்மையாக அமைந்தது. இதே கருத்தைப் பாதிரிமார்கள் பிரசாரம் செய்து வந்தனர். இந்தியாவில் சமயப் பிரசாரம் செய்ய வந்த பாதிரிக் கூட்டம், இக்கருத்தையே பேணிப் போற்றி வந்ததால், இந்திய நாகரிக, கலாசாரப் பண்புகள் அவர்கள் கண்களுக்குப் புலப்படவில்லை. புலப்பட்டாலும் அவற்றைப் பொருள் அற்றவை என்று தீர்மானித்துச் செயல்பட்டனர். வலுவான ஆதாரங்களை அவர்கள் உதறித் தள்ளினர். கிறித்துநாதர் தோன்றிய பிறகுதான் உலகத்தில் உண்மை நாகரிகம் உண்டாயிற்று என்பது அவர்களது அசைக்க முடியாத நம்பிக்கை.

ஆரியப்படை எடுப்பு என்ற ஒரு போலிக்கருத்து உருவாக்கப்பட்டது. ஆரிய என்ற சொல்லுக்கும் வீபரித அர்த்தம் கற்பிக்கப்பட்டது. இப்போலிக் கருத்துக்களுக்கு வலுவூட்டியவர் மாக்ஸ் முல்லர். "இவர் ஒரு மேதை; பெரிய ஆய்வாளர்; மொழி வல்லுநர்" என்று காட்ட ஒரு கூட்டமே செயல்பட்டது. அது வெற்றியும் கண்டது என்றாலும் அக்காலத்தில் மாக்ஸ் முல்லர் கருத்துக்கள் தவறானவை என்று உணர்ந்த ஆய்வாளர்கள் அவர் கூறியவற்றை எதிர்க்காமலும் இல்லை. ஆயினும் அரசு இயந்திரம், ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம், பாதிரிமார் கூட்டம் ஆகியவை ஒருங்கிணைந்து திட்டமிட்டுச் செயல்புரிந்து வந்தன. மாக்ஸ் முல்லர் உலகப் பேர் அறிஞராகக் காட்டப்பட்டார். எதிர்ப்புக் குரல்கள் ஒடுக்கப்பட்டன. மாக்ஸ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முல்லர் கூற்றுக்கள் தவறானவை என்பதை நிறுவ முனைந்தவருள் ஐஸக் டெய்லர் என்பாரும் ஒருவர். அவர் ஒரு முதுமுனைவர். D.Litt., பட்டமும், LL.D., பட்டமும் பெற்றவர். 1889 இலேயே இவர் ஆரியரின் மரபு மூலங்கள் (The Origins of the Aryans) என்ற நூலை வெளியிட்டார். இதன் மறுபதிப்பு 1892இல் வெளிவந்தது. இந்நூலின் பக்கம் 8இல் கூறப்பட்டிருப்பது இதுவே: "இந்நூற்றாண்டின் தொடக்கத்திலும், அண்மைக் காலத்திலும் – அதாவது முப்பது ஆண்டுகளுக்கு முன்பும், ஆர்ச்பிஷப் யுஷர் கூறிய காலக் கணக்கு, அதாவது மனித இனம் கி.மு.4004இல் தோற்றம் பெற்றது என்பது ஏற்கப்பட்டது." (At the beginning of the present century, and even so recently as thirty years ago, the chronology of Archbishop Usher was accepted without question, the origin of the human race being assigned to the years 4004 B.C.)

(மேலும் விவிலியத்தின் அடிப்படையில்) ஆதிமனிதன் ஆதாம். அவன் மனைவி ஏவாள் பேசிய எபிரேய மொழியே ஆதியில் தோன்றியமொழி என்றும், ஐரோப்பிய மொழிகளின் தோற்றம் ஜாஃபத் குடும்பத்தோடு தொடர்புடையன என்றும், ஜாஃபத் கி.மு. 2247இல் ஷினார் சமவெளியிலிருந்து வெளியேறியவன் என்றும் நம்பினர். (It was believed that the primal language spoken by our first parents was Hebrew and that the origin of the languages of Europe must be referred to Japhet who set forth the plains of Shinar in the year 2247 B.C.) - Issac Taylor, p.8.

இத்தகு தவறான கருத்துக்களே, அடிப்படை ஆதார உண்மைகள் என்று செயல்பட்டவர் மாக்ஸ் முல்லர். அவரது நடை கவர்ச்சியானது; அது படிப்போரைச் சொக்க வைக்கும். அவர் எழுதும் பாங்கை 'the charm of his style' என்றும் டெய்லர் குறிப்பிடுகிறார். மேலும் மற்ற எந்த எழுத்தாளரையும் விடத் தவறான எண்ணத்தைப் பரப்புவதில் அவர் வல்லவர் என்றும் டெய்லர் கூறுகிறார். (Max Muller... has done more than any writer to popularise the erroneous notion among ourselves)

மீண்டும் மீண்டும் தொடர்ந்து வெளியிடப்படும் தவறான கருத்துக்கு, ஆய்வில் அக்கறை அற்றவர்களிடையே ஒருவித நிலைபேறு கிட்டுவதில் ஆச்சரியமில்லை. அதிலும் சமயத்தின் பெயரால் திணிக்கப்படும் தவறான கருத்துக்கள் ஊர்ஜிதமான உண்மைகளின் அந்தஸ்தைப் பெற்று விடுவதால் ஆய்வுமுறை தவறான பாதையிலேயே தொடரப்படுகிறது. 'ஆரிய இனம்' 'ஆரியக் குடும்பம்' என்ற நூதனக் கருத்துக்களை உருவாக்கிய பலருள் முதன்மையானவர் மாக்ஸ் முல்லர். இதனால் பெரும் தீங்குகள் விளைந்தன. இதை உணர்ந்த மாக்ஸ் முல்லர், பின்னாளில் பல்டி அடித்தார். இது பற்றிப் பின்னர்க் காண்பம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாக்ஸ் முல்லர் மொழி இயல் (Philology) என்பதற்கே அழுத்தம் தந்து தாம் விரும்பிய முடிவுகளை அதன்மூலமே வலிந்து பெற்றுக் கொண்டார். அவர் காலத்தில் அகழ் ஆய்வு என்பது தொடங்கப்படவில்லை. அகழ் ஆய்வில் யாரும் அக்கறையும் காட்டவில்லை. பின்னாளில் அகழ் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டனவற்றை முன்பே நம்பப்பட்ட கருத்துக்களுக்குப் பொருந்துமாறு பொருள் காண விழைந்தனர். நம்பப்பட்ட கருத்துக்களை அகழ் ஆய்வு மறுதலித்த போதும் விடாப்பிடியாகப் பழைய தவறுகளையே பேணி வந்தனர். கருத்துத் தவறுகளைக் கைநெகிழ விடுதல் அவ்வளவு சுலபமான செயல் இல்லை.

உலகம் தட்டை என்றும், அதன் விளிம்பிற்குச் சென்று விட்டால் அதல பாதாளத்தில் விழ நேரிடும் என்றும், நக்ஷத்திரங்கள் இரவில் சிறிது வெளிச்சம் தர இறைவனால் ஏற்றி வைக்கப்பட்ட மெழுகுவர்த்திகள் என்றும், இந்தப் பூமியே பிரபஞ்சத்தின் மையம் என்றும் விவிலிய அடிப்படையில் கிறித்துவர்கள் அழுத்தமாக நம்பி வந்தனர். உண்மைகளைக் கண்டுபிடித்து வெளியிட்ட விஞ்ஞானிகளைக் கிறித்துவத் தலைமை சிறையில் இட்டது; வதைத்தது; அவர்கள் வெளியிட்ட கருத்துக்களைத் திரும்பப் பெற வற்புறுத்தி வெற்றியும் கண்டது. மார்டின் லூதர் காலத்திற்குப் பிறகே ஏனையோரும் பைபிளைப் படிக்க முடிந்தது. அதுவரையில் போப்பாண்டவர் வெளியிட்ட செய்திகளே பைபிளின் கூற்றுக்கள் என்று மக்கள் நம்பி வந்தனர். ஒரு சிலர் ரஹஸ்யமாக பைபிளைப் படிக்கத் தலைப்பட்ட போது அவர்கள் கொலை செய்யப்பட்டனர். ஒரு சிலர் தீயில் இடப்பட்டுப் பொசுக்கப்பட்டனர்.

ஐரோப்பிய நாட்டினர் வரலாறுகளைப் பார்ப்போமானால், அவர்கள் வெளிநாடுகளை ஆக்ரமித்துக் கொண்டு, தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டி, சுதேச மக்களை அடிமைப்படுத்தி வந்தவர்கள் என்றும், தங்கள் சமயங்களைப் பிறர் மீது திணித்தவர்கள் என்றும் நிதர்சனமாகத் தெரிய வரும். அமெரிக்காவிற்குச் சென்ற வெள்ளையர்கள் அங்கு வாழ்ந்த மக்களையும் அவர்களுடைய சமயங்களையும் திட்டமிட்டு அழித்தனர். மெக்ஸிகோ நாகரிகம் அழிக்கப்பட்டது; செவ்விந்தியர்கள் ஒழிக்கப்பட்டனர். எங்கும் கிறித்துவமே திணிக்கப்பட்டது. ஒரு செவ்விந்தியத் தலைவன் பாதிரி ஒருவரிடம் கூறியதை நினைவுபடுத்துகிறேன். "ஐயா, நீங்கள் இங்கு வந்த போது உங்களிடம் பைபிள் மட்டுமே இருந்தது. எங்கள் நிலபுலன்கள் எங்களிடம் இருந்தன. இப்போது எங்கள் நிலபுலன்கள் உங்கள் வசம் மாறிவிட்டன. எங்களிடம் நீங்கள் கொடுத்த பைபிள் மட்டுமே இருக்கிறது."

புஜ பலமே, ராணுவ பலமே, ஒரு நாகரிகத்தை உருவாக்குகிறது என்றே ஐரோப்பியர் கொண்டனர். வல்லான் வகுத்ததே வாய்க்கால். இதுவே உலகெங்கும் நிலவுகின்றது. வெளிநாட்டவரானஆரியர் படையெடுத்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்தியாவில் நுழைந்து பாரத நாட்டுக் குடிமக்களைத் தங்கள் அதிகாரத்திற்கு உட்படுத்தித் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர் என்றே ஐரோப்பியர் கருதினர். இதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்றாலும் இந்தக் கொள்கையையே அவர்கள் தொடர்ந்து பரப்பி வந்தனர். அவர்கள் செல்வாக்கால், பிரச்சாரத்தால் இந்தக் கொள்கையே நிறுவப்பட்ட உண்மையாகக் காட்டப்பட்டது. இதற்கு விரோதமான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டாலும், அவை ஏற்கப்படவே இல்லை. தாங்கள் முடிவு கட்டிவிட்ட ஆரியப் படையெடுப்பு என்பதற்கு மாறாக எதுவும் நிகழ்ந்திருக்க முடியாது என்று ஒரு மூர்க்கப்பிடிப்போடு வெள்ளையர் செயல்பட்டனர். வாதத்திற்கு மருந்துண்டு; பிடிவாதத்திற்கு மருந்தேது? எந்த நல்ல சான்றும், நீரூபணமும், மூர்க்கத்தனத்தை முறியடிக்க முடியா. முட்டாள்களைத் திருத்த முடியும். மூர்க்கர்களைத் திருத்தவே முடியாது. பெரிய விஞ்ஞானியான மாக்ஸ் ப்லாங்க் (Max Planck) கூறியதை இங்குக் காண்போம்.

நெடுங்காலமாகவே பேணப்பட்ட கருத்துக்களை (நம்பிக்கைகளை) மக்களிடமிருந்து சாவு மட்டுமே பிரிக்க முடியும்.

கிறித்துவர் ஏற்ற கருத்தை முன்பே கூறியுள்ளேன். அதாவது இவ்வுலகம் கி.மு. 4004இல் தான் சிருட்டிக்கப்பட்டது. அதற்கு முன்பு எதுவுமே கிடையாது. இதுவே பைபிள் தந்த உண்மை. இந்த பைபிள் ஒரு பிரளயம் பற்றிப் பேசுகிறது. இதையே யூதர்களும் கிறித்துவர்களும் ஏற்றனர். இது நிகழ்ந்த காலம் கி.மு. 2448 என்று முடிவு கட்டினர். இதில் தப்பிப் பிழைத்தது ஒரே ஒரு குடும்பம். அதன் தலைவன் நோவா (Noah). இப்புராண புருஷன் பற்றி ஒரு தனி நூலே வரைய வேண்டும். இவனைப் பற்றி பைபிள் கூறும் செய்தி இதுவே. எப்படி ஆதாம், ஏவாள் மூலம் மனித இனம் பெருக்கப்பட்டதோ, அப்படியே அழிந்து போன மனித இனம் மீளவும் இக்குடும்பம் மூலம் விருத்தியாயிற்று. "...form these the whole earth was peopled என்று பைபிள் சாற்றுகிறது. இந்த நோவா ஒரு திராட்சைத் தோட்டம் அமைத்தார். அதன் மூலம் பெற்ற மதுபானத்தை அபரிமிதமாகக் குடித்துவிட்டு, இவர் தம் கூடாரத்தில், சுய நினைவு அற்று நிர்வாணமாகக் கிடந்தார். அவர் மகன் ஹாம் (Ham) தந்தை பெற்ற நிர்வாணத்தைத் தரிசிக்க நேர்ந்தது. தம் சகோதரர்களான ஷெம், ஜாஃபத் (Shem, Japhath) ஆகியோரிடம் இச்செய்தியை ஹாம் கூறினான். பிறகு இவ்விருவரும் ஒரு துணியை எடுத்துக் கொண்டு பின்புறமாக, தந்தையின் உடலைப் பார்க்காதபடி நடந்து வந்து, அவ்வம்மண உடல் மீது போட்டனர். போதை தெளிந்த நிலையில், செய்தி அறிந்த நோவா தம் மகனான ஹாமைச் சபித்தார். அவன் வம்சம் அடிமைகளாக அல்லல் உறுக என்பது அவர் இட்ட சாபம். அவர் கடவுளும் இதை நிறைவேற்றி வைத்தார். அவ்வளவில் அவர் மகிழ்க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கி.மு. 2448இல் நோவாவின் குடும்பம் மட்டுமே பிழைத்தருந்தனர் என்று பார்த்தோம். அக்குடும்பம் உலகளாவ விருத்தி அடைய ஓர் ஆயிரம் ஆண்டாவது தேவைப்படும் அன்றோ? அதற்காக ஓர் ஆயிரம் ஆண்டு ஒதுக்கப்பட்டது. இதற்குப் பிறகே ஆரியப் படை எடுப்பு நிகழ்ந்ததாம். (விவிலியக் கணக்குப்படி இவர்களும் யூதர்களே என்று கருதப்பட வேண்டும்). ஆனால் வெள்ளையர் அவிழ்த்து விட்ட கதை அப்படிக் கூறவில்லை. மேலும் அவர்கள் சாற்றும் சரித்திரத்திற்கு வருவோம். கி.மு. 1400இல் ஆரியர்கள் படை எடுத்து இந்தியாவில் நுழைந்தனர். இவர்கள் அனைவரும் நாடோடிகள்; ஆடு மாடு மேய்த்து வந்தவர்கள். இந்தியாவில் நுழைந்து அங்குள்ள மக்களை அழித்தனர், அல்லது விரட்டி விட்டனர். இவர்கள் இந்தியாவிற்கு வந்த இரண்டு நூற்றாண்டுக்குள் ரிக் வேதம் படைத்தனர். ஆக கி.மு. 1200இல் ரிக் வேதம் உருவாயிற்று. இப்படி ஒரு போடு போட்டார் மாக்ஸ் முல்லர். **அவர் கூறிய செய்திக்கு அவர் ஆதாரம் ஏதும் கூறவில்லை**; கூற முடியாது என்றும் அவர் அறிவார். எதையும் அடித்துப் பேசினால் அது ஏற்கப்பட வாய்ப்பு உண்டு என்று அவர் அறிந்து வைத்திருந்தார். இதுவே சர்வ முட்டாள் மேற்கொள்ளும் உபாயம். இது பற்றி ஷேக்ஸ்பியர் கூறிய வாசகம் என் நினைவிற்கு வருகிறது. பஸானியோ என்ற பாத்திரம் மூலம் வெளியிடப்பட்ட கருத்து. நானே நனி சிறந்த ஞானி. நான் வாய் திறந்தால் (அதற்கு விரோதமாக) எந்த நாயும் குரைத்தல் கூடாது.

"I am Sir Oracle.

And when I ope my lips let no dog bark."

ஆகவே மாக்ஸ் முல்லர் பேசிவிட்டால் அனைவரும் வாய் அடைத்து நிற்க வேண்டும். ரிக் வேதம் கி.மு. 1200இல் தான் தோன்றியது என்றார் மாக்ஸ் முல்லர். என்றாலும் இது தவறு என்று மாக்ஸ் முல்லரை விடப் பல மடங்கு சம்ஸ்கிருத மொழி அறிவு படைத்த அறிஞர்கள், அதுவும் மேனாட்டு அறிஞர்கள், மாக்ஸ் முல்லர் கூற்றுத் தவறு என்பதற்குத் தக்க ஆதாரங்களை எடுத்துக் காட்டினர்.

'ஆரியப் படை எடுப்பு' என்ற ஒன்று உலகத்தில் அபரிமிதமான ஆதிக்கம் செலுத்தி வருகிறது என்பதைப் பார்த்தோம். நம்ப முடியாத, நம்பக் கூடாத, விஷம் கக்கும் கட்டுக்கதையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பொய்யே, அப்பட்டமான புளுகே, ஆரியப் படை எடுப்பு என்ற ஒன்று. சற்றுப் பொறுமையாகக் கேளுங்கள். உங்கள் மீது எந்தக் கருத்தையும் திணிப்பது என்பது என் கருத்தும் அன்று, கடனும் அன்று.

இங்கு நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். மாக்ஸ் முல்லர் கூர்மையான அறிவு படைத்தவர். நல்ல உழைப்பாளி. உலக மொழிகளில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பயிற்சி மேற்கொண்டவர். அவர், தம் சொற்களும் வாசகங்களும் மூன்று நிலைகளில் பொருள் தருமாறு பேசவும் எழுதவும் வல்லவர். மேலும் மெக்காலே போன்ற பிரிட்டிஷார் அவருக்குள்ள சம்ஸ்கிருத அபிமானத்தைக் காட்டத் தடைபோட்டனர். வேதங்கள் பைபிளுக்கு ஈடாக மாட்டா; அவை கட்டுக்கதை என்பதை மொழிபெயர்ப்பின் மூலம் அறிவிக்கவே மாக்ஸ் முல்லர் நியமிக்கபபட்டார் என்பதை மறத்தல் ஆகாது. ஜெர்மன் பிரஜையான அவர் இங்கிலாந்தில் தஞ்சம் புக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. ஏனைய ஜெர்மன் சம்ஸ்கிருத பண்டிதர்களுக்கு இருந்த சுதந்திரம் மாக்ஸ் முல்லருக்குக் கிட்டவில்லை. ஆகவே, சிக்கிக் கொள்ள நேர்ந்தால் தப்பி ஓட அவர் தர்க்கம், விதர்க்கம், குதர்க்கம் செய்ய நேர்ந்தது. சம்ஸ்கிருதத்தில் அவர் புலமை பெற்றிருக்கவில்லை. ஆனால் திறம்பட வாதிட அவரால் முடியும். ‘வேதத்தைக் குறை கூறினால் இந்தியர் தம்மை வெறுப்பர்’ என்று அவருக்குத் தெரியும். ஆகவே இந்தியர்களைத் திருப்தி செய்யும் அளவிற்கு அவர் அவ்வப்பொழுது சில வாசகங்களைக் கூறி இந்தியரின் நட்பைப் பெற்றார்.

வேத காலம் பற்றிய அவரது கணிப்பு கடும் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டது. இப்படி நேரும் என்பது அவருக்குத் தெரியும். முன்கூட்டியே சொல்ல வேண்டிய விளக்கத்தை அவர் உருவாக்கி வைத்திருந்தார். அதை அவர் இப்படிச் சொன்னார். “வேதப் பாடல்கள் தோன்றிய காலம் கி.மு. ஆயிரமா? ஆயிரத்து ஐநூறா? இரண்டாயிரமா? அல்லது மூவாயிரமா? என்பதை உலகில் யாராலும் நிச்சயிக்க முடியாது.” இங்கு ஒன்றைக் கவனிக்க வேண்டும். வேத காலத்தை கி.மு. 3000 ஆம் ஆண்டு அளவு கொண்டு செல்ல மாக்ஸ் முல்லர் இடம் தந்தாரே ஒழிய, கி.மு. 4004க்கு முன்பு கொண்டு போக அவர் இடம் தரவில்லை. கிறித்துவக் கோட்பாட்டிற்கு ஊறு விளைவிக்காத விதத்தில் அவர் விடையிறுத்தார்.

உலகம் கி.மு. 4004 ஆம் ஆண்டா தோன்றியது? பலப்பல கோடி ஆண்டுகளுக்கு முன்பே உலகம் தோன்றி விட்டது என்பதை விஞ்ஞானிகள் ஐயம் திரிபுகளுக்கு இடமின்றி நிறுவி உள்ளனர். அது மட்டுமன்று. இந்தியப் புராணங்கள் பல லக்ஷம் ஆண்டுகள் பற்றிப் பேசியிருப்பது ஏற்கத்தக்கது என்றும் அறிவித்து வருகின்றனர். சைவ சித்தாந்தம் முதல் சிருஷ்டி பற்றிப் பேசவே முடியாது; அது காலக்கணக்கிற்குச் சிக்காது என்று கூறி, உற்பவம் என்ற சொல் புனர் உற்பவத்தையே குறிக்கும் என்றுதானே சாற்றுகிறது.

மாக்ஸ் முல்லர் கிறித்துவச் சமய வெறியாளர். இத்தகையோரைப் பாரதிதாஸன் ‘நெடுஞ்சட்டை அந்தகர்’ என்று எவ்வளவு அழகாக வருணித்துள்ளார். மாக்ஸ் முல்லர் அங்கி அணியாத பாதிரி. ஆரிய என்ற சொல்லிற்கு விபரீத அர்த்தம் கற்பித்துக் குழப்பத்தை விளைவித்தவர் அவரே. அவருடைய குழப்பத்திற்கு அவரே பலியானார். பிறகு பிராயச்சித்தமாகத் தாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாகும் வரையில், முப்பது ஆண்டுகள் தொடர்ந்து அச்சொல்லுக்கான உண்மை விளக்கத்தை அழுத்தம் திருத்தமாக அறிவித்து வந்தார். அவருடைய மனமாற்றம் ஏனோ இன்றளவும் சரியான பலனை அளிக்கவில்லை.

தவறான கருத்துக்களுக்கு நெடிய வாழ்வு உண்டு. தஞ்சைப் பெரிய கோயிலின் கோபுரத்தின நிழல் தரையில் விழாது என்றும், அங்குள்ள நந்தி வளர்ந்து கொண்டே வந்ததால் அதன் மீது ஆணி அடித்து அதனுடைய வளர்ச்சியை நிறுத்தினார்கள் என்றும், விமானத்தின் மேல் உள்ள பகுதி (dome) ஒரே கல்லில் அமைக்கப்பட்டது என்றும் இன்றும் கூறி வருகிறார்களே. சரித்திரப் பொய்களும் இத்தகையவே.

தொடக்கக் காலத்தில் ஆரியர் என்பார் ஓர் இனத்தார் என்று கூறப்பட்டதை மாக்ஸ் முல்லர் ஆதரித்தார். பிரசாரம் செய்தார். பிறகு தாம் கூறியது அபாண்டம் என்பதை உணர்ந்தார். ஆரியர் என்பார் ஓர் இனத்தார் அல்லர்; அவர்கள் ஒரு மொழிக் கூட்டத்தார் என்று உணர்ந்தார். அம்மொழிக் கூட்டத்தில் சம்ஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம், அவெஸ்தன் மொழி ஆகியவையும் ப்ராகிருதம், பாலி, அர்த்த மாகதி, மைதிலி போன்ற மொழிகளும் அடங்கும். இதுவே உண்மை. மேலும் ஐரோப்பிய மொழிகளிலும் சம்ஸ்கிருதத்தின் தாக்கம் உண்டு.

ஆரிய என்ற சொல்லுக்கு ரிக்வேதம் கூறும் பொருள் என்ன? "ப்ரஜ ஆர்ய ஜ்யோதிரக் ஏஹ:" (ஆரியப் ப்ரஜை ஆவார் ஒளியை நாடிப் பெற்றுச் சுயம் ஜோதியாக உள்ளவர்). **அவர்கள் ஓர் இனத்தார் அல்லர்.** வால்மீகி ராமனை ஆர்யன் என்றார். புத்தர் ஆர்யர் என்று போற்றப்பட்டார். மனு தென்னிந்திய மக்களை (தமிழரை) ஆரியர் என்று வருணித்தார். அப்படியானால் ஆர்ய என்ற சொல் எதைக் குறிக்கிறது?

'ஆர்யா' என்ற சஞ்சிகையை ஸ்ரீ அரவிந்தர் 1914இல் தோற்றுவித்தார். அவர் அந்தணர் அல்லர். சுவாமி விவேகானந்தரும் அந்தணர் அல்லர். பதினெண் புராணங்களையும் விரித்துரைத்த, திருஞானசம்பந்தரால் போற்றப்பட்ட சூதமுனிவரும் அந்தணர் அல்லர். அனைவரிலும் மேம்பட்ட பெரியோர் அவர் ஆதலினால் அவர் ஆரியர் ஆவர்.

ஸ்ரீ அரவிந்தர் தந்துள்ள விளக்கத்திலிருந்து ஒரு நறுக்கு. "There is no word in human speech that has a nobler history." (மானுடர் மொழியில் இச்சொல்லைப் போல் அதி உன்னத சரித்திரச் சொல் எதுவும் இல்லை).

"ஆரிய நாட்டினர் ஆண்மையோடு இயற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கு ஓங்குக"

என்று மகாகவி பாரதியார் தமிழ்நாடு உள்ளிட்ட பாரதம் ஆரிய நாடு என்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆரிய என்றால், சீரிய, சிறப்புமிக்க, அருமையான, உயர்வான என்றுதான் பொருள். வடமொழி நிகண்டான அமரகோசமும் இப்பொருள்களையே கூறுகின்றது. சுயநலமற்ற, பிறர் நலம் பேணுவோனாய், புலன் அழுக்கற்றவனாய், நீதிநெறி வழுவா நெறி முறையில் இயங்குவானாய், தன்னை வென்றாளும் சமர்த்து உடையோனாய், உண்மை விளம்பியாய் உள்ள ஒவ்வொரு வரும் ஆரியனே என்பது ஸ்ரீ அரவிந்தர் தந்த விளக்கம். இறை உலகு தன்னுள்ளும், புறத்தும் குடிகொள்ளப் போராடுபவன் ஆரியன். "Always he (the Arya) fights for the coming of the Kingdom of God within himself and the world" என்றார் ஸ்ரீ அரவிந்தர்.

உண்மை ஆரியன் சிவபெருமானே. நம்முடைய திருமுறைகளும் சாத்திரங்களும் சாற்றுவன கேளீர். "ஆரியம் தமிழோடு இசையானவன்" என்றும், "ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்" என்றும், "செந்தமிழோடு ஆரியனைச் சீரியானை" என்றும், தமிழ் முறையைக் காலத்தால் முதலில் அறிவித்த அப்பர் அடிகள் அருளியுள்ளார்.

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே

என்றும்,

நந்தம் பாடியில் நான் மறையோனாய்
அந்தமில் ஆரியனாய் அமர்ந்த நெறி

என்றும், மணிவாசகம் போற்றுகிறது.

ஆரியமும் தமிழும் உடனே சொலிக்
காரிகையார்க்குக் கருணை செய்தானே

என்றும்,

ஆரியன் தோற்ற முன் அற்ற மலங்களே

என்றும்,

ஆரியன் நல்லன்; குதிரை இரண்டுள

என்றும்,

ஆரிய காரணமாய தலத்திடை

என்றும், திருமூலர் அருளியுள்ளார்.

பெரியோர்களை ஆரியர் என்று போற்றுதல் தமிழ் மரபு. தம் குருநாதரான மகாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களை அவர் சீடர் வித்துவான் தியாகாஜச் செட்டியார் "மீனாட்சி சுந்தர ஆரியனே" என்று பாடிப் பரவுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருமுறைகளிலும், மெய்கண்ட சாத்திரங்களிலும், திவ்யப் பிரபந்தத்திலும், மறைகளிலும், இதிஹாஸ புராணங்களிலும் ஆர்ய என்ற சொல் உத்தமரைக் குறித்தே வழங்கப்பட்டது.

ஆரியனாம் ஆசான் வந்து அருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்

என்கிறது சிவஞான சித்தியார்.

இங்ஙனம் உள்ள சொல்லுக்கான உண்மைப் பொருள் மீது இரும்புத்திரையிட்டு விபரீதப் பொருள் கற்பித்த மாக்ஸ் முல்லர் மனம் திருந்தி உண்மைப் பொருளையே சாகும்வரை கூறிவந்தார். 1888இல் அவர் அறிவித்தது: "I have declared again and again that if I say Aryan, I mean neither blood nor bones, nor skull nor hair; I mean simply those who speak the Aryan language" (ஆரியன் என்று நான் கூறும் போது குருதியையோ, எலும்புகளையோ, கபாலத்தையோ, மயிரையோ (அதாவது உடல் அமைப்பையோ) குறிப்பிடவே இல்லை. ஆரியமொழி பேசுவோரையே நான் குறிப்பிடுகிறேன் என்று திரும்பத் திரும்பக் கூறி வருகிறேன்). மேலும் அவர் சொன்னார்; "Aryan in scientific language is utterly inapplicable to race. It means language and nothing but language." (ஆர்யன் என்ற சொல் மொழியை மட்டும் குறிப்பது. மொழியைத் தவிர வேறு எதையும் குறிக்காது)

உடல் அமைப்பை வைத்து, ஆரியரின் தலை இப்படி இருக்கும். சரீர அமைப்பு இப்படி இப்படி, தலையின் உருவம் இப்படி, எலும்பு தோல்கள் இப்படி என்று ஒரு கூட்டத்தார் பேசி வந்தனர். **இதை அறவே கண்டித்தார் மாக்ஸ் முல்லர்.** இதை அபத்தம் என்று சாடினார். "ஆரியன் குருதி, ஆரியன் இனம், ஆரியன் கண்கள், ஆரியன் உரோமம் என்று பேசுகிற மானுட இயலாளன், நீள மண்டை அகராதி, உருண்டை மண்டை இலக்கணப் புத்தகம் என்று பேசும் மொழி இயலாளன் எவ்வளவு பெரிய பாவியோ, அவ்வளவு பெரிய பாவி ஆவான்" என்றார் மாக்ஸ் முல்லர். "To me an ethnologist who speaks of Aryan blood, Aryan race, Aryan eyes and hair is as great a sinner as a linguist who speaks of dolichocephalic dictionary or brachycephalic grammar."

ஆரியர் ஓர் இனத்தார் என்று கூறி ஆரியர் – திராவிடர் என்ற பகுப்பை உண்டாக்கியவர், நம்மைப் பிரித்தாண்ட பிரிடிஷார். 56 தேசங்கள் கொண்ட முழுமையான நாடு பாரத நாடு.

"இவள் செப்பு மொழி பதினெட் டுடையாள் – எனில்
சிந்தனை ஒன்றுடையள்"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று பாரத மாதாவைப் பாரதியார் போற்றினார். வெள்ளையார் செய்த பிளவால் நம் நாட்டின் ஒருமைப்பாடு சீர்குலைந்தது. மேலும் வெளியிலிருந்து வந்த ஆரியர், திராவிடரை அடித்து விரட்டினர் என்று கதை கட்டி விட்டனர். இந்தப் பொய்ச் சரித்திரம் நம்மைப் பலி வாங்கிவிட்டது. உண்மையை அறிய விரும்பவோர் ஒரு சில உண்மை நூல்களையேனும் படித்தல் வேண்டும். S.G. Talageri வரைந்த The Aryan Invasion Theory: A Reapprasal என்ற நூலையும், நவரத்ன ராஜராம் வரைந்திருக்கும் Aryan Invasion Theory என்ற நூலையும், David Frawley, K.D. Sethna, Subash Kak, S.R. Rao, Koenraad Elst, Ambedkar, Sitaram Goel போன்றோரின் ஆய்வு நூல்களையும் எழுத்தெண்ணிப் படிக்க வேண்டும். வெள்ளையர் வரைந்ததே சரித்திரம் என்று நம் நாட்டுச் சரித்திர ஆசிரியர்களும் அதையே வழிமோழிந்து பதிவு செய்து வைத்து விட்டனர். கலியின் கொடுமையை என்ன என்பது?

Dr. அம்பேத்கரின் நூல்களைக் கூட நம்மவர் படிப்பதில்லை. அவெஸ்தன், வடமொழி, ஆங்கிலம் என்றுள்ள பலப்பல மொழிகளைக் கற்றவர் அம்பேத்கர். வெள்ளையர்களின் போலி ஆய்வுகளை நொறுக்கித் தள்ளியவர் அவர்; வர்ணம் என்றால் தோலின் நிறம் என்று கூறி தோல் நிறத்தை வைத்தே மனித இனங்களை அடையாளம் காண முடியும் என்று புத்தகங்கள் வரையப்பட்டன. இவர்கள் கிளப்பிவிட்ட புளுகுகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் Dr. அம்பேத்கர் வேதங்களையும், Zend Avestaவையும் எழுத்தெண்ணிப் படித்தார். தம் முடிவுகளை அவர் தக்க ஆதாரங்களுடன் வெளியிட்டார். அவர் கூறிதாவது:

"ஆரியர்கள் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்கள் என்பதற்கும், அதன் சுதேசி மக்களை வென்று அவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்தார்கள் என்பதற்கும் என்ன சான்று இருக்கிறது? ரிக்வேதத்தைப் பொறுத்த வரையில், ஆரியர்கள் இந்தியாவுக்கு வெளியே இருந்து இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்கள் என்பதற்கு அதில் அணுவளவு ஆதாரம்கூட இல்லை. இதுபற்றி திரு. பி.டி. சீனிவாச அய்யங்கார் பின்வருமாறு கூறுகிறார்:

"ஆரியர்கள், தாசர்கள், தசியுக்கள் எனும் சொற்கள் இடம் பெற்றுள்ள மந்திரங்களைக் கவனமாகப் பரிசீலித்துப் பார்த்தால் அவை இனத்தைக் குறிக்கவில்லை என்பதையும் சமயக் கோட்பாட்டு முறைகளையே குறிக்கின்றன என்பதையும் காணலாம். இந்தச் சொற்கள் பெரும்பாலும் ரிக்வேத சம்ஹிதையிலேயே வருகின்றன. மொத்தம் 1,53,972 சொற்கள் அடங்கிய மந்திரங்களில் ஆரிய என்னும் சொல் சுமார் 33 தடவையே வருகின்றது. இவ்வாறு இந்தச் சொல் அரிதாகவே இடம்பெற்றிருப்பது ஆரியர்கள் என்று தங்களை அழைத்துக் கொண்ட குலமரபுக் குழுவினர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாட்டின் மீது படையெடுத்து அதனை வென்று மக்களைப் பூண்டோடு அழித்தவர்கள் அல்லர் என்பதற்குச் சான்றாக அமைந்துள்ளது. ஏனென்றால் படையெடுத்துவரும் எந்தக் குலமரபுக் குழுவினரும் தங்கள் சாதனைகளைப் பற்றி அடிக்கடி தற்புகழ்ச்சி செய்து கொள்ளாமல் இருக்க மாட்டார்கள்.''

மேலும் அம்பேத்கர் அவர்கள் கூறுவதாவது:

''வேத நூல்களின் சான்றைப் பொறுத்தவரையில், அது ஆரியர்களின் பூர்வீகத் தாயகம் இந்தியாவுக்கு வெளியே இருந்தது என்பதை மெய்ப்பிப்பதாக இல்லை. ரிக்வேதத்தில் (X.75.5) ஏழு நதிகளைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொல்நடைப் பாணி இங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். பேராசிரியர் டி.எஸ். திரிவேதா கூறுவது போன்று நதிகள் 'எனது கங்கை, எனது யமுனை, எனது சரஸ்வதி' என்னும் ரீதியில் குறிப்பிடப்படுகின்றன. நீண்டகாலத் தொடர்பால் ஒரு நதியின்பால் உணர்வுபூர்வமாக பாசத்தை வளர்த்துக் கொண்டிருந்தாலன்றி எந்த ஓர் அந்நியனும் அந்த நதியை இவ்விதம் பிரியத்தோடு, பேரன்போடு குறிப்பிட மாட்டான்.

''ஆரியர்கள் பெற்ற வெற்றியையும் மற்றவர்களை அவர்கள் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்ததையும் பற்றிய குறிப்புகள் ரிக் வேதத்தில் காணப்படுகின்றன என்பதில் ஐயமில்லை; இவற்றில் தாசர்களும், தசியுக்களும் ஆரியர்களின் பகைவர்களாக வருணிக்கப்பட்டுள்ளனர்; இவர்களைக் கொன்றொழிக்கும்படி வேதகால ரிஷிகள் தங்கள் தெய்வங்களை வேண்டிக் கொள்ளும் பல பாசுரங்களும் ரிக் வேதத்தில் இடம் பெற்றுள்ளன. ஆனால் இதை வைத்து ஆரியர்களின் வெற்றியையும், மற்றவர்களை அவர்கள் கீழ்ப்படுத்தியதையும் பற்றிய எத்தகைய ஒரு முடிவுக்கும் வருவதற்கு முன்னர்ப் பின்காணப் பெறும் விஷயங்களைக் கணக்கிலெடுத்துக் கொள்வது அவசியம்.

''**முதலாவதாக**, ஒருபுறம் ஆரியர்களுக்கும் மற்றொரு புறம் தாசர்கள் அல்லது தசியுக்களுக்கும் இடையே நடைபெற்ற போர்களைப் பற்றி ரிக்வேதத்தில் மிகச் சொற்ப இடங்களிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரிக்வேதத்தில் இந்தச் சொல்வரும் 33 இடங்களில் 8 இடங்களில் தாம் தாசர்களுக்கு எதிராகவும், 7 இடங்களில் தாம் தசியுக்களுககு எதிராகவும் அது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இரு தரப்பாருக்கும் இடையே அங்கு மிங்குமாகக் கலகங்கள் நடைபெற்றதையே இது காட்டுகிறது. மற்றபடி இது ஆரியர்கள் பெற்ற வெற்றியையும் மற்றவர்களை அடக்கியதையும் பற்றிய சான்றாகாது.

''**இரண்டாவதாக**, தாசர்களுக்கும் ஆரியர்களுக்கும் இடையே எத்தகைய மோதல்கள் ஏற்பட்டிருந்தாலும் அவர்கள் கௌரவமிக்க சமாதான

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடிப்படையில் ஒரு பரஸ்பர உடன்பாட்டிற்கு வந்ததாகவே தோன்றுகிறது. பொதுப் பகைவனை எதிர்த்துத் தாசர்களும் ஆரியர்களும் எவ்வாறு ஒன்றுபட்டு நின்றனர் என்பதைக் காட்டும் குறிப்புகள் ரிக்வேதத்தில் காணப்படுவதிலிருந்து இது தெளிவாகத் தெரிகிறது. ரிக்வேதத்தில் வரும் பின்கண்ட பாசுரங்கள் கவனத்திற்குரியவையாகும்.

ரிக்வேதம் - VI. 33. 3;
VII. 83. 1;
VIII. 51. 9;
X. 102. 3.

"மூன்றாவதாக, ஆரியர்களுக்கும் தாசர்களுக்கும் இடையேயான மோதலின் அளவும் தன்மையும் எத்தகையவையாக இருப்பினும் இது இன அடிப்படையிலான மோதல் அன்று. சமய வேறுபாடு காரணமாக எழுந்த மோதலே இது. இந்த மோதல் சமயச் சார்புடையதன்றி, இனச் சார்புடையதன்று என்பதற்கு ரிக் வேதத்திலேயே நிறையச் சான்றுகள் உள்ளன. தசியுக்களைப் பற்றி அது பின்வருமாறு கூறுகிறது.

"அவர்கள் அவ்ரதர்கள் (ஆரிய, சமய வினைமுறைகளைச் செய்யாதவர்கள்) (ரி.வே.i.51.8., 9; i.132.4; iv.41.2; vi.14.3); அபவிரதர்கள் (ரி.வே.V.42.2), அந்யவிரதர்கள் வேறுபட்ட வினைமுறைகளைச் செய்பவர்கள் (ரி.வே.VIII.59. II; X 22.8), அனக்னித்ரர்கள், (அக்னியை வழிபடாதவர்கள்) (ரி.வே.V.183.3), அயஜ்யுக்கள், அயக்ஞர்கள், (வேள்விகள் செய்யாதவர்கள்) (ரி.வே.i.131.44; i.33.4; vii.59.11), அபரம்பர்கள் (இறை வணக்கம் செய்யாதவர்கள்) மேலும் பிராமணப் புரோகிதர்களை சடங்குகள் செய்வதற்கு அமர்த்திக் கொள்ளாதவர்கள்) (ரி.வே.iv.15.9; 105.8); அன்ரிச்சர்கள், ரிக்குகள் இல்லாதவர்கள் (ரி.வே.X.105.8); பரமதுவிஷர்கள், பிரார்த்தனைகள் செய்யாதவர்கள் (அல்லது பிராமணர்களை வெறுப்பவர்கள்) (ரி.வே.v.42.9); அனிந்தரா, இந்திரன் இல்லாதவர்கள் அல்லது இந்திரனை இழிவாகக் கருதுபவர்கள் (ரி.வே.i.133, 1; v.2, vii.18, 6; x.27, 6; X.48, 7); அவர்கள் பிராமணர்களுக்குத் தானங்கள் செய்யாதவர்கள் (ரி.வே.v.7.10)."

"ரிக்வேதத்தில் காணப்படும் பின்கண்ட பகுதியும் (X.22.8) நம் கவனத்திற்குரியது."

"வேள்விகள் நடத்தாத, எதிலும் நம்பிக்கை வைக்காத தசியுக்கள் மத்தியில் நாங்கள் வாழ்ந்து வருகிறோம். அவர்களுக்குத் தங்களுடைய சொந்த சமய வினைமுறைகள் இருக்கின்றன. அவர்கள் மனிதர்கள் என்றே அழைக்கப்படுவதற்குத் தகுதியற்றவர்கள். ஓ! பகைவர்களை நாசம் செய்பவனே, அவர்களை நிர்மூலமாக்கு, தாசர்களுக்குத் தீங்குசெய்."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"ரிக் வேதத்தில் இடம் பெற்றிருக்கும் இந்தக் கருத்துக்களைக் காணும்போது, ஆரிய இனம் ஆரியரல்லாத இனங்களான தாசர்களையும் தசியுக்களையும் இராணுவ ரீதியில் வெற்றி கொண்டனர் என்ற கோட்பாடு **வேரறுந்து அடிசாய்ந்து விடுகிறது.**"

"ஆரியர்களையும், அவர்கள் இந்தியாவின் மீது படையெடுத்து, தாசர்களையும் தசியுக்களையும் அடக்கி ஒடுக்கினார்கள் என்று கூறப்படுவதையும் பற்றி நாம் கூறக்கூடியது இவ்வளவே. இதுவரை ஆரியத் தரப்பிலிருந்து இந்தப் பிரச்சினையைப் பார்த்தோம். அடுத்துத் தாசர்கள், தசியுக்கள் தரப்பிலிருந்து இப்பிரச்சினையைப் பரிசிலிப்பது பயனுள்ளதாக இருக்கும்.தாசர்கள், தசியுக்கள் என்ற பெயர்கள் எந்தப் பொருளில் பயன்படுத்தப்படுகின்றன?"

அவை இன அடிப்படையில் பயன்படுத்தப் பட்டுள்ளனவா? **'இல்லை' என்று ஆதாரங்களுடன் நிறுவி உள்ளார் அண்ணல் அம்பேத்கர்.**

"இது சம்பந்தமாக, ரிக்வேதத்தில் காணப்படும் பின்கண்ட பாசுரங்களைக் கவனத்திற்கொள்வது உசிதமாக இருக்கும்."

1. ரிக்வேதம், vi.22.10 - "ஓ வச்ஜசிரி, நீ உன் வல்லமையால் தாசர்களிடமிருந்து ஆரியர்களை, அதாவது தீயவர்களிடமிருந்து நல்லவர்களை உருவாக்கி விட்டாய். எங்கள் பகைவர்களை வெல்லுவதற்கு இதே ஆற்றலை எங்களுக்கு அளிப்பாயாக."
2. ரிக்வேதம் X.49.3 (இந்திரன் கூறுகிறான்). "தசியுக்களிடமிருந்து ஆரியர்கள் எனும் உயர் இனமதிப்புப் பெயரைப் பறித்துவிட்டேன்."
3. ரிக்வேதம், i.151.8 – "ஓ, இந்திரா, யார் ஆரியன், யார் தசியு என்பதைக் கண்டறிந்து அவர்களைத் தனித்தனியே பிரித்து வை."

"இந்தப் பாசுரங்கள் எதைக் காட்டுகின்றன? ஒருபுறம் ஆரியர்களுக்கும் இன்னொருபுறம் தாசர்களுக்கும் தசியுக்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு நிற அடிப்படையிலோ அல்லது உறுப்பமைதி அடிப்படையிலோ அமைந்த இனவேறுபாடு அன்று என்பதையே இவை புலப்படுத்துகின்றன. **இதனால்தான் ஒரு தாசனோ அல்லது தசியுவோ ஓர் ஆரியனாக முடிகிறது.** இதன் காரணமாகவே இவர்களை ஆரியர்களிடமிருந்து பிரிக்கும் பணி இந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது."

"இவ்வாறு, ஆரிய இனம் குறித்த மேலைய எழுத்தாளர்களின் கோட்பாடு ஒவ்வோர் அம்சத்திலும் அடிசாய்ந்து விழுகிறது என்பது சொல்லாமலே விளங்கும். பொதுவாக மேலைய அறிஞர்கள் ஆழமான ஆராய்ச்சியிலும், கவனமான பகுத்தாய்விலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பதைக் கருத்திற்கொண்டு பார்க்கும் போது இஃது ஓரளவு வியப்பாகவே தோன்றும். அப்படியிருக்கையில் அவர்களது கோட்பாடு தோற்றது ஏன்? இந்தக் கோட்பாட்டை நுணுகி ஆராயும் எவரும் அதனை இரண்டு தொற்றுநோய்கள் பீடித்திருப்பதைக் காண்பர். முதலாவதாக, இந்தக் கோட்பாடு சில அனுமானங்களையும், அந்த அனுமானங்களின் அடிப்படையில் எழுந்த முடிவையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இரண்டாவதாக, இந்தக் கோட்பாடு விஞ்ஞான ஆய்வுக்கு முரண்பட்டதாக இருக்கிறது. உண்மைகளைக் கண்டறிய அது அனுமதிக்கவில்லை. மாறாக, இந்தக் கோட்பாடு முற்புனைவாக உருவாக்கப்பட்டு, அதனை மெய்ப்பிப்பதற்கு ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.”

“ஆரிய இனம் சம்பந்தப்பட்ட கோட்பாடு **ஒரு வெறும் அனுமானமே** அன்றி வேறன்று. 1835 ஆம் ஆண்டில் வெளியான ஒப்பிலக்கணம் என்ற தமது பிரசித்தி பெற்ற நூலில் டாக்டர் பாப் முன்வைத்த ஒரு மொழியியல் முன்மொழிவுரையின் அடிப்படையில் அமைந்ததே இந்தக் கோட்பாடு, ஏராளமான ஐரோப்பிய மொழிகளும் சில ஆசிய மொழிகளும் ஒரு பொதுவான முன்னோர்கள் மொழியிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்று டாக்டர் பாப் தமது நூலில் கூறியிருந்தார். பாப் குறிப்பிட்ட ஐரோப்பிய மொழிகளும் ஆசிய மொழிகளும் இந்தோ ஜெர்மன் மொழிகள் என அழைக்கப்பட்டன. இந்த மொழிகள் அனைத்தும் கூட்டாக ஆரிய மொழிகள் எனக் குறிப்பிடப்பட்டன. வேதமொழி ஆரியர்களைக் குறிப்பிடுவதும், அது இந்தோ – ஜெர்மன் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததாக இருப்பதுமே இதற்கு பிரதான காரணம். இந்த அனுமானமே ஆரிய இனக்கோட்பாட்டுக்கு முக்கிய அடித்தளமாக இருந்து வருகிறது.”

“இந்த அனுமானத்திலிருந்து இரண்டு முடிவுகள் பெறப்படுகின்றன. 1. இன ஒற்றுமை, 2. அந்த இனமே ஆரிய இனம் என்பது. இந்த மொழிகள் எல்லாம் ஒரு பொது மூதாதையர் மொழியிலிருந்து தோன்றியவை என்றால் அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஓர் இனம் இருந்திருக்க வேண்டும். அந்தத் தாய்மொழி ஆரியமொழி என்கிறபோது, அதனைப் பேசிய இனம் ஆரிய இனமாக இருக்க வேண்டும் என்று வாதிக்கப்படுகிறது. ஒரு தனியான ஆரிய இனம் இருந்தது என்பது இவ்வாறு ஓர் அனுமானமே தவிர வேறன்று. இந்த அனுமானத்திலிருந்து வேறொரு அனுமானம் பெறப்படுகிறது. அதாவது தனி ஆரிய இனம் என்று ஒன்று இருந்திருந்தால் அதற்கு ஒரு பொதுவான பூர்வீகத் தாயகமும் இருந்திருக்க வேண்டும் என்பதே அந்த அனுமானம். நெருங்கிய கூட்டுறவுக்கு வகை செய்யும் ஒரு பொதுத் தாயகத்தை மக்கள் பெற்றிருந்தாலொழிய ஒரு பொதுமொழி இருப்பது சாத்தியமன்று என்று வாதிக்கப்படுகிறது. இவ்வாறு பொது பூர்வீகத்தாயகம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பது அனுமானத்திலிருந்து பெறப்படும் மற்றொரு அனுமானமாக அமைந்துள்ளது.''

''படையெடுப்புக் கோட்பாடு ஒரு கற்பனையே. மேற்கத்தியக் கோட்பாட்டுக்கு அடிப்படையாக உள்ள அனுமானத்துக்கு இந்தப் படையெடுப்புக் கற்பனை தேவைப்படுகிறது. இந்தோ – ஜெர்மன் மக்களே ஆதி ஆரிய இனத்தின் இன்றைய பிரதிநிதிகளில் கலப்பற்ற நேர்வழி மரபினர் என்பதே அந்த அனுமானம். இந்த இனத்தின் முதல் தாயகம் ஐரோப்பாவில் ஏதோ ஓரிடத்தில் இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கப்படுகிறது. இத்தகைய அனுமானங்கள் ஒரு கேள்வியை எழுப்புகின்றன; ஆரியமொழி எப்படி இந்தியாவுக்கு வந்தது? ஆரியர்கள் வெளியிலிருந்து இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டும் என்ற ஊகத்தைக் கொண்டுதான் இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க முடியும். எனவேதான் படையெடுப்புக் கோட்பாடு கற்பனையாக இட்டுக் கட்டப்பட வேண்டிய அவசியமேற்பட்டது.''

''மூன்றாவது ஊகம் ஆரியர்கள் மிகவும் மேம்பட்ட இனத்தினர் என்பது. இந்தக் கோட்பாட்டுக்கு மூலாதாரம் ஆரியர்கள் ஐரோப்பிய இனத்தினர் என்ற நம்பிக்கை ஆகும். ஐரோப்பிய இனத்தினர் என்ற முறையில் ஆரியர்கள் ஆசிய இனங்களைவிட மிகவும் மேலானவர்கள் என்று அனுமானிக்கப்படுகிறது. இவ்வாறு ஆரியர்கள் உயர்ந்தவர்கள் என்று அனுமானித்த பிறகு, தருக்க ரீதியான அடுத்த நடவடிக்கை அவர்களது மேம்பாட்டை நிலைநாட்டுவதே ஆகும். ஆரியர்கள் படையெடுத்து வந்து மற்ற இனங்களை அடக்கி ஒடுக்கினார்கள் என்று கூறினால்தான் அவர்களது மேம்பாட்டு நிலையை நிரூபிக்க முடியும் என்பதைத் தெரிந்து கொண்ட மேலைய எழுத்தாளர்கள் ஆரியர்கள் இந்தியாவின் மீது படையெடுத்தார்கள் என்றும், தாசர்களையும் தசியுக்களையும் வெற்றி கொண்டார்கள் என்றும் கதை கட்டிவிட ஆரம்பித்தார்கள்.''

''நான்காவது அனுமானம் ஐரோப்பிய இனத்தவர் வெள்ளை நிறத்தினர் என்பதும், கறுப்பு இனத்தவர்களுக்கு எதிராக அவர்கள நிறவெறியைக் கடைப்பிடித்தார்கள் என்பதுமாகும். ஆரியர்கள் ஐரோப்பிய இனத்தினர் என்பதால் அவர்களிடம் நிறவெறி இருந்திருக்க வேண்டும் என்று அனுமானிக்கப்படுகிறது. இந்தியாவுக்கு வந்த ஆரியர்களிடம் நிறபாரபட்சம் இருந்தது என்பதை நிரூபிப்பதற்கு சான்று தேட இந்தக் கோட்பாடு முற்படுகிறது. சதுர்வருண – ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தபிறகு உருவாக்கிய ஏற்பாடு இது என்றும், இது நிறத்தை அடிப்படையாகக் கொண்டது என்றும் மேலைய ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்''

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"**இந்த அனுமானங்களில் எது ஒன்றும் உண்மைத் தகவல்களால் மெய்ப்பிக்கப்படவில்லை.** ஆரிய இனம் என்ற கோட்பாட்டை எடுத்துக் கொள்வோம். ஆரிய இனம் என்பது உடலியல் அர்த்தத்தில் ஒரு விஷயம் என்பதையும், மொழியியல் அர்த்தத்தில் முற்றிலும் வேறுபட்டதொரு விஷயம் என்பதையும் இந்தக் கோட்பாடு கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை; அதேபோன்று, உடலியல் பொருளில் ஆரிய இனம் என்று ஒன்று இருக்குமாயின் அதன் பூர்வீக உறையுள் ஓரிடத்திலும் மொழியியல் பொருளியல் முற்றிலும் வேறோர் இடத்திலும் இருப்பது சாத்தியமே என்பதையும் இக்கோட்பாடு கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. ஆரிய இனம் என்னும் கோட்பாடு பொதுவான மொழி என்னும் கருத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது; அதன் அடிப்படை அமைப்பு ஒற்றுமையே இந்தப் பொதுத் தன்மைக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. ஆரியர்கள் வெளியிலிருந்து வந்து இந்தியாவின் மீது படையெடுத்தார்கள் என்ற கூற்று நிரூபிக்கப்படவில்லை; **தாசர்களும் தசியுக்களும் இந்தியாவின் பூர்வீகக்குடிகள் என்ற கருத்தும் பொய்யானதாகும்.**"

"சதுர்வருண ஏற்பாடு ஆரியர்களிடம் உள்ளார்ந்து பொதிந்துள்ள நிறப்பாகுபாட்டு உணர்வின் வெளிப்பாடேயாகும் என்று கூறுவதும் மிகைப்படுத்தலாகும். தோலின் நிறமே வகுப்பு வேறுபாட்டுக்கு மூலகாரணம் என்று கூறுவதானால் சதுர்வருண அமைப்பில் அடங்கியுள்ள நான்கு வகுப்பினருக்கும் நான்கு வெவ்வேறு நிறங்கள் இருந்திருக்க வேண்டும். அந்த நான்கு வருணங்கள் எவை என்பதையும், சதுர்வருண அமைப்பில் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ள நான்கு நிறங்கள் கொண்ட இனங்கள் யாவை என்பதையும் எவருமே கூறவில்லை. இப்போதுள்ளபடிப் பார்த்தால், ஆரியர்கள், தாசர்கள் என்னும் இரண்டும் நேரெதிரான மக்களுடன் மட்டுமே இந்தக் கோட்பாடு தொடங்குகிறது. இவர்களில் ஒருவர் வெள்ளை நிறத்தவர் என்றும், மற்றவர் கறுப்பு நிறத்தவர் என்றும் அனுமானிக்கப்படுகின்றன."

"ஆரிய இனக்கோட்பாட்டின் மூலவர்கள் தங்கள் கருத்தை நிலைநாட்டும் அளவு மீறின ஆர்வத்தில் தங்களை எத்தகைய மிகவும் நகைப்புக்கிடமான, விவேகமற்ற நிலைக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காணுவதற்கு, உணர்வதற்கு பொறுமையற்றவர்களாக இருக்கிறார்கள். தாங்கள் நிரூபிக்க விரும்புவதை எப்படியும் நிரூபித்தாக வேண்டும் என்று அவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டு இறங்கியிருக்கிறார்கள்; இந்த முயற்சியில் தங்களுக்கு நல்லதென்று தோன்றும் சான்றுகளை வேதங்களிலிருந்து சிரமப்பட்டுப் பொறுக்கியெடுக்க அவர்கள் சிறிதும் தயங்கவில்லை."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"அனுமானம் என்பது விஞ்ஞானத்துக்கு உப்புப் போன்று ஜீவாதாரமானது' என்று பேராசிரியர் மைக்கேல் ஃபாஸ்டர் ஒரு சமயம் குறிப்பிட்டார். அனுமான மில்லாமல் பயனுள்ள முறையில் எதையும் துருவி ஆராய்வது சாத்தியமன்று. ஆனால் அதேசமயம் ஒரு குறிப்பிட்ட அனுமானத்தை எப்படியும் நிலைநாட்ட வேண்டுமென்ற ஆர்வம் கட்டுக்கடங்காத முறையில் மேலோங்கி இருக்குமானால், அப்போது அந்த அனுமானமே விஞ்ஞானத்துக்கு நஞ்சாக மாறிவிடுகிறது. ஓர் அனுமானம் எவ்வாறு விஞ்ஞானத்துக்கு விஷமாக மாறமுடியும் என்பதற்கு மேலைய ஆராய்ச்சியாளர்களின் ஆரிய இனக்கோட்பாடு ஒரு கண்கண்ட உதாரணமாக அமைந்துள்ளது."

"ஆரிய இனக்கோட்பாடு மிகவும் அபத்தமானது; அது நீண்ட காலத்துக்கு முன்பே சவக்குழிக்குப் போயிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அந்தக் கோட்பாடு உயிர்விடாமல், மக்களிடம் பெரும் பிடிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இத்தகைய ஒரு நிகழ்வுப் போக்குக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதல் காரணம் பிராமண கற்றறிவாளர்களிடையே இந்தக் கோட்பாடு பெற்றிருக்கும் ஆதரவாகும். இதனை மிகவும் விந்தையான ஒரு நிகழ்வுப்போக்கு எனலாம். ஆசிய இனங்களின்மேல் ஐரோப்பிய இனங்களுக்குள்ள மேன்மையை, மேம்பாட்டை ஒப்புக்கொள்ளும் இந்த ஆரிய இனக்கோட்பாட்டின்பால் இந்துக்கள் என்ற முறையில் அவர்கள் நியாயமாக தங்கள் வெறுப்பை வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால் பிராமண அறிஞர்களோ இந்தக் கோட்பாட்டை வெறுத்தொதுக்குவதற்குப் பதிலாக, அதனைத் தலைமீது தூக்கி வைத்துக் கொண்டு போற்றிப் புகழ்கின்றனர். இதற்கான காரணங்கள் வெளிப்பாட்டையானவை. பிராமணர்கள் இரு தேசக்கோட்பாட்டை ஆதரிக்கின்றனர்; தங்களை ஆரிய இனத்தின் பிரதிநிதிகளாக அவர்கள் பாவிக்கின்றனர்; ஏனைய இந்துக்களை ஆரியரல்லாதவர்களின் வழித்தோன்றலாகக் கருதுகின்றனர். ஐரோப்பிய இனங்களுடன் தங்களுக்குள்ள குருதித்தொடர்புடைய உறவை நிலைநாட்டிக் கொள்வதற்கும், அந்த இனங்களுக்குள்ள அகந்தையையும், அவர்களது மேம்பட்ட நிலையையும் பகிர்ந்து கொள்வதற்கும் இந்தக் கோட்பாடு பிராமணர்களுக்கு உதவுகின்றது. அதிலும் குறிப்பாக ஆரியர்களைப் படையெடுப்பாளர்களாகவும் ஆரியர்களல்லாத சுதேசி இனங்களின் மீது வெற்றிவாகை சூடியவர்களாகவும் படம்பிடித்துக் காட்டும் கோட்பாட்டின் இந்தப் பகுதி பிராமணரல்லாதோர் மீது தங்களுக்குள்ள ஆதிக்கத்தை நிலைநாட்டவும், நியாயப்படுத்தவும் இது துணை புரிகிறது."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"ஆரிய இனக்கோட்பாடு மரிக்காததற்கு இரண்டாவது காரணம் வருணம் என்னும் சொல் நிறத்தையே குறிக்கிறது என்று ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் பொதுவாக வலியுறுத்திவருவதும், இந்தக் கருத்தை பெரும்பாலான பிராமண அறிஞர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதுமேயாகும். உண்மையில் இதுதான் ஆரிய இனச்சித்தாந்தத்தின் பிரதான ஆதார அடிப்படையாக அமைந்துள்ளது எனலாம். வருணம் என்னும் சொல்லுக்கு இந்தப் பொருள் கொள்ளப்படும்வரை ஆரிய சித்தாந்தம் தொடர்ந்து நீடித்து வரவே செய்யும். ஆதலால் ஆரிய சித்தாந்தத்தின் இந்தப்பகுதி மிக முக்கியமானது; மூன்று வெவ்வேறு கண்ணோட்டங்களிலிருந்து இதனைப் பரிசீலிக்க வேண்டும். 1. ஐரோப்பிய இனமக்கள் சிவந்த மேனியுடையவர்களா அல்லது கறுத்த மேனியடையவர்களா? 2. இந்தோ – ஆரியர்கள் சிவப்பானவர்களா? 3. வருணம் என்னும் சொல்லின் ஆரம்பகாலப் பொருள் என்ன?"

"ஆதிகால ஐரோப்பியர்களின் நிறத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் கறுப்பு நிறமுடையவர்களாக இருந்தனர் என்று பேராசிரியர் ரிப்ளே திட்டவட்டமாகக் கூறுகிறார். பேராசிரியர் ரிப்ளே மேலும் கூறுவதாவது."

"நாம் இதுவரை நடத்திய பல ஆய்வுகள் பூர்வீக ஐரோப்பியர்கள் நீண்ட தலையை உடையவர்களாக மட்டுமன்றிக் கறுப்பு நிறத்தினராகவும் இருந்தனர் என்ற இந்த அனுமானத்தை மேலும் வலுப்படுத்துபவையாக உள்ளன. தெற்குப் பிரான்சில் வாழும் குரோமாக்னான் மக்கள் வரலாற்றுக்கு முந்தைய தொல்பழமை வாய்ந்தவர்கள் என்பதை நாம் மெய்ப்பித்துள்ளோம்; இந்த விவசாய மக்களிடையே பலர் கறுநிறக்கேசத்துடனும் கண்களுடனும் இருப்பதைக் காண்கிறோம். பிரிட்டிஷ் தீவுகளிலுள்ள மக்கள் பிரிவினரை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, வேல்ஸ், அயர்லாந்து, ஸ்காட்லாந்து பகுதிகளின் கறுப்பு நிற மக்கள் பிரிட்டனிலேயே மிகவும் முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை ஒவ்வொன்றுமே மெய்ப்பிப்பதாக இருப்பதைப் பார்க்கிறோம். தவிரவும், வடக்கு இத்தாலியைச் சேர்ந்த கர்ஃபக்னானா என்னும் இடத்தில் வாழும் தொன்மை மிக்க லிகுரியன் மக்களின் வழித்தோன்றல்களைப் பார்த்தால், அவர்களும் கறுப்பு நிறமாக இருப்பதைக் காண்கிறோம். எனவே, பொதுக் கோட்பாடுகள் அல்லது ஸ்தல விவரங்களின் பகைப் புலனில் மதிப்பாய்வு செய்தால், ஐரோப்பாவின் இந்தப் பூர்வீக இனத்தினர் மிகவும் கறுப்பாக இருந்தனர் என்றே தோன்றுகிறது. அங்கு நிற உறவைப் பொறுத்தவரையில் மத்தியத் தரைக்கடல் பிராந்திய சாயலைக் காண்கிறோமே தவிர, ஸ்காண்டினேவிய சாயலைக் காணவில்லை."

"ஆரியர்கள் எத்தகைய நிறப்பாகுபாட்டைக் கைக்கொண்டார்கள் என்பதற்கு ஏதேனும் அறிகுறிகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதங்களை ஆராயும்போது ரிக் வேதத்திலுள்ள பின்கண்ட பகுதிகள் நமது கவனத்தை ஈர்க்கின்றன."

"ரிக்வேதத்தில் i.117.8. சியவியனுக்கும் ருஷாதிக்கும் அசுவினி தேவர்கள் திருமணம் செய்து வைத்த குறிப்பு காணப்படுகிறது. இவர்களில் சிவவியன் கறுப்பு; ருஷாதி சிவப்பு."

"ரிக்வேதத்தில் i.117.5 பொன்னிற மேனியான வந்தனாவைக் காப்பாற்றியமைக்காக அசுவினி தேவர்களுக்குத் துதி பாடப்பட்டதாக ஒரு குறிப்பு இடம் பெற்றிருக்கிறது."

"ரிக்வேதத்தில் ii.3.9. ஓர் ஆரியன் சில குறிப்பிட்ட நற்குணங்களுடனும் சாம்பல் நிறத்துடனும் (பிசாங்கா) தனக்கு ஒரு குழந்தை பிறக்க வேண்டும் என்று தேவர்களிடம் வேண்டுதல் செய்வதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது."

"வேத கால ஆரியர்கள் எத்தகைய நிற வேற்றுமையையும் பாராட்டவில்லை என்பதை இந்த நிகழ்ச்சிகள் புலப்படுத்துகின்றன. அவர்கள் எப்படி நிறவேற்றுமைக் கைக்கொள்ளமுடியும்? வேத கால ஆரியர்கள் ஒரே நிறத்தினர் அல்லர். அவர்களது மேனிவண்ணம் பெரிதும் வேறுபட்டதாக இருந்தது; சிலர் தாமிர நிறமுடையவர்களாகவும், சிலர் வெண்ணிறமுடையவர்களாகவும், சிலர் கறுப்பு நிறமுடையவர்களாகவும் இருந்தனர். தசரதருடைய புதல்வரான ராமர் சியாமளராக அதாவது கறுப்பு நிறமுடையவராக வருணிக்கப்படுகிறார்; மற்றொரு ஆரிய வம்சத்தைச் சேர்ந்த யதுக்களின் வழித் தோன்றலான கிருஷ்ணரும் இவ்வாறே கறுப்பு மேனியனாக சித்திரிக்கப்பட்டிருக்கிறார். ரிக் வேதத்தில் பல மந்திரங்களை இயற்றியவர் ரிஷி தீர்கதமசர்; அவரது மேனிவண்ணத்தின் அடிப்படையில் அவருக்குப் பெயர் சூட்டப்பட்டிருந்ததால் அவர் கறுப்பாகவே இருந்திருக்கவேண்டும். கன்வர் மிகவும் புகழ்பெற்ற ஆரிய ரிஷி. ஆனால் ரிக்வேதத்தில் X.31.11. அவரைப் பற்றித் தரப்பட்டிருக்கும் வருணனையிலிருந்து அவர் கறுப்பு நிறமுடையவர் என்பது தெளிவாகிறது."

"அடுத்து, மூன்றாவது கடைசி விஷயத்தை எடுத்துக்கொள்வோம்; அதாவது வருணம் என்னும் சொல்லின் பொருளைப் பார்ப்போம். இந்தச் சொல் ரிக்வேதத்தில் எந்த அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை முதலில் பார்க்கவேண்டும். வருணம் என்னும் பதம் ரிக்வேதத்தில் 22 இடங்களில் கையாளப்பட்டிருக்கிறது. இவற்றில் 17 இடங்களில் உஷா, அக்கினி, சோமன் போன்ற தெய்வங்களைக் குறிப்பிடுவதற்கு இச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது; இது பிறங்கொளியையும், முகத்தோற்றங்களையும், அல்லது வண்ணத்தையும் அர்த்தப்படுத்துகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவை தெய்வங்கள் சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்கும்போது வருணம் என்னும் சொல் மனிதர்கள் விஷயத்தில் ரிக்வேதத்தில் என்ன அர்த்த்தைத் தரும் என்று நிர்ணயிப்பதற்கு இவற்றைப் பயன்படுத்துவது உசிதமற்றதாகும். மனித ஜீவன்கள் சம்பந்தமாக இந்தச் சொல் ரிக்வேதத்தில் நான்கு இடங்களில், அதிகபட்சம் ஐந்து இடங்களில் பயன்டுத்தப்பட்டிருக்கிறது. அவை வருமாறு: ”

1. i. 1042;
2. i. 179.6;
3. ii. 12.4;
4. iii. 34.5;
5. ix. 71.2;

“வருணம் என்னும் சொல் ரிக்வேதத்தில் நிறம், மேனி வண்ணம் என்னும் அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்தக் குறிப்புகள் மெய்ப்பிக்கின்றனவா?”

“ரிக்வேதம் iii. 34.5 இவ்வகையில் ஐயத்துக்கிடமான பொருள் கொண்டதாக இருக்கிறது. ‘சுக்கில வருணம் அதிகரிப்பதற்கு வகை செய்தது’ என்ற வாசகம் இரட்டை அர்த்தம் கொள்ளக்கூடியதாக உள்ளது. இந்திரன் உஷாவை தனது ஒளியை வீசச் செய்து வெண்மை நிறத்தை அதிகரிக்கச் செய்தான் என்று பொருள் கொள்ளலாம் அல்லது பாசுரம் இயற்றியவர் வெண்ணிறமேனி கொண்ட வராதலால் அவருடைய மக்களது மேனியின் வெண்ணிறம் அதிகரித்தது என்றும் பொருள் கொள்ளலாம். இரண்டாவது அர்த்தம் பெரிதும் வலிந்து பெறப்பட்டதாகவே இருக்கும்; ஏனென்றால் இங்கு வெள்ளை நிறம் அதிகரிப்பது காரியம், உஷாவின் வெளிச்சம் காரணம்.”

“ரிக்வேதத்தில் ix. 71.2 வரும் ‘அசுர வருணத்தைக் கைவிட்டான்’ என்ற வாசகத்தை சூக்கத்திலுள்ள ஏனைய செய்யுட் பத்திகளுடன் சேர்ந்து வாசிக்கும்போது, அதன் பொருள் தெளிவாக இல்லை. இந்தச் சூக்கம் சோம பவமணனுடையது. இதனை மனத்திற்கொண்டால், ‘அசுர வருணத்தைக் கைவிட்டான்’ என்ற வாசகத்தை சோமனைப் பற்றிய வருணனையாகக் கொள்ளவேண்டும். இங்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் வருணம் என்னும் சொல் ரூபத்தைக் குறிப்பதாக இருக்க வேண்டும்.”

“அதிருஷ்டவசமாக, வருணம் என்னும் சொல் ஜெண்ட் அவெஸ்தா என்னும் பார்சியர் வேதத்தில் வருகிறது. இது வரணா அல்லது வரேணா என்று உச்சரிக்கப்படுகிறது இச்சொல் குறிப்பாக ‘தெய்வபக்தி, சமய சித்தாந்தம்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருமுறைக்கோட்பாடு, நம்பிக்கை' என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. வர் என்ற வேர்ச் சொல்லிலிருந்து இது உருவாக்கப்பட்டுள்ளது; நம்பிக்கை வைத்தல், விசுவாசம் கொள்ளுதல் என்று இதற்குப் பொருள், வரணா அல்லது வரேணா என்னும் சொல் காதாக்களில் நம்பிக்கை, சித்தாந்தம், கோட்பாடு என்ற அர்த்தத்தில் ஆறு தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது."

"இது காதா அஹுனவைத்தி – யாஸ்னாஹா 30 செய்யுட்பத்தி 2இல் வருகிறது. இதன் தமிழ் மொழி பெயர்ப்பு வருமாறு:"

"நான் பிரகடனம் செய்யும் மிக உன்னதமான உண்மையைச் செவிமடுத்துக்கேட்டு, ஆன்மீக அறிவொளி சுடரும் உங்கள் தெளிந்த மனத்தைக் கொண்டு உள்ளாய்வு செய்யுங்கள். ஒவ்வொருவனும் தனது (அவரெனவ்) சமய உணர்வைத் தானே தீர்மானிக்க வேண்டும். அந்த மாபெரும் நிகழ்ச்சிக்கு முன்னர் நாம் போதிக்கும் உண்மையை ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் உணர்ந்து கொள்ள வேண்டும்."

"இது காதாவின் மிகவும் புகழ்பெற்ற செய்யுட்களில் ஒன்று. தனது சமய உணர்வைத் தேர்ந்தெடுப்பதில் ஒவ்வொருவரும் பகுத்தறிவு ஆற்றலையும், தெரிவு சுதந்திரத்தையும் பயன்படுத்த வேண்டும் என்று ஜராதுஷ்ட்ரர் அறிவுரை பகர்கிறார். இங்கு அவரெனவ் விச்சிதஹ்யா என்னும் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அவரெனவ் என்றால் 'சமயம்' என்று பொருள்; விச்சி – தஹ்யா என்றால் 'வேறுபடுத்தி உணர்தல்', 'தேர்ந்தெடுத்தல்; 'நிர்ணயித்தல்' என்று அர்த்தம்."

"இது காதா அஹுனவைத், யாஸ்னா ஹா 31 செய்யுட்பத்தி 11இல் வருகிறது. இங்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் வரேனெவ் என்னும் சொல் வரெணா என்பதன் இரண்டாம் வேற்றுமை பன்மை; 'கோட்பாடு', 'சமயம்' என்று இதற்குப் பொருள். இந்தச் செய்யுட்பத்தியில் மனிதன் படைக்கப்பட்ட கோட்பாடு பற்றி ஜராஷ்ட்ரர் விரித்துரைக்கிறார். பின்னர்க் கடைசி பாதிவரியில் "மனிதன் தன் விருப்பம் போல் சமயத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை அளிக்கப்படுகிறது" என்று ஜராதுஷ்டரர் கூறுகிறார்."

"காதா உஷ்தவைத்தி, யஸ்னா ஹா 45 செய்யுட் பத்தி 1இல் இது வரேணா என்னும் சொல் வடிவத்தில் இடம் பெறுகிறது. 'பாபகரமான சமயக்கோட்பாட்டைப் பின்பற்றுபவர்கள் கொடியவர்களாகிக் கீழ்த்தரமான மொழியில் பேசுகின்றனர் என்று இந்தச் செய்யுட் பத்தியின் கடைசி வரியில் ஜராதுஷ்ட்ரர் கூறுகிறார்."

"காதா உஷ்தவைத்தி யாஸ்னா ஹா 45 செய்யுட் பத்தி 2இல் மேலே கூறிய அதே வடிவத்தில் வரேணா என்னும் சொல் நம்பிக்கை, சமயம்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோட்பாடு என்ற பொருளில் வருகிறது. இந்தச் செய்யுட் பத்தியில் ஜராதுஷ்ட்ரர் நன்மை, தின்மை பற்றிய தமது சித்தாந்தத்தை விளக்கிக் கூறும்போது, மனித மனத்தின் இரட்டை அம்சங்களை எடுத்துரைக்கிறார். இந்தச் செய்யுட் பகுதியில் இரண்டு மனங்கள் அதாவது நல்ல மனமும் கெட்ட மனமும் – தமக்குள் பின்வருமாறு பேசிக் கொள்கின்றன: "சிந்தையிலும், வார்த்தையிலும், விவேகத்திலும், சமய நம்பிக்கையிலும், சொல்லிலும், செயலிலும், மனச்சான்றிலும், ஆன்மாவிலும் நம்மிடையே ஒற்றுமை ஏதும் இல்லை."

"காதா ஸ்பெண்டா மைனியு, யாஸ்னா ஹா 49 செய்யுட் பத்தி 3இல் இது நான்காம் வேற்றுமையில் வரேணங் என்று வருகிறது. 'சமயம்' என்று இதற்குப் பொருள். இதே செய்யுட் பகுதியில் சமயம், சமயக் கோட்பாடு, சமயச் சட்ட திட்டங்கள் என்ற அர்த்தத்தில் தகேஷய் என்னும் சொல் இடம் பெறுகிறது. வரேனய், தகேஷா ஆகிய இரண்டு சொற்களும் ஒரே செய்யுட் பத்தியில் வருவது நமது வாதத்துக்கு மேலும் வலுவூட்டுகிறது; ஏனென்றால் தகேஷா என்னும் சொல் போன்றே அஹுரதகேஷா என்னும் கூட்டுச் சொல்லும் அஹுரிய மதத்தைக் குறிக்கிறது. தகேஷா என்னும் சொல் பஹலவி மொழியில் கிஷ் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதுவும் மதத்தையே குறிக்கும். அவெஸ்தா மொழியில் எழுதப்பட்ட ஜரா துஷ்ட்ரியர்களின் சுகாதார சட்ட நூலான வெண்டிடாடில் அன்யோ வரேணா என்னும் சொல்லைக் காண்கிறோம். இங்கு அன்யோ என்பது மற்ற அல்லது வேறுபட்ட என்றும், வரேணா என்பது மதம் என்றும் பொருள்படும். எனவே, வேறுபட்ட மதத்தை, நம்பிக்கையை, கோட்பாட்டைக் கொண்டிருப்பவன் அன்யோ – வரேணா எனப்படுகிறான். இவ்வாறே, வெண்டிடாடில் அன்யோ – தகேஷா என்று வரும் சொல்லும் வேறுபட்ட மதத்தின் என்ற பொருளையே குறிக்கும்."

"காதாவில் இந்த வேர்ச் சொல்லிலிருந்து பல வினைச்சொல் வடிவங்களைப் பெறுகிறோம். எடுத்துக் காட்டாக அஹுனவைத்தி காதா யாஸ்னா ஹா 31, செய்யுட் பத்தி 3ஐப் பார்ப்போம். இதில் ஜரா துஷ்ட்ரர் யா ஜவன்டோ விஸ்பெங் வவ்ரயா என அறிவிக்கிறார்; இந்த வரியில் வவ்ரயா என்னும் வினைச் சொல் கடவுளின்பால் நம்பிக்கையையும், விசுவாசத்தையும் வைக்கும்படி எல்லா உயிர் ராசிகளையும் நான் தூண்டுவேன் என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யாஸ்னா ஹா, 28: செய்யுட் பத்தி 5இல் வவ்ரோய் மைதி என்னும் வினைச் சொல்லை எதிர்ப்படுகிறோம். 'சமய உணர்ச்சியை ஊட்டுவோம்' என்று இதற்குப் பொருள். இந்தச் சொல்லின் மற்றொரு குறிப்பிடத்தக்க வடிவத்தை யாஸ்னா ஹா, 28; செய்யுட் பத்தி 5இல் காண்கிறோம். துஸ் – வரேனய்ஸ் என்பதே அந்தச் சொல் வடிவம். இதில் துஸ் என்னும் முதல் பகுதி பொய்யான, துன்மார்க்கனான என்றும், வரேனய் மத விசுவாசி என்றும் பொருள்படுகிறது: அதாவது இந்தச் சொல் "பொய்யான,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

துன் மார்க்கமான மதத்தைச் சேர்ந்தவன் அல்லது பொய்யான, துன்மார்க்கனான மதவிசுவாசி'' என்பதைக் குறிக்கிறது.''

"ஜராதுஷ்ட்ரியர்களின் சமய ஏற்புக் கோட்பாட்டை விளக்கும் யாஸ்னா ஹா 12இல் வரும் ஃபரவரனே என்னும் சொல்லுக்கு நான் என் சமயத்தை ஏற்கிறேன்; மஸ்தயாஸ்னோ ஜராதுஷ்த்ரிஷ் 'அதாவது ஜராதுஷ்ட்ரிய சமய நெறியை' வழிபடுகிறேன் என்று பொருள். இந்த வாசகம் கிட்டத்தட்ட எல்லா ஜராதுஷ்ட்ரர் பிரார்த்தனைகளிலும் இடம் பெற்றிருக்கிறது. ஜராதுஷ்ட்ர சமய ஏற்பாட்டுக் கோட்பாட்டின் மற்றொரு வடிவமும் இருக்கிறது. இது யாஸ்னா 12இல் யா – வரேணா என்று காணப்படுகிறது. இங்கு யா என்பது தழுவியல் மறுபெயர்; இதற்கு எது என்று பொருள்; வரேணா என்பதற்கு நம்பிக்கை, மதம் என்று பொருள். எனவே இச்சொல் 'எந்த மதம்' என்பதைக் குறிக்கிறது. யர வரேணா என்னும் இந்தச் சொல் வடிவம் யாஸ்னா 12இல் ஒன்பது முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சமயக் கோட்பாடு அல்லது சமயம் என்று தெளிவான பொருளிலேயே அது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கும் வரேணா என்னும் சொல், சமயத்தைக் குறிக்கும் தகேஷா என்னும் சொல்லுடன் சேர்த்தே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.''

"யாஸ்னா 16இல் ஜராதுஷ்ட்ரஹே வரேஹேம்சா தகேஷெம்சா யாஸமய்தே என்னும் சுவையான குறிப்புக் காணப்படுகிறது. இங்கு ஜராதுஷ்ட்ரின வரேணாவும் தகேஷாவும் வழிபடப்படுகின்றன. இந்த ஒத்திசைவான, பரஸ்பரம் ஒன்றுக்கொன்று தொடர்புடைய இந்தச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது ஜராதுஷ்ட்ரரின் கோட்பாட்டையும் சமயத்தையுமே குறிக்கிறது என்பது தெள்ளத் தெளிவு. 'ஜராதுஷ்ட்ரரின் கோட்பாட்டையும் சமயத்தையும் நாங்கள் வழிபடுகிறோம்' என்பதே மேலே கூறிய வாசகத்தின் மொழிபெயர்ப்பாகும்.''

"ஆதிகாலத்தில் வருணம் என்னும் சொல் ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றும் ஒரு வகுப்பினரைக் குறித்ததேயன்றி, அந்தச் சொல்லுக்கும் வருணத்துக்கும் மேனி வண்ணத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதையே ஜெண்ட் அவெஸ்தா என்னும் பார்சியர் வேதத்திலிருந்து பெறப்படும் இந்தச் சான்று உறுதி செய்கிறது.''

"மேலைய கோட்பாட்டின் பரிசீலனையிலிருந்து கிட்டும் முடிவுகளைப் பின்கண்டவாறு இரத்தினச் சுருக்கமாகக் கூறலாம்.

1. ஆரிய இனம் என்ற எத்தகைய ஓர் இனத்தையும் வேதங்கள் அறியமாட்டா.

2. ஆரிய இனம் இந்தியாவின் மீது படையெடுத்தது என்பதற்கும், இந்தியாவின் சுதேசி மக்கள் எனக் கருதப்படும் தாசர்களையும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தசியுக்களையும் அவர்கள் வென்று கீழ்ப்படுத்தினர் என்பதற்கும் **வேதங்களில் எந்தச் சான்றும் இல்லை.**

3. ஆரியர்கள், தாசர்கள், தசியுக்களுக்கு இடையேயான வேறுபாடு இன வேறுபாடு என்பதைக் காட்டக் கூடிய **சான்று ஏதும் இல்லை.**

4. ஆரியர்கள் மேனி வண்ணத்தில் தாசர்களிடமிருந்தும் தசியுக்களிடமிருந்தும் வேறுபட்டவர்கள் என்ற வாதத்தை **வேதங்கள் ஏற்கவில்லை.**"

– "சூத்திரர்களுக்கு எதிராக ஆரியர்கள்", டாக்டர் பாபா சாஹேப் அம்பேத்கர்; பேச்சும் எழுத்தும், தொகுதி 13.

இன்று அறிஞர்கள் கைக்கொள்ளும் முடிவுகள் இவையே. ஆரியர் என்று ஓர் இனம் இல்லை. **ஆரியர் என்ற மொழிக் கூட்டத்தினர் இம்மண்ணின் மைந்தர்கள்.** இவர்கள் வெளிநாட்டிலிருந்து பாரத நாட்டிற்கு வரவில்லை. மாறாகப் பாரத நாட்டிலிருந்து அதன் கலாச்சாரத்தை இவர்கள் வெளிநாட்டிற்குக் கொண்டு சென்றனர்.

ஆரியர் ஓர் இனத்தார் அல்லர் என்ற உண்மை உணரப்பட்ட அக்காலத்திலேயே ஆரியப் படை எடுப்பு என்ற கட்டுக்கதை உருக்குலைந்து மாய்ந்து படுகிறது என்றாலும் பண்டு திரித்துக் கூறப்பட்ட செய்தியே இன்று சரித்திரமாக நிலவி வருகிறது. இதைப் பற்றி என்ன சொல்லுவது?

ஆரியப் படை எடுப்பு என்ற கட்டுக்கதைக்கு எலும்பும், தோலும், குருதியும், உயிர்ப்பும் வழங்கிய கைங்கர்யம் ஸர் ஜான் மார்ஷலைச் சாரும். தொல் பொருள் ஆய்வுத் துறையின் தலைவர் இவர். எல்லாக் கண்டுபிடிப்புக்களும், குறிப்புக்களும் கள ஆய்வு மேற்கொள்வோர் இவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவை பற்றிக் கள ஆய்வு புரிவோர் எதுவும் பேசவோ எழுதவோ கூடாது. இவர்தாம் விவரங்களை வெளியிட அதிகாரம் பெற்றவர். இந்தியர்களுக்கு எந்த உரிமையும் வெள்ளையர் வழங்கியதில்லை. கிறித்துவர்கள், குறிப்பாகப் பாதிரிகள் தமிழில் எல்லா வகையானன நூல்களும் எழுதலாம். அச்சுப் போடலாம். ஆனால் **கிறித்துவர் அல்லாத தமிழர் 1835 ஆம் ஆண்டுக்கு முன்னால் எந்த நூலையும் அச்சிட முடியாது.** இப்படி எல்லா வகைகளிலும் பிரிட்டிஷார் இந்தியரை ஒடுக்கி வைத்திருந்தனர். R.D. பானர்ஜி மொஹஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் தம் பணியாளர்களோடு அரும்பாடுபட்டு, கள ஆய்வு செய்து, அங்கெல்லாம் நிலவிய நாகரிகம் வேத நாகரிகம் என்பதற்கான தடயங்களையும் குறிப்புகளையும் சமர்ப்பித்தார். ஆனால் நடந்தது என்ன? தடயங்களும் குறிப்புக்களும் ஒதுக்கி வைக்கப்பட்டன. படையெடுப்பு, திராவிடர் தோற்றோடல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்றெல்லாம் கூறி ஒரு கற்பனை நூல் மார்ஷலால் வெளியிடப்பட்டது. அவர் செய்த பாதகச் செயலை என்னென்பது!

இங்கு ஓர் உண்மையை நினைவில் கொள்ள வேண்டும். பாரத நாட்டில் உருவான நாகரிகம் **சரஸ்வதி நதி தீர நாகரிகம்.** இந்நதியே ரிக் வேதத்தில் 42 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. கங்கையைப் பற்றிய குறிப்புகள் மூன்றே மூன்று. அண்மையில் எடுக்கப்பட்ட விண்வெளி புகைப்படங்கள் இந்நதியின் பென்னம் பெரிய நீரோட்டத்தைத் துல்லியமாகக் காட்டுகின்றன. இந்நதி ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் தூரம் ஓடிப்பரவிப் பாரத நாட்டை வளப்படுத்தி வந்தது. தீடீரென்று இந்நதி வற்றிப் போனதால் இதன் கரைகளில் அமைந்திருந்த பலப்பல நகரங்கள் பாழ்த்துப் போயின. அங்கு வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்து போயினர். பழைய நகரங்களில் எவ்வித இடிபாடும் கிடையாது. மொஹஞ்சதாரோ, ஹரப்பா, Lothal, Kalibangan, Roper, Surkodata போன்ற இடங்களில் அமைந்திருந்த நகரங்கள் கைவிடப்பட்டன. இந்நகர நாகரிகம் ஒன்றை ஒன்று ஒத்திருந்தது. இந்த நிலை இப்போது ஐயத்திற்கு இடமின்றி நிறுவப்பட்டிருக்கிறது. இப்படியிருந்தும் பழைய நொள்ளைக் கதையே சரித்திரமாகத் தொடர்ந்து வருகிறது.

பிரிட்டிஷார் கொள்கையை அனுசரித்து அவர்கள் விரும்பியவாறு மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் பற்றி மார்ஷல் சரடு விட்டார். பிரித்தாளும் பிரிடிஷ் தந்திரத்திற்கு ஆக்கம் கூட்டினார். வேத நாகரிகம் விளங்கிய இடத்தில் திராவிட நாகிகம் நிலவியது என்று கூறினார். அவரை அனைவரும் வழிமொழிந்து மூளைச் சலவையை வெகு மும்முரமாக நடத்தினர். இதுபற்றி முழு விவரங்கள் தர எனக்கு இப்போது வாய்ப்பில்லை. ஒருசில குறிப்புக்களை விரைவாகத் தந்துவிட்டு நான் மேலே செல்லுவேன்.

பிரிட்டிஷார் கூறியது என்ன? ஆடு மாடு மேய்த்து வந்த நாடோடிக் கூட்டமான ஆரியர்கள் நாகரிகத்தின் உச்சக்கட்டத்தில் திகழ்ந்து வந்த திராவிடர்களை அடித்து விரட்டினர். பிரசார பலத்தால் இப்புரட்டுக் கதை அப்படியே சரித்திரமாக்கப்பட்டது. சிந்திக்கும் ஆற்றலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அந்நாளில் தமிழ் நாட்டில் நிலவிவந்த வடமொழி வெறுப்பு, பார்ப்பன வெறுப்பு போன்றவற்றிற்கு இப்பொய்க் கதை வலுவூட்டியது. அதேநேரத்தில் திராவிடர்களையும் ஆட்சி பீடத்தில் இருந்த பிரிட்டிஷார் விட்டு வைக்கவில்லை. திராவிடர்கள் பாரத நாட்டின் குடிகள் என்பதையும் அவர்கள் ஏற்கவில்லை.ஆரியர் வருகைக்கு முன்பே திராவிடர்கள் பெருங் கூட்டமாக மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து இந்தியாவில் குடியேறினர் என்ற புளுகையும் சொல்லி வைத்தனர். நோக்கம் என்ன? வலுவுள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் இந்தியாவில் நுழைந்து அதன் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு வாழலாம் என்பதே. கிரேக்கர்கள், மங்கோலியர், முசுலீம்கள்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போர்த்துக்கீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுகாரர், பிரிட்டிஷார்: இப்படி அவ்வப்பொழுதும் பலர் இங்கு வந்து நாட்டை ஆண்டனர் என்று கூறுவதால், பாரத நாட்டிற்கென்று ஒரு தனிப்பண்பு, நாகரிகம், கலாசாரம் இல்லை என்று கூறிவிடலாம்.

ஆரியப்படை எடுப்புப் பற்றி ஒரு கேள்வி கேட்கிறேன். வீரத்திற்கும், தீரத்திற்கும் பெயர் போன, நாகரிகத்தின் உச்சியில் அரசியல் நடத்தி வந்த திராவிடர்களை ஆடுமாடு மேய்த்து வந்த ஒரு நாடோடிக் கும்பல் போரிட்டு வென்றிருக்க முடியுமா? ஆளுமைக்கும், ஆற்றலுக்கும், யுத்த தந்திரத்திற்கும், அரசியல் ஞான முதிர்ச்சிக்கும் பேர் போன மக்களை ஒரு நாடோடிக் கும்பல், ஆடுமாடு மேய்க்கும் கூட்டம், எதிர்த்துப் போரிட்டு வென்றிருக்க முடியுமா? நாடோடிகளுக்கு ஆடுமாடுகளைக் காப்பதற்கே நேரம் போதாதே! மேலும் அவ்வப்பொழுதும் புடைபெயர்ந்து போகும் கும்பலுக்குப் படையேது? படைக்கலப் பயிற்சி ஏது? புதிதாகச் செல்லுமிடத்தில் அங்குப் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் மக்களை இவர்கள் எப்படிப் புறங்கண்டிருக்க முடியும்?

ஆனால் ஆச்சர்யம் என்ன என்றால் சிறந்த சைவர்களும் இந்தக் கதையை ஏற்றனர். வேதகாலம் கி.மு.1200 என்று பின்னுக்குத் தள்ளப்பட்டு, அதற்கு முன்பே, சிவ வழிபாடு இந்தியாவில் திராவிடர்களால் போற்றப்பட்டது என்று சொல்லி விட்டால், சைவர் தங்கள் சமயம் வேதத்திற்கும் முற்பட்டது என்று எண்ணிப் பெருமைப்படலாம். அங்ஙனம் பெருமைப்படவும் செய்தனர். இந்த நிலையை உருவாக்கத்தானே மார்ஷல் தன் வலையைப் பின்னி வைத்தான். அதில் பெரும்பாலான சைவர் தொப்பென்று விழுந்தனர். நீங்கள் அறிவீர்கள், காலஞ்சென்ற பேராசிரியர் க.வெள்ளைவாரணன் அவர்கள் எவ்வளவு பெரிய சைவர் என்று. நான் அவரை வணங்குபவன். ஆனால் அப்பெரியாரே மார்ஷல் விரித்த வலையில் வீழ்ந்து சிக்கிக் கொண்டாரே! அவர் நிலை இதுவானால் மற்றவர் நிலை பற்றிப் பேச வேண்டுமோ!

மொஹஞ்சதாரோவில் ஓர் இலச்சினை கிடைத்தது. அதில் மனிதனைப் போன்ற ஓர் உருவம். ஆனால் தலையில் இரண்டு கொம்புகள். இவ்வுருவம் சிவபெருமானின் உருவம். அவன் பெற்றிருந்த கொம்புகளே பிற்காலத்தில் திரிசூலமாயின. இப்படி அடித்துக் கூறினார்கள். இங்கு ஒரு செய்தி அவர்களுக்குத் தெரியாது. வேதம் போற்றும் கடவுள்களுக்குக் கொம்புகள் உண்டு.

அடுத்து மொஹஞ்சதாரோவில் சிறிதும் பெரிதுமான லிங்கவடிவக் கற்கள் ஏராளமாகக் கிடந்தன. இதை வைத்துக் கொண்டு பெரியவர் வெள்ளை வாரணன் அக்காலத்திலேயே வீரசைவ வழிபாடு, லிங்க தாரணர் வழிபாடு இருந்தது போலும் என்கிறார். இன்றும் இந்த லிங்கக் கற்கள் ஏராளமாக வட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்தியாவில் அங்கங்கும் உண்டு. இவை எல்லாம் தராசில் வைத்த பொருளை நிறுத்துக் காட்டும் படிக்கற்கள். இவையே வட இந்தியாவில் பண்டு புழக்கத்தில் இருந்து வந்தன.

ஒரே ஒரு செய்தி மட்டும் கூறுகிறேன். தொலையெட்டி நின்ற மொஹஞ்சதாரோ – ஹரப்பா இன்று பாகிஸ்தானில் உள்ளன. இங்கு வாழ்ந்த மக்கள் விரட்டப்பட்டவுடன் எங்ஙனம் அம்பு பாய்ந்ததுபோல் ஒரே தாவலில் விரட்டப்பட்டவர் தமிழகம் வந்து சேர்ந்தனர்? இதைப் பற்றி யாரேனும் சிந்தித்தது உண்டா? இச்செய்தியை மேலும், பிறகு கூறுகிறேன். பிளவு உண்டாக்க வெள்ளையன் அவிழ்த்துவிட்ட பொய் மூட்டையை மீளவும் கட்டி வைத்துத் தலையில் சுமக்க வேண்டும் என்பதா நம் தலைவிதி?

சிவபிரான் வதியும் இடம் கைலாச மலை அல்லவா? கைலாசம் வடகோடியில் தானே உள்ளது. தமிழரும் வடக்கு நோக்கித்தானே சிவபூஜை செய்கின்றனர். கயிலைத் தாழ்வரை காச்மீர நாடு அன்றோ? அப்படியானால் காச்மீர தேசத்தார் திராவிடரா? தொடக்க காலத்திலிருந்தே காச்மீரம் சைவ ராஜதானியாயிற்றே. மொஹஞ்சதாரோ, ஹரப்பாவிலிருந்து விரட்டப்பட்ட திராவிடர் சைவம் வாழும் நேபாளம், காஷ்மீரம் என்ற இடங்களை நோக்கிச் செல்லாமல் தடம் ஏதும் அற்ற தென்னாட்டை நோக்கி வருவானேன்!

சற்று நிதானியுங்கள். தொலை எட்டி உள்ள மொஹஞ்சதாரோ எங்கே? தமிழகம் எங்கே? சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்பு அங்கிருந்து யாரேனும் இங்கு வரமுடியுமா? கொடிய விலங்குகள் வாழும் பயங்கரக் காடுகளையும், பென்னம் பெரிய மலைகளையும், கடக்க முடியாத காட்டாறுகளையும், நதிகளையும், மனிதர் வாழ முடியாத பகுதிகளையும், ஆறலைக்கும் கள்வர்களையும் கடந்து, விரட்டப்பட்டவர்கள் அனைவரும் – ஆண்கள், பெண்கள், வயோதிகர், சிறுவர், குழந்தைகள், கர்ப்ப ஸ்திரிகள், கைக்குழந்தைகள் அன்ன பிறர் எப்படிச் சில ஆயிரம் மைல்களைத் தாண்டித் தமிழகம் வந்தனர்? அவர்களுக்கு வழிகாட்டியது யார்?

உறையூரைத் தாண்டி மதுரையை அடையக் கண்ணகியும் கோவலனும் என்ன பாடுபட்டனர் என்பதை நாம் அறிவோமே? அந்நாளில் ஊரை விட்டு நெடுந்தூரப் பயணம் மேற்கொள்வது அவ்வளவு சுலபமானதா? வந்த பெருங் கூட்டத்தை வரவேற்கத் தமிழ்நாடு காலியாக இருந்ததா?

திராவிடர்கள் விரட்டி அடிக்கப்பட்டுத் தமிழகம் வந்தது சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்னால் என்கிறார்கள். காலத்தால் இதற்கு முற்பட்ட தொல்காப்பியத்தில் இது பற்றிக் குறிப்பு உண்டா? சங்க நூல்களிலோ உரைகளிலோ குறிப்பு உண்டா? வேத, புராண, இதிஹாசங்களிலேனும் ஒரு குறிப்பு உண்டா? வெள்ளையர் கிளப்பிவிட்ட பிரும்மாண்டப் புளுகு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சரித்திரத்தைக் காட்டுகிறதா? சரித்திரத்தின் தரித்திரத்தைக் காட்டுகிறதா? சிந்தியுங்கள். மொஹஞ்சதாரோவிலிருந்து ஓடிவந்த பென்னம் பெரிய கூட்டம் ஒரே பாய்ச்சலில் தமிழகம் அடைந்தது, கடலை ஒரு தாவலில் கடந்த அனுமன் செயலையும் விஞ்சி நிற்கிறதே!

தமிழைப் போற்றும் வெள்ளையர்களை நாம் போற்றுகிறோம். வெள்ளைப் பாதிரிமாரே தமிழைக் கற்றனர். ஏன்? தங்கள் தமிழ் அறிவு தங்கள் மதத்திற்கு ஆக்கம் கூட்ட வேண்டும். அதுதானே அவர்கள் விரும்பியது. அதைத் தானே அவர்கள் செய்து வந்தனர்; செய்து வருகின்றனர். ஒரு செய்தியை மட்டும் ஆராய்வேம். திருவாசகம், நாலடியார். திருக்குறள் முதலியவற்றை ஆங்கிலத்தில் தந்த ஜி.யு.போப் அவர்களைப் போற்றுகிறோம். பாதிரிமாருள் உண்மையிலேயே தமிழ் நாட்டம் உடையவர் போப் அவர்கள். அவருங்கூடச் செய்தது என்ன? போப் அவர்கள் 1886 ஆம் ஆண்டு திருக்குறளை மொழிபெயர்த்து வெளியிட்டார். அந்நூலில் அவர் வரைந்திருக்கும் முன்னுரையைப் படியுங்கள். போப் வாழ்ந்த காலத்தில் வள்ளுவர் பற்றித் தமிழகத்தில் ஒரு கர்ண பரம்பரைக் கதை நிலவி வந்தது. வள்ளுவருக்கு ஒரு நண்பர் இருந்தாராம். அவர் பெயர் ஏலேலசிங்கன். அவர் கப்பல் தலைவன். இதை அப்படியே ஏற்ற போப் திரித்த கயிறுகள் எத்தனை எத்தனை!

வெகு நீண்டகாலமாகவே ஒரு கட்டுக்கதை இத்தமிழகத்தில் கூறப்பட்டு வருகிறது. ஏசுநாதரின் நேரிட்ட சீடர் தாமஸ் என்பார். இவர் எப்படியோ தமிழ்நாட்டிற்கு வந்து, தமிழைக் கற்றுக் கிறித்துவ சமயத்தைத் தமிழ்நாட்டில் நிலைநாட்டி விட்டாராம். எப்படி வந்தார்? ஆதாரம் உண்டா? தமிழை இவர் எங்ஙனம் கற்றார்? ஏசுநாதர் அருளிய புதிய ஏற்பாட்டை இவர் எப்படிப் பரப்ப முடிந்தது? ஏசுநாதர் வாழ்ந்த காலத்தில் அவர் கூறியவை நூல் வடிவமே பெறவில்லை. அவர் இயற்கை எய்திய 100 அல்லது 120 வருஷங்களுக்குப் பிறகே அவர் கூறியதாகச் சொல்லப்படுபவை நூல் வடிவம் பெற்றன. அதுவும் கிரேக்க மொழியில். ஏசுநாதரின் சீடர்கள் அவரைவிட வயதில் மூத்தவர்கள். ஏசுநாதர் இறந்த போது தாமசுக்கு வயது அறுபது இருக்கும். எத்தனை ஆண்டுகள் கழித்து அவர் தமிழகம் வந்திருக்க முடியும்? எத்தனை ஆண்டுகள் தமிழ் கற்க அவருக்குத் தேவைப்பட்டிருக்கும்? யாராவது எண்ணிப் பார்த்தது உண்டா? இன்றும் கூடப் பல ஆண்டுகள் தமிழ்நாட்டில் தங்கிமுறையாகத் தமிழ் பயின்ற வெளிநாட்டுப் பாதிரிகள் தமிழில் பேசத் தொடங்கினால் நமக்குச் சிரிப்புத்தான் வரும். தாமஸ் கதை கட்டுக்கதை என்பதை ஈஸ்வர் சரண் என்பார் வரைந்துள்ள Saint Thomas And The Mylapore Shiva Temple என்ற நூலை மேலோட்டமாகப் படித்தாலே புரிந்து விடும். தாமஸ் சாதனையால் பலப்பல கிறித்துவ குடும்பங்கள் மயிலையிலும், அதை ஒட்டிய இடங்களிலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செழித்தோங்கி இருந்தன என்று போப் நம்பினார். இனி அவர் கூறியதைச் சொல்லுகிறேன். "வள்ளுவர் எல்லா வகைகளிலும் அறிவைச் சேகரிப்பதில் முனைந்து வந்தார். அவருடைய ஊருக்குப் புதிதாக யார் வந்தாலும், அவர் நண்பரும் கப்பல் தலைவருமான அன்பர் வள்ளுவருக்குச் செய்தி அனுப்புவார். பல வெளிநாட்டார் அக்கப்பல் தலைவர் தோணியிலேயே ஸ்ரீலங்கா மூலம் மயிலைக்கு வந்திருக்கலாம். அப்படி வந்த கிறித்துவர்களிடமிருந்து அவர்களோடு கடற்கரையில் உலாவி வந்த வள்ளுவர் செய்திகளைச் சேகரித்ததை நான் என் மனக்கண் முன்னால் காண்கிறேன். கிறித்துவக் கோட்பாடுகளை, அதிலும் அலெக்சாந்திரியக் கோட்பாடுகளையும் நுணுக்கங்களையும் நாளும் நாளும் வள்ளுவர் உசாவி அறிந்து வந்திருக்கிறார். அவற்றைத் தம் திருக்குறளில் வடித்து வைத்திருக்கிறார்."

அடடா! என்னென்ன உண்மைகள் இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன! மேலும் போப் கூறுகிறார். "வள்ளுவர் வாழ்ந்து வந்த இடத்திற்குப் பக்கத்தில் நிலவி வந்த கிறித்துவக் கோட்பாட்டுத் தத்துவம் குறளில் தெளிவாகத் தெரிகிறது. வள்ளுவர் கி.பி. 800க்கும் கி.பி. ஆயிரத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்து வந்தவர். கிறித்துவ மறை நூல்கள் நிச்சயமாக அவர் வரைந்த குறளுக்கான ஆதாரங்களில் ஒன்று. கிறித்துவ வேதத்திலிருந்தே வள்ளுவர் உத்வேகம் பெற்றிருக்கிறார்."

போதுமா? எவ்வளவு மகத்தான உண்மை இது! 600 ஆண்டுகளுக்கு இப்பால்தான் கிறித்துவர்களே கூட பைபிளைப் படிக்க அனுமதிக்கப்பட்டனர். மறைந்திருந்து படித்தவர்கள் வேட்டையாடப்பட்டு எரித்துக் கொல்லப்பட்டனர். இதுவே பைபிளின் வரலாறு. எந்தக் கோணத்தில் பார்த்தாலும் **போப்பின் கூற்று அண்டப் புளுகு ஆகும்.** இங்கு ஒன்றைக் கூறுகிறேன். இப்புளுகைத் தமிழர் ஏற்கவில்லை. ஆனால் இதுபோல் ஒரு புளுகு வடமொழி மீது புனையப்பட்டு, அதில் தமிழர் பெருமை ஒரு சிறிதே காணப்படுமாயின் தமிழரில் பலர் அதை வரவேற்றுப் பரப்பவும் செய்வர். புளுகு மூட்டைகளான மார்ஷல், பாதிரி ஹீராஸ், வீலர் இந்த உத்தியைத்தான் கையாண்டனர். இனி நாம் இவர்களை ஸ்ரீலஸ்ரீ மார்ஷல், ஸ்ரீமத் ஹீராஸ், லோககுரு வீலர் என்று போற்ற வேண்டும். இன்னும் சொல்லப் போனால் இவர்களைச் சீர் வளர்சீர் மார்ஷல், திருமிகு ஹீராஸ், அருள்மிகு வீலர் என்னல் வேண்டும்.

'ரிக்வேதம் 8000 ஆண்டுகளுக்கு முன்பே ஓதப்பட்டது' என்ற உண்மை இப்போது நிறுவப்பட்டிருக்கிறது. சைவம் வேத காலத்திற்கு முற்பட்டது என்று எந்தச் சைவரும் 90 ஆண்டுகளுக்கு முன்பு கூறியது கிடையாது. சைவத்தின் பெருமையைப் போற்றும் ஒரு பழைய வெண்பா கூறுவதைக் கேட்போம்:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதம் பசு; அதன்பால் மெய்யாகமம்; நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்உறு நெய்; போதமிகும்
நெய்யின் உறு சுவையாம் நீள் வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ்நூலின் திறம்.

ஆய்வாளர்கள் வேதங்கள் 8000 ஆண்டுகளாக இம்மண்ணில் நிலவி வருகின்றன என்று ஆதாரங்களோடு நிறுவி இருக்கின்றனர். வேதங்கள் சிவபெருமானை, சிவனார் திருநாமத்தைப் போற்றுகின்றன. வேதம் நான்காயினும் "வேத த்ரயீ" (வேதம் மூன்று) என்று ஒரு மரபும் உண்டு. ரிக், யஜுர், சாமம் என்பவை அவை. இவற்றின் நடுவில் அமைந்தது யஜுர் வேதம். இது 101 சாகைகளாக விரிந்து இருப்பது. இவற்றின் நடுச்சாகை ஸ்ரீபோதாயன சாகை. இந்தச் சாகை ஏழு காண்டங்களாக உள்ளது. இவற்றின் மத்தியில் உள்ளது நான்காவது காண்டமாகிய சதருத்ரீயம். இதன் நடுவுள் உள்ளது ஐந்தாவது ப்ரச்னம். இதில் "நம: சோமாயச ருத்ராயச" என்னும் அனுவாகம் உள்ளது. இதன் நடுவுள் "நம: சிவாய" என்னும் பஞ்சாக்ஷரம் அமைந்திருக்கிறது. தேவாரங்கள் 7 திருமுறைகள். இவற்றின் மத்தியில் திகழ்வது 5 ஆம் திருமுறை. இத்திருமுறையில் 100 பதிகங்கள். நடுவில் அமைந்த பதிகம் 51 ஆவது பதிகம். இதன் நடுவுள் உள்ள திருப்பாடல் ஆறாம் பாடல். இப்பாடலில் "மண்ணினார் மறவாது சிவாய என்று எண்ணினார்க்கு இடம்" என்று அருளப்பட்டிருக்கிறது. இப்படி வடமொழி வேதமும் தமிழ் வேதமும் ஒற்றுமைப்பட்டிருப்பது கண்டு நாம் இதை உணர்ந்து போற்றல் வேண்டாவா?

'சிவாய நம' என்பது சூக்கும பஞ்சாக்ஷரம். குருகாவூரில் பசியோடு பந்தரில் அமர்ந்திருந்த சுந்தரரிடம் அடியார் வேடம் தாங்கிச் சிவனார் வந்தனர். அவர் வருகைக்கு முன்பு சுந்தரர் என்ன செய்தார்? என் தெய்வமாம் சேக்கிழார் பெருமான் கூறுகிறார்: "தம்பிரான் தோழர் திருத் தொண்டருடன் வருவார் அப்பந்தரிடைப் புகுந்து திருமறையவர் பால் பெருகார்வம் செல இருந்தார் "சிவாயநம" எனப் பேசி." சிவனார் வருகைக்கு முன் அவர் திருநாமம் வந்துவிட்டது. அதுவே சிவாய நம.

அன்பர்களே வேத சிவாகமங்கள் இல்லையெனில் சைவம் ஏது? இவையிற்றை அருளியவர் சிவபெருமான் அல்லரோ?

பலகலை ஆகம வேதம் யாவையினுங் கருத்துப்
பதி பசு பாசம் தெரித்தல்

என்று தானே சிவப்பிரகாசம் செப்புகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருளினாலே ஆகமத்தே அறியலாம்

என்றும்,

அனாதியே அமலனாய அறிவன் சொல் ஆகமந்தான்

என்றும்,

மறைகள் ஈசன் சொல்

என்றும் சிவஞான சித்தியார் சாற்றுகிறது. மேலும்,

நரர் பயில் தேயந்தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்க புண்ணியந்தான் ஆகும்

என்றும்,

வேத சிரப் பொருளை மிகத் தெளிந்தும் சென்றால்
சைவத் திறன் அடைவர்

என்றும்,

இவை யெல்லாம் அருமறை ஆகமத்தே அடங்கியிடும்
அவை இரண்டும் அரன் அடிக்கீழ் அடங்கும்

என்றும்,

வேத நூல் சைவ நூல் என்று இரண்டே நூல்கள்;
வேறு உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்;
ஆதி நூல் அனாதி அமலன் தருநூல் இரண்டும்;
ஆரண நூல் பொது, சைவம் அருஞ்சிறப்பு நூலாம்;

என்றும்,

பிற நூல் திகழ் பூர்வம்; சிவாகம நூல்கள் சித்தாந்தம் ஆகும்

என்றும்,

மறைகள் ஆகமங்களினால் தோற்றம்

என்றும்,

ஆரியனாம் ஆசான் வந்து அருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்

என்றும் சிவஞான சித்தியார் அருளி உள்ளது.

இக்கிரமத்து என்னும் இருக்கு

என்பது சிவஞான போதம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெரிய புராணம் வேத ஆகமங்கள் தழைக்கவே அருளப்பட்ட நூல். என் தெய்வமாம் சேக்கிழார் பெருமான் சகலாகம பண்டிதர். அவர் பெருமையை யாரே அறிவார்? அறிந்தாலும் அளந்து காட்ட வல்லார் யார்? அப்பெருமானின் திருவடித் தூசியாகவே வாழ்தற்கு, பேறு பெறுவதற்கு, எளியேன் முயன்று வருகிறேன். ஒரு செய்தியைக் கூறுகிறேன். பச்சைத் தமிழில் மொழிகிறேன். கவனமாகக் கேளுங்கள். தனி அடியார் அறுபத்து மூவரைச் சிவனார் படைத்து அருளினார். இவ்வறுபத்து மூவரையும் ஓர் உருவில் அமைத்துக் காட்டத் திருவுள்ளம் பற்றிய சிவனார் அவ்வறுபத்து மூவரையும் ஒரு சேரப் பிடித்து ஓர் உருவம் அமைத்தார். அத்திருவுருவமே சேக்கிழார் பெருமானின் திருமேனி. இது சத்யம்; சத்யஸ்ய சத்யம். இதை மறவாதீர். கோவை சிவக்கவிமணி வரைந்த பெரியபுராணப் பேர் உரையை ஓதுங்கள். பேர் உரை ஆசிரியரை ஏற்றுங்கள்; போற்றுங்கள்.

காலத்தால் முறபட்ட திருமுறை காரைக்கால் அம்மையார் அருளியது. அதற்கும் முற்பட்டது திருமூலரின் திருமந்திரம். கயிலைத் தாழ்வரையில் வாழ்ந்து வந்த திருமூலரைச் சிவபெருமான் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்தார். ஏன்? தமிழில் வேத ஆகமங்களின் சாரத்தைத் தேக்கி வெளியிடும் பொருட்டாகவே. திருமூலர் சொல்லுகிறார்:

அவிழ்க்கின்ற வாறும் அது கட்டுமாறும்
சிமிட்டலைப் பட்டு உயிர் போகின்ற வாறும்
தமிழ்ச் சொல் வடசொல் எனும் இவ்விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலும் ஆமே.

அரன் அடிநாள் தொறும்
சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே.

“வேதத்தை விட்ட அறம் இல்லை; வேதத்தில்
ஓதத் தகும் அறம் எல்லாம் உள...”

“அரன் உரை செய்து அருளும் ஆகமம்”

“வேதமொடு ஆகமம் மெய்யாம் இறை நூல்”

“காயத்திரியே கருது சாவித்திரி
ஆய்தற்கு உவப்பார்”

“வேதாந்தம் சுத்தம் விளங்கிய சித்தாந்தம்
நாதாந்தம் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்.”

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதாந்த ஆகமாந்த நூலான திருமந்திரம் அறிவிக்கும் உண்மைகள் சொன்னேன். இனித் தமிழ் வேதம் சாற்றும் உண்மைகள் பற்றிச் சில செய்திகள்.

சிவனார் மறைகளையம் ஆகமங்களையும் அருளினார்; விரித்தார்; ஆய்ந்தார்; உபதேசித்தார். உருவற்ற பரம்பொருள் உருக்கொள்ளக் காரணம் என்ன தெரியுமா? வேத ஆகமங்களை அறிவிக்கவே. சிவஞான சித்தியார் செப்புவது கேளீர்:

ஆரணம் ஆகமங்கள் அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளான் ஆகில் கதிப்பவர் இல்லையாகும்
நாரணன் முதலாய் உள்ள சுரர் நரர் நாகர்க்கு எல்லாம்
சீர் அணி குரு சந்தானச் செய்தியும் சென்றிடாவே.

அருள் உரு ஏற்று வேத ஆகமங்களை நம் சிவனார் அருளியதை இகழலாமா? வேதம் கூறிய வேத நாயகன், அவ்வேதங்களைப் புரிந்து கொள்ள ஆறு அங்கங்களை வழங்கினானே. அவற்றையும் தமிழில் தந்திருக்கலாமே! ஏன் தரவில்லை? அப்படி இருந்தால் தான் நாம் வடமொழியையும் பயில்வோம். அப்படிப் பயில வேண்டும் என்பது சிவன் திருவுள்ளம்.

தமிழ் வேதங்கள் சாற்றியவற்றிலிருந்து சில நறுக்குகள்:

"அங்கமும் நான்மறையும் அருள் செய்து"

"அங்கமொடு அருள்மறை அருள் புரிந்தான்"

"அருமாமறைதான் விரித்தான்"

"அறநெறி மறையொடும் அருளிய பரன்"

"ஆல் அடைந்த நீழல் மேவி அருமறை சொன்ன தென்னே!"

"விரித்தார் நான் மறைப்பொருளை"

"மறைத் திறம் அறத்தொகுதி கண்டு சமயங்களை வகுத்தவன்"

"நாவார் மறையர்"

"மறை யோதும் எங்கள் பரமன்"

"அருமறைப் பொருள் ஆயினான்"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"உமை உரை செயும் அவை மறை ஒலியே"

"விளங்கும் மறை ஓதிய ஒண்பொருளாகி நின்றான்"

"ஏரிசையும் வடவாலின் கீழிலிருந்து அங்கு ஈர் இருவருக்கு
இரங்கி நின்று, நேரிய நான்மறைப் பொருளை
உரைத்து ஒளிசேர் நெறியளித்தோன்"

"சதுரம் மறைதான் துதிசெய்து விளங்கும்... மறைக்காடு"

"மந்திர மறையவை... வழிபட நின்ற எம்மிறை...
வெண்காடு மேவிய... அடிகள்"

"சாம வேதம் பெரிதுகப்பானை"

"அரு மறைப் பொருளே!"

"மறையின் பொருள் ஆனவனே"

"பெருமறை பகர்ந்த பட்டனே"

"திருந்த நான்மறை பாட வல்லானை"

"பாடு மாமறை பாட வல்லானை"

"வேத நாயகன் வேதியர் நாயகன்"

"சாம வேதக் கந்தருவம் விரும்புமே"

"சந்தோக சாமம் ஓதும் வாயானை"

"பாடிய நான் மறையான்"

"மூவா நான்மறை முதல்வா போற்றி!"

"ஆய நான்மறை யவனும் நீயே"

"வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு"

"வேத மொழியர்"

"வேதியனை வேத விழுப் பொருளானை"

"சாம கண்டா அண்டவாணா!"

"தீதில் மறை கண்டான்"

வேத சொரூபியின் சிறப்பு உருவமே சிவாகம வடிவம். ஆகமம் வடமொழியில் உள்ளது. சிவ ஆகமங்கள் தமிழில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சிவாசார்யர்கள் சிவாகமங்களை நன்கு பயில வேண்டும்.

ஆரியப் படை எடுப்பு என்ற ஒரு கருதுகோள் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்டது. அக்காலத்தில் அகழ் ஆய்வு என்ற ஒன்று தோன்றவில்லை. மேலும் அக்கால ஆய்வாளர்கள் என்பாரிடம் தெளிவான விஞ்ஞான அறிவும் கிடையாது. ஆரியப் படை எடுப்பு என்ற கருதுகோளுக்கு அதீதமான அழுத்தம் தந்து பிரசாரம் செய்தவர் மாக்ஸ் முல்லர் ஆவார் என்பதை முன்பே கூறியுள்ளோம். இவருக்குச் சிறு வயதிலிருந்தே சம்ஸ்கிருத மொழி மீது ஒரு பற்று உண்டாயிற்று. ஆனாலும் அதை அவர் முழுமையாகப் பயிலும் வாய்ப்புப் பெறவில்லை. இச்சூழலில் உலகில் சிறந்த வேதம் விவிலியமே (பைபிளே) என்பதை நிலைநாட்ட அங்கங்கும் பாதிரிகள் பாடுபட்டு வந்தனர். ஆனால் **ராஜா ராம்மோகன்ராய் அவர்கள் கிறித்துவர் கூற்றுக்களைச் சாடி நொறுக்கி வந்தார்.** அவருடைய அசைக்க முடியாத வாதங்களைச் சந்திக்க வழியின்றிப் பாதிரிமார் கலங்கி நின்றனர் என்றாலும் இத்தகு சூழ்நிலையில் தங்கள் சமயத்தை எங்ஙனம் காத்துக் கொள்ளல் வேண்டும் என்று அவர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். “சர்ச்சின் வாழ்விற்கு ஆபத்து வந்தால், ஒழுக்க விதிகளைக் கடைப்பிடிப்பதிலிருந்து அதற்கு விடுதலை வழங்கப்பட்டிருக்கிறது. ஒற்றுமையே குறிக்கோள் என்ற அடிப்படையில், எந்த வழிமுறையும் புனிதமானதே. கள்ளத்தனம், துரோகம், கொடுஞ்செயல், அதிகார விற்பனை, சிறை, கொலை என்றுள்ளவற்றைப் பயன்படுத்தலாம். ஒழுங்கு நிலை என்பது சமூகத்தைக் காக்கவே. ஆகவே பொது நன்மைக்காகத் தனிமனிதனைத் தியாகம் செய்ய வேண்டும்.”

“When the existence of the Church is threatened, this is released from the commandments of morality. With unity as the end, the use of every means is sanctified, even cunning, treachery, violence, simony, prison, death. For all order is for the sake of the community, and the individual must be sacrificed to the common good.”

- DIETRICH VON NIEHEIM, Bishop of Verden, De Schimate Libri iii, A.D. 1411.

கிறித்துவ சமயம் மார்டின் லூதரால் பிளவுண்டதை அனைவரும் அறிவர். கிறித்துவ சமயத்தின் மறுமலர்ச்சியாளர் என்று அவர் போற்றப்படுகிறார். அவரது சமயத்தைப் பின்பற்றியவரே மாக்ஸ் முல்லர். மார்டின் லூதர் கூறியது பற்றி அறிந்து கொள்ளுங்கள். பரம பாவியே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிறித்துவின் நேசத்துக்கு ஆளாகிறான். கிறித்துவும் பாவங்கள் புரிந்தவரே. "கிறித்து முதலில் கிணற்றுக்குப் பக்கத்தில் சந்தித்த பிறன் மனைவியைப் புணர்ந்தார். இரண்டாவதாக மேரி மக்தலேனாவையும், மூன்றாவதாக சோரம் போனவளையும் புணர்ந்தார்." "Christ committed adultery first of all with the woman at the well... Secondly with Mary Magdalene, and thirdly with the woman taken in adultery.." (Table Talk, 1472, quoted by Peter F. Wiener in his Martin Luther). மேலும் லூதர் கூறுவன: கிறித்துவ முனிவர்கள் கொடும் பாவிகள். (The Sanits must be good down right sinners). அப்போஸ்தலர்கள் பாவிகள்; ஆம்; பாவத்தைப் பயின்ற பாதகர்கள் ... தீர்க்கதரிசிகளும் அடிக்கடி பாவம் இயற்றியவர்களே என்று நான் நம்புகிறேன்: "The apostles themselves were sinners, yea, regular scoundrels... I believe that the prophets also frequently sinned grieviously."

(Table Talk இன் சுருக்கமே இன்று கிறித்துவ மதத்தினரால் வெளியிடப்படுகிறது. அச்சுருக்கத்தில் மேலே சொன்ன பகுதியைக் காட்ட மறுக்கின்றனர்.)

கிறித்துவத்தைப் பரப்ப விழைவோர் எதை வேண்டுமானாலும் கூறுவர். பழி பாவத்திற்கு அஞ்ச மாட்டார்கள். பிரித்தாளும் சூழ்ச்சி கைவரப் பெற்றவர்கள். இந்தியாவைத் துண்டாட அவர்கள் கூசவில்லை. திராவிட ஆரியப் பாகுபாட்டை உற்பத்தி செய்து, நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைத்தனர். வடபுலம் தென்புலம் தம்மிடையே வெறுப்புணர்ச்சியைத் தூண்டி விட்டனர். வடக்கு வேறு தெற்கு வேறு; இரண்டும் இருவேறு நாகரிகம் கொண்டவை என்று கிளப்பி விட்டனர். வடமொழியில் அமைந்த வேதத்தைத் தமிழர் வெறுக்குமாறு சூழ்ச்சிகள் செய்தனர். இந்து மதத்தை அழிக்க, அதன் ஆணிவேரான வேதங்களைக் களைய முற்பட்டனர். ஆங்கிலத்தை நம்மவர் மீது திணித்து நம் கலாசாரத்திற்கு முடிவு கட்ட முனைந்தனர். அதில் பெருமளவு வெற்றியும் கண்டனர். இதற்காகவே மெகாலே ஆங்கிலக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தினார். அவர் தம்முடைய உள்ளக் கிடக்கையைத் தெளிவாகவே வெளிப்படுத்தி உள்ளார். கல்கத்தாவிலிருந்து அவர் தந்தைக்கு எழுதிய கடிதத்தில் அவர் கூறியதாவது: "நம்முடைய ஆங்கிலப் பள்ளிகள் அமோகமாகத் தழைத்திருக்கின்றன. ஆங்கிலக் கல்வியை விரும்பும் அனைவருக்கும் அதை வழங்குதலில் சிரமம் இருக்கிறது. சில இடங்களில் அது சாத்தியமில்லை. ஹுக்ளி என்ற ஒரே நகரில் 1,400 மாணவர்கள் ஆங்கிலம் பயில்கின்றனர். **இந்துக்கள் மீது இதன் தாக்கம் அபரிமிதமானது.** ஆங்கிலக் கல்வி பெற்ற எந்த ஓர் இந்துவும் தன் மதத்தோடு உண்மையில் இணைந்திருக்கவில்லை. சிலர் கொள்கை அளவில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அம்மதத்தில் தொடர்கின்றனர். ஆனால் பலரும் தங்களைத் தூய இயற்கைச் சமயவாதிகளாக ஆக்கிக் கொண்டுள்ளனர். இன்னும் சிலர் கிறித்துவத்தைத் தழுவி நிற்கின்றனர். நம்முடைய கல்வித் திட்டங்களை நாம் பின்பற்றினால், முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, வங்காளத்தில் மதிப்புள்ள வகுப்பினருள் ஒருவர்கூட விக்ரஹ ஆராதனை செய்பவராக இருக்க மாட்டார் என்பது என் திடமான நம்பிக்கை. மதமாற்றம் செய்தற்கு எந்த முயற்சிகளும் எடுக்காமலேயே, மத உரிமைகளில் ஒரு சிறிதும் குறுக்கிடாமலேயே, அறிவு, சிந்தனை ஆகியவற்றின் இயற்கை விளைவாகவே மாத்திரம் இது நிகழும். இவ்விளைவுகளை எண்ணி நான் மனமாரக் களிக்கின்றேன்."

("Our English schools are flourishing wonderfully. We find it difficult – indeed, in some places impossible, – to provide instructions for all who want it. At the single town of Hoogly fourteen hundred boys are learning English. The effect of this education on the Hindus is prodigious. No Hindu, who has received an English education, even remains sincerely attached to his religion. Some continue to profess it as a matter of policy; but many profess themselves pure Deists, and some embrace Christinity. It is my firm belief that if our plans of education are followed up, there will not be a single idolater among the respectable classes in Bengal thirty years hence. And this will be effected without any efforts to proselytize, without the smallest interference with religious liberty, merely by the natural operation of knowledge and reflection. I heartily rejoice in the prospects..."

"நம்முடைய கல்வித் திட்டங்களை நாம் பின்பற்றினால்" என்று மெகாலே கூறுவதிலிருந்து, இலண்டனில் ஒரு குழு இருந்து கொண்டு திட்டங்கள் வகுத்துச் செயலாற்றுவதில் ஈடுபட்டு இருந்தது என்பது உறுதியாகிறது. அக்காலத்தில் அனேகமாக எல்லாப் பள்ளிகளும், கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் பாதிரிமாரால் நடத்தப்பட்டன. அன்றைய அரசு அவர்களுக்குப் பக்க பலமாக நின்றது.

இந்துக்களைக் கிறித்துவ சமயத்திற்கு மாற்றவே, ஆக்ஸ்ஃபோர்டில் வடமொழிக்கு ஓர் இருக்கை உருவாக்கப்பட்டது (Specifically to promote Sanskrit learning among the English, so as to enable his country men to proceed in the conversion of the natives of India to the Christian relgion.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதங்களை மொழிபெயர்க்கத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதைச் சாதிக்க, சம்ஸ்கிருத மேதையான எச்.எச்.வில்சன் தெரிவு செய்யப்படவில்லை. அவர் அப்போது Boden Chairஐ வகித்து வந்தார் என்றாலும் அவரை மொழிபெயர்க்க அழைக்கவில்லை. பாரிஸ் நகரத்தில் யூஜின் பர்னாஃப் (Eugene Bournouf) என்பாரிடம் எடுபிடியாக இருந்து, 24 வயதுடையவரான, சம்ஸ்கிருத மொழியில் இலேசான பயிற்சி பெற்றிருந்த, வறுமையில் வாடிய மாக்ஸ் முல்லரே இப்பணிக்குத் தெரிவு செய்யப்பட்டார். இது 1847இல் நிகழ்ந்தது. கடைசி வரையில் மாக்ஸ் முல்லர் சம்ஸ்கிருதத்தில் பேசவோ, எழுதவோ தகுதி பெறவில்லை.

நீலகண்ட கோரே என்ற அந்தணர் கிறித்துவராக மாறி நெஹமியா கோரே (Nehemia Goreh) என்ற பெயர் பெற்றார். தம் வாழ்நாளில் பின்னாளில் தம் மதமாற்றத்தால் பெரும் மன உளைச்சலுக்கு ஆளானார். அது வேறு கதை. இங்கிலாந்தில் அனுட்டிக்கப்பட்ட கிறித்துவத்தை நேரில் கண்டு இவர் அதிர்ந்து போனார். மாக்ஸ் முல்லரைக் கண்டாகிலும் ஆறுதல் பெற எண்ணிய இவர் ஆக்ஸ்போர்ட் சென்றார். மாக்ஸ் முல்லரைக் கண்டவுடனே அவரிடம் சம்ஸ்கிருதத்தில் பேசினார். **முல்லருக்கு ஓர் அக்ஷரம் கூட விளங்கவில்லை.** முல்லரைப் பார்த்து, “நீங்கள் சம்ஸ்கிருதம் அறியீரோ?” என்றார். முல்லர் “இல்லை; சம்ஸ்கிருதத்தில் யார் பேசியும் நான் கேட்டதில்லை” என்றார். (Nehemiah was) “addressing me in a language of which I did not understand a single word. I spoke to him in English and asked him what language he was speaking and he replied with great surprise, “Do you not know Sanskrit?” “No” I said, “I have never heard it spoken...” - page 47, Auld Lang Syne - Second Series - My friends by Max Muller, A.E.S. (New Delhi) Reprint, 1993.

வேதங்களை மொழிபெயர்க்கத் தெரிவு செய்யப்பட்ட மாக்ஸ் முல்லரின யோக்யதாம்ஸம் இதுவே. பின்னாளில் அம்மொழியில் ஓரளவு ஞானம் பெற்றார் என்பதை நான் மறுக்கவில்லை.

எதற்காகத் தம்மை நியமித்தார்களை என்பதை முல்லர் மறக்கவில்லை. 1868இல் ட்யூக் ஆஃப் ஆர்கில் (Duke of Argyll) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். தம்முடைய வேத மொழிபெயர்ப்பினால் இந்தியாவின் நெடுஞ்சேய்மையான மதம் அழியும். இந்நிலையில் கிறித்துவம் அடி எடுத்து வைக்காவிட்டால், யாருடைய பிழை அது? “(The ancient religion of India is doomed, and if Christianity does not step in, whose fault will it be?”)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அவர் இது பற்றித் தம் மனைவிக்கும் கடிதம் மூலம் செய்தி அறிவித்திருந்தார். "இந்தப் பதிப்பும் வேத மொழி பெயர்ப்பும், இனி இந்தியாவின் தலைவிதியையும், அத்தேசத்தின் லக்ஷோப லக்ஷ ஆன்மாக்களின் (மக்களின்) வளர்ச்சியும் கடுமையாகப் பாதிக்கும். அம்மக்களுடைய மதத்தின் வேர் இது. அவ்வேர் எது என்று அவர்களுக்குக் காட்ட, கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக அதிலிருந்து தோன்றிய அனைத்தையும் பிடுங்கிக் காட்டுவது தான் வழி என்று உறுதியாக நான் உணர்கிறேன்." (...this edition and the translation of the Veda, will hereafter tell to a great extent on the fate of India and on the growth of millions of souls in that country. It is the root of their religion and to show them what the root is, I feel sure, is the only way of uprooting all that has spread from it during the last three thousand years).

இந்த மாக்ஸ் முல்லருக்குத்தான் நாம் மோக்ஷ மூலர் என்ற விருது சூட்டி மகிழ்ந்தோம். கலியின் கொடுமையை என் என்பது!

பிரித்தாளும் சூழ்ச்சியைத் தொடர்ந்து கடைப்பிடித்தவர் வெள்ளையரே. இந்தியாவின் வடபகுதியும், தென்பகுதியும் இணைந்தே வாழ்ந்து வந்தன. இரண்டிலுமே வேத நாகரிகம் போற்றப்பட்டு வந்தது. "பல்விதமான சரித்திரத்தின் மணம் பாரெங்கும் வீசும் தமிழ்நாடு" என்று மகாகவி அருளியுள்ளார். வேதாந்த அடிப்படையில் பிரம சூத்திரத்திற்குப் பொருள் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்று முறையே எடுத்துக் காட்டிய சங்கர பகவத்பாதர், இராமாநுஜர், மத்வாசாரியர் தென்னாட்டவரே. இவர்களுள் சங்கரரும், இராமாநுஜரும் தமிழரே. அக்கால கேரள நாடு சேரநாடே. அங்குத் தமிழ்தான் தாய் மொழியாக நிலவியது. சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மை சாற்றுவது. 10 ஆம் நூற்றாண்டில் முப்பொருள் உண்மை சாற்றும் காஷ்மீர் சைவம் பிரபலமாக இருந்து வந்ததைப் பேராசிரியர் எஸ்.எஸ். சூரிய நாராயண சாத்திரியார் தம் கட்டுரையில் நிறுவி உள்ளார். பிறகு காசியிலும் சைவ சித்தாந்த மடம் குமரகுருபர சுவாமிகளால் நிறுவப்பட்டதை நாம் அறிவோம். அப்பர், ஞானசம்பந்தர் ஆகியோர் காலத்திலேயே வடநாட்டில் மத்த மயூர சந்தானம் சிறப்புற இயங்கியது. இச்சந்தானத்தின் கொள்கை 100க்கு 95 விழுக்காடு சைவ சித்தாந்தமே. இதன்வழி வந்ததே கோளகி மடம். இம்மடம் தமிழ்நாட்டில் சிறப்புடன் இயங்கி வந்தது. இம்மடத்தைச் சார்ந்த வாகீச பண்டிதர் ஞானாமிர்தம் என்ற நூலின் ஆசிரியர். இந்நூலைப் பதிப்பித்த அமரர் ஔவை துரைசாமி பிள்ளை அவர்கள் அருமையான ஆய்வு நடத்திப் பற்பல அற்புதத் தகவல்களை வெளியிட்டுள்ளார் இவை பற்றித் தமிழ்ச் சைவரில் பலர் அறியாமல் இருப்பது விசனத்திற்கு உரியது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மிகத் தொன்மையான காலத்தில் சூத்திர ஆசிரியர்களாக பௌதாயனரும், ஆபஸ்தம்பரும் வளங்கினர். இவர்கள் தென்னாட்டவர், வடபுலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்த சிவயோகி திருமூலர். இவர் அருளிய திருமந்திரமே 10 ஆம் திருமுறையாக அமைக்கப்பட்டு ஓதப்பட்டு வருகிறது. வடபுலத்திலிருந்து தமிழ்நாடு வந்த அகத்தியர் பொதிகை மலையில் தவமிருந்தார். இவர் மூலமே காவிரி நதியை நாம் பெற்றதாகப் புராணம் கூறுகிறது. இவரைத் தமிழ் வளர்த்த சான்றோராகவே தமிழர் போற்றுகின்றனர். தமிழ்நாட்டில் பற்பல கோயில்களில் அகத்தியரின் திருவுருவம் பிரதிஷ்டை ஆகி உள்ளது.

தென்னாட்டவர் காசிக்குச் சென்று கங்கையில் படிந்து, விசுவநாதரை வழிபடல் வேண்டும் என்று விதிக்கப்பட்டது. இதைப் போலவே வடநாட்டவர் தமிழ்நாட்டின் தென்கோடியில் உள்ள இராமேச்சுரம் வந்து, கடலாடி இராமநாதப் பெருமானை வழிபடல் வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. **இந்தியாவின் ஒருமைப்பாட்டைப் பேணி வரும் தொன்மையான மரபுகள் இவை.**

ரிக் வேதத்திற்குப் பேர் உரை வரைந்தவர் சாயனர். முகமதிய ஆதிக்கத்தை எதிர்த்து வெற்றி கண்டவர் இவர். வட இந்தியாவும் தென் இந்தியாவும் கலாசாரத்தால், பண்பால், நாகரிகத்தால் இணைக்கப்பட்டே உள்ளன. கேரள நாட்டு அர்ச்சகர்கள் நேபாள நாட்டுக் கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டனர். கர்நாடக அர்ச்சகர்கள் காஷ்மீரத்தில் அர்ச்சகர்களாக விளங்கினர். வேத நெறியின் தூண்களாகக் காஞ்சியும், இராமேஸ்வரமும், சிருங்கேரியும், திருப்பதி திருமலையும், இன்னும் பற்பல திவ்வியத் தலங்களும் விளங்கி வருகின்றன.

பாரத நாட்டின் ஒருமைப்பாட்டை அண்மைக் காலத்தில் வலியுறுத்த வந்த மஹான்கள் சுவாமி விவேகானந்தர், ஸ்ரீஅரவிந்தர், திலகர் முதலியோர். இந்த ஒருமைப்பாட்டிற்கு உலை வைக்கும் வகையில் ஆரியப்படையெடுப்பு உருவாக்கப்பட்டது. இஃதோர் அரசியல் சூழ்ச்சி. இந்தச் சூழ்ச்சியை விடாது கடைப்பிடிப்போர் அரசியலில் ஆதாயம் தேடுவோரே. கிறித்துவர்கள், கம்யூனிஸ்டுகள், மார்க்சியவாதிகள் ஆகியோர் நொறுங்கிப் போன இக்கொள்கைக்குச் சிம்பு கட்டும் பணியில் முழுமூச்சோடு செயல்பட்டு வருகின்றனர். நம் நாட்டுப் பத்திரிகைகள், செய்தித்தாள்கள் இவர்களுக்குத் துணை நிற்கின்றன. வடமொழி வெறுப்பை உசிப்பி விட்டு வளர்ந்து வரும் தமிழரும் இவர்களோடு இணைந்து நிற்கின்றனர்.

சரியான, முறையான சரித்திர அறிவு பெறாதவர்கள் இன்னமும் நம் தேசத்திற்கு ஊறு விளைத்து வருவதே தம் கடமை என்று செயல்படுகின்றனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுருங்கச் சொன்னால் தோற்றாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதைதான் இங்குப் போற்றப்படுகிறது.

வேதங்களை உணர ஆறு அங்கங்களில் தேர்ச்சி பெற வேண்டும் என்று உணர்ந்த அமெரிக்கரான டேவிட் ஃப்ராலி, இவையிற்றைப் பயின்று உண்மைகளை எடுத்துச் சொல்லி வருகிறார். இந்தியாவில் ஆரியப் படை எடுப்பு என்ற கட்டுக்கதை (The Myth of The Aryan Invasion of India) என்ற நூலின் ஆசிரியர் இவர். இவரை வாமதேவ சாஸ்திரி என்று வேதமறிந்தோர் போற்றுகின்றனர். பல நூல்களை இவர் படைத்திருக்கிறார். அவற்றை நாம் படித்துப் பயன் கொள்ள வேண்டும்.

நவரத்ன ராஜாராம் என்பார் "இந்தியாவில் ஆரியப்படை எடுப்பு: பொய்க் கதையும் உண்மையும்" (Aryan Invasion of India: The Myth and the Truth) என்ற நூலின் ஆசிரியர். இவர் பென்னம் பெரிய ஆய்வாளர். இவர்கள் வரைந்த நூல்கள் நாம் பெற்றுள்ள பொக்கிஷங்கள். இவரும் டேவிட் ஃப்ராலியும் இணைந்து, "வேத ஆரியர்களும் நாகரிகத்தின் மூல மரபுகளும்;" (Vedic Aryans and the Origins of Civilization) என்ற நூலை வரைந்துள்ளனர்.

பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த கென்ராட் எல்ஸ்ட் (Koenraad Elst) என்பார் ஒரு பெரிய மேதை. இந்திய சமுதாயத்திற்கும் நாகரிகத்திற்கும் கலாசாரத்திற்கும் ஊறு விளைப்போரின் தோலை உரித்து வருபவர் இவர். இதனால் இவருக்கு ஏற்பட்டிருக்கும் தொல்லைகளுக்கு அளவே இல்லை. இவர் மனம் உடைந்து போமாறு ஒரு கூட்டுச் சதியே நிகழ்த்தி வரப்படுகிறது. "ஆரியப் படையெடுப்பு விவாதம்: புத்தம் புதிய தகவல்களுடன்" (Update on the Aryan Invasion Theory) என்ற இவரது நூல் மிக மிக அருமையான ஒன்று.

ஸ்ரீகந்த் தலகெரி (Srikant Talageri) என்பவர் வேதங்களை எழுத்தெண்ணிப் பயின்றவர். ஆரியப் படையெடுப்பு என்ற கட்டுக்கதையைத் தூள் தூளாக்கியவர் இவர். இவர் வரைந்த "ஆரியப்படை எடுப்புக் கருத்து: ஒரு மறு கணிப்பு" (The Aryan Invasion Theory - A reappraisal) என்ற நூலையும், "ஆரியப் படையெடுப்புக் கருத்தும், இந்திய தேசியமும்" (Aryan Invasion Theory and Indian Nationalism) என்ற நூலையும் நாம் எழுத்தெண்ணிப் படிக்க வேண்டும். மிக மிகச் செம்மையாக வரையப்பட்ட நூல்கள் இவை.

மேலும் ப்ரஃபுல் கொரேடியா, ராம்தத் பார்தி, பலிவால், சீதாராம் கோயல், ராம்ஸ்வரூப், சேத்னா (K.D. Sethna). எஸ்.ஆர்.ராவ், எஸ்.எஸ்.மிஸ்ரா, பகவான் சிங் முதலியோர் வரைந்துள்ள நூல்கள், சீதாராம் கோயல் பதிப்பித்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நியோகி குழு அறிக்கை (பக்கங்கள் 1010), வேத (கால) சரஸ்வதி (ஜியலாஜிகல் சொசைடி, பெங்களூர்), எஸ்.பி.தியோ, சூர்யநாத் காமத் பதிப்பித்த ஆரிய பிரச்சினை (The Aryan Problem), சரஸ்வதி நதி பற்றி கல்யாணராமன் அவர்களின் ஆய்வுகள் ஆகியவற்றையேனும் நாம் பயில வேண்டாவா?

இந்நூல்களில் பெரும்பாலானவை Voice of India (2/18, Ansari Road, New Delhi 110 002) வெளியிட்டவை.

தம்முடைய முதன்மை உரையில் பேராசிரியர் கே.டி.பாண்டுரங்கி ஓர் அற்புதச் செய்தியை அறிவித்தார். "ஆரியப் பிரச்சனை என்பது ஒரு வகையில் இறந்து போன குதிரையை அடித்தல் போன்றது; வேறு ஒரு வகையில் உயிரோடு உள்ள பைசாசத்தை எதிர்ப்பது போன்றது (The Aryan Problem, in one sense is beating a dead horse; in another sense, it is confronting a living ghost)."

சென்றுபோன பொய்யெல்லாம் மெய்யாகச்
சிந்தை கொண்டு போற்றுவாய் போ போ போ
வென்று நிற்கு மெய்யெலாம் பொய்யாக
விழிமயங்கி நோக்குவாய் போ போ போ
மெய்மை கொண்ட நூலையே - அன்போடு
வேதமென்று போற்றுவாய் வா வா வா
பொய்மை கூறல் அஞ்சுவாய் வா வா வா
பொய்மை நூல்கள் எற்றுவாய் வா வா வா
கற்றல் ஒன்று பொய்கிலாய் வா வா வா
கருதியது இயற்றுவாய் வா வா வா
ஒற்றுமைக்குள் உய்யவே - நாடெல்லாம்
ஒரு பெருஞ் செயல் செய்வாய் வா வா வா.

ஓம் தத் ஸத்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. பெருமைமிகு இதிகாசங்கள்

தமிழின் மீது ஆதிக்கமும், அதிகாரமும் பூணும் அதிகாரங்கள் மூன்று. அவையே எழுத்து, சொல், பொருள் அதிகாரங்கள். எழுத்தை உணரல் வேண்டும், எழுத்துக்கள் கூடியும், ஊடியும், செறிந்தும், பிரிந்தும் விளைக்கும் சொல்லைப் புரிந்து கொள்ளல் வேண்டும். முடிவாகச் சொற்கள் சாற்றும் பொருளை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

அதீத உண்மைகள் சொல்லாமற் சொல்லப்படும். அவையிற்றை நினைப்பற நினைத்தல் வேண்டும். சொல்லின் வல்லமையைச் சொல்லவல்லார் ஒரு சிலரே. சொல்லின் பெருமையை முதன் முதலில் பிரகடனம் செய்தது வேதமே.

"ஆதியிலிருந்தது வாக்கு; வாக்கு கடவுளோடு இருந்தது; வாக்கே கடவுள்" என்று விவிலியத்தின் புதிய ஏற்பாடு சாற்றுகின்றது. சிலர், 'அடடா! இதை விஞ்சவல்ல உண்மை உலகில் இல்லை' என்று கூறுகின்றனர். கிறித்துவராய்ப் பிறந்து, சாக்தராய் மலர்ந்தவர் சர் ஜான் உட்ராஃப் என்னும் வெள்ளைக்கார நீதிபதி. ஆர்தர் ஆவ்லான் என்ற பெயரில் இவர் வரைந்த சாக்த தந்திர விளக்கங்கள் பலப்பல. விவிலியம் சாற்றிய உண்மைக்கு ஆதாரம் ரிக் வேதம் என்று எடுத்துச் சொன்னவர் இவர், ரிக் வேதம் கூறுவதாவது:

ப்ரஜா பதிர் வை இதம் ஆசீத்:
தஸ்ய வாக் த்விதீய ஆசித்:
வாக் வை பரமம் ப்ரம்ம:

ப்ரஜா பதிர் வை இதம் ஆசீத் = ஆதியில் இருந்தது பிரமம். தஸ்ய வாக் த்விதீய ஆசீத் = அதோடு இருந்தது வாக்கு. வாக் வை பரமம் ப்ரம்ம = வாக்கே பரம பிரமம்.

ஆகவே வாக் / சொல் என்ன என்பதை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

சொல் எடுத்துச் சூக்குமத்தில் விட்டெறிந்து சுட்டபழம் உதிர்த்து வந்த பொற்காசுப் புலவராம் திருலோக சீதாராம் என்வழிகாட்டி. அவர் கூறிய சூக்கும உண்மைகளைக் கூறுகிறேன்:

"மொழி என்பது மனிதன் பெற்றுள்ள வரங்களில் தலைசிறந்த ஒன்று. தனது எண்ணங்களைப் பிறர்க்குணர்த்தவும் எல்லையற்ற காலமெல்லாம் நிலை நிற்குமாறு செய்யவும் மொழி மனிதனுக்குப் பயன்படுகிறது. சொற்களே எண்ணங்களின் சிறகுகள்.''

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

“பேச்சு, பாட்டு என்ற இருவித இயக்கங்கள் சொற்களுக்கு அமைந்திருக்கின்றன. நேருக்கு நேர் செய்தியை விளக்குவது பேச்சு. இது அறிவின் தெளிவுக்கு ஒரு தோற்றம்.”

“மனித உள்ளத்தில் அறிவுடன் உணர்ச்சியென்பதொன்றும் உண்டல்லவா? சொற்களின் பொருள் எல்லைக்குள் உணர்ச்சிகள் அடங்கி விடுவதில்லை. உணர்ச்சிகளை அப்படியே வெளியிடச் சொற்களுக்கு ஆற்றல் இல்லையாயினும் தங்கள் நடிப்பின் பாவனைகள் மூலமாக அவ்வுணர்ச்சிகளைக் குறிப்பால் உணர்த்தி விடுகின்றன. சொற்களின் இயக்கமே பாட்டு. பாட்டு என்பது உணர்ச்சியின் பண் வடிவம்.”

“சொற்களின் பேச்சு நடையை வசனமென்றும் பாட்டை, அதாவது பண்ணொழுக்கைக் கவிதையென்றும் கொள்ளுகிறோம்.”

“சொற்களின் வரலாறு ஆச்சர்யமானது. அவை நம்மினும் மூத்தவை. நமக்கு முன் இங்கு வாழ வந்துள்ள கோடானுகோடி மக்கள் பன்னெடுங்காலம் அவற்றை உச்சரித்திருக்கிறார்கள். அவர்களுடைய இன்ப துன்பங்கள், ஆசாபாசங்கள், வெற்றி வீழ்ச்சிகள் யாவும் மனோ சக்திகளாகச் சொற்களைச் சுற்றிப் படர்ந்து ஏடுகளாகப் படிந்து அவற்றிற்குப் பொருளும், கனமும், சுவையும், உயிர்ப்பும் ஊட்டியிருக்கின்றன.”

“சொல்லும் பொருளும் ஒன்றுடன் ஒன்று கலந்தும், ஒன்றில் ஒன்று கரந்தும், ஒன்றுள் ஒன்று புதைந்தும், ஒன்றை ஒன்று கவிந்தும் இரண்டறக் கிடக்கின்றன. எனவே பொருள் சொல்லை உமிழும்; சொல் பொருளை விளைக்கும். சொற்களுக்கும் நம்மைப் போன்றே அகப்புற வாழ்க்கைகள் உண்டென்று அறிய வேண்டும்.”

“யோக சமாதியில் ஆழ்ந்துள்ள ரிஷிக் கிழங்கள் போல் ஒவ்வொரு சொல்லும் பொருள் நிறைந்து ததும்புவது.”

“கணந்தொறும் நாம் குதப்புகின்ற எண்ணற்ற சொற்களில் அவற்றின் புறப்பொருள் மட்டுமே பொலிகிறது. ஆழ்ந்த உணர்ச்சிகளைச் சுமந்து வரும் கவிதையில் சொற்களின் அகவாழ்வு மலர்ந்து வருகிறது.”

“சொற்களின் மர்மங்களை அறிந்த கவிஞர்களே சொல்லுக் கடங்காத இன்பங்களைச் சுட்டிக் காட்ட அச்சொற்களுக்குக் கட்டளையிட வல்லவர்கள். அத்தகைய ஆற்றலர்களின் ஆணைக்கு இணங்கி அவர்களின் இதயத் துடிப்புக்கு ஏற்பத் தாளம் தவறாமல் சொற்கள் ஆடி வருகின்ற நடனமே கவிதை.”

திருலோகம் காட்டிய பாதையில் அலகிட்டு ஆர்வ நடை பயின்று வந்த எளியேனுக்கு வாய்த்த அநுபூதி இதுவே. சொற்கள் வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொற்களை உள்ளவாறே புரிந்து கொள்ளுதல், மொழிபெயர்த்தல் ஆகியவை சிரமமான செயல்கள். இதிகாசம் என்ற சொல்லை ஆங்கிலேயர் 'epic' என்று மொழிபெயர்த்துவிட்டனர். இதனால் விளைந்த தவறுகள் பலப்பல. 'நீதி' என்ற சொல்லை அவர்கள் 'justice' என்று மொழிபெயர்த்துவிட்டனர். இதனால் பெருகிய பிழைகள் ஏராளம். நீதி என்ற சொல்லை எவ்வாச்சியங்கொண்டு சொல்லல் ஒல்லும் என்று பஞ்சதந்திரக் கதைகளை மொழிபெயர்த்த ரைடர் (Ryder) கேட்கிறார். அவர் கூறியதாவது: Western civilization must endure a certain shame that no precise equivalent of the term (நீதி) Niti is found in English, French, Latin or Greek. Many words are therefore necessary to explain what Niti is, though the idea, once grasped, is clear, important, and satisfying... The word 'Niti' means roughly "the wise conduct of life."

'நீதியால் வாழமாட்டேன்' என்றார் அப்பர் அடிகள். நம் அடிகள் கூற்றை தியானம் செய்யுங்கள்.

மெல்லிது என்ற சொல்லைக்கூட மொழிபெயர்க்க முடியாது. 'மலரினும் மெல்லிது காமம்' என்றார் வள்ளுவர். மெல்லிது என்றால் tender என்று சொல்லலாமா? 'Tender' தான், ஆனால் இன்னமும்கூட. 'soft' என்னலாமா? soft தான், இன்னமும் கூட. 'subtle' என்னலாமா? subtle தான், ஆனால் இன்னமும் கூட. அட, எப்படித்தான் சொல்லுவது? மெல்லிது, மெல்லிது, மெல்லிது - வள்ளுவன் சொன்ன சொல்லிது, சொல்லிது, சொல்லிது. இப்படிக் கூறியவர் வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன்.

புராணம் என்பதைப் பழமை என்று கொள்ளுகிறோம். இஃதும்கூட உண்மையில் ஓர் பாதிதான். புராணம் என்றால் என்ன? எது பூரணமோ, பரிபூரணமோ, சம்பூர்ணமோ, அதுவே புராணம். ஆகவேதான் சூதன் உரைத்த ஒலிமாலையாம் புராணங்கள் அனைத்தையும் ஓதல் வேண்டும் என்று ஆணை தந்தார் ஞானப் பிள்ளையார்.

'Epic' என்பது பற்றி ஒருசில கூறுவாம். 'Epic' என்று சொன்னாலே மேனாட்டாருக்கு முதற்கண் நினைவுக்கு வருவன ஹோமர் என்னும் கிரேக்கப் புலவர் பாடிய Iliad, Odyssey என்பன. Chapman என்பாரே இவற்றை ஆங்கிலத்தில் வடித்தவர். இவ்வாங்கில ஆக்கத்தைப் படித்து கிறுகிறுப்பு உற்ற கீட்ஸ் என்னும் பெருங்கவி ஒரு பரவசப் பாட்டெடுத்தார். மகாகாவியங்களாம் இவ்விரண்டையும் அலெக்சாண்டர் போப், வில்லியம் கூப்பர், ராபர்ட் ஃபேஜில்ஸ், ராபர்ட் ஃபிட்ஸ் ஜெரால்டு போன்றோர் ஆங்கிலத்தில் கண்டனர். மேலும் இவ்விரண்டில் ஒன்றை மொழிபெயர்த்த பலருள் முக்கியமானவர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாமுவேல் பட்லர், ராபர்ட் கிரேவ்ஸ், ஆலன் மாண்டல் பாம், ஜி.எஸ்.கிர்க், வால்டர் ஹ்யூரிங் ஆவர். இணைந்து மொழிபெயர்த்தவர் ஆண்ட்ரூ என்பவரும் ஓக்லே என்பவரும் ஆவர். இலியட் ஒடிஸி ஆகியவற்றிற்குத் தமிழ் மொழிபெயர்ப்புகள் உள.

வர்ஜில் இலத்தீன் மொழியில் வரைந்த 'Aenied' என்ற காப்பியத்திற்கு ஆங்கிலத்தில் ஃபிட்ஸ்ஜெரால்டு, ரோல்ஃப் ஹம்ஃப்ரீஸ், டேலெவிஸ் என்பவர் ஆங்கில ஆக்கம் கண்டவராவர். வேர்ட்ஸ்வொர்த் கிளாஸிக்ஸ் பதிப்பாளர் ஓர் ஆங்கில மொழிபெயர்ப்பு கொண்டு வந்தனர். மொழிபெயர்ப்பாளர் பெயர் தெரியவில்லை.

தாந்தே வரைந்த இத்தாலி மொழி காவியத்திற்கு (Divine Comedy) பீட்டர்டேல், மெல்வில் ஆண்டர்ஸன், மார்க், மியூஸ், டோரதி ஸேயர்ஸ், எச்.எப்.கேரி, லூயிஸ் பியாங்கொலி போன்றோர் ஆங்கில மொழியாக்கம் கண்டவர்கள். இக்காவியத்திற்கு தமிழில் மொழிபெயர்ப்பு கண்டவர் கவியோகி சுத்தானந்த பாரதியார்.

கதே என்பார் ஜெர்மன் மொழியில் வரைந்த 'Faust' என்னும் காவியம் பேயார்டு டெய்லர், ரண்டால், ஜே.எஸ்.பிளாக்கி போன்றோரால் ஆங்கில ஆக்கம் பெற்றுள்ளது.

பர்சிய மொழியில் பர்தூசி வரைந்த 'ஷா நாமா' ஆங்கிலத்தில் அலெக்சாண்டர் ரோஜர்ஸ் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஐஸ்லண்டு காவியமாகிய The Story of Burnt Njal, சர் ஜார்ஜ் வெப்பி, Webby Dasent என்பவரால் ஆங்கில ஆக்கம் பெற்றுள்ளது.

ஃபின்லாந்து காவியமாகிய 'கலே வலா' இரண்டு தொகுதிகளாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. W.P.கிர்பி இம்மொழிபெயர்ப்பைச் செய்தவர். இதுவும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

காஷ்மீர காவியமான ராஜதரங்கிணி ஃபிரெஞ்சு மொழியில் 1852இல் வெளிவந்துள்ளது. இதை ஆங்கிலத்தில் கண்டவர்கள் ஜோகேஷ் சந்தர் தத், ஆர்.எல்.ஸ்டீன், ஆர்.எஸ்.பண்டிட் என்ற மூவர். ஆர்.எஸ்.பண்டிட், பண்டித நேருவின் உறவினர்.

'Song of Roland' என்ற ஃபிரெஞ்சு காவியம் Howard S.Robertson, டோரதி எல்.ஸேயர்ஸ் ஆகியோர் மூலம் ஆங்கில வடிவம் உற்றது.

'Earquato Tasso' வரைந்த இலத்தீன் காவியம் ஆங்கிலத்தில் Alex Cunningham Robertson என்பவரால் 'The Jerusalem Delivered' என்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தலைப்பில் மொழியாக்கம் பெற்றது. கிரேக்க மொழியில் Ovid வரைந்த காவியம், 'Metamorphosis' என்ற பெயரில் Horace Gregory, Mary Innes என்போரால் ஆங்கிலத்தில் காணப்பட்டது.

மெசபடோமியாவில் தோன்றிய 'கில்கமிஷ்' ஆங்கிலத்தில் ஸேண்டர்ஸ் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது. இது மிகத் தொன்மையான காவியம். இந்நூலைத் தமிழில் தந்திருப்பவர் க.நா.சுப்பிரமணியன், நிக்கோஸ்கஸண்ட் சாக்கீஸ் கிரேக்கத்தில் எழுதிய யுலிஸிஸ் (Ulyssis) காவியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு 33,333 அடிகள் உடையது.

நான் குறிப்பிட்ட நூல்கள் அனைத்தும் என் நூல் நிலையத்தில் உள. இன்னும் எத்தனை எத்தனையோ Epics, Sagas உள்ளன. இவை இதிகாசம் ஆகா.

இதிகாசம் என்பன இராமாயணமும், மகாபாரதமும் ஆம். சைவ இதிகாசம் சிவரஹஸ்யம் என்ற பெயரில் விளங்குகிறது. இதன் ஒன்பதாம் அம்சத்தில் பெரியபுராண மொழிபெயர்ப்பு உண்டு. இதில் ஈடுபட்டுத் திளைத்தவர் ரமண பகவான். பெரியபுராணத்திற்கு மூன்று சமஸ்கிருத மொழிபெயர்ப்புகள் உள. அவை சீனிவாச கவி வரைந்த உபமன்யு பக்தவிலாசம், அகஸ்திய பக்த விலாசம், சிவரகஸ்யத்தில் காணப்படும் ஒன்பதாம் அம்சம் என்ற மூன்றுமே.

'இதிகாசம்' என்பதை ஒரு சொல்லால் அல்லது தொடரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க முடியாது. 'Epic' என்பது ஒரு நீண்ட கதை. அதில் வீரத்துக்கும், காதலுக்கும் இடம் உண்டு. ஆனால் அதை இதிகாசம் என்று கூறமுடியாது.

இதிகாசம் என்பதன் பொருள் "இங்ஙனம் நிகழ்ந்தது" என்பதாகும். நடந்ததை நடந்தபடி காட்டுவது இதிகாசம். இராமபிரான் ஆணையினால் கட்டப்பட்டது சேது. இதை சேதுபந்தனம் என்று குறிப்பர். அப்பர் அடிகள் அருளிய பாடலைக் கேளுங்கள்

செங்கண்மால் சிலைபிடித்துச் சேனையோடுஞ்
சேதுபந்தனஞ்செய்து சென்று புக்குப்
பொங்குபோர் பலசெய்து புகலால் வென்ற
போரரக்கன் நெடுமுடிகள் பொடியாய் வீழ
அங்கொருதன் திருவிரலால் இறையே யூன்றி
யடர்த்தவற்கே அருள்புரிந்த அடிகளிந்நாள்
வங்கமலி கடல்புடைசூழ் மாடவீதி
வலம்புரமே புக்கங்கே மன்னினாரே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல் மிதக்குமா என்று! நாம் ஐயுறலாம். ஆனால் அப்பர் அடிகளைப் பிணைத்த கல் மிதந்தது. 'ஆழி மிசைக் கல் மிதப்பில் அணைந்த பிரான்' என்று அடிகள் போற்றப்படுகிறார். அப்பெருமான் சேது பந்தனத்தைப் பற்றி வரையாது விடுவாரா? இதிகாசம் என்றால் 'இங்ஙனம் நிகழ்ந்தது' என்பது பொருள். நளன் இட்டகல் மிதந்தது. அதை அணைத்து நீலனும், பிறவானரரும் அமைத்த பாலமே சேது. மிதக்கும் கல்லை இன்றும் காணலாம்.

வால்மீகியின் இராமாயணத்தை தேவநாகரி லிபியில் முதன் முதலில் அச்சிட்டவர் ஓர் இத்தாலியர். அவர் பெயர் Goressio. இவர் இராமாயணத்தை இத்தாலிய மொழியிலும் பெயர்த்துள்ளார். வடமொழி இராமாயணத்தையும், இத்தாலிய மொழி இராமாயணத்தையும் நன்கு பயின்றனர் R.T.H.Griffith என்பவர். இவரே ஒருசில செய்யுள்கள் நீங்கலாக அனைத்து இராமாயணத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். காசியில் அமைந்திருந்த சமுஸ்கிருதக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றியவர். இவர் ஓர் ஆங்கிலப் பேராசிரியருமாவர். நான்கு வேதங்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த சான்றோர் இவர். வடமொழி நூல்கள் பலவற்றை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். பாரததேசம் ஓர் புண்ணியபூமி என்று உணர்ந்தவர். ஓய்வு பெற்றபின் தாய்நாட்டுக்குச் செல்லாமல் இந்த புண்ணியபூமியிலேயே தம் உயிர் மறைய வேண்டும் என எண்ணி, கோத்தகிரிக்கு வந்து, அங்கு தங்கி பலப்பல பணிகளை முடித்து இம்மண்ணிலேயே தம் வாழ்க்கையை நிறைவு செய்து கொண்டவர். இவரது கல்லறை இன்றும் கோத்தகிரியில் உள்ளது. அளப்பரிய பெருமை பெற்ற இவர் H.H.Wilson என்பவருடைய சீடர். Wilson 1820இல் இந்தியாவுக்கு வந்தார். வடமொழியில் துறைபோகிய பெரும் புலவர் இவர். காளிதாசரின் நாடகங்களை இவர் மொழிபெயர்த்திருக்கிறார். விஷ்ணு புராணத்தை முற்றுமாகவும் இவர் மொழிபெயர்த்திருக்கிறார். பதினெட்டு புராணங்களின் சாரத்தைத் தொகுத்து ஆங்கிலத்தில் ஒரு புத்தகம் வரைந்தவர் இவரே. வடமொழி – ஆங்கில அகராதியை முதன்முதலில் வெளியிட்டவரும் இவரே.

Kambaramayana - A Study என்ற ஆங்கில நூலை வரைந்தவர் தேசபக்தர் வ.வெ.சு.ஐயர். பெல்லாரியில் சிறையில் இருந்தபடியே இந்நூலை அவர் வரைந்தார். இவர் Griffith இன் மொழிபெயர்ப்பைப் பெரிதும் போற்றுகிறார். Griffith அவர்கள் வால்மீகி இராமாயணத்தை ஆங்கிலச் சந்தத்தில் கண்டவர். மகாபாரதத்தையும் இவர் முறையாகப் பயின்றவர். இவர் வாழ்ந்த காலத்தில் பாரதநாட்டைப் பற்றி ஆங்கிலப் பாதிரிமார் பலவித தவறான கருத்துக்களைப் பரப்பி வந்திருக்கிறார்கள். இதனுடைய இலேசான தாக்கத்திற்கு Griffith ஆளாகி இருக்கிறார். ஆகவே இவர் கருத்துக்களில் சில

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிழைகள் உள. அவற்றைப் பெரிதுபடுத்த வேண்டியதில்லை. உண்மையில் இந்திய இலக்கியத்தில் மிகவும் ஈடுபாடு உடையவராக Griffith விளங்கினார். இராமாயணத்தில் உள்ள ஓரிரு செய்திகள் வெள்ளையரால் ஏற்கப்படமாட்டா என்று கருதிய இவர் ஒருசில இராமாயண ஸ்லோகங்களை மொழிபெயர்க்காமல் விட்டுவிட்டார். இதற்கான காரணத்தை ஓர் அடிக்குறிப்பில் தந்தும் இருக்கிறார். இவரைப் போலவே, திருவாசகத்தை மொழிபெயர்த்த புலவர் போப் ஐயரும் சிற்சில அடிகளை மொழிபெயர்க்கவில்லை.

இராமாயணத்தில் இரண்டு வகைப் பாடங்கள் உண்டு. ஒன்று காசிநகர்ப் பாடம். மற்றொன்று வங்காள தேசப் பாடம். Goressio வங்கநாட்டுப் பாடத்தையே பின்பற்றனார், அச்சிட்டார், மொழிபெயர்த்தார். Goressio-வின் பணிக்கு உதவியவர் சார்டீனியா நாட்டு மன்னரான சார்லஸ் ஆல்பர்ட் ஆவார். William Von, S.Schlegel இராமாயணத்தின் முதல் இரண்டு காண்டங்களையும், மூன்றாம் காண்டத்தின் செம்பாதிப் பகுதியையும் அச்சில் பதித்து இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். Hippolype Fauche என்பவர் Goressio இத்தாலிய மொழிபெயர்ப்பை அடியொற்றி பிரெஞ்சு மொழியில் இராமாயணத்தை மொழிபெயர்த்தார். காசிநகர்ப் பாடமே சிறந்தது என்று Griffith எண்ணி அதையே தம்முடைய மொழிபெயர்ப்புக்கு ஆதாரமாகக் கொண்டார். Griffithஇன் மொழிபெயர்ப்பை விஞ்சும் வகையில் எந்த ஆங்கில மொழிபெயர்ப்பும் அமையவில்லை.

வால்மீகி இராமாயணம், கி.மு.1100இல் தோன்றியதென்றும், கி.மு.2029இல் தோன்றியதென்றும் பலவகையாகக் கூறுகின்றனர். இப்போது உள்ள ஆராய்ச்சியின்படி இவ்விராமாயணம் 5000 ஆண்டுகளுக்கு முன்பே வெளியான ஒன்று என்பதே.

வால்மீகியை கிரிஃபித் திரிகால ஞானி என்று கூறுகிறார். அவர் ஒரு தபஸ்வி என்பதைக் காட்ட, "Saint Valmikhi, one of the holy company of those whose eye could pierce the present, and the past, and the to-come," who attained the science of secret things by,

> "........ DREADFUL ABSTINENCE
> AND CONQUERING PENANCE OF THE
> MUTINOUS FLESH,
> DEEP CONTEMPLATION, AND UNWEARIED STUDY,
> IN YEARS OUTSTRETCHED BEYOND
> THE DATE OF MAN."

கிரிஃபித் அவர்கள் மகாபாரதம் பற்றிக் கூறுவதை இப்போது கூறுகிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"This monument is the Maha Bharata. I bow before this collosal epic...." (இந்த பிரம்மாண்டமான இதிகாசத்தின் முன்னர் பணிந்து நிற்கிறேன்).

ஏன் அப்படி அவர் கூறினார்? இராமாயணம் 24,000 ஸ்லோகங்கள் கொண்டது. அதன் அளவு எவ்வளவு பெரியது? ஹோமர் வரைந்த இலியட், ஒடிஸி என்ற இரண்டின் மொத்த அளவைவிட இராமாயணம் இருமடங்கு பெரியது. மகாபாரதம் ஒரு இலட்சம் ஸ்லோகங்கள் உடையது. அதாவது இராமாயணத்தைப் போல் நான்கு மடங்கு பெரியது. வேறு எந்த நாட்டில் இவ்வளவு பெரிய நூல் உண்டு?

பாரத நாடு பழம்பெரும் நாடு;
நீரதன் புதல்வர்; இந்நினைவு அகற்றாதீர்

என்றார் மகாகவி பாரதியார்.

மகாபாரதம் ஆங்கில ஆக்கம் பெற்ற வரலாறு சுவையானது. ஈசுவர சந்திர வித்யாசாகர் கங்கூலி அவர்களே பாரதத்தை மொழிபெயர்க்க வல்லவர் என்றார். கங்கூலி தம் பெயரை வெளியிட சம்மதிக்கவில்லை. வெளியிட்டவர் Ray. ஏழாம் தொகுதி வெளியானதும் அவர் மறைவு நிகழ்ந்தது. அதன் பின்னர் அவர் மனைவியின் பெருமுயற்சியால் மொழிபெயர்ப்பு அச்சேறியது. இம்மொழிபெயர்ப்பு Ray மொழிபெயர்ப்பு என்றே கொள்ளப்பட்டது. இப்போது 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டு உள்ளது. இம்மொழிபெயர்ப்பு வங்காள பாடத்தைப் பின்பற்றியது. தமிழில் வெளிவந்துள்ள பாரதம் கும்பகோண பாடத்தைப் பின்பற்றி வந்தது. இதன் பெருமை பற்றிப் பின்னால் கூறுவேன்.

வில்லிபாரதம், பாலபாரதம் என்ற நூலை ஓரளவு பின்பற்றி வரையப்பட்டது. வில்லிபாரதத்தில் 4000க்கு மேற்பட்ட பாடல்கள் உள. இவற்றோடு ஏறத்தாழ 6000 பாடல்களை இயற்றிச் சேர்த்து, நல்லாப்பிள்ளை வெளியிட்ட நூலே நல்லாப்பிள்ளை பாரதம்.

இராமாயண, பாரதங்கள் சிவனார் பெருமையை பரக்கப் பேசுவன. கம்பர் பிறப்பால் சைவர். இராமனால் ஈர்க்கப்பட்டவர். அவர் பாடிய இராமாயணத்தில் சற்றேறக்குறைய 400 இடங்களில் சிவபெருமானைப் போற்றியுள்ளார். சிவபெருமானே தமிழை நமக்கு வழங்கியவர். அதற்கு இலக்கணம் தந்தவர் அகத்தியர். தமிழ்த்தாய் கூறுவதாக பாரதி அறிவிப்பதைக் கேட்போம்:

ஆதிசிவன் பெற்றுவிட்டான் – என்னை
ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்.

கவனியுங்கள். தமிழுக்கு நிறைமேவும் இலக்கணம் வகுத்தவர் அகத்தியர், இலக்கணம் இல்லா பல மொழிகள் இவ்வுலகத்தில் உள. ஆங்கில இலக்கணம் எப்போது தோன்றியது? சாசரும், ஸ்பென்சரும், ஷேக்ஸ்பியரும், மில்டனும், ஜான்சனும் ஆங்கில இலக்கியப் பௌவத்தில் வளைய வந்த திமிங்கிலங்களும், திமிங்கிலகிலங்களும் ஆவர். இவர்கள் காலத்தில் ஆங்கிலத்திற்கு முறையான இலக்கணம் இல்லை. இலத்தீன், கிரேக்கமொழி இலக்கணங்களைப் பின்பற்றியே ஆங்கில நூல்கள் எழுந்தன. இக்குறையை ஓரளவு நீக்க ஜான்மில்டன் அவர்கள் ஒரு சிறிய இலக்கண நூலை ஆங்கிலத்திற்கு வரைந்தார். ஆனால் இந்த நூல் இலத்தீன் மொழியில் அமைக்கப்பட்டது. ஆங்கிலத்திற்குப் பேரகராதி கண்ட டாக்டர் ஜான்சன் தம்முடைய அகராதியின் முற்பகுதியில் சில பக்கங்களில் ஆங்கிலத்திற்கான இலக்கணம் வரைந்து சேர்த்தார். மண்ணிடை இலக்கண வரம்பிலா நூல்களைப் பற்றி திருவிளையாடற்புராணம் சாற்றுகிறது.

இராகவன் அகத்தியரை தரிசிக்கச் செல்லுகிறான். இந்த இடத்தில் அகத்தியர் பற்றிக் கம்பர் கூறுவதாவது:

மேகநெடு மாலைதவழ் விந்தமெனும் விண்தோய்
நாகமது நாகமுற நாகமென நின்றான்.

அகத்தியர் “தழல்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ்” தந்தவர் என்கிறார் கம்பர். மேலும், வந்த காகுத்தனை நோக்கி அகத்தியர்,

நன்குவர வென்று பலநல்லுரை பகர்ந்தான்
என்றுமுள தென்றமிழ் இயம்பியிசை கொண்டான்.

இதிகாசமாம் இராமாயணம் பயில்வதால் நாம் பெறக்கூடிய பயன் என்ன?

நாடிய பொருள் கைகூடும்; ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரிஅம் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை
சூடிய சிலை இராமன் தோள்வலி கூறுவோர்க்கே.

இராமாயணப் பெருமையை நாம் அறிந்து துய்க்க இவ்வொரு பாடலே போதும்.

நாடிய பொருள் கைகூடும்: முதன் முதலில் இராமனை நாடி வந்தவர் யார்? அவர்தாம் கோசிக முனிவராகிய விசுவாமித்திரர். தாம் வேட்கும் பொருள் எங்கு பெறமுடியும் என்பது பற்றி தசரதனிடம் அவர் கூறியதாவது:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்னனைய முனிவரும் இமையவரும்
இடையூறு ஒன்று உடையரானால்
பன்னகமும் நகு வெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதுமபீடத்து
அந்நகரும் கற்பகநாட்டு அணிநகரும்
மணிமாட அயோத்தி என்னும்
பொன்னகரும் அல்லாது புகனுண்டோ
இகல் கடந்த புலவு வேலோய்

மேலும் அவர் கூறியதாவது: "என் தவவேள்வி நிருதரால் தடையுண்டு போகாமல் காத்தற்கு, நீ நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடு" என்றார்.

பிள்ளைமேல் வைத்த பாசத்தால் மகனைப் பிரிய மறுத்தான் தயரதன். அவன் சொற்கேட்டு வெகுண்ட முனிவர்,

அஹம்வேத்மி மஹாத்மானம் ராமம் ஸத்ய பராக்ர்மம்|
வஸிஸ்டோபி S மயாதேஜாயே இமே தபஸி ஸ்திதா:||

அஹம் = நானே, ராமம் = ஸ்ரீ ராமனை, மஹாத்மானம் = மகாத்மாவாகவும், ஸத்ய பராக்ரமம் = சத்திய பராக்கிரமனாகவும், வேத்மி = அறிவேன்.

மஹாதேஜா = மிகுந்த தேஜஸை உடைய, வஸிஸ்டோபி= வசிஷ்ட மகரிஷியும் (வேத்மி = அறிவர்).

இமே = இங்கே இருக்கின்றவர்களாய், தபஸி ஸ்திதா:யே = தபஸினால் நிலைநிற்கிறவர்களான சில மகரிஷிகள் உண்டே (தேபி விதந்தி = அவர்களும் அறிவார்கள்).

விஸ்வாமித்திரர் கூறியதற்கு வைணவ உரைகாரர் அளிக்கும் விளக்கத்தைப் பார்ப்போம்:

"தசரதா! நீ புறக்கண்ணால் காண்பவன். முனிவனாகிய நான் அகக் கண்ணால் காண்பவன். ஆகவே, நானே இராமனை அறிவேன். நீ பலரால் வழிபடப்படுகின்ற அரசன். நான் பல குருமார்களை வழிபட்டு அறிவுபெற்றவன். கையில் குசத்தையும், தருப்பைப் புல்லையும் பிடிக்கும் முனிவனான நான் அறிவேன். கையில் வில்லைப் பிடிக்கும் நீ அறியமாட்டாய். தலையிலே முடிதரிக்கும் நீ அறியமாட்டாய். சத்துவ குணத்தைப் பேணும் நான் அறிவேன்; ராஜஸ குணத்தைப் பேணும் நீ அறியாய். குருவின் கீழே தாழ்வான ஆசனத்திலிருந்து உபதேசம் பெற்ற நான் அறிவேன்;

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிம்மாசனத்தில் செம்மாந்து, இறுமாந்து அமரும் நீ அறியாய். யோக வழி அறியும் நான் அறிவேன்; போக அறிவு அறியும் நீ அறியாய். தர்மமோக்ஷ புருஷார்த்தங்கள் அறிந்த நானறிவேன்; அர்த்த, காம புருஷார்த்தங்களை வேட்கும் நீ அறியமாட்டாய். அனைத்துப் பொருள்களின் ஸ்வபாவத்தையும் ஸ்வரூபத்தையும் அறிந்த நான் அறிவேன்; அவையிற்றை அறியாத நீ அறியாய். ஸத் சம்பிராதயத்தில் அடங்கி நிற்கும் நான் அறிவேன்; அனைத்தையும் அடக்கி ஆளும் நீ அறியாய். பரமாத்ம ஸ்வரூபம் கைவரப் பெற்ற நான் அறிவேன்; ஜீவாத்ம ஸ்வரூபம் கூட அறியாத நீ அறியமாட்டாய். ரக்ஷகனான ராமனின் சீர்த்தியை அறிந்தவன் நான். அன்னோனின் கீர்த்தியைக்கூட அறியாத நீ அவனை அறியமாட்டாய்."

மேலும், வசிஷ்டரும், அவர் போன்ற மகாதபஸ்விகளும் அறிவர்.

நரைதலையும், முசியும் மேவாயும், ஒட்டின கதுப்பும், திரங்கின தோளும், உலர்ந்த வடிவும், எண்ணுகின்ற விரலும், ஜபிக்கின்ற வாயும் வழிகிற கண்ணீரும், ஆறாத பகவத் அநுசந்தானமும் உடைய ரிஷிகள் அறிவர். மன்னனான நீ அந்நிலையில் இல்லை.

அரச உருவும், வைதிகத் திருவும் படைத்தவன் இராமன். சுந்தரமூர்த்தி நாயனாரை தெய்வச் சேக்கிழார், "மன்னர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க" நிற்பவர் என்கிறார்.

முதலில் இராமனைத் தர மறுத்த தசரதன் அவனை இலக்குவனோடு அனுப்பி வைத்தான். கோசிக முனிவர் யாகம் நிறைவேறியது. அவருக்கு நாடிய பொருள் கைகூடிற்று.

கோசிகர் ஏன் வந்தார்? க்ஷத்திரியனாகப் பிறந்த அவர் ராஜசம் நிரம்பியவராக இருந்தார். தவசித்தியைப் பெற்றிருந்தும் அதை அவ்வப்போதும் இழந்து வந்தார். சாத்வீகரான வசிட்டருடன் போட்டி போட்டார். இராமனின் முன்னோடியாகிய அரிச்சந்திரனையும் அவன் மனைவி சந்திரமதியையும் வேண்டுமென்றே பிரித்து வைத்து சூரியகுலத்திற்கு கேடுசூழ்ந்தார். பிரமரிஷியாக மலர்ந்த கோசிகர் பண்டு தாம் இயற்றிய பாவத்திற்குக் கழுவாய் தேடியே அயோத்திக்கு வந்தார். தாம் அழைத்து வந்த இராமனை அவன் தேவியாகிய சீதையுடன் இணைத்து வைத்தார். இதன் பிறகு அவர் இராமாயணத்தில் எங்கும் காணப்படவே இல்லை.

ஞானமும் புகழும் உண்டாம்: கல்வியே ஞானத்தின் வாயில். குருகுலவாசக் கல்விக்கு இணையான கல்வி எங்கும் இல்லை. இக்கல்வியை வெள்ளையர் ஒழித்துவிட்டனர். நம் நாகரிகப் பயிரின் வேரிலே வெந்நீர் ஊற்றியவர்கள் இவ்வெள்ளையர்கள். வேதம் பொருளற்றது என்பதை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்தாபிக்கவே மாக்ஸ்முல்லரை வேதப்பதிப்பிலும், மொழி பெயர்ப்பிலும் ஈடுபடுத்தினர். மாக்ஸ்முல்லர் புத்திமான்; கல்விமான். ஆனால் வயிற்றுப் பிழைப்புக்காக நாசவேலைக்குத் துணைபோனவர். இவர் உண்மை நிலையை விளக்கி தமிழில் ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறோம்.

இராமனும், கண்ணனும் குருகுல வாசம் செய்தவர்கள். பாண்டவரும், ஏன், கௌரவரும் குருகுலவாசம் செய்தவர்கள். கர்ணன் பொய்கூறி பரசுராமரிடம் குருகுல வாசம் செயதான். அதனால் அவன் கற்ற வித்தை தக்க சமயத்தில் அவனுக்கு உதவவில்லை. தமிழ்த் தாத்தா உ.வே.சா., குருகுல வாசத்தின் மூலம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் ஆசியைப் பெற்றவர்.

இராமன் அவதரித்த அயோத்தி கல்விக்குப் பெயர் போனது. கல்வியில் கரையிலாத காஞ்சி மாநகர் போன்றது. காஞ்சியின் பெருமையை அப்பர் அடிகளும் ஹுவான் சுவாங்கும் விதந்து போற்றியுள்ளனர். அயோத்தியில் கற்பிக்கப்பட்ட கல்வி பற்றி கம்பர் கூறுவது:

“ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து, எண் இல் கேள்வி ஆகம் முதல் திண் பணை போக்கி, அருந் தவத்தின் சாகம் தழைத்து, அன்பு அரும்பி, தருமம் மலர்ந்து, போகங் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே.”

இப்பாடலைப் பேரறிஞர் மு.இராகவையங்கார் விளக்கியுள்ளார்.

“இப்பாடல் ‘தசரத ராம’ இராச்சியத்தின் உத்தமமான நிலையைக் கம்பர் தம் மனோரதப்படி சித்திரித்ததாகும். அப்பேரரசை ஒரு மகாதருவாகக் கொண்டு மலரும் நிலையில், அத்தருவின் முளையாக விளங்குவது அடிப்படைக் கல்வியே என்பதனையும் அவ்வடிப்படைக் கல்வியினின்றும் மனப்பண்பாடு தொடங்குகிறது என்பதனையும் குறிப்பாக ‘ஏகம் முதற்கல்வி’ என்றார். முளைத்த அக்கல்வி, நீண்டு வளர்ந்த தன்மையை ‘முளைத்து எழுந்து’ என்பதனால் குறிப்பிட்டார். அடிப்படைக் கல்வியினின்றும் உயர்தரக் கல்வி முறையே வளர்ந்து ஏறிய நிலையைக் காட்டுவதாகும். கல்வி வளர்ந்து ஏறினும், கேள்வியும், பயிற்சியும் அக்கல்விக்கு இன்றியமையாதன ஆகும். அதனால், ‘எண்ணில் கேள்வி’ ‘ஆகம் முதல் திண் பணை போக்கி’ என்று கூறினார். அஃதாவது – அடிமரத்தினின்று எழுந்த பெரும் கிளைகளே அக்கேள்வி என்றபடி. கேள்வி என்பது கற்ற கல்வியை அனுபவ ஞானத்தில் வளர்ப்பதாகும். கற்கும் நிலையில்,

ஆசான் உரைத்த தமைவரக் கொளினும்
காற்கூறல்லது பற்றல னாகும்
அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்

என்று அனுபவ ஞானத்தால் புலமை நிரம்புவதை நன்னூலாரும் விளக்குதல் காணலாம். இனி, கல்வி, கேள்விகள் நிரம்பினும் மக்கட் பண்பு என்பது நிரம்பாவிடத்துப் பயன்படாதாகலின், 'அருந்தவத்தின் சாகம் தழைத்து' என்றார். தவமாவது, ஐம்புலன் அடக்கல், தனக்கு உற்ற துன்பம் தாங்குதல், அருள் உடைமை எனவாம்... இவ்வாறு கல்வி கேள்விகளுடன் மனத்தை ஒறுத்து நிறுத்தலாகிய தவத்தை அம்மகா விருட்சத்தின் தழைகளாகக் கொண்டு 'அருந்தவத்தின் சாகம் தழைத்து' என்றார்.

இப்படி ஒவ்வொன்றையும் விளக்கிக் கொண்டே போகலாம். தருமாதிபத்திய ஆட்சியே ஆட்சி. ஆத்ம குணங்களை வளர்க்காத ஜனாதிபத்தியம், ஏகாதிபத்யம், சிறக்கா.

கல்வி என்றால் என்ன? "புலன்கொளுவ, மனம் முகிழ்த்த சுருள் நீக்கி மலர்விக்கும் கலை" என்று அருளுகிறார் தெய்வச் சேக்கிழார். மாணாக்கனுக்கு இல்லாத அறிவை ஆசான் அளிக்க முடியாது. இல்லது தோன்றாது. மாணவனின் அறிவு சுருண்டு கிடக்கும். சுருள் நீக்குதலே ஆசானின் பணி.

* Dr. Johnson கூற்று: To recall vagrant inattention (பட்டிமேயும் மாணாக்கன் மனத்தின் போக்கை மாற்றிச் சரி செய்தல்)
* To stimulate sluggish indifference (சோம்பிக் கிடந்து உறங்கும் உதாசீனத்தை உசுப்பி விடுதல்).
* To rectify absurd misapprehension (தவறாகப் புரிந்து கொண்டதைச் செப்பம் செய்தல்).
* Education - Educere - To draw out (சுருள் நீக்கல்).

கல்வியால் ஞானம் உண்டாகும். அப்படி உண்டாகும் ஞானம் பதிஞானம் என்று கொள்ளலாகாது. இராமாயணத்தில் பதி அறிவு பெற்றவர் பற்றியும் அருட்செய்திகள் வருகின்றன. ஆரண்ய காண்டத் தொடக்கமே பதிஞானப் பெருமையைப் பறைசாற்றுகிறது. கொடுங்கொடியோனான விராதன் வருகிறான். அவனைக் கம்பர் வருணிக்கும் அழகே அலாதியானது. கம்பர் கூறும் விராதனை ஒரு சித்திரத்தில் தீட்டவே முடியாது.

தங்கு திண்கரிய காளிமை தழைந்து தவழப்
பொங்கு வெங்கொடுமை என்பது புழுங்கி எழ, மா
மங்கு பாதகம் விடம் கனல் வயங்கு திமிரக்
கங்குல் பூசி வருகின்ற கலிகாலம் எனவே

வந்தான் விராதன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'Miltonic Vague' என்றோர் உத்தி ஆங்கில இலக்கியத்தில் கேட்கப்படும். மாமுனி மில்டனார் படைத்த மாகாவியமாகிய துறக்க நீக்கத்தில் முதுசாத்தன் உருவுடன்கூடிய பாவத்தையும், சாக்காட்டையும் சந்திக்கிறான். பாவத்தின் பக்கலில் நிற்பது சாவு.

"The other Shape,
If shape it might be called, that shape had none
Distinguishable in member, joint or limb
Or substance might be called that shadow
seemed,
For each seemed either; black it stood as Night,
Fierce as ten Furies, terrible as Hell,
And shook a dreadful dart: what seemed his
head
The likeness of a kingly crown had on."

விராதன் இராமனால் அழிக்கப்படுகிறான். பூத உடல் நீத்து ஞான மயமான விராதன் கூறுகிறான்:

"இப்பிறவிக் கடல் கடந்தேன்; இனிப் பிறவேன்." "என் இருவினையும் உன் திருவடியால் துடைத்தாய்." மேலும் அவன் கூறுவதாவது: "கள்ள மாய வாழ்வெலாம் விள்ள வீசு தாள்" என்று தான் பெற்ற பதிஞானம் பற்றி பகருகின்றான். பதிஞானம் என்பது திருவடி ஞானமே. விராதன் துதியில் ஒரு பாடல் பார்ப்போம்:

தாய்தன்னை அறியாத கன்றில்லை; தன் கன்றை
ஆயும் அறியும்; உலகின் தாய் ஆகி ஐய
நீ அறிதி எப்பொருளும்; அவை உன்னை நிலையறியா
மாயை இது என்கொலோ! வாராதே வரவல்லாய்!

விலங்கினத்தில் தாயை அறியாத கன்றில்லை. ஆனால் மானுட வாழ்வில் தாயை அறியாத மக்கள் மண்டிக் கிடக்கின்றனர். தெய்வத்தைப் பழித்தலும், தெழித்தலும், இழித்தலும் இன்று நாமமது தமிழரென வாழ்வார் இயல்பாகி விட்டது. இது விரைவில் மாறும், உண்மை ஞானம் சிவஞானம் எனும் பதிஞானம். இதைப் பெறாதவரையில் தெளிவு தோன்றாது.

வாலியும் அங்கதனும் இந்திரனின் அம்சம். இராமனுக்குத் துணைபுரியவே இவர்கள் தோன்றினர். ஆனால் வாலி இராவணனோடு நட்புக் கொண்டான். அவன் செய்தது பச்சைத் துரோகம். அவனை அகற்ற வேண்டியது இராமனுக்குக் கடனாயிற்று. வாலிமேல் வாளி எய்து அவனை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உயிர் துறக்குமாறு செய்தான். இறப்பதற்கு முன் வாலிக்குக் காட்சி தந்தான் காகுத்தன். அவனோடு பலபடவாதிட்டான். வாலியின் அவமான கூற்றுக்களை அமைதியோடு கேட்டான் இராமன். முடிவில் தன்னை வாலி அறிந்து கொள்ளுமாறு அவனுக்குப் பதிஞானம் அருளினான். அவ்வளவில் வாலி தெளிவு கூடினான். தான் செய்தன பிழைகள் என்று உணர்ந்தான். சிறியன சிந்தியாதான் என்ற நிலை உற்று 'தீயன பொறுத்தி' என்று ராகவனை வேண்டி,

> நாயேன் கூறிய மனத்துக் கொள்ளேல்
> அரந்தை வெம்பிறவி என்நோய்க்கு அருமருந்தனைய ஐயா
> வரந்தரும் வள்ளால்! ஒன்று கேள்

என்றான்.

> ஏவுகூர் வாளியால் எய்து நாய் அடியேன்
> ஆவிபோம் வேலைவாய் அறிவுதந்து அருளினாய்;
> மூவர் நீ, முதல்வன் நீ, முற்றும் நீ, மற்றும் நீ,
> பாவம் நீ, தருமம் நீ, பகையும் நீ, உறவும் நீ.

என்று இராமனைப் பரவினான். மேலும், பழிபுரிந்து வினைவிளைவால் சாக இருந்த தனக்கு ஆவிபோம் வேலைவாய் அறிவுதந்து அருளிய பரமனைத் தான் எங்ஙனம் போற்ற முடியும் என்று சொல்லித் துதித்தான்.

இராம உபாசனை புகழ் கூட்டுவிக்கும். வடமொழியில் இராம கதையை வடித்துத்தந்த வால்மீகி, ஆதிகவி என்று போற்றப்படுகிறார். வடமொழிக் கவிஞர்கள் அனைவரும் இவரைத் தெய்வ மாக்கவி என்றே போற்றுவர். தமிழில் கம்பர் இராமகாதையைப் பாடி நிலைத்த புகழுக்கு ஆளானார். 'கல்வியிற் பெரியர் கம்பர்' என்ற விருதும் இவர் பெற்றுள்ளார். விரஜ பாஷையில் துளஸிதாசர் இராமாயணம் பாடினார். இதை ஓதியே காந்தியடிகள் மிகச்சிறந்த ராமபக்தரானார். உயிர் விடும் போதும் 'ராமா, ராமா' என்று கூறி உயிர்நீத்தார். பரம காளி பக்தரான இராமகிருஷ்ண பரமஹம்ஸர், திருநாமத்தின் பெருமையை விளக்க வந்தபோது இராமாயணத்திலிருந்தே உதாரணம் காட்டினார். அவர் கூறியதாவது: நாதனைவிட நாமத்திற்குக் கூடுதலான பெருமை உண்டு. கடற்கரைக்கு வந்த அனுமன் இராமநாமத்தைக் கூறியபடியே கடலைத் தாண்டிவிட்டான். ஆனால் இராமபிரான் அங்கு வந்தபோது அணைகட்டியே கடலைக் கடக்க முடிந்தது.

இராமாயணத்தில் தோய்ந்து இராமாயணப் பேருரைகளை ஆங்கிலத்தில் நிகழ்த்திய ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரியார் அகில உலகப் புகழ் பெற்றார். 'கம்பர் தரும் காட்சி' வழங்கிய சிதம்பரநாத முதலியார் 'இரசிகமணி' என்று போற்றப்படுகிறார். கம்பர் அடிப்பொடியின் பெருமையை இந்த சேக்கிழார் அடிப்பொடி எப்படி முறையாக எடுத்துக் கூறமுடியும்?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திவ்யப் பிரபந்தப் பாசுரச் சொற்களையும், தொடர்களையும் வைத்து ஒரே வாக்கியத்தில் இராமாயணம் முழுதும் வரைந்தவர் பெரியவாச்சான் பிள்ளை,

திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழ,
நலமந்த மில்லதோர் நாட்டில்,
அந்தமில் பேரின்பத் தடியரோடு
ஏழுலகுந் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும்
அயர்வறு மமரர்க ளதிபதியான
அணியார் பொழில்சூழ் அரங்கநகர் அப்பன்,
அலைநீர்க் கடலுள் அழுந்தும் நாவாய் போல்
ஆவாரார் துணை என்று துளங்கும் நல்லமரர்
துயர்தீர, வல்லரக்கர் வாழிலங்கை பாழ்படுக்க
வெண்ணி, மண்ணுலகத்தோ ருய்ய,
அயோத்தி யென்னும் அணிநகரத்து
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்,
கௌசலைதன்மதலையாய்த் தயரதன்தன் மகனாய்த் தோன்றி
குணந்திகழ கொண்டலாய் மந்திரங்கொள்
மறைமுனிவன் வேள்விகாக்க நடந்து,
வந்து எதிர்ந்த தாடகைதன் உரத்தைக் கீறி,
வல்லரக்கர் உயிருண்டு, கல்லைப் பெண்ணாக்கி,
காரார் திண்சிலையிறுத்து மைதிலியை மணம்புணர்ந்து
இருபத்தொருகால் அரசுகளைகட்ட மழுவாளி
வெவ்வரி நிற்சிலை வாங்கி வென்றிகொண்டு,
அவன் தவத்தை முற்றுஞ் செற்று,
அம்பொனெடு மணிமாட அயோத்தி எய்தி,
அரியணைமேல் மன்னனாவா னிற்க-

என்று பாலகாண்டத்தை முடித்து அதுபோலவே அயோத்திய, ஆரணிய, கிஷ்கிந்த, சுந்தர, காண்டச் செய்திகளைச் சுருக்கி வரைந்து யுத்த காண்டத்தில் பிரவேசித்து, பல செய்திகளைக் கூறி,

அங்கணெடு மதில் புடைசூழ் அயோத்தி எய்தி,
நன்னீராடிப் பொங்கிளவாடை அரையிற்சாத்தி,
திருச்செய்ய முடியும் ஆரமும் குழையும்
முதலா மேதகு பல்கல னணிந்து,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சூட்டு நன் மாலைகளணிந்து,
பரதனும் தம்பி சத்துருக்கனனும் இலக்குமனும்
இரவு நன்பகலும் ஆட்செய்ய,
வடிவிணையில்லாச் சங்குதங்கு முன்கைநங்கை
மலர்க்குழலாள் சீதையுந் தானும்
கோப்புடைய சீரிய சிங்காசனத்திருந்து,
ஏழுலகுந் தனிக்கோல் செல்ல வாழ்வித்தருளினார்

என்று கூறி தம்முடைய பாசுரப்படி ராமாயணத்தைத் தலைக்கட்டினார்.

முழுமையாகவோ, பகுதியாகவோ பலமொழிகளில் மூவாயிரம் என்ற கணக்கைத் தாண்டிய இராமாயணங்கள் பற்றி A.K.ராமானுஜன் வரைந்திருக்கும் கட்டுரை அற்புதமானது.

வேதத்தில் வழங்கிய நாமங்களையே இராமனும், சீதையும் பெற்றார்கள்.

'தசரத ஜாதகம்' என்ற இராமாயணம் பாலிமொழியில் கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் எழுந்தது. இது பௌத்த ராமாயணம். இதற்கும் முன்பே பாலிமொழியில் அனாமகம் ஜாதகம் என்ற பாலிமொழி ராமாயணம் தோன்றியது. கி.மு. முதல் நூற்றாண்டில் தசரத கதானம் என்று ஒரு ராமாயணம் பாலிமொழியில் வரையப்பட்டது.

சமணத்தில் இரு ராமாயணங்கள் உள. விமலசூரி என்பார் 'பௌம சரியூ' என்ற பெயரில் கி.பி.நான்காம் நூற்றாண்டில் பிராகிருத மொழியில் இராமாயணம் ஒன்றை வரைந்துள்ளார். இதே மொழியில் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் சங்கநாதர், வாசுதேவ ஹிண்டி என்னும் பெயரில் ஓர் இராமாயணம் வரைந்துள்ளார்.

கி.பி.9 ஆம் நூற்றாண்டில் திபேத்திய மொழியில் துன் ஹுவாங் என்ற பெயரில் ஓர் இராமாயணம் எழுந்தது.

கி.பி. 10 அல்லது 11 ஆம் நூற்றாண்டில் யோகீஸ்வரர் என்பவர் பழைய ஜாவானிய மொழியில் ஓர் இராமாயணம் வரைந்துள்ளார்.

கி.பி.10 ஆம் நூற்றாண்டிலேயே ஜப்பானிய மொழியில் ஓர் இராமாயணம் எழுந்தது. அதன் பெயர் 'சம்போஎக டோபா'. நூலாசிரியர் பெயர் மினமோ டோனோ.

தெலுங்கில் பல இராமாயணங்கள் உள.

அசாமியர் இராமாயணம் மாதவ கந்தலியால் இயற்றப்பட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மலையாள மொழியில் இராம பணிக்கர் கண்ணச்ச ராமாயணம் பாடியவர். இந்நூல் 14 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. குஞ்சத்து எழுத்தச்சன் 18 ஆம் நூற்றாண்டில் 'அத்யாத்ம ராமாயணம்' என்ற தலைப்பில் மலையாளத்தில் பாடினார்.

கிருத்தி வாசு வங்காள மொழியில் ஓர் இராமாயணம் இயற்றினார்.

கன்னடமொழியில் குமார வால்மீகி என்னும் நரஹரி, 'தொரவெ இராமாயணம்' பாடினார். கன்னடத்தில் சென்ற நூற்றாண்டில் எழுந்த குவெம்புவின் இராமாயணம் மிகப் பிரசித்தமானது.

மராத்தி மொழியில் பாவார்த்த ராமாயணம் ஏகநாதரால் இயற்றப்பட்டது.

ஒரியா மொழியில் பலராமதாசர் இயற்றிய ராமாயணத்தின் பெயர் ஜகன்மோகன் இராமாயணம்.

கி.பி.16 ஆம் நூற்றாண்டில் அப்துல் காதர் என்பார் பாரசீக மொழியில் ஓர் இராமாயணம் இயற்றினார்.

மலாய் மொழியில் 'ஹிகாயாத் செரி ராமா' என்ற பெயரில் ஓர் இராமாயணம் உண்டு.

'ராமவத்து' என்ற பர்மிய ராமாயணம் கி.பி.17 ஆம் நூற்றாண்டில் எழுந்தது.

'மகாரடிய லாவனா' என்பது ஃபிலிப்பைன்ஸ் இராமாயணம்.

'ராம்கியான்' தாய்லாந்து மொழி இராமாயணம். பாடியவர் முதலாம் இராமன் என்ற மன்னர் ஆவார்.

லாவோஸ் மொழி ராமாயணம் 'குவாய் துவாரவி' 18 ஆம் நூற்றாண்டில் வரையப்பட்டது. இதே மொழியில் 19 ஆம் நூற்றாண்டில் எழுந்தது 'ப்ராலக் ப்ராலாம்.'

காஷ்மீரி மொழி இராமாயணம் 'ப்ரகாஷ் ராமாயணம்' என்ற பெயர் கொண்டது. இன்னும் பலப்பல நாடுகளில் பலப்பல மொழிகளில் இராமாயணங்கள் உள.

இராமர் தம் நாதராக சிவனாரைக் கொண்டவர். இராமேச்சரத்தில் சிவனாருக்குக் கோயில் எடுத்தார். இராமேச்சரம், இராமநந்தீச்சரம், திருமாற்பேறு ஆகிய இடங்களில் திருமால் சிவனாரை வழிபட்டார். திருவாரூர், திருநின்றியூர் ஆகிய தலங்களில் இலக்குமி சிவனாரை வழிபட்டார். திருநின்றியூர் பெருமானின் திருநாமம் மகாலக்ஷ்மீஸ்வரர் என்பதாம். திருமுறைப் பாடல்கள் இராமனைப் போற்றுகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு முக்கிய செய்தி, எட்டாம் திருமுறையில் திருவாசகமும், திருக்கோவையாரும் அடங்கும். திருக்கோவையாரின் பெருமையை உணர்த்த வரையப்பட்ட நூலே கல்லாடம். கோவையாரில் இருந்து நூறு துறைகளைத் தேர்ந்து ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வோர் ஆசிரியப்பா இயற்றி தமிழறியும் பெருமானாகிய ஆலவாய் அண்ணலின் தெய்வத் திருமுன் இவ்வாசிரியர் ஓதியபோது, பாட்டுக்கு உருகும் பனிமலைவல்லிபங்கன் ஒவ்வொரு செய்யுள் முடியும்போது தன் திருமுடியைத் துளக்கி மகிழ்ந்தான் என்று ஒரு வரலாறு தமிழ்நாட்டில் நிலவுகிறது. நான்மாடக் கூடலாகிய மதுரையில் இராமாயண இதிகாசப் பெருமையை எடுத்துரைக்க வந்திருக்கிறேன். எனக்குக் கை கொடுப்பதற்காகவே அமைந்தது போல கல்லாடத்தின் 92ஆம் பாடலின் பிற்பகுதி அமைந்திருக்கிறது.

தானவர்க்கு உடைந்து வானவர் இரப்ப,
உழல்தேர் பத்தினன் மகவு என நாறி,
முனி தழற் செல்வம்முற்றி, பழங் கல்
பெண் வர, சனகன் மிதிலையில் கொடுமரம்
இறுத்து, அவன் மகட் புணர்ந்து, எரிமழு இராமன்
வில் கவர்ந்து, அன்னை வினை உள் வைத்து ஏவ,
துணையும் இளவலும் தொடரக் கான் படர்ந்து,
மாகுகன் நதிவிட ஊக்கி, வனத்துக்
கராதி மாரீசன் கவந்தன் உயிர் மடித்து,
இருசிறைக் கழுகினர்க்கு உலந்த கடன் கழித்து,
எறிவளி மகனை நட்டு, ஏழு மரத்தினுக்கு,
அரிக்கு, கருங்கடற்கு, ஒரோ ஒரு கணைவிடுத்து,
அக்கடல் வயிறு அடைத்து, அரக்கன் உயிர்வெளவி,
இலங்கை அவ்அரக்கற்கு இளையோன் பெறுக எனத்
தமது ஊர் புகுந்து முடிசுமந்தோர்க்கும்,
நான்முகத்தவர்க்கும், இருபால் பகுத்த
ஒரு நுதற் கண்ணவன் உறைதரு கூடல்

இராமாயணம் முழுவதும் ஒரு பாடற்பகுதியில் ஒரு சைவப் பெரியாரால் அமைத்துக்காட்டப் பட்டிருக்கின்றது என்றால் இவ்விதிகாசப் பெருமைக்கு வேறு சான்றும் பகர வேண்டுமோ?

இப்பொழுது சில பெயர்களைக் கூறுவேன். அவை எவர் எவரைக் குறிக்கின்றன என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்களேயானால் நீங்கள் மகாமேதைகள் என்று நான் உங்களைப் போற்றுவேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(1) விவிஞ்சதி	(2) அநுவிந்தன்	(3) சித்திரன்
(4) உபசித்திரன்	(5) சாரு	(6) விவித்சு
(7) சமன்	(8) ஊர்ணநாபன்	(9) சுவர்மா
(10) அயோவாகு	(11) மஹாவாகு	(12) சுகுண்டலன்
(13) பலாகன்	(14) கனகாயு	(15) அநூதரன்
(16) சேநாநி	(17) சுகத்தன்	(18) சுவர்ச்சசன்
(19) வெகுவாதி	(20) அநுயாயி	(21) நிஷங்கி
(22) உக்கிரன்	(23) அபயன்	(24) திருடரதன்
(25) வியுடோரு		

இவர்கள் எல்லாம் யார்? இவர்கள் அனைவரும் திருதராஷ்டிரர் மக்கள் நூற்றுவரில் சிலர். பாரதம் மஹாபாரதமே. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கதாபாத்திரங்கள் இடம் பெறுகின்றனர். Sorensen என்னும் வடமொழி அறிஞர் மஹாபாரதத்தில் மூழ்கினார். இவர் கோப்பன்ஹேகன் நாட்டைச் சார்ந்தவர். இவர் பாரத இதிகாசத்திலுள்ள பாத்திரப் பெயர்களைத் தொகுக்கத் தொடங்கி 22 ஆண்டுகள் பாடுபட்டார். பெயர்களுக்கான விளக்கங்களும் இடம்சுட்டி வரைந்துள்ளார். இவர் வரைவுத் தொகுதியை முடித்து வைத்திருந்தார். இவர் பட்ட சிரமம் கொஞ்சநஞ்சமன்று. ஆனால் இவர் தொகுத்த நூல் அச்சில் வருவதற்கு முன் மறைந்துவிட்டார். இவர் வரைந்து வைத்திருந்த நூலை இவருடைய உதவியாளர் சரிபார்த்து செப்பம் செய்ய சில ஆண்டுகள் எடுத்துக் கொண்டார். பிறகு இத்தொகுப்பு 'An Index to the names in the Mahabharata' என்ற பெயரில் வெளியாயிற்று. Double demy அளவில் 808 பக்கங்கள் கொண்ட நூல் இது. பாத்திரப் பெயர்களைத் தொகுக்கவும், அவை பற்றிய குறிப்புகளை வரையவும் ஓர் வெளிநாட்டு அறிஞரை இந்திய இதிகாசம் ஈர்த்திருக்கிறது என்பதை நாம் மறத்தல் கூடாது.

இன்றைய நம்நிலை என்ன? நான் ஒரு நவீனம் படித்தேன். அதில் நான்காம் பக்கத்தில் ஒரு பாத்திரம் இறந்துபட்டது. ஆனால் அந்நவீனத்தை வரைந்த ஆசிரியர் 144 ஆம் பக்கத்தில் அந்தப் பாத்திரம் ஒருத்தியைக் காதலித்து மணந்து கொண்டது. அடடா, இதை என்ன என்று சொல்வது?

என்றாலும், நம் நாட்டிலும் Sorensen போன்றோர் தோன்றினர். அபிதான சிந்தாமணி என்ற நூலின் ஆசிரியர் சிங்காரவேல் முதலியார். இது டெமி அளவில் அமைந்த நூல். இதன் முதல் பதிப்பு 1910இல் வெளிவந்தது. பக்கங்கள் 1050. விட்டுப்போன செய்திகளை தொடர்ந்து முதலியார் சேகரித்து வந்தார். இரண்டாம் பதிப்பைத் தொடங்கி 1000 பக்கங்கள் வரை மெய்ப்புப் பார்த்தார். பின்னர் நோய்வாய்ப்பட்டு அவர் இறந்து போனார். என்றாலும், அவர் மகனார் சிவப்பிரகாசர், தந்தையார் விரும்பிய இரண்டாம் பதிப்பை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிறைவு செய்தார். இப்பதிப்பின் பக்கங்கள் 1634. முதல் பதிப்பை வெளியிட உதவிய மகான் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரைத் தேவர் ஆவார். இவர் திருவடிகளை வணங்கி மகிழ்கிறேன்.

திருதராட்டிரன் மகன்கள் சிலருடைய பெயரை சற்றுமுன் கூறினேனே, அவற்றை எங்கிருந்து பெற்றேன்? இந்த அபிதான சிந்தாமணியிலிருந்துதான். இந்நூல் ஓர் அருங்கலைப் பண்டாரம்.

மலையாளத்தில் வேட்டம் மணி என்ற கிறித்துவர் 'Puranic Encyclopaedia' என்ற நூலைத் தம்முடைய தாய்மொழியில் தொகுத்தளித்தார். இது டபுள் டெமி அளவுடைய நூல். மொத்த பக்கங்கள் 922. இதை ஆறுகள் ஆங்கிலப் பேராசிரியர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர். பாரத கலாசாரத்தைப் போற்றுவோர் ஒவ்வொருவரும் இந்நூலைத் தம் இல்லத்தில் கொண்டிருத்தல் வேண்டும்.

மகாபாரதத்தை ஐந்தாம் வேதம் எனபர்.

நீடு ஆழி உலகத்து மறை நாலொடு ஐந்து என்று
நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதம்
சொன்ன நாள்
ஏடு ஆக வடமேரு வெற்பாக வங்கூர்
எழுத்தாணி தன்
கோடு ஆக எழுதும் பிரானைப் பணிந்து அன்பு
கூர்வாம் அரோ.

நம்நாட்டில் மட்டுமன்றி தூர கிழக்கு நாடுகளான ஜாவா, சுமத்திரா போன்ற நாடுகளிலும் பாரதம் பரவி இருந்தது. கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் சம்பா என்னும் இடத்தில் வியாசருக்குக் கோயில் எழுப்பப்பட்டது. ஏழாம் நூற்றாண்டில் காம்போஜ நாட்டில் இராமாயண, மகாபாரதங்களை திருக்கோயிலில் வாசிக்க ஏற்பாடு செய்திருந்தனர்.

தமிழில் பாரதம் பாடிய பெருந்தேவனார் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு என்னும் ஐந்து தொகை நூல்களுக்கும் கடவுள் வாழ்த்துப் பாடல் பாடியுள்ளார். புறநானூற்றில் பாரதப் போரில் தமிழ் மன்னர்கள் உதவி செய்ததாக குறிக்கப்பட்டிருக்கிறது. கலித்தொகையில் உபமான வாயிலாக பாரத நிகழ்ச்சிகள் காட்டப்பட்டுள்ளன. சீவக சிந்தாமணி பாரதச் செய்தியைச் சாற்றுகிறது. கட்டியங்காரன் சேனையை எதிர்த்த சச்சந்தன் கண் இமைக்காமல் போரிட்டான். யாரைப் போல் போர் புரிந்தான்? தேவர் சாற்றும் செய்தி இதுவே:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆர் அமருள் ஆண்தகையும் அன்னவகை வீழும்
வீரர் எறிவெம் படைகள் வீழ இமையானாய்ப்
பேர் அமருள் அன்று பெருந்தாதையொடும் பேராப்
போர் அமருள் நின்ற இளையோனின் பொலிவு உற்றான்.

பேர் அமர் - மகாபாரதப் போர்.
பெருந்தாதை - கர்ணன்.
அவனோடு போரிட்ட இளையவன் யார்?
அவனே அபிமன்யு.

பாரதத்தின் பெருமை பேசில் அதுவே ஒரு பாரதமாக நீளும். பாரதத்தில் வருகின்ற கிளைக்கதைகள் ஏராளம். சாவித்திரியின் வரலாறு பாரதத்தில் உள்ளது. ஊழிற் பெருவலி யாவுள? என்றார் வள்ளுவர். அவரே திண்மையுடையார் ஊழையும் உப்பக்கம் காண்பர் என்று கூறியுள்ளார். ஊழையும் உப்பக்கம் கண்டாருள் ஓர் மகனையும் ஓர் பெண்மணியையும் நாம் என்றும் நினைவில் கொள்ளல் வேண்டும். காலத்தை வென்று சிரஞ்சீவியாக விளங்குகின்றவர் மார்க்கண்டேயர். இயமனை வென்ற பெண் சாவித்திரி. சிரமம் வந்தபோது பெண்கள் அழுவர். சீதை அழுதாள். திரௌபதை அழுதாள். ஆனால் சாவித்திரிக்கு அழத் தெரியாது. இப்பெருமாட்டியின் பெருமையை சென்ற நூற்றாண்டில் ஓர் இதிகாசமாய் வரைந்தவர் ஸ்ரீஅரவிந்தர். அவர் 40 ஆண்டுகள் முயன்று சாவித்திரியின் வரலாற்றை ஒரு யோக காவியமாக ஆங்கிலத்தில் வரைந்தார். 23,813 அடிகள் கொண்ட காவியம் இது. இதை ஒரு காவல்துறை அதிகாரி தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.

நள சரித்திரம் பாரதத்தில் வருகிறது. Odyssey-யின் கதாநாயகன் Ulysses. இவனைப் போல் துயர் உழன்றார் எவருமிலர். அவனே ஒருமுறை கூறினான். “Can sorrows equal mine?” என்று. அனைத்தையும் இழந்து கானக வாழ்க்கை மேற்கொண்ட தருமபுத்திரர், வியாசரிடம் "இவ்வுலகில் என்போல் இடர் உழந்தார் உளரோ?" என்று வினவ, வியாசர் அவருக்கு நளனுடைய சரித்திரத்தை உரைத்தார். இது தமிழில் நைடதமாகவும், நளவெண்பாவாகவும் மலர்ந்துள்ளது. நைடதம் புலவர்க்கு ஔடதம் என்பர். நளவெண்பா ஒரு தனித்தன்மை உடையது. புகழேந்திக்கு இணையாக வெண்பா பாடியவர் எவருமிலர் என்பர். இந்நளவெண்பாவை ஆங்கிலத்தில் Guest என்பாரும், M.C.Langton என்பாரும் மொழிபெயர்த்தனர். லாங்டன் ஆங்கிலத்தில் வெண்பா போன்ற ஒரு யாப்பை அமைத்துக் கொண்டார். இது வகையில் காட்டு ஒன்று காட்டுவேன்:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொற்றவன்தன் ஏவலினால் போய்அக் குலக்கொடிபால்
உற்றதுவும் ஆங்குஅவள்தான் உற்றதுவும் - முற்றும்
மொழிந்ததே அன்னம் மொழிகேட்டு அரசற்கு
அழிந்ததே உள்ள அறிவு.

She told of Damayanti's court, of Damayanti's
salutation,
She told of Damayanti's love, till from her
passionate oration
Nepenthe nectar-sweet distilled into fain
numbness nympholept
His ravished senses swept.

கெஸ்ட் அவர்கள் நளவெண்பாவை உரைநடையில் ஆங்கிலப்படுத்தினார். 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இவருடைய உரைநடைப் பகுதிகள் கல்லூரியில் பாடமாக அமைக்கப்பட்டன.

உன்னி வாரியார் 'நளசரிதம்' என்ற நூலை மலையாளத்தில் வடித்தார். இதை வி.சுப்பிரமணிய ஐயர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இது திரிச்சூரில் உள்ள கேரள சாகித்ய அகாதெமி வெளியீடாக 1977இல் பதிப்பிக்கப்பட்டது. நளசரிதம் மேடை நாடகமாக சுதா கோபாலகிருஷ்ணனால் வடிவமைக்கப்பட்டது. இவ்வடிமைப்பிற்கு பயன்பட்ட நூல் கலாமண்டலம் கிருஷ்ணன் நாயர் வரைந்த நூலாகும். சுதா அவர்களின் நூலை தில்லி சாகித்ய அகாதெமி வெளியிட்டுள்ளது.

பாரதத்தின் முக்கியமான கிளைக்கதைகளில் ஒன்றுதான் சகுந்தலையின் சரிதம். இதைத் தம் கற்பனைக்கு ஏற்ப மாற்றியமைத்த பெருங்கவிஞர் காளிதாசர் ஆவார். பாரதம் சாற்றும் சகுந்தலையை இன்று பலரும் அறியார். ஆனால் காளிதாசருடைய அபிஞ்ஞான சாகுந்தலம் உலகம் முழுவதும் பரவியுள்ளது. தமிழில் இதை மொழிபெயர்த்தாருள் முக்கியமானவர் இருவர். ஒருவர் ரா.ராகவையங்கார்; மற்றவர் மறைமலையடிகள்.

மகாபாரதக் கதைகள் அங்கங்கும் தெருக்கூத்துக்களின் மூலம் இன்றும் கொண்டாடப்பட்டு வருகின்றன. பாமரர்கூட இவையிற்றை நன்கு அறிவர்.

மொழிபெயர்ப்பின் மூலம் காளிதாசரின் சாகுந்தலத்தைப் பயின்ற கதே என்னும் ஜெர்மானிய மாகவி அபிஞ்ஞான சாகுந்தலத்திற்கு ஈடான நாடகம் இவ்வுலகில் எக்காலத்தும் தோன்றவில்லை என்று அடித்துக் கூறுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெரியபுராணம் சாற்றும் நந்தனார் சரிதையை இன்று பலரும் அறியார். ஆனால் கோபாலகிருஷ்ண பாரதியார் பாடிய நந்தனார் சரித்திரத்தை அனைவரும் அறிவர். சேக்கிழார் பெருமான் அருளிய புராணத்தில் வேதியர் என்ற ஒரு பாத்திரம் கிடையாது. அவருடைய அடிமையாக நந்தனார் இருந்ததும் இல்லை. பாரதம் சாற்றும் சாகுந்தலத்தில் துர்வாசர் இட்ட சாபம் இல்லை. மேலும் சகுந்தலை துஷ்யந்தனிடமிருந்து ஒரு மோதிரமும் பெறவில்லை. ஆகவே அவள் அதை இழக்கவும் இல்லை.

பௌத்தர் இயற்றிய சகுந்தலை வரலாறு ஒன்று உண்டு.

'கிராதார்ஜுனியம்' என்ற ஒன்றும் பாரதத்தில் உள்ளது. இது தனி நூலாகவும் இயற்றப்பட்டுள்ளது.

சைவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான செய்தி ஒன்று இப்போது கூறுகிறேன். கிருஷ்ண பரமாத்மா சிவதீட்சை பெற்று சிவபூஜை செய்தவர். இந்த வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுகிறேன். உபமன்யு முனிவர் சிறுகுழந்தையாக இருந்தபோது அருந்த பால் பெறாமல் வருந்தினார். அவர் பொருட்டு அவர்பால் பாற்கடல் பைய நடந்து செல்லுமாறு பரமேஸ்வரன் அருளினான். வியாக்கிர பாத முனிவர் மகனான உபமன்யு நனிசால மிகப்பெரிய சிவபக்தர். அவருக்குப் பல சீடர்கள் உண்டு. இவர்களே அம் முனிவர் பூஜைக்காக நாண்மலர்களைச் சேகரித்து வருவர். நாளடைவில் பூக்களுக்குத் தட்டுப்பாடு நேர, அதன் காரணம் பற்றி உபமன்யு உசாவினார். அப்போது சீடர்கள் கூறியதாவது:

கண்ணன் சிவபூஜை செய்கிறான்.
பெருவாரியான பூக்கள் அக்கண்ணன்
பூஜைக்காகப் பறிக்கப்படுகின்றன.

இதைச் செவிமடுத்த உபமன்யு கூறியதாவது:

கண்ணன் சிவபூஜை செய்கிறானா? அப்பூஜை செய்ய அவனுக்கு அதிகாரம் ஏது? சிவதீட்சை பெறாதவன் செய்யும் பூஜை வியர்த்தமன்றோ?

முனிவர் மொழிந்ததைக் கேள்விப்பட்ட கண்ணன் ஓடோடி வந்து உபமன்யு முனிவர் திருவடிகளிலே தாழ்ந்து பணிந்து ஒரு விண்ணப்பம் செய்தனன். "பெரியோய்! தாங்கள் எனக்கு சிவதீட்சை அருளல் வேண்டும்." கண்ணன் கழறியதைக் கேட்டு முனிவர் மகிழ்ந்து அக்கண்ணனுக்கு சிவதீட்சை அளித்தார். இச்செய்தியை எளியேனின் தெய்வமாம் சேக்கிழார் பெருமான், திருத்தொண்டர் புராணத்தின் தொடக்கத்திலேயே அருளியுள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யாதவன் துவரைக்கு இறையாகிய
மாதவன் முடிமேல் அடிவைத்தவன்
பூதநாதன் பொருவரும் தொண்டினுக்கு
ஆதிஅந்தம் இலாமை அடைந்தவன்.

கண்ணன் சிவதீட்சையும், சிவசகஸ்ரநாம உபதேசமும் பெற்றவன். கண்ணன் வெளிப்படுத்திய சிவசகஸ்ரநாமம் மிகவும் பிரசித்தமானது. இச்செய்தியைக் கூறுவது மகாபாரதம்.

வில்லிபுத்தூர் ஆழ்வார் தாம் பாடிய பாரதத்தில் சிவபரத்துவமே சாதித்துள்ளார். இதைச் சுருக்கமாகக் கூறுகிறேன். முன்பொரு சமயம் விஷ்ணுவும், பிரமனும், தம்முள் இகலி, "நானே பெரியவன் நானே பெரியவன்" என்று கூறி சண்டையிடத் தொடங்கினர். அவர்கள் முன்பு திடீரென ஓர் அளப்பரிய அக்கினித் தூண் எழுந்தது. இருவரும் தம் சண்டையை நிறுத்திவிட்டு, "இதென்ன அற்புதம்? இதன் தலையும், தாளும் காண்போம்" என்று முடிவெடுத்தனர். அன்னப்பறவை வடிவில் மேலே பறந்தான் பிரமன். பன்றி உருவெடுத்துத் திருமால் பூமியைக் குடைந்து குடைந்து சென்றார். சிவனார் திருவடி பாதாளம் ஏழினுக்கும் அப்பால். அவர் திருமுடி சொல் இறந்து நின்ற தொன்மை. எம்பெருமான் திருவடிகளைக் காணமுடியாமல் களைத்துப் போன வராகப் பெருமான் மேலே ஏறிவந்து தம் தோல்வியை ஒப்புக்கொண்டார். இப்படி ஒரு பன்றி தம்மைத் தேடிவர அதற்குக் காட்சி தாராது இருந்தவர் சிவனார். அத்தகு சிவனார் ஒரு சாதாரண பன்றியைத் தேடிப் புறப்பட வேண்டி வந்தது. இதைச் சற்று விவரமாகக் கூறுகிறேன். அருச்சுனன் பஞ்சாக்கினி மத்தியில் தவம் இயற்றிக் கொண்டிருந்தான். இதை அறிந்த துரியோதனன், அவனைக் கொல்ல ஒரு திட்டம் தீட்டினான். மூகாசுரன் என்பவனைப் பார்த்து, "நீ பன்றி உருக்கொண்டு நிராயுதபாணியாய் இருக்கும் அருச்சுனனைத் தாக்கி அவனை மாய்த்துவிடு" என்று சொன்னான். அச்சமயம் அருச்சுனன் உறவுள்ள இடரைத் தவிர்த்து அவனைக் காத்தருள வேண்டும் என்று சிவபெருமானிடம் உமை வேண்டினாள். பெருமானும் கிராதவேடம் தாங்கி கையில் வில்லும், அம்பும் கொண்டு அப்பன்றியைத் தேடப் புறப்பட்டார். இதை வில்லிபுத்தூர் ஆழ்வார் பாடல் விதந்து பேசுகிறது:

ஓர் ஏனம் தனைத்தேட ஒளித்தருளும் இருபாகத்து
ஒருவன், அந்தப்
போர் ஏனம் தனைத்தேடி, கணங்களுடன் புறப்பட்டான்;
புனங்கள் எல்லாம்
சீர் ஏனல் விளைகிரிக்குத் தேவதையாம் குழவியையும்
செங்கை ஏந்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பார், ஏனை உலகு அனைத்தும் பரிவுடன் ஈன்றாள்
தன்பதிபின் வந்தாள்.

வைணவ ஆழ்வார் சிவபரத்துவம் சாதித்திருப்பது மிகவும் போற்றற்குரியது.

இதிகாரச புராணங்கள் சிவ பரத்துவமே சாற்றும். செருக்குற்ற இராவணன் கயிலையைப் பெயர்த்துத் தூக்கினான். சிவனார் தம் கால் சிறு விரலால் இலேசாக அழுத்தினார். அதனால் அமுக்குண்ட இராவணன் ஓராயிரம் ஆண்டுகள் அலறினான், கதறினான், கண்ணீர் மல்கசாமகீதம் பாடினான்.

அவ்வரக்கனுக்கு இரங்கி அரனார் அவனுக்கு வாளும், நாளும் நல்கினார். இந்த இராவணனைக் கொல்ல இராமபிரான் எழுபது வெள்ளம் சேனை கொண்டு சென்று பல நாள்கள் கடும்போர் புரிந்து வெற்றி பெற வேண்டியிருந்தது. பிறகு சிவனருளால் வெற்றி பெற்ற இராமன் அதை எண்ணி இராமேச்சரத்தில் அப்பெருமானுக்குக் கோயில் எழுப்பினான்.

பூதனை என்ற அரக்கி கண்ணனைக் கொல்ல தன்னுடைய முலைப்பால் விஷத்தை, கண்ணனுக்கு ஊட்டச் சென்றாள். குழந்தை கண்ணன் பால் அருந்தும் வியாஜத்தால் அவள் தனத்தில் வாய்வைத்து அவள் உயிரையே பருகிவிட்டது. பூதனை விஷம் ஓர் ஆளை மட்டும் கொல்லவல்லது. ஆலகால விஷம் அப்படிப்பட்டதா? அகில உலகத்தையும் அழிக்க வல்லதாயிற்றே! திருமால் உள்ளிட்ட அனைத்துத் தேவர்களும் வேண்டிட சிவனார் "அவ்விடத்தை இவ்விடத்திற்குக் கொண்டு வாரும்" என்று கூறி, அப்படிப் பெற்ற விடத்தை தம் கண்டத்தில் அடக்கிக் கொண்டார். இதனால் விடமுண்ட கண்டர் என்றும், நிர்த்தனப் பிரியனான நீலகண்டன் என்றும் அவரை அகில உலகமே போற்றுகின்றது.

பஞ்சபாண்டவர்கள் அனைவரும் சிவபக்த சீலர்கள். குறிப்பாக சிவபூஜை செய்யாமல் அருச்சுனன் உண்ணமாட்டான். ஸ்திதப்ரக்ஞன் நிலையை உற்ற அவன் அடுத்த பிறவியில் கண்ணப்பராய்த் தோன்றி சிவனார் பெருமையை தன் செயல் மூலம் நிலவுலகில் நிறுவினான்.

இதிகாசப் பெருமையைத் தமிழர்களும், பாரத மக்களும் மறத்தல் கூடாது. சொல் உராய்ந்து எழுந்த தீயின் சுடரெழக் கனிந்த நாவுடைய நாவலர் பாரதியார். அவர் மண் மாசு அகன்ற வான்படு சொற்கள் கொண்டு தேமதுரத் தமிழில் பாக்கள் பல பாடியவர். சிவசக்தியே பாரத மாதா என்று கொண்டு அவர் பாடிய பாடலைக் கேளுங்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்த வில் யாருடை வில்?

அவ்வில்லுக்கு உரியவள் சிவசக்திதானே! இங்கு கூறப்படும் செய்தி இராமாயணச் செய்திதானே!

இந்திர ஜித்தன் இரண்டு துண்டாக
எடுத்தவில் யாருடை வில்?

இந்திரஜித்தை அழித்தவன் இலக்குவன்தானே! இதைச் சாற்றுவதும் இராமாயண இதிகாசம் தானே!

சகுந்தலை பெற்றதோர் பிள்ளை சிங்கத்தினை
தட்டி விளையாடி நன்று
உகந்ததோர் பிள்ளை. . .

இப்பிள்ளையைப் பற்றிப் பேசுவது மாபாரதம் அன்றோ?

காண்டிவ வில்லேந்தி உலகினை வென்றது
கல்ஒத்த தோள் எவர்தோள்?

காண்டீபன் அர்ஜுனன்தானே! இவன் பெருமையை இசைப்பது பாரதம் தானே!

சாகும்பொழுது இரு செவிக்குண்டலம்
தந்தது எவர் கொடைக் கை?

இதை சாதித்தவன் கர்ண வள்ளல் தானே! இவன் பெருமை பேசுவது பாரதம்தானே!

போர்க் களத்தே பரஞான மெய்க்கீதை
புகன்றது எவருடை வாய்?

புகன்றவன் கண்ணபிரான் தானே! கீதை அவதாரம் செய்தது பாரதத்தில்தானே!

தந்தை இனிதுறவே தான் அரசாட்சியும்
தையலர் உறவும் இனி
இந்த உலகில் விரும்புகிலேன்

என்றுரைத்தவர் பிதாமகரான பீஷ்மர்தாமே! இவர்தாமே கௌரவர் வம்சம் விளங்க வந்தவர்!

மிதிலை எறிந்திட வேதப் பொருளை
வினவும் சனகன். . . .

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யார் இந்தச் சனகன்? இவன் தானே சீதையின் தந்தை! இவன் பெருமை பகர்வது இராமாயண இதிகாசம் தானே!

ஆகவே, இந்நாட்டின் பெருமைகள் நிலைத்திருக்கும் பெட்டகங்களாய் விளங்குவன இந்நாட்டின் இதிகாசங்களே.

சிறையிருந்தாள் ஏற்றம் கூறுவது இராமாயணம். ஐரோப்பிய இதிகாசங்களான இலியதும், ஓடிஸியும் கணவனை விட்டு ஓடிப்போன ஹெலன் சரிதையைச் சாற்றுவன. அவள் தன் ஒரு தீச் செயலுக்காக ஆயிரம் நாவாய் ஆழ்கடல் மீது படர்ந்தன. அணிநகர் கோபுரங்கள் ஆர் அழல் உண்டன.

மகாபாரதம் தூது சென்றவன் பெருமை பகர்வது. விரிந்து பரந்து விளங்கும் இதிகாசங்களின் சாரமான உண்மை இறைவனின் திருநாமப் பெருமையைப் பரக்கப் பேசுவதே.

பாரதியார் பாஞ்சாலி சபதம் வரைந்தார். அதற்கான காரணத்தை அவரே வெளிப்படையாக அறிவித்திருக்கிறார்: "முன்னிய ஹரிநாமம் தன்னில் மூளும் நற்பயன் உலகறிந்திடவே" தாம் பாஞ்சாலி சபதம் பாடியதாகக் கூறுகிறார்.

ஐவர் பூவையாம் திரௌபதியை அரசவையில் துகில் உரியத் தொடங்கினான் பாவி துச்சாதனன். பஞ்சபாண்டவர்களும் வாளாவிருந்தனர். இந்த நிலை ஒரு பெண்ணுக்கு ஏற்படலாமா? பாஞ்சாலி என்பாள் கிருஷ்ணை ஆவாள். அதாவது அவள் கிருஷ்ண சகோதரி. கொடும் சோதனை ஏற்பட்ட காலத்தில் அப்பெருமாட்டி கண்ணபிரான் பாதாரவிந்தங்களை எண்ணினாள். அவன் நாமத்தை ஜபித்தாள். உட்ஜோதியுள் கலந்தாள். ஒருமையுற்றாள். மனம் ஒன்றித் துதித்தாள்.

கம்பத்தி லுள்ளா னோ? - அடா!
காட்டுன்றன் கடவுளைத் தூணிடத்தே!
வம்புரை செயு மூடா - என்று
மகன்மிசை யுறுமியத் தூணுதைத்தான்,
செம்பவிர் குழலுடையான் - அந்தத்
தீயவல் லிரணிய னுடல் பிளந்தாய்!
நம்பி நின்னடி தொழுதேன் - என்னை
நாணழியா திங்கு காத்தருள்வாய்

என்றாள். திடநம்பிக்கையோடு ஹரிநாமத்தில் சரண் புகுந்தாள்.

வையகங் காத்திடுவாய் - கண்ணா
மணி வண்ணா, என்றன் மனச் சுடரே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஜய, நின் பத மலரே - சரண்
ஹரி, ஹரி, ஹரி, ஹரி, ஹரி என்றாள்

அப்போது நிகழ்ந்தது எவ்வுலகிலும், எந்த நாளிலும் நிகழ்ந்திராத பேரதிசயம். திரௌபதியின் ஆடை வளரத் தொடங்கியது; எப்படி?

பொய்யர்தந் துயரினைப்போல் - நல்ல
புண்ணிய வாளர்தம் புகழினைப் போல்,
தையலர் கருணையைப் போல் - கடல்
சலசலத் தெறிந்திடும் அலைகளைப் போல்,
பெண்ணொளி வாழ்த்திடுவார் - அந்தப்
பெருமக்கள் செல்வத்தின் பெருகுதல் போல்
கண்ண பிரா னருளால் - தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணி புதிதாய்
வண்ணப் பொற் சேலைகளாம் - அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே!

திருநாம மகிமைக்கு எல்லையில்லை. பாஞ்சாலி இருந்த இடம் அத்தினாபுரம். கண்ணன் இருந்த இடம் துவாரகை. ஆனால் அகில உலகமே அவன் திருநாமப் பெருமையைச் சூல் கொண்டிருந்தது. ஆகவே, சொன்ன உடனேயே வேட்ட பலன் விளைந்தது. இதை எடுத்துச் சொல்லவந்த வைணவ ரகஸ்ய க்ரந்தம் கூறுவதாவது:

அவன் தூரஸ்தனாய் இருந்தாலும் இது (அவன் நாமம்) கிட்டிநின்று உதவுமிறே.

திரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே.

எந்நாட்டு ஆடவர்களும் போற்றிக் காக்க வேண்டிய கடப்பாடு ஒன்று உண்டு. அது என்ன? பெண்களைப் போற்ற வேண்டும். "தையலை உயர்வு செய்" என்றார் பாரதியார். மேலும், "காதல் செயும் மனைவியே சக்தி கண்டீர்! கடவுள்நிலை அவளாலே எய்தலாகும்" என்றும் அவர் அருளியுள்ளார்.

சீதை அக்கினிப் பிரவேசம் செய்தாள். அவள் கற்பின் கனல் அக்னி பகவானின் உடலைச் சுட்டது. உடல் முழுதும் கொப்புளங்கள் கிளம்பின. பிராட்டியைத் தலையில் சுமந்தபடி வெளிவந்த மாதா சீதாவை அக்னிபகவான் போற்றியதை மறவாதீர்!

வியாச பாரதம் இரண்டுவித பாடங்களைக் கொண்டதாக இலங்குகிறது. இவற்றுள் குடந்தையில் விளங்கும் பாடமே முறையானது, சரியானது. கங்குலி எனபார் மொழிபெயர்த்தது வங்காளபாடத்தை. பென்னம் பெரிய வைணவ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடியாரும் தென்சொல் கடந்து வடசொற்கு எல்லை தேர்ந்தவராகவும், குடந்தை கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியராகவும் விளங்கிய மகான் ம.வீ.இராமானுஜாச்சாரியார் அவர்கள். தஞ்சையில் நாங்கள் பாரதி சங்கம் என்று ஒன்றை அமைத்து மாதந்தோறும் தமிழ் மூதறிஞர் வாழ்வு, வாக்கு ஆகியவை பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருகிறோம். 18.11.2007இல் 261ஆவது சொற்பொழிவு நடந்தேறியது. இவ்வமைப்பின்கீழ் தொடர்ந்து நான்கு சொற்பொழிவுகள் இப்பெரியாரைப் பற்றி நிகழ்த்தியுள்ளோம். இவர் அரும்பாடுபட்டு வியாச பாரதத்தை முற்றுமாக தக்க பண்டிதர்களைக் கொண்டு நிறைவேற்றி இருக்கிறார். 17 பாகங்களில் வெளிவந்த இம்மகாபாரதத்தை ஓர் இளைஞர் இன்றும் பகுதி பகுதியாக வெளியிட்டு வருகிறார். இவ்விளைஞரை ஒரு தியாகி என்று நான் போற்றுகின்றேன். நூல் அனைத்தும் ஒன்பது தொகுதிகளாக வெளியிடப்படும். எட்டாவது தொகுதிக்கான அச்சுவேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்தொகுதிகள் அனைத்தும் இதிகாசங்களைப் போற்றுவார் இல்லத்தில் இருத்தல் வேண்டும். இஃதோர் பேருண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. பெண் ஒளி வாழ்த்தி வாழ்வாங்கு வாழ்வாரே பேராண்மை உடையவராவார். பெண்ணை மதியாத இனம் வேரும், வேரடி மண்ணும் இன்றி பட்டுப் போகும்.

கதவடைத்து இரகசிய கிரந்தங்களை வைணவர் ஓதுவர். ஓர் இரகசிய கிரந்தம் சாற்றிய செய்தியைச் சொல்லுகிறேன். ஒரு சமயம் கண்ணபிரான் மிகவும் வருத்தத்தோடு காணப்பட்டான். 'ஏன் இந்தச் சோகம்?' என்று அவன் வினவப்பட்டபோது அவன் கூறினான்; "என் கடமையினின்றும் நான் வழுவிவிட்டேன். அதை எண்ணி எண்ணி துக்கம் உறுகிறேன்" என்றான். மேலும் அவன் கூறியதாவது: கௌரவர் சபையில் பாஞ்சாலி கதறியபோது ஐவரும் பேடியைப் போல் வாளாவிருந்தனர். அப்போதே நான் அவர்களைக் கொன்றிருக்க வேண்டும் குறைந்தபட்சம் அருச்சுனனையாவது அழித்திருக்க வேண்டும். கேசவஸ்ய ஆத்மா என்று தனஞ்செயன் போற்றப்படுவான். அவனுடைய வில் வீரத்தால் பாஞ்சாலி ஐவர் பூவையானாள். ஆகவே தான் எவரையும் நோக்காது அவன் தோள்கள் மீது தன் மின்செய் கதிர்விழியால் வென்நோக்கு நோக்கினான். அங்ஙனம் தாக்கப்பட்ட தனஞ்செயன் சபதம் செய்யும்போது,

கார்த் தடங் கண்ணி யெந் தேவி - அவள்
கண்ணிலுங் காண்டிவ வில்லினு மாணை!

என்றனன்.

'பெண்ணின் பெருந்தக்க யாவுள?' என்றார் வள்ளுவர். தூய பெண்ணின் கற்பு நெருப்பை எரிக்கும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாரதநாட்டு இதிகாசங்கள் நீதி சாத்திரம், தரும சாத்திரம் ஆகியவற்றிற்கான மிக உயர்ந்த கருவூலங்கள். நெடுஞ் சேய்மையான காலம் தொட்டு இதிகாசங்கள் சாற்றும் அறவுரைகள் அந்நாட்டு மக்களின் நெஞ்சங்களில் பதிவாகி இருக்கின்றன. ஔவைப் பிராட்டியின் நூல்கள் இவ்அறவுரைகளை சிறு குழந்தைகளும் உணருமாறு எளிய தமிழில் தேக்கி வைத்திருக்கின்றன.

அறஞ் செய விரும்பு, இயல்வது கரவேல், ஈவது விலக்கேல், ஊக்கமது கைவிடேல், ஒப்புரவொழுகு, நயம்பட உரை, இணக்கமறிந்து இணங்கு, நன்றி மறவேல், மன்று பறித்து உண்ணேல், இளமையிற் கல், அறனை மறவேல், காப்பது விரதம், கீழ்மை அகற்று, கேள்வி முயல், கோதாட்டு ஒழி, சூது விரும்பேல், சேரிடம் அறிந்து சேர், திருமாலுக்கு அடிமை செய், தீவினை அகற்று, தெய்வம் இகழேல், தோற்பன தொடரேல், வீடு பெற நில், பெரியாரைத் துணைகொள், மேன்மக்கள் சொற்கேள், வித்தை விரும்பு, சூதும் வாதும் வேதனை செய்யும், தந்தை சொல் மிக்க மந்திரமில்லை, தாயிற் சிறந்த கோயிலுமில்லை, தீராக் கோபம் போராய் முடியும் என்பன போன்ற உயிருக்கு உறுதி பயக்கும் திருவாசகங்கள், இதிகாசங்கள் நமக்கு வழங்கியுள்ள அருங்கொடைகளாம். இவை காட்டும் வழியில் வாழ்வாங்கு வாழ்வோமாக.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

5. பன்னிரு திருமுறைகள் சாற்றும் அருட் செய்திகள்

பன்னிரு திருமுறைகளைப் போற்றுவாரைப் போற்றி என்னுரையைத் தொடங்குகிறேன். உடுக்கள் நிறை வானத்துப் பைங்காலின் பரப்பளவைவிடப் பன்னிரு திருமுறைகளின் ஆன்மிகப் பரப்பளவு சாலவும் அதிகமானது. ஓங்கி ஆழ்ந்து அகன்று நுண்ணிதாய் விளங்கும் பன்னிரு திருமுறைகளின் பெற்றிமையைச் சாற்ற ஆயிரம் நாவுடைய சேடவிசேடனும் வல்லன் அல்லன்.

திருவைந்தெழுத்தின் சுருக்கமே ஓரெழுத்து ஒரு மொழியாகிய ஓம் என்பது. மகாகவி பாரதியார்,

ஓம் எனப் பெரியோர்கள் – என்றும்
ஓதுவதாய், வினை மோதுவதாய்
தீமைகள் மாய்ப்பது வாய் – துயர்
தேய்ப்பதுவாய் நலம் வாய்ப்பது வாய்
நாமமு முருவு மற்றே – மனம்
நாடரிதாய்ப் புந்தி தேடரிதாய்
ஆம் எனும் பொருள் அனைத்தாய் – வெறும்
அறிவுடன் ஆனந்த இயல்புடைத்தாய்
நின்றிடும் பிரமம் என்பார்

என்று கூறியே பாஞ்சாலிசபதத்தைத் தொடங்குகிறார்.

பரம நிலையாம் இப்பிரமநிலையை எய்துவதே பிறவியின் நோக்கம். பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்கவேண்டும் என்பதே வள்ளுவர் தந்த ஆணை.

ஆன்மாக்கள் மலசகிதம்; பிரமம் மலரஹிதமானது. பிரமமே நிர்க்குணமாகவும் சகுணமாகவும் இயங்கும். இதன் தடத்த நிலை ஒன்றாய் வேறாய் உடனாய் இருத்தல். இதன் உண்மை நிலை – அதாவது சொரூப நிலை சத்து சித்து ஆனந்தமாக இருப்பது.

இன்பம் வேறு; ஆனந்தம் வேறு. ஆனந்தம் என்பது பேரின்பம். இதை அந்தமில் பேரின்பம் என்பர். இன்பம் என்பது ஒன்று பலவாய்க் கிளைக்கும் தன்மையது. ஆனந்தம் என்பது ஒன்றேயாய், முழுமையாய், பிளவு படாததாய், பூரணமாய், சம்பூரணமாய், பரிபூரணமாய் இருப்பது. உலகியலில் ஈடுபட்டு இருப்பார் பெறுவது இன்பம் மட்டுமே. உலகியலை இகந்த நிலையில் பெறப்படுவது ஆனந்தம். "அந்த இடைமருதில் ஆனந்தத் தேன் இருக்கும் பொந்தினைப் பரவி நாம் பூவல்லிக் கொய்யாமோ" என்பது மணிவாசகம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழ்ச் சைவர்கள் பரம பாக்கியசாலிகள், அவர்களுடைய மறைகளாய் திருமுறைகளும், சாத்திர நூல்களும தமிழில் அமைந்துள்ளன. வேறு எம்மதத்தாருக்கும் இப்பேறு கிட்டியதாகக் கூறமுடியாது.

திருமுறைகளை அப்படியே ஏற்கவேண்டும். தொடக்க நிலையில் பொருள் விளங்காவிட்டாலும் அன்பு முதிரமுதிர பொருள் விளங்கிய வண்ணம் வெளிப்படும். தகத்தக அருள்புரியும் சிவசக்தி. தகுதியற்றவன் எதையும் பெறமுடியாது; பெற்றாலும் அவன் அதைத் தக்கவைத்துக் கொள்ளமுடியாது. அனைவரும் அறிந்த ஒரு செய்தியின் பாடல் வடிவைத் தருகிறோம்.

வானரம் மழைதனில் நனைய தூக்கணம்
தான் ஒரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமும் கல்வியும் நயந்த நூல்களும்
ஈனருக்கு உரைத்திடில் இடர தாகுமே.

தகுதி வேட்டுப் பாடுபட்டு அதைப் பெறுதல் வேண்டும். இவ்வுண்மை எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும். விழிப்போடு செயல்புரிய வேண்டும். "நல்லெண்ணங்கள் நான்கு பக்கங்களில் இருந்து நம்மை அடையட்டும்" என்பதே வேதத்தின் பிரார்த்தனை.

"ஆனோ பத்ராஹ க்ரதவோ யந்து விஷ்வதஹ" என்று ரிக்வேதம் சாற்றுகிறது.

சைவத்தின் மூலநூல்கள் நால் வேதமும் சிவாகமும். இவை பற்றி சிவஞான சித்தியார் சாற்றும் செய்தியைச் சாற்றுகிறேன்.

வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்
வேறு உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதி அமலன் தருநூல் இரண்டும்;
ஆரண நூல் பொது; சைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்தி நிபாதர்க்கும்
நிகழ்த்தியது; நீள்மறையின் ஒழிபொருள் வேதாந்தத்
தீதுஇல் பொருள் கொண்டு உரைக்கும் நூல் சைவம்;
பிறநூல்
திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்தமாகும்.

வேதம் பொது; ஆகமம் சிறப்பு. இவையே சைவத்திற்கான ஆதார நூல்கள்.

பாஸ்கர சேதுபதி அவர்கள், சூளை சோமசுந்தர நாயகர் அவர்களுக்கு 'வைதிக சைவ சண்டமாருதம்' என்ற பட்டம் வழங்கி, பொற்கடக விருதும்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

புனைந்து அளித்தார். பெரியவர் நாயகரிடம் ஜே.எம்.நல்லசாமிபிள்ளை, மறைமலை அடிகள் முதலியோர் சைவசித்தாந்தப் பாடங்களை முறையாகப் பயின்றனர். நாயகர் பெற்ற சீர்த்தி கண்டு பொறாத ஒருவர் அவரைப் பழிக்கத் தலைப்பட்டார். அது கண்டு பொறாத மறைமலை அடிகள் வேதாந்த மதவிசாரம் என்ற நூலை 1899இல் வெளியிட்டார். 108 ஆண்டுகளுக்குப் பிறகு நான் இந்நூலை மீளவும் பதிப்பித்து உள்ளேன். மறைமலை அடிகள் இந்நூலில் வேத ஆகமங்களை நனிசாலப் போற்றி உள்ளார். உபநிடதங்களில் அவர் எத்துணை தோய்வு பெற்றிருக்கிறார் என்பதற்கு இந்த நூல் ஓர் சான்று. உபநிடதம் என்பது வேத முடிவு; வேதத்தின் இறுதிப் பகுதியாகும்.

சிவ பரம்பொருளைப் புரிந்துகொள்ள உதவுவன வேதங்களும் சிவாகமங்களும் ஆகும்.

சிவனாரே பரம்பொருள் என்பது சைவத்தின் அடிப்படைக் கொள்கை. இவரே சிவ நடராஜர்; ஆனந்த தாண்டவர்; தாண்டவேஸ்வரர். இந்தத் தாண்டவேஸ்வரர் பரதர் என்று ரிக்வேதத்தில் கூறப்பெறுகிறார். பரதர் என்ற சொல் தமிழில் வரதர் என்றும் வழங்கும். முழுமுதற்கடவுள் சிவனார் என்பதைப் பெரியபுராணம் எடுத்த எடுப்பிலேயே நிறுவுகிறது. மேலும் அதை வலியுறுத்தி ஒரு பாடலும் அதில் தொடர்ந்து வருகிறது.

ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த உறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாநடம் செய் வரதர் பொற் றாள்தொழ.

வரதர் பரதரே. அவர் என்ன செய்கிறார்? மாநடம் இயற்றுகிறார். நடனத்தின் மூலமே ஐந்தொழிலும் ஐயனால் இயற்றப்படுகிறது.

தேவாரம் என்பது வேதசாரம். இவ்வுண்மையை நிறுவ ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலரின் சீடர் காசிவாசி செந்திநாத ஐயர் 'தேவாரம் வேதசாரம்' என்ற நூலை வரைந்திருக்கிறார். இந்நூலையும் நான் மீளவும் பதிப்பித்துள்ளேன்.

இங்கு ஒரு செய்தியைக் கூறவேண்டும். சாதிகளை ஒழிக்கமுடியாது. 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாரதியார் பாடவில்லை. அவர், 'சாதிப் பெருமை இல்லை பாப்பா' என்றே சாற்றினார். சாதிகளை வளர்ப்பதே அரசுதான். எந்த விண்ணப்பத்திலும் விண்ணப்பதாரர் என்ன சாதி, என்ன உட்பிரிவு என்பதைக் குறிக்க வேண்டும். இவை குறிப்பிடப்படவில்லை என்றால் சலுகைகளைப் பெறமுடியாது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாதிகளைக் கடக்கவேண்டும். இது சைவம் சாற்றும் நெறி. சைவ நெறியாளர்கள் ஒரு சிலரைப் பற்றி மட்டும் கூறுகிறேன்.

அப்பர் அடிகள் வேளாளப் பெருந்தகை. அவர் குடி குறுக்கையர்குடி. அவரைக் காணாமலேயே அவரைத் தம்முடைய குருவாக ஏற்றவர் அப்பூதி அடிகள். அதன் காரணமாகவே அவர் 'அந்தணரில் மேலான அப்பூதி அடிகள்' என்று போற்றப் பெற்றார்.

சிவஞான போதத்தைத் தமிழில் தந்தவர் மெய்கண்டார். அவருடைய குடும்ப குரு சகலாகம பண்டிதர். அவர் கூறிய முறையைப் பின்பற்றியே, மெய்கண்டாரின் பெற்றோர், திருமுறையில் கயிறு சாத்திப் பார்த்து, அதன்படி விரதம் மேற்கொண்டு, அதன் பயனாக மெய்கண்டாரைப் பெற்றெடுத்தனர். இந்த சிவாகமகச் செல்வரான சகலாகம பண்டிதர் சிவபிராமணர் – சிவாசாரியர் மெய்கண்டாரின் பிரதம சீடர் ஆனார்.

உமாபதி சிவம் தில்லைவாழ் அந்தணர், இவர் தெய்வச் சேக்கிழாரைத் தம் நாயகராக ஏற்றவர். தெய்வச் சேக்கிழார் வேளாளர்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலர் அந்தணர் அல்லர். ஆனால் இவருடைய சீடர் காசிவாசி செந்திநாத ஐயர்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஒரு வேளாளர். இவருடைய பரமசீடர் தமிழ்த் தாத்தாவாகிய உ.வே.சாமிநாத ஐயர்.

பார்ப்பனர் குலத்தில் தோன்றிய எனக்குத் தெய்வமாக இருப்பவர் சேக்கிழார் பெருமானே. இப்பெருமானே எங்கள் குடும்பத்தின் வழிபடுகடவுள்.

செய்தி என்ன? சாதிகளைக் கடந்து அடியவர் என்ற பெருநிலையை ஒவ்வொருவரும் அடையவேண்டும். அப்படி வாழ்வார் தெய்வம் ஆவர்.

அறுபான் மூவர் உருவச் சிலைகள் தெய்வச் சிலைகளாக அமைக்கப்பட்டு ஆலயங்களில் பிரதிஷ்டை ஆகி உள்ளன. இவர்களுள் மீனவர், வைசியர், அந்தணர், அரசர், வேளாளர், இடையர், ஈழத்துச் சான்றார், வேடர், செக்கார், பஞ்சமர், பௌத்தர், அமாத்தியர், மாமாத்தியர், ஏகாலியர், புலையர், குயவர், பாணர், சாலியர் ஆகியோர் உள்ளனர். இவர்கள் அனைவருமே நாயன்மார்.

எளியேனின் தெய்வமாகிய சேக்கிழார் தீண்டத்தகாத மூவரைத்தாம் ஐயர் என்று கூறிப் போற்றியுள்ளார். அவர்கள் காட்டு வேடுவர், புலையர், பாணர் ஆவர்.

சைவ நால்வர் என்பார் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பி ஆரூரர், மாணிக்கவாசகர், முதல் மூவரை மூவர் முதலிகள் என்பர். இவர்கள் அருளியவையே தேவாரம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவாரம் என்றால் என்ன? இதற்குப் பல வகையாகப் பொருள் கூறப்பட்டன. தே-ஆரம், தெய்வம் அணியும் மாலை; தே-வாரம், தெய்வத்திற்கு செலுத்தப்படும் அன்பு, அவ்வன்பின் வெளிப்பாடான பாடல்கள் என்றெல்லாம் விளக்கியுள்ளனர். இவை நிற்க.

ஒரு காலத்தில் கல்வெட்டுக்களில் தேவாரம் என்ற பெயர் காணப்படவில்லை. "தேவார மாணிகள் மூவர்க்கும்" என்ற குறிப்பு திருவொற்றியூர் கல்வெட்டு ஒன்றில் காணப்படுகிறது. தேவாரம் என்ற பெயர் முதன் முதலில் இக்கல்வெட்டு மூலமாகவே வெளியாகி இருக்கிறது. இத்தேவார மாணிகள் ஓதுவார் அல்லர். இவர்கள் இறையவர்க்கு இயற்றப்படும் பூசனைகளுக்காக திருவமுது அட்டும் பரிசாரர்களே. கி.பி.969இல் சதுரானன பண்டிதர் இறை வழிபாட்டிற்கு நியமித்த பணியாளர்கள் பட்டியலில் தேவார மாணிகள் என்ற தொடர் காணப்படுகிறது. பண்டிதர் அவர்கள் இராஜாதித்த சோழனின் தளபதியாக விளங்கி, பின்னர் துறவு பூண்டு சதுரானன பண்டிதர் ஆனார்.

தேவாரம் என்பது ஆதியில் சமணக் கோயிலையே குறித்தது. பிறகு திருமடத்தைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது. அதன்பிறகு அரசனுடைய ஆன்மார்த்த மூர்த்திக்கு அமைக்கப்பட்ட கோயிலும் தேவாரம் என்று குறிக்கப்பட்டது.

தேவாரச் சுற்றுக் கல்லூரி என்ற ஒன்று கி.பி.1034 கல்வெட்டு ஒன்று மூலம் அறிமுகம் பெறுகிறது. திருப்புள்ளமங்கை சாசனம் ஒன்று "அம்பலத்துக்கும் சுற்றுக் கல்லூரிக்கும்" என்று குறிப்பிடுகிறது. இது இராஜராஜன் காலத்துக் கல்வெட்டு. இதற்குப் பிறகு முதலாம் இராஜேந்திரன் கல்வெட்டில் (கி.பி.1034) "தேவாரச் சுற்றுக் கல்லூரி" என்ற குறிப்பு காணப்படுகிறது.

மன்னர்கள் தங்கள் பிரத்தியேக வழிபாட்டிற்கு என்று நிறுவிய கோயிலே தேவாரம் என்று பெயர் பெற்றது. இக்கோயிலில் எழுந்தருளுவிக்கப்பட்ட இறைவனுக்கு "தேவார தேவர்" என்று பெயர். மேலும் தீட்சை பெற்றவர்கள் தங்களுக்கு என்று பூஜைப் பெட்டிகள் அமைத்துக்கொள்வர். வெளியூர் செல்லும்போது இப்பெட்டிகள் அவர்களோடு எடுத்துச் செல்லப்படும். ஆகவே தேவாரம் என்பது பூஜைப் பெட்டியையும் குறிக்கும். இச்செய்தி ஸ்ரீரங்கம் உ.வே.ஸ்தானிகம் பார்த்தசாரதி ஐயங்கார் தொகுத்த நாலாயிர திவ்வியப்பிரபந்த அகாரதியில் காணப்படுகிறது. வீடு பற்றி எரியும்போது அவசர அவசரமாக எல்லாப் பொருள்களையும் அகற்றும்போது, என்ன செய்கிறோம் என்று அறியாமல் செயல்படுவர். அப்போது 'தேவாரமும் செருப்பும் ஒக்கக் கட்டி' எடுத்துச் செல்லப்பட்டதை வைணவ வியாக்யாநம் (ஈடு) கூறியுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவபூஜா காலங்களில் திருப்பதிகமே விண்ணப்பம் செய்யப்பட்டது. பாடுவோர்க்கு அளிக்கப்பட்ட காணி (உரிமை நிலம்) திருப்பதிகக்காணி என்ற பெயர் பெற்றது.

மன்னரின் தேவாரக் கோயிலை நிர்வகித்தவன் பெயர் தேவார நாயகம் என்பதாம்.

இதுவரை கிடைத்த கல்வெட்டுகளைக் கொண்டு ஆராயுமிடத்து, திருப்பதிகம் தேவாரம் என்ற பெயரால் முதன் முதலில் சுட்டப்பட்ட ஆண்டு கி.பி.1286 என்று தெரியவருகிறது. திருக்குவளை என்ற பெயரில் இன்று விளங்கும் ஊரின் பழைய பெயர் கோளிலி என்பதாகும். இங்கு பாண்டியன் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு (கி.பி.1286) ஒன்று, ஆளுடைய பிள்ளை முன்பு தேவாரம் பாடுவதற்காக மாங்குடி வணிகன் கணபதி ஆசாரி 106 பொன் முதலீடு செய்தது பற்றிப் பேசுகிறது. இக்கல்வெட்டைக் குடவாயில் பாலசுப்பிரமணியன் கண்டுபிடிப்பதற்கு முன்பு, தேவாரம் என்ற சொல்லை முதன் முதலில், பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த இரட்டையரே பிரயோகித்தனர் என்று கூறி வந்தனர். இரட்டைப் புலவர்கள் ஏகாம்பரநாதர் உலா பாடினர். அதில்,

மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரம் செய்த திருப்பாட்டும்

என்ற அடிகள் காணப்படுகின்றன. இன்று மூவர் முதலிகள் தேவார மூவர் என்றே குறிக்கப்பெறுகின்றனர்.

தேவாரம் என்ற சொல் எந்தத் திருமுறையிலும் இடம்பெறாத சொல்லாகும்.

திருமுறை என்றால் பொருள் என்ன? முறை என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள. "கோசமும், பழமையம், ஊழுங் கூட்டும், ஆர்ப்பும், முறைமையும் முறையெனல் ஆகும்" என்று பிங்கலந்தை சாற்றுகிறது. கோசம் என்பது நூல், சைவத் திருவைத் தன்னகத்தே தேக்கி வைத்திருப்பது திருமுறை, இறைவன் உணர்த்த உணர்ந்து, உணர்ந்ததை முறைப்படி நூலாக்கியவர் திருமுறை ஆசிரியர் ஆவார். திருஞானசம்பந்தர் "எனதுரை தனதுரையாக" என்று அறிவித்துள்ளார்.

திருமுறை என்ற தொடரை முதன் முதலில் பயன்படுத்தியவர், காலத்தால் முற்பட்ட நாயனராகிய திருமூலரே. அவர் கூறுவதாவது:

ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண்டாமரை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே.

பாடுதற்குச் சிவனார் ஆணைதர, அதன்படி பாடியவர்கள் திருமுறை ஆசிரியர்கள். திருநாவுக்கரசரும் "பன்னிய செந்தமிழ் மாலை பாடுவித்து என் சிந்தனை மயக்கறுத்த திரு அருளினானை" என்று அருளியுள்ளார். ஆலால சுந்தரரை, "முன்பு என்னைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே என் பெயர் பித்தன் என்றே பாடுவாய்" என்று சிவபெருமான் ஆணையிட, நாயனாரும் "பித்தா பிறைசூடி எனப் பெரிதாம் திருப்பதிகம் இத்தாரணி முதலாம் உலகெல்லாம் உய எடுத்தார்." மேலும் சிவனார் சுந்தரருக்குத் தம் மறையளித்த திருவாக்கால் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று தொடங்கிப் பாடும்படி அருளியவாறே, சுந்தரரும் திருத்தொண்டத் தொகையைப் பாடி அருளினார். தெய்வச் சேக்கிழாருக்கும் சிவனார் "உலகெலாம்" என்று அடியெடுத்து அருள, பிரபு சேக்கிழாரும் திருத்தொண்டர் புராணம் பாடியருளினார். திருமுறை பாடிய நாயன்மாருள் சிவபிரானும் ஒருவர் ஆவார். அவர் பாடிய திருமுகப் பாசுரம் பதினோராம் திருமுறையுள் தரிசிக்கப்படுகிறது.

திருமுறை திருமறையே; வேதங்கள் எழுதாக் கிளவி. திருமுறைகள் எழுதுமறை. "வண்டமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்" என்று தெய்வச் சேக்கிழார் திருஞானசம்பந்தப் பெருமானின் பாடல்களைப் போற்றுகிறார். தில்லைக் கலம்பகமும, ஞானப் பிள்ளையாரை "எழுதுமறை மொழிந்த கழுமல முனிவன்" என்று குறிப்பிடுகிறது.

தேவார முதலிகள் காலம்

சிறுத்தொண்டர் பரஞ்சோதி என்ற பெயரில் விளங்கியவர். பல்லவ மன்னன் தளபதி. மகேந்திரவர்ம பல்லவன் சமணபட்டான். அப்பர் அடிகளுக்குக் கொடுமை இழைத்தான். மனம் மாறினான். சைவனாக மாறினான். அதன்பிறகு 5 ஆண்டுகள் வாழ்ந்து கி.பி.630இல் மறைந்தான்.

இம்மன்னன் மகன் நரசிம்மவர்ம பல்லவன். இவன் 642இல் வாதாபியை வென்றான். வெற்றியைத் தேடித் தந்தவர் பரஞ்சோதி. இவர் சைவர் என்று அறிந்து, இவர் சைவத்தில் ஈடுபட விழைந்து இவருக்கு ஓய்வு தந்தான் மன்னன். பரஞ்சோதி 642இல் ஊர் திரும்பி, மணம் செய்துகொண்டு இல்லறத்தில் ஈடுபட்டார். இவருக்குப் பிள்ளையாய்ப் பிறந்தவர் சீராள தேவர். இவர் மூன்று வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்டார். 5 வயதில் குடும்பத்தோடு சிவசாயுஜ்ஜிய பதவி பெற்றார். இது நிகழ்ந்த காலம் கி.பி.649 என்று தெரிகிறது.

தமக்கு எட்டு வயது நடைபெறும்போது அதாவது உபநயனம் முடிந்த ஓர் ஆண்டிற்குப் பிறகு ஞானசம்பந்தர் சிறுத்தொண்டர் வீட்டிற்கு வருகிறார். சிறுத்தொண்டர் சிவபதம் பெறுவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்பே அங்கே வந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதாவது கி.பி.648இல் அங்கு வந்தருளினார். ஆகவே, சம்பந்தர் பிறந்த ஆண்டு 640 என்பது தெளிவாகிறது. சம்பந்தர் 16 ஆண்டுகாலம் புவியில் வாழ்ந்தார். கி.பி.656இல் சம்பந்தரும், அப்பரும் சிவகதி அடைந்தனர். அப்பர், ஞானசம்பந்தருக்கு முன்பே சிவபதவி பெற்றார். அவர் உயிருடன் புவியில் இருந்திருந்தால் சம்பந்தர் திருமணத்தில் கலந்து கொண்டிருந்திப்பார். அப்பருக்கு வயது 81. 656இல் அவர் சிவகதி பெற்றதால் அவர் பிறந்த ஆண்டு 575 ஆகும்.

நம்பி ஆரூர் ராஜசிம்ம பல்லவன் காலத்தவர். இம்மன்னனை "கடல்சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான் காடவர் கோன்" என்று நம்பி ஆரூரர் போற்றி உள்ளார். இம்மன்னன் கி.பி.685 முதல் 705 வரை வாழ்ந்தவன். சுந்தரர் 18 ஆண்டுகள் வாழ்ந்தவர். ஆகவே அவர் காலமும் மேற்சொன்ன ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமே.

எட்டாம் திருமுறை திருவாசகமும், திருக்கோவையாரும் ஆகும். மாணிக்கவாசகர் இரண்டாம் வரகுண பாண்டியன் காலத்தில் வாழ்ந்தவர். இவர் 32 ஆண்டுகள் மட்டுமே புவியில் வாழ்ந்தவர். இவரது காலம் கி.பி.863, கி.பி.911 ஆகியஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாகும். மணிவாசகர் இயற்பெயர் சிவபாத்தியர். இது நம்பியாண்டார் நம்பியால் அருளப்பட்ட செய்தியாகும்.

ஒன்பதாம் திருமுறையில் இரண்டு நூல்கள் அடங்கி உள்ளன. அவை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்ப. திருவிசைப்பா ஆசிரியர்கள் ஒன்பதின்மர். அவர்கள் திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி காட நம்பி, கண்டராத்திதர், வேணாட்டு அடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமர், சேதிராயர் ஆகியோர்.

மனமுருகி இசைப்பதற்கு என்றே அருளப்பட்ட பாடல்களே திருவிசைப்பா பாடல்கள். சீவனைச் சிவனோடு இசைவிக்கும் பெற்றி உடைய கீதங்களே திருவிசைப்பா.

ஒன்பதாம் திருமுறையின் இறுதிப் பதிகமாக அமைந்திருப்பது திருப்பல்லாண்டு. இதனை அருளிச் செய்தவர் சேந்தனார் என்னும் அடியார்.

இத்திருமுறையின் இசைத்தன்மை ஒரு தனிச்சிறப்புடையது. ஏழிசை வல்லாராக விளங்கும் சிவனாரை, சொல்லின் வளமெல்லாம் முறுகுற்று கனிந்து கசிவந்த தித்திப்பாம் கவிதையில் குழைத்துப் பாடப்பட்ட பாடல்களே திருவிசைப்பா.

இசைப் பாடல்களில் சிவனாரைப் போற்றி முதன் முதலில் பாடியவர் காரைக்கால் அம்மையார், அப்பர் அடிகள் பத்துப் பண்களில் பரமனைப் பரவினார், இருபத்து நான்கு பண்களில் சிவனாரைத் தோத்தரித்துத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருப்பாடல்கள் அருளியவர் திருஞானசம்பந்தர். ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள் புறநீர்மை, காந்தாரம், சாளரபாணி, நட்டராகம், பஞ்சமம், இந்தளம் ஆகிய ஆறு பண்களில் தங்கள் பாடல்களை அமைத்துப் பாடியிருக்கிறார்கள். இத்திருமுறை ஆரூர், ஆவடுதுறை, இடைக்கழி, இராசராசேச்சுரம், இடைமருது, கங்கைகொண்ட சோழபுரம், களந்தை ஆதித்தேச்சரம், கீழ்க்கோட்டூர் மணியம்பலம், தில்லை, சாட்டியக்குடி, திரைலோக்கிய சுந்தரம், பூவணம், முகத்தலை, வீழிமிழலை ஆகிய பதினான்கு திருப்பதிகளில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் சிவபெருமானை ஏற்றுகிறது, போற்றுகிறது.

சேந்தனார் அருளிய பதின்மூன்று பாடல்கள் திருப்பல்லாண்டு எனப்படும், திருக்கோயிலில் பல்லாண்டு பாடுதல் தேவார காலத்திற்கு முன்பிலிருந்தே ஒரு பெருமரபாக விளங்கியிருக்கிறது.

நாடினார் கமலம் மலர் அயனோடு
இரணியன் ஆகம் கீண்டவன்
நாடிக் காண மாட்டாத் தழலாய நம்பானைப்
பாடுவார் பணிசெய்வார்
பல்லாண்டு கூறு பத்தர்கள் சித்தத்துள் புக்குத்
தேடிக் கண்டு கொண்டேன் திருவாரூர் அம்மானே.

இப்பாடலை அருளியவர் அப்பர் அடிகள்.

சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்டு இசைமின்

என்ற பாடலடி மாணிக்கவாசகர் அருளிய திருப்பொற்சுண்ணத்தில் வருகிறது.

ஆகவே பல்லாண்டு இசைப்பது நெடுஞ்சேய்மையான காலத்திலிருந்து விளங்கி வரும் மரபு என்பது தெளிவாகிறது. ஆனால் அக்காலத்தில் பாடப்பட்ட பல்லாண்டுப் பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

மன்னுகதில்லை வளர்க நம் பத்தர்கள்
வஞ்சகர் போய் அகலப்
பொன்னின் செய் மண்டபத்து உள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோன்அடி
யோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

என்று சேந்தனார் அருளிய பல்லாண்டு அவதாரமாகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பல்லாண்டு பாடி இறைவனை அடியார் வாழ்த்துவர். ஆண்டவனை அடியார்கள் வாழ்த்துதல் முறையோ என்றால் அது முறையான செயல் என்றே விடை கிடைக்கும். வாழ்த்துவதின் நோக்கம் என்ன என்பதை மணிவாசகர் விளக்கியுள்ளார். "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்" என்பது திருச்சதகத்தின் 15 ஆம் பாடல்.

திருமூலர் அருளிய திருமந்திரமே பத்தாம் திருமுறை. இதைத் திருமந்திரமாலை என்றும் சொல்லுவர். இது ஒன்பது தந்திரங்கள் கொண்டது. தந்திரம் என்னும் சொல் ஆகமம் என்றும் பொருள்படும். ஒன்பது ஆகமங்களின் சாரமாக உள்ளது திருமந்திரம். இவ்வாகமங்கள் காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்ப. ஆகமங்கள் வழி எழுப்பப்படுவனவே தென்னாட்டுத் திருக்கோயில்கள். அந்தந்தக் கோயிலுக்கும் அதற்குரிய ஆகமம் உண்டு.

சைவ சமயம் வைதிக சமயம். வேதத்தை ஆகமத்தின் வழி உணர்ந்து கொள்ளல் வேண்டும். வேதம் பொது; ஆகமம் சிறப்பு. "வேதங்கள் ஐயா! என ஓங்கி ஆழ்ந்து அகன்று" நிற்பவர் சிவபெருமான். அப்பெருமானை ஆகமமாகி நினறு அண்ணிப்பவராகக் காட்டுகிறது திருவாசகம்.

வேதத்தை ஒதுக்கிவிட்டு வைதிக சமயம் எழமுடியாது. திருமூலரும்,

வேதத்தை விட்ட அறம் இல்லை; வேதத்தில்
ஓதத்தகும் அறம் எல்லாம் உள, தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே

என்று அருளியுள்ளார். மேலும் அவர் "சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே" என்றும் கூறியுள்ளார்.

சிவாகம சாரத்தைத் தாம் அருளியுள்ளதையும் அவரே கூறியுள்ளார்.

நந்தி இணையடி நான் தலைமேற் கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்
தந்தி மதிபுனை அரனடி நாள்தொறுஞ்
சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே.

வேத ஆகமங்கள் வடமொழியில் உள்ளன. ஆகவே அம்மொழியைப் பயிலவேண்டும் என்ற கருத்துடையவர் திருமூலர். தமிழும் ஒரு தெய்விக மொழி. ஆகவே இவ்விரண்டு மொழிகளும் நம்மைப் பரம்பொருளுக்கு இட்டுச்செல்லும். இதையே,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாரியுங் கோடையும் வார்பனி தூங்க நின்று
ஏறியும் நின்று அங்கு இளைக்கின்ற காலத்து
ஆரியமும் செந்தமிழும் உடனே சொலிக்
காரிகையார்க்குக் கருணை செய்தானே

என்றும்,

அவிழ்க்கின்ற வாறும் அது கட்டுமாறுஞ்
சிமிட்டலைப் பட்டு உயிர் போகின்ற வாறும்
தமிழ்ச் சொல் வடசொல் எனும் இவ்விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலும் ஆமே

என்றும் திருமூலர் அருளியுள்ளார்.

மேலும், வேதமும் ஆகமமும் அபேதம் என்பதே திருமூலருடைய மதம். அவர் கூறுவதாவது:

வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்பும் என்று உள்ளன
நாதன் உரைஅவை; நாடில் இரண்டு அந்தம்
பேதமது என்பர்; பெரியோர்க்கு அபேதமே.

திருமந்திரம் ஆறு அந்தங்கள் பற்றி விரித்துரைக்கின்றது. இவற்றுள் சைவ சித்தாந்தம் முதலிடம் பெறுகிறது. சைவ சித்தாந்த நுட்பக் கருத்தை திருமூலர் விளக்கிய பாடலை அனைவரும் அறிவர்.

பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசுபாசம் அனாதி;
பதியினைச் சென்று அணுகா பசுபாசம்;
பதிஅணுகில் பசு பாசம் நிலாவே.

சிவனாரைத் தவிர ஏனையோர் பசுக்களே (சிற்றான்மாக்களே). சிவனாரே பசுபதி.

பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசம் மூன்றுண்டு;
பசுத்தன்மை நீக்கிப் பாசம் அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே.

நம்மாழ்வாரால் ஏற்கப்பட்ட ஜீவன்முக்தி நிலையை இராமானுஜர் ஏற்கவில்லை. ஜீவன் முக்திக்குப் பிறகே விதேக முக்தி. இதுவே சைவ சித்தாந்தக் கொள்கை. திருமூலரும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்தித்தலால்
சித்தாந்தத்தே நிற்போர் முத்தி சித்தித்தவர்;
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொருள் ஆதலால்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே

என்று அருளியுள்ளார்.

சிவயோகத்திலிருந்து அந்நிலையில் ஆண்டுக்கு ஒரு பாடல் திருமூலர் அருளினார் என்று தெய்வச் சேக்கிழார் அருளியுள்ளார். "ஊன் உடம்பிற் பிறவி விடந்தீர்ந்து உலகத்தோர் உய்ய ஞானமுதல் நான்கு மலர் நற்றிரு மந்திர மாலை பான்மைமுறை ஓர் ஆண்டுக்கு ஒன்றாக பரம்பொருளாம் ஏனஎயிறு அணிந்தாரை ஒன்றவன் தான்" என்று எடுத்து,

முன்னிய அப்பொருள் மாலைத் தமிழ் மூவாயிரஞ் சாத்தி
மன்னிய மூவாயிரத் தாண்டுஇப் புவிமேல் மகிழ்ந்து இருந்து
சென்னிமதி அணிந்தார்தம் திருவருளால் திருக்கயிலை
தன்னில் அணைந்து ஒரு காலும் பிரியாமைத் தாள்
அடைந்தார்.

மூவாயிரம் ஆண்டு ஒருவர் வாழமுடியுமா? முடியும். சாதாரணமாக ஆணோ பெண்ணோ 8 அங்குல அளவு காற்றை உள்வாங்கி பன்னிரண்டு அங்குல அளவு காற்றை வெளியிடுகிறார். இதில் ஒவ்வொரு சுவாசத்தாலும் நான்கு அங்குல காற்று நட்டமாகிறது. ஆகவே குறிப்பிட்ட ஆண்டுகளே ஒருவர் வாழமுடிகிறது. மேலும் நோய்களும் ஒருவருடைய வாழ்வைத் தேய்க்கின்றன. யோகம் பயின்றார் காற்றின் கணக்கறிவார். அதன்மீது ஆட்சி செலுத்தவும் அவர் அறிவார். ஒரு நாளைக்குச் சில ஆயிரம் சுவாசங்கள் நிகழ்கின்றன. இவற்றைப் படிப்படியாகக் குறைத்து ஒரு நாளைக்கு ஒரு சுவாசமே போதும் என்ற நிலையை யோகியவர் எய்துவர். இந்த சுவாச சேமிப்பை (breath-bank) சுவாச வங்கி என்பர் மேனாட்டார். மூச்சுக்காற்று சேமிப்பால் வாழ்நாள் நீட்டிக்கப்படும். ஆதிமனிதன் ஆதாம் 930 ஆண்டுகளும், ஸெத் 912 ஆண்டுகளும், ஈனோஸ் 905 ஆண்டுகளும் நோவா 950 ஆண்டுகளும் வாழ்ந்ததாக விவிலியம் சாற்றுகிறது.

பிற திருமுறைகளுக்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பு பதினோராம் திருமுறைக்கு உண்டு. இதில் அமைந்துள்ள முதற்பாடல் சிவபெருமானாலேயே பாடப்பட்டது. இத்திருமுறையின் அருள் ஆசிரியர்கள் பன்னிருவர், சிவபெருமான், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமான், நக்கீர தேவர், கல்லாட தேவர், கபிலதேவர், பரணதேவர், இளம் பெருமான் அடிகள், அதிரா அடிகள், பட்டினத்து அடிகள், நம்பியாண்டார் நம்பி ஆகியோரே இப்பன்னிருவர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இத்திருமுறையில் நாற்பது நூல்கள் அடங்கியுள்ளன. இவை அனைத்தும் பிரபந்த வகையைச் சேர்ந்தவை.

திருமுகப் பாசுரத்தை அடுத்து வருவன பேயார் பாடல்கள். இவரே தமிழ் இசையின் தாயுமாவார். இவ்வம்மையாரை, "நம்மைப் பேணும் அம்மைகாண்" என்று உமையம்மைக்குச் சிவனாரே அறிமுகம் செய்து வைத்தார் என்பதிலிருந்தே, இப்பெருமாட்டியின் பெருங்கீர்த்தியை ஓரளவேனும் உய்த்து உணரலாம்.

இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும்
படரும் நெறி பணியா ரேனும் சுடர் உருவில்
என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பு அறாது என் நெஞ்சு அவர்க்கு

என்றுள்ள இப்பாடலே அடியார்க்கு உள்ள குணநலம் 'இதுவே' என்று காட்டுகிறது.

அன்பிற்சிறந்த பொருள் ஏதும் எவ்வுலகத்தும் இல்லை என்பதை அம்மையார் விளக்கியுள்ள பாங்கு அற்புதமானது. ஏழு சமுத்திரங்களையும் உலைநீராக ஆக்கி, அது கொள்ளுகின்ற அளவிற்கு காய்களை நறுக்கி இட்டு, சமையலை முடித்து, பின்னர் சமைத்தது அத்தனையும் சிவனார் கையில் உள்ள கபாலத்தில் கவிழ்த்தாலும், அப்பண்டம் ஒரு மூலையில் தங்கிற்றே அல்லாமல், கபாலத்தை நிறைக்கவில்லை. ஆனால் எம்மிறை பலி தேர வீதியில் வந்தபோது அன்பாலே பெண்கள் இட்ட சிறுபலி கபாலத்தை நிறைத்தது. பிச்சைப் பாத்திரம் என்றால் அது சிவனார் கையுள்ள கபாலம்தான். இதை நிறைக்கும் சக்தி அன்பிற்கே உண்டு.

ஓத நெடுங்கடல் எத்தனையும் உய்த்துஅட்ட
ஏதும் நிறைந்தில்லை என்பரால் - பேதையர்கள்
எண்ணாது இடும்பலியால் என்னோ நிறைந்தவா
கண்ணார் கபாலக் கலம் - அற்புதத் திருவந்தாதி, 74.

நம்பியாண்டார் நம்பி பத்து நூல்களின் ஆசிரியர். அவை திருநாரையூர் விநாயகர் திரு இரட்டை மணிமாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம், திருத்தொண்டர் திரு அந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திரு அந்தாதி, ஆளுடைய பிள்ளையார்மீது திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருஉலா மாலை, திருக்கலம்பகம், திருத்தொகை, திருநாவுக்கரசு தேவர் திருஏகாதச மாலை என்பன.

மாணிக்கவாசகன் என்ற திருநாமம் அடிகளுக்குச் சிவனார் வழங்கியது. அவர் வாதவூரிர் பிறந்ததால் அவரை வாதவூர் அடிகள் என்பர். சரி. அடிகளின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இயற்பெயர் என்ன? நம்பியாண்டார் நம்பி வரைந்த பனுவல் கோயில் திருப்பணியர் விருத்தமாகும். இதன் பாடல் 58 பின்வருமாறு:

> **வரு வாசகத்தினில் முன்றுணர்ந் தோனை வண்தில்லை மன்னைத்**
> **திருவாதவூர்ச் சிவபாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்**
> **பொருளார் தரு திருக்கோவை கண்டேயு மற்றப்பொருளைத்**
> **தெருளாத வுள்ளத்தவர் கவிபாடிச் சிரிப்பிப்பரே.**

இப்பாடலில் இரண்டு செய்திகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (1) திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் பெயர் சிவபாத்தியன் என்பது. (2) இவரே திருச்சிற்றம்பலக் கோவை எனப்படும் திருக்கோவையாரின் ஆசிரியருமாவார். அமரர் மு.அருணாசலம் போன்றோர் மாணிக்கவாசகர் திருக்கோவையாரின் ஆசிரியர் அல்லர் என்ற கருத்துடையவர். இன்னும் சிலர் இக்கருத்தைப் பேணி வருகின்றனர். இக்கருத்து தவறானது என்பதை நம்பியாண்டார் நம்பியின் பாடல் நிறுவியுள்ளது.

பெரியபுராணம் என்பது செயல்முறை சைவ சித்தாந்தம் (APPLIED SAIVA SIDDHANTA). பிரெஞ்சு நாட்டு அறிஞர் ஃபிரான்ஸிஸ் குரோ அவர்கள் கூறிய உரை பெரியபுராணத்தின் பெருமையை நிலைநிறுத்தும்.

"பெரியபுராணம் என்பது ஒரு தன்னிகரற்ற நினைவுச் சின்னம். அதனுடைய பன்முகத்த நுண்மாண் நுழைபுலம் இந்தியச் சான்றாண்மையின் சிகரத்தை எட்டிப் பிடித்திருக்கிறது. இதில் அற்புதக் கிரந்தங்கள் நேர்த்தியாக நினைவூட்டப்பட்டிருக்கின்றன. மேலும் புராணக் காதைகள், உண்மை நிகழ்ச்சிகள், பாத்திரப் படைப்புகள் ஆகிய அனைத்துமே ஒரு புனிதமான பணிக்கென்று பயன்படுத்தப்பட்டுள்ளன. தேவாரப் பாடல்களைத் தம் பாக்களின் இழையாகவும் அவையிற்றினின்றும் சற்றும் பிறழாமல் சேக்கிழார் அடிகள் பயன் கொண்டிருப்பது அவருடைய வலிமையைக் காட்டுகின்றது. இவ்வாறு, பல்வேறு இழைகளின் ஊடு வரலாறு, புராணக் காதைகள், புனைவு ஆகியவை ஊடு இழைகளாகப் படர்ந்து உள்ளன. முடிவாக, உன்னத உண்மை, தேவாரப் பாடல்களின் கருத்தோட்டம் என்பன பின்னிப் பிணைந்து, பிரிக்க முடியாதபடி சேக்கிழார் அடிகளின் படைப்பில் படர்ந்திருக்கின்றன. அடிகள் முற்றுமாகத் தேவாரத்தில் தோய்ந்து அத்துவிதப்பட்டிருக்கிறார். சேக்கிழார் அடிகளுக்குப் பின்னர் வந்த அனைவருமே தேவாரப் பனுவல்களை அவர் காட்டிய வழியேதான் அறியமுடியும்."

அடியார்களே நனிசால மிகப் பெரியோர். தமிழ்க் கடவுளான முருகப்பெருமான், ஔவையரைக் குளிர நோக்கி, "பிராட்டியே, பெரியது எது?" என்று கேட்டருளினான். தமிழ் மூதாட்டி, அக்கடாவிற்கு, அவன் அருளாலே இங்ஙனம் விடை இறுத்தாா்:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரியமாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே.

ஆகவே, சிவன் அடியார்கள் பெருமைக்கு ஈடும் இல்லை; இணையும் இல்லை.

அடியவர்களின் பெருமையைச் சிவபெருமான் நம்பி ஆரூரருக்கு எடுத்துரைத்து அருளினார்.

பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்;
ஒருமையால் உலகை வெல்வார் ஊனம்மேல் ஒன்று மில்லார்;
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையுங் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய்...

அடியார்கள் தியாகிகள். ஆசையை அடக்கி, அன்பில் திளைத்து, அருளால் உயர்ந்து, தியாகத்தில் ஒன்றி இருப்பர்.

உயர்ந்தது எது? இழிந்தது எது? என்பதை வல்வில் ஓரிமீது கழைதின் யானையார் பாடிய பாடல் மூலம் அறியலாம்.

ஈஎன இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று.

இழிந்தன்று என்பது ஒரு சொல். அதன் பொருள் இழிந்தது எனபதாம். யாசகன் ஒருவன் 'எனக்குக் கொடுப்பாயாக' என்று இரப்பது இழிவான செயல். அதைவிட இழிவானது யாதெனில், யாசிக்கப்பட்டவன், 'உனக்கு ஒன்றும் தரமாட்டேன்' என்பதுதான். அதுபோல்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று.

உயர்ந்தன்று என்பது உயர்ந்தது என்று பொருள்படும். கடவுளிடம் கூட இரப்பது இகழ்ச்சி என்று தெய்வத் தமிழன் கருதினான் போலும். உயர் பொருளை கடவுளே உவந்து வழங்க முன்வந்தாலும், 'வேண்டாம்' என்று கூறவல்ல விறல் படைத்தவர் அடியார் ஆவர்.

அடியார்கள் நேசிப்பது அடியார்களையே. திருக்கூட்டத்திற்கு 'சத்சங்கம்' என்றும் 'புனிதர் பேரவை' என்றும் பெயர். இதன் சிறப்பை விஞ்சிய சிறப்பு யாண்டும் இல்லை. ஆரூர் தேவாசிரியன் மண்டபத்தில் அடியார் ஈண்டி இருப்பர். அக்காவணம், "அரந்தை தீர்க்கும் அடியவர்"க்கு இடமாவது. அவர்தம் மேனிமேல், "நிரந்தர நீற்று ஒளி" படர்ந்திருக்கும். மேலும் அவர்கள் மத்தியில் "புரந்த அஞ்செழுத்து ஓசை" பொலியும். ஆகவே, தேவாசிரியன் மண்டபம் "பரந்த ஆயிரம் பாற்கடல் போன்றதே." இவ்வடியார்களின் "மாசிலாத மணிதிகழ் மேனிமேல்" பூசப்பட்ட வெண்ணீறு எவ்வளவு புனிதமானதோ, அதேபோல் அவர்தம் உள்ளங்களும் புனிதமானவை. இவர்கள்,

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

முத்தியையும் திரஸ்காரம் செய்ய வல்லவர் திருத்தொண்டர். மேலும் இவர்தம் பெருமையை, தெய்வச் சேக்கிழார் இப்படி வருணிக்கிறார்.

ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன்பணி அலது ஒன்றிலர்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ!

அகப்பகையை வென்று, ஞானமுடி சூடித் திகழ்தலே வீரம். ஐம்புலனை வென்றார் தம் வீரமே உண்மையில் வீரம். இவர்தம் வீரத்தைக் கண்டு விசுவேசுவரனே விதிர்விதிர்த்துப் போனான். சேணிடையும் தீங்கு அடையாத் திருத்தொண்டராகிய திருநீலகண்டத்துக் குயவனாரையும், அவர் துணைவியாரையும், அருளோடு நோக்கி, "வென்ற ஐம்புலனால் மிக்கீர்" என்றே விளித்து அருளினான். இவ்வடியார் பெற்றிருந்த வீரமே வீரம். அத்தகு வீரத்தை 'என்னால் விளம்ப முடியுமோ?' என்று சேக்கிழார் பெருமான் அருளியுள்ளார். காமதகனம் செய்யும் ஆற்றல் கறைக்கண்டனுக்கு மட்டுமா உண்டு? அவனுடைய அடியார்களுக்கும் அவ்வல்லபம் உண்டு.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

பெரியபுராணம் இதிகாசம் போல் அளவில் பெரிதன்று. என்றாலும் தியாகிகளான திருத்தொண்டர் வரலாற்றைத் தன்னகத்தே தேக்கி வைத்துள்ள திப்பிய கிரந்தமாக இது திகழ்வதால் இதைப் பெரியபுராணம் என்று உலகமே போற்றுகிறது.

பெரியபுராணம் பற்றி திரு.வி.க. ஒரு செய்தியைக் கூறுகிறார்: "பெரியபுராணம் பௌராணிகத்தை வித்தாகக் கொண்டு எழுந்த நூல் அன்று. அது சரித்திரத்தை வித்தாகக் கொண்டு எழுந்த காவியம்."

புராணம் என்ற சொல்லுக்குச் சரித்திரம் என்ற பொருளும் உண்டு. புராணம் என்ற சொல்லை பழமையைக் குறிக்கும் ஒரு சொல்லாகவே எல்லோரும் கூறி வருகின்றனர். புராணம் பழமை என்ற பொருளும் தரும். இப்போது இச்சொல்லுக்கான சிறப்புப் பொருளைக் காண்போம். "பூரணாத் புராணம்." எது பூரணமோ, பரிபூரணமோ, சம்பூரணமோ அது புராணம்.

திருப்பாசுர விளக்கம் அருளிய தெய்வச் சேக்கிழார் சாற்றிய அரிய செய்தியை இங்குக் கூறுகிறேன்.

வேத முதல்வன் எனும் மெய்த் திருப்பாட்டினிலேர்
ஆதி உலகோர் இடர்நீங்கிட ஏத்த ஆடும்
பாத முதலாம் பதினெண் புராணங்கள் என்றே
ஓது என்று உரைசெய்தனர் யாவும் ஓதாதுணர்ந்தார்

ஞானசம்பந்தப் பெருமான்,

பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே

என்று அருளியுள்ளார். சூதன் என்பார் சூதபௌராணிகரே. புராணம் பூரணமாதலால் பூரணனை நமக்கு அறிவிக்கின்றது. இத்தகு புராணங்களின் சிகரம் பெரியபுராணம். இதை விஞ்சும் நூல் உலகில் இல்லை. ஞானியருள் சேக்கிழார் பெருமான் பரமஞானி ஆவார். அதனால்தான் உமாபதியார்,

மதுர இராமாயண கதை உரைசெய்த
வான்மிக பகவனும் ஒப்பல்லன்;
விதிவழி பாரதம் உரைசெய்து கரைசெய்த
வேத வியாதனும் ஒப்பல்லன்
சிதைவற ஆயிர நாவுடன் அறிவுள
சேட விசேடனும் ஒப்பல்லன்;
பொதியமலைக் குறுமுனியும் ஒப்பல்லன்
புகழ் புனைகுன்றை முனிக்கு

என்பார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குன்றை என்பது குன்றத்தூர். இதுவே சேக்கிழார் பெருமான் அவதாரத் தலமாகும். இங்குள்ள சேக்கிழார் பெருமானின் திருமாளிகையைச் செப்பம் செய்து சேக்கிழார் பெருமான் கோயிலாக அமைத்துத் தந்திருக்கும் தருமபுரம் சுவாமிநாதன் அவர்கட்குச் சைவ உலகம் நன்றிக் கடன்பட்டிருக்கிறது.

சேக்கிழார் பெருமான் சோழச் சக்கரவர்த்தியின் முதல் மந்திரி; அருட்கவி. அப்பெருமான் பாடிய ஒரே நூல் பெரியபுராணம். சுற்றி வளைக்காமல் எடுத்த முதல் பாட்டிலேயே பரம்பொருள் சிவனாரே என்று ஐயம் திரிபுகளுக்கு இடம் இன்றி, சேக்கிழார் அடிகள் தெளிவாகவும், அழுத்தமாகவும் அறிவிக்கின்றார். 'உலகெலாம்' என்று சேக்கிழார் பெருமானுக்கு அடி எடுத்து அருளியவர் அம்பலவாணர். பொது நீக்கி சிவனாரையே வழிபடல் வேண்டும் என்பது சைவ சித்தாந்தத்தின் உயிர்க் கொள்கை.

ஆகவே, தாம் வரைந்த முதற்பாடலிலேயே சிவபரத்துவத்தை இப்படிப் பாடினார்:

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நில வுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

உலகெலாம் என்ற தொடர் பொருள் பொதிந்த ஒரு தொடர். உலகு என்பது ஈண்டு பிரபஞ்சத்தைக் குறிக்கும். திருக்களிற்றுப்படியாரும் "அம்மையப்பரே உலகிற்கு அம்மையப்பர்" என்று சாற்றுகின்றது. புவனங்கள் 224 என்று சாற்றும் சைவ சித்தாந்தம். இவற்றுள் அடங்கிய உலகங்களுக்குக் கணக்குக் காட்டமுடியாது.

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பு அரும் தன்மை, வளப்பெரும் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்று எழில் பகரின்
நூற்று ஒரு கோடியின் மேற்பட விரிந்தன

என்று மணிவாசகர் அருளியுள்ளார்.

ஓங்கி உலகளந்த உத்தமனாலும் அறியப்படாத சிவனார், உலகம் உவப்ப "உலகெலாம்" என்று அருளிய பிறகு, சேக்கிழார் அடிகள் திருவுள்ளத்தில் அமர்ந்து புராணம் பாடியுள்ளார். ஓசை ஒலியெலாம் ஆன பரமசிவனார் உதவிய தொடர், ஒலி மிக்கு இலக சீரடியார் செவிப்புலத்து எங்குமாகி நிறைந்தது. இது அதி சூக்கும அசரீரி என்று போற்றப்படுகிறது. இவ்வுணர்வு நிலவிய நிலையில், சேக்கிழார் அடிகள் புராணத்தை வரைந்து தலைக்கட்டினார். ஆகவே பெரியபுராணம் என்பது பதிவாக்குப் பெட்டகமே.

பெரியபுராணம் ஒரு மிகப்பெரிய மலைத்தொடராகும். அதில் எத்தனையோ சிகரங்கள் உள்ளன. சாதாரண மனிதர்களால் அச்சிகரங்களை எட்டிப்பிடிக்க முடியாது. அதாவது நாயன்மாரின் வாழ்க்கை வரலாறுகள் புரிதலுக்கு அப்பாற்பட்டவை. நாயன்மார் அனைவருமே மிக உயர்ந்த பெருமை பெற்றவர்கள்.

நாயன்மார் அனைவரும் உண்மையான வீரர்கள்; புனிதர்கள். அவர்களுடைய ஒரே நோக்கம் இறைவனுக்கும், இறையடியார்களுக்கும் தொண்டு செய்வதே. இறையொளியில் மற்ற செயல்கள் எல்லாமே அவர்களுக்குப் பொருளற்றவை. இத்தகைய தன்னலமற்ற திருத்தொண்டால் அவர்கள் மற்ற மானிடர்களினின்றும் வேறுபட்டவர்கள். அவர்கள் நடவடிக்கைகளும், செயல்களும் இறைவனால் ஏற்படுத்தப்பட்டவை. ஒவ்வொரு நாயனாரின் வாழ்க்கையும் இறைவன் காட்டிய வழியில் உருப்பெற்றது. இந்த வழிகாட்டல்கள் எண்ணற்றவை. சில சமயங்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. சுந்தருடைய தொடர்பை விறன்மிண்டரும் ஏயர்கோன் கலிக்காமரும் வெறுத்தனர். ஆனாலும் ஒன்றை நினைவிற்கொள்ளல் வேண்டும். அருளாளர்கள் ஒருவருக்கொருவர் முரண்படுவதில்லை.

நாயன்மார் எல்லோருமே இறைவனின் அருளாசி பெற்றவர்கள். ஒவ்வொருவரும் ஆட்கொள்ளப்பட்டவரே. ஆட்கொள்பவரும் ஒருவரே. அவர்களுடைய எண்ணம், சொல், செயல் அனைத்துமே புனிதமானவை. இவை எதைக் குறிக்கின்றன என்பதை இறையருள் மட்டுமே நம்புவோர் உள்ளத்தில் புரியவைக்க முடியும். இறைத்தன்மையை உணர்ந்தோரே தமக்குள் இறையனுபவத்தை உணரமுடியும். சிவனின் இருப்பை அவர்கள் தமக்குள் நாள்தோறும் உணர்ந்துள்ளனர். "என் உளமே புகுந்த அதனால்" என்பது திருஞானசம்பந்தரின் அனுபவ மொழி. இறையடியாரின் உடம்பு, ஆன்மா, உணர்வு எல்லாமே சிவன் என்னும் ஒரே பரம்பொருளின் துடிப்பைக் கொண்டிருக்கின்றன.

பெரியபுராணத்தில் நாம் திருத்தொண்டர்களையும், இறையடியார்களையும் சந்திக்கிறோம். அவர்கள் இறையடியார்களின் தொண்டர்களும் கூட. அவர்கள் இறைவனுக்கும், இறையடியார்களுக்கும் செய்யும் தொண்டில் ஒரு சிறிதும் வழுவினாரில்லை. இன்றைய உளவியலாளர்களும், உளவியல் பகுத்தாய்வாளர்களும் அவ்வடியார்களை 'இயல்பானவர்கள்' என்று ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆம், அவர்கள் இயல்புக்கு மாறானவர்கள்தாம்! கடவுள் பித்து பிடித்தவர்கள் தாம்! அவர்களுடைய முக்கிய தருணங்களில் மனித இயல்புக்குப் புறம்பாக நடந்துகொண்டுள்ளார்கள். தங்கள் கொள்கையில் மிகவும் பிடிவாதமாக

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

இருந்திருக்கின்றனர். மிகச்சிறிய தவற்றைக்கூட அவர்கள் மிகப்பெரிய பாவமாகக் கருதினர்.

கண்ணப்ப நாயனார் புராணம் கண்ணப்பரின் இறையனுபவத்தையும், சிவகோசரியாரின் இறையனுபவத்தையும் விரித்துப் பேசுகிறது. இதுபோன்றே அறுபத்துமூன்று நாயன்மாரின் இறையனுபவங்களும் பெரியபுராணத்தில் பேசப்பட்டுள்ளன.

அப்பர் சுவாமிகள், கடலில் கட்டுண்டு மிதந்ததும், நீற்றறையிலிருந்து வெளிவந்ததும், அவரை மிதிக்க வந்த யானை அவரை வணங்கித் தீயோரை மிதித்ததும் அற்புதங்கள். காரைக்காலம்மையார் மாங்கனி பெற்றதும், இளமை துறந்து பேய் வடிவம் பெற்றதும் அற்புதங்கள். ஒவ்வொரு நாயனாரின் வரலாறும் இறையனுபவ வெளிப்பாடே. ஆகவே சிவானுபூதி பெற ஓதி, போற்றப்பட வேண்டிய நூல்கள் திருமுறைகள். பெரியபுராணம் இத்திருமுறைகளின் முடிமணியும் கவசமுமாம்.

பலப்பல வரலாற்றுச் செய்திகள் பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ளன. அகத்தியர் கமண்டலத்திலிருந்து காவிரி வெளிப்பட்டது (52), அம்பல முகட்டில் ஆதித்தசோழன் பொன் வேய்ந்தது (4116), இமயமலையில் சோழ அரசன் புலிக்குறி பொறித்தது (51), இமயமலையில் இருந்த பழைய வழியை அடைத்து புதிய வழியை சோழமன்னன் தோற்றுவித்தது (552), உபமன்னிய முனிவர் ஸ்ரீகிருஷ்ணனுக்கு சிவதீக்கை அளித்தது (24), இலக்குமி திருவாரூரில் வழிபட்டது (86), உமையம்மை காஞ்சியில் சிவபூசனை செய்தது (1134-1150), உமையம்மை 32 அறங்கள் வளர்த்தது (1152, 1153, 3443), உறையூர்ச் சோழன் ஆற்றில் இழந்த முத்தாரம் அரனார் திருமஞ்சனக்குடத்தில் புகுந்து அப்பெருமானின் முடிமீது ஏறியது (3236), ஒற்றியூர் பெருமான் அரசாணை ஆவணத்தில் 'ஒற்றியூர் நீங்கலாக' என்றெழுதி எழுத்தறியும் பெருமான் ஆனது (3363), பெண்ணை ஆறு துறையூரின் தெற்கில் இருந்தது (228), காஞ்சிபுரத்தைக் கரிகால் பெருவளத்தான் புதுக்கியது (1667), மன்னன் சிபிதுலையேறியது (4202), பரசுராமன் சிவனாரை வழிபட்டு பரசு பெற்றது (491), சேக்கிழார் பெருமானுக்கு அம்பலவன் அடியெடுத்து அருளியது (9) ஆகியவை பெரியபுராணம் போற்றும் செய்திகள்.

பெரியபுராணத்தில் இறையனுபவம் என்பது கருணையில் ஊன்றி நிற்கிறது. அது தெய்வத் திறமும், திருமறையும் தரும் பேரானந்த நிலை. இதனை அனுபவிப்பவர், தம்முள் குடிகொண்டுள்ள தலைவனை மின்வெட்டும் நேரத்தில் உணரும் நிலை, கணத்தில் உணர்ந்த அனுபவம், கடைசிவரை நீடிக்கும் ஒன்றாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இறையனுபவம் என்பது ஒரு கொண்டாட்டம்; அறிதல் நிலை; வரம்புக்குட்பட்ட ஆன்மா, வரம்பற்ற மெய்ம்மையுடன் நேரடித் தொடர்பு கொள்ளுதல். அது ஒரு தழுவல், அத்வைதம் என்னும் இரண்டற்ற நிலை. அருட்கதிர்களின் ஊடுருவலால் ஏற்படும் சிலிர்ப்பு. மாணிக்கவாசகர் இவ்வருட்கதிரை மாசற்ற ஜோதி, பரஞ்சோதி, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி, சுயஞ்சோதி என்றெல்லாம் குறிப்பிடுகின்றார்.

இறையனுபவம் என்பது காரணகாரியத்திற்கு அப்பாற்பட்டது. எனவே, பகுத்தறிவுக்கு எட்டாதது. பகுத்தறிவாளரின் மறுப்புக்கொள்கை என்னவென்றால் இது பற்றிய மொழி பொருளறிவிப்பதில்லை என்பதே. பகுத்தறிவு என்பது, அதன் பகுத்தறியும் தன்மையால், பகுத்தறிவுக்கு உட்படாத பொருள்கள் இருக்கின்றன என்பதை ஏற்க வேண்டும் என்று நான் பெரிதும் நம்புகிறேன். பகுத்தறிவுக்கு எட்டாததும், இயல்புக்கு மாறானதும், பகுத்தறிவைக் கடந்ததுமான சோதனைக்குட்படாத நிகழ்வுகள் உள்ளன என்பதை எவர் ஏற்கிறாரோ அவர்தாம் பகுத்தறிவாளராகக் கருதப்படத்தக்கவர்.

இறையனுபவத்தை மகான் அரவிந்தர் கடவுள் ஸ்பரிசம் என்று கூறுகிறார். அதுபெரும்பாலும் ஓர் அமைதியான, விவரிக்க இயலாத, பண்டறியாத பராபரானுபவங்கள் பரந்தெழும் நிலையாகும். அது அந்தமிலா அகண்டம் கடந்து, பிரேமையில் உள்ளவரை பேரின்பச்சூழலில் ஆழ்த்துகிறது. ஓர் அற்புதக் கனவுநிலையில் அவர் ஆழ்கிறார். தெய்விக எண்ணங்களிலும், பேரின்பபோகத்திலும் அழுந்துவிக்கும் அறிகுறிகள் நொடிப்பொழுதில் தோன்றிவிடுகின்றன. காயத்துள் அமுதூற ஊற, இன்னமுதாய ஆனந்த வெள்ளத்துள் அமிழ்கிறார். இவ்வாறு, நம்பும் சிந்தையுள் நணுகி, ஆடுவித்து அகம்புகுந்த ஆனந்தம் தெளியும்போது, கருத்துக்கெட்டாத ஓர் இறையனுபவம் மட்டுமே எஞ்சுகிறது.

இத்தகைய இறையனுபவத்தை நாயன்மார் வாழ்க்கை நமக்கு எடுத்துரைக்கிறது. திருமுறைகளில் தோய்வு ஏற்பட்டால், இத்தகைய இறையனுபவத்தை நாமும் பெறமுயலலாம். திருமுறைகள் இறையனுபவ வெளிப்பாடுதானே! அவற்றை ஓதுவதால் அவை நம்மை செம்மைப்படுத்தி, சிவன் சேவடியில் நம் சிந்தையை நாடவைக்கும்.

சேக்கிழார் சென்னி தீண்டும் சிவன் சேவடி போற்றி, போற்றி!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6. பெரியபுராணப் பெண்மணிகள்

பெரியபுராணப் பெண்மணிகளைப் போற்றுவாரைப் போற்றி என் உரையைத் தொடங்குகிறேன்.

வால்மீகியின் இராமாயணம் 24,000 சுலோகங்கள் கொண்டது. வால்மீகி 'சீதையின் சரித்திரம் மகத்தானது' என்று அறிவித்திருக்கிறார். வைணவர், இராமாயணம் 'சிறையிருந்தாள் ஏற்றம் கூறுவது' என்று கூறுவர். சீதையில்லையேல் இராமாயணம் இல்லை. சீதையை வளர்த்தவர் ஜனக மகாராஜா. ஆனால் அம்மகாராஜாவின மனைவியின் பெயர் என்ன? வால்மீகி கூறவில்லை.

மனைவி என்பவள் இல்லறத்தின் சுருதி போன்றவள். சுருதி, அதாவது தம்புரா, பாடகர் முன் துருத்திக் கொண்டு இராது. பாடகர் பின்புறம் சுருதி ஒலித்துக்கொண்டு இருக்கும். ஆனால் சுருதி தப்பினால்/கலைந்தால் தெரியும் சேதி. இப்படிக் கூறியவர் தமிழ்த் தாத்தா. அவர்தம் சுயசரிதையில் தம் மனைவியின் பெயரை ஒரே ஒரு முறை மட்டும் அறிவித்துள்ளார்.

மகாகவி பாரதியார், "காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர்; கடவுள் நிலை அவளாலே எய்தலாகும்" என்று அருளியுள்ளார். மேலும் அவர் ஆங்கிலத்தில் கூறியதாவது: Civilization is the taming of man by woman.

பாரதியார் தம் மனைவி மீது பல பாடல்கள் பாடியிருக்கிறார். செல்லம்மா என்று அவரால் கூறப்பட்டது பின்னாளில் கண்ணம்மா என்று மாற்றப்பட்டு விட்டது.

மனைவிக்குப் பெயர் வாழ்க்கைத் துணை என்பது. அப்படித்தான் தமிழ் வேதம் சாற்றுகின்றது.

தர்ம பத்தினியில்லையேல் தர்மம் என்ன ஆகும்?

மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

மனைவியே அறம் வளர்க்கும் நாயகி. 32 அறங்களை இயற்றியவர் சிவனாரா? சிவசக்தியாரா?

குமரகுருபர சுவாமி சிவனாரைப் பார்த்து இப்படி ஒரு செய்தி கூறினார்: "நீயோ மாதொரு பாகன். நீயேன் பிக்ஷாடனன் ஆகத் திரிகின்றாய்? உன் பிச்சைப் பாத்திரத்தை, சற்றே உன் இடப்பக்கம் நீட்டினால், உமையருளால் அப்பாத்திரம் பொங்கி வழியுமே!"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"அனைத்தும் அவளால் வந்த ஆக்கம்" என்று தானே சிவஞான சித்தியார் சாற்றுகின்றது.

"இல்லது என் இல்லவள் மாண்பு ஆனால் உள்ளது என் இல்லவள் மாணாக்கடை" என்பது வேதமன்றோ! மேலும் இவ்வேதமே "பெண்ணின் பெருந்தக்க யாவுள?" என்றுதான் உசாவுகின்றது.

தாயின் சிறந்த கருணையைக் காட்டிலும் சிறந்த கருணை ஒன்று உண்டோ? ஒன்றே ஒன்றுதான் உண்டு. அதுவே சிவனருள். அருள் என்பது உமைதானே. சிவபெருமான் தம் அன்பை எப்படி வெளிப்படுத்தினார்? தாயுமானார் ஆகித்தானே அதை அவரால் வெளிப்படுத்த முடிந்தது,

க்ருஹஷ்ணி என்ற வடசொல் தமிழில் இல்லாள் என்று குறிக்கப்படும். க்ருஹஷ்ணி என்ற சொல்லிற்கு ஆண்பால் சொல் வடமொழியில் இல்லை. தமிழிலும் இல்லாள் என்ற சொல்லிற்கு ஆண்பால் இல்லை. இல்லான் என்று சொன்னால் அது ஒன்றுமே இல்லாதவனைக் குறிக்கும். "இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்று எடுத்த தாய் வேண்டாள், செல்லாது அவன் வாயிற் சொல்" என்றுதானே தமிழ் மூதாட்டி ஔவையார் அருளியுள்ளார்.

இல்லாள் என்ற சொல்லுக்கு இணையான ஆண்பாற் சொல் இல்லை என்ற குறையை நீக்குவதற்குத் தானே, எளியேன் தெய்வமாம் சேக்கிழார் பெருமான் இல்லாளன், இல்இறைவன், மனைப்பதி என்று மூன்று தொடர்களை அருளியுள்ளார். மாமுநி மில்டனாரும் ஆதி தம்பதி ஆதாம்-ஏவாள் பற்றிப் பேசும் போது, "He (Adam) for God, and she for God in him" என்று தானே பதிவு செய்திருக்கிறார். இக்கருத்தைப் பண்டே செந்நாப் போதார் சாற்றியிருக்கிறாரே.

தெய்வம் தொழாஅ கொழுநன் தொழுது எழுவாள்
'பெய்' எனப் பெய்யும் மழை.

"பெய்" என்பது வேண்டுகோள் அன்று. அஃதோர் கட்டளை (A fiat, a solemn command.)

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை கூறியது இதுவே. "மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா!"

பெண்ணின் பெருமை அவள் கற்பில் அடங்கியுள்ளது. கற்பின் கனல் நெருப்பை எரிக்கும். அதற்குச் சான்று பகர்ந்தவன் அக்னிக் கடவுள். சீதையை அக்கினிப் பிரவேசம் செய்வித்தான் இராமன். அதிலிருந்து எழுந்த அக்னி பகவான், "ராமா, இப்பவித்திரையின் கற்புக் கனல் என்மீது எவ்வளவு கொப்புளங்களை உண்டாக்கி இருக்கிறது. நீயே பார்" என்றான்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாமுநி மில்டனார் வரைந்த சிறு நாடகம் கோமுஸ் என்பதாகும். இதை அவர் 23 ஆம் வயதில் யாத்தார். காட்டிலே சகோதரி காணாமல் போக, அண்ணன் தம்பியிடம் கூறுவான். "கவலைப்படாதே. பாதுகாப்பின்றி சகோதரி இல்லை." "அது கேட்டு தம்பி அவளுக்கு எது பாதுகாப்பாய் உளது, கூறு" என்றான். அப்போது மூத்தவன் கூறுவான்: "அதுவே அவள் கற்பு, சகோதரா. முற்றுமே கற்பினால் வனையப்பட்ட, கரும்பொன் ஆடை அது."

"It is chastity, my brother, chastity.

She that has that is clad in complete steel."

மில்டனார் தம் நாடகத்தை இப்படி நிறைவு செய்கிறார்: "... if Virtue feeble were Heaven itself would stoop to her."

அன்பு சிவணிய கற்பினால் சாதிக்க இயலாதது ஏதுமில்லை. இது பற்றி பேயாராம் காரைக்கால் அம்மையார் அருளிய செய்தி இதுவே.

ஏழு கடல்கள் உலைநீராக, அதில் அனைத்துப் பண்டங்களையும் பெய்து, சமையல் நடக்கின்றது. அடப்பட்டதை எப்படியோ சிவனாரின் பிக்ஷா பாத்திரத்தில் இடுகின்றனர். இடப்பட்டது சிவனாரின் பிரம கபால பாத்திரத்தின் ஒரு மூலையில் ஓட்டிக் கொண்டிருந்தது. ஆனால் சிவபத்தியால், பெருமான் நீட்டிய பாத்திரத்தில் கைப்பிடி அளவு அன்னம் இட்டனர் பெண்கள். அப்போது அது பாத்திரத்தை நிறைத்து பொங்கி வழியத் தொடங்கியது.

"ஓத நெடுங் கடல்கள் எத்தனையும் உய்த்து அட்ட
ஏதும் நிறைந்தில்லை என்பரால்; – பேதையர்கள்
எண்ணாது இடும் பலியால் என்னோ நிறைந்தவா
கண்ணார் கபாலக் கலம்!"

சிவபெருமான் அன்பெனும் பிடியில் அகப்படும் மாமலை. அந்த அன்பு அளப்பரிது. அதன் பெருந்தேக்கமாய் பெண்கள் விளங்கினர். சிவபக்தியைப் பரப்ப மாணிக்கவாசகர் ஆண் மக்களின் உதவியை நாடவில்லை. பெண்களைத் தாம் தெரிவு செய்தார். அடிகள் பாடிய திருவெம்பாவை, திருஅம்மானை, திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருஉந்தியார், திருப்பொன்னூசல் ஆகியவை பெண்களுக்காகவே பாடப்பட்டன. பெண்கள் தாய்மார் ஆகித் தம் பிள்ளைகளுக்கு இவற்றை பயிற்றுவித்தனர். அதனாலே சிவபக்திப் பெருக்கெடுத்து ஓடுகின்றது. ஆண்கள் நாத்திகம் பேசுவர். இன்றளவும் ஒரு நாத்திகப் பெண்ணை நான் பார்த்ததில்லை.

தமிழ்க் கவிஞர்கள் தாம் பாடிய நீதி வாக்கியப் பாடல்களை பெண்ணை விளித்துப் பாடினர். வெண்பா பாடும் போது, பூவிற் பொலி குழலாய் என்றும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நன்னுதால் என்றும், கொங்கையாய் என்றும், பூங்குழலாய் என்றும், மதி என் முகத்தாய் என்றும், மாதே என்றும், ஒண்தொடி என்றும், அதிர் வளையாய் எனறும், அன்ன பிற விளிகளையும் அமைத்துப் பாடுவர்.

உயர்ந்த பொருள்கள் எல்லாமே மாதர் அம்சம். அஷ்ட ஐஸ்வர்யங்களும் பெண்களே. அஷ்டலக்ஷ்மிகளை அறியாதார், போற்றாதார் யார்?

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்கள். அன்னையே முதலில் போற்றப்பட வேண்டியவர்.

பட்டினத்தடிகள், அருணகிரிநாதர் போன்றோர் பெண்களை இழித்தனர்; பழித்தனர், தெழித்தனர் என்பர். அவர்கள் பொருட் பெண்டிரையே கண்டனம் செய்தனர். உத்தமிகளைப் போற்றினர்.

நாவுக்கரசர் அவதரித்த ஊர் திருவாமூர். இவ்வூரை என் தெய்வமாம் சேக்கிழார் பெருமான் திருவாமூர் திருவாமூர் என்பர். திருஆம் ஊரே திருவாமூர். திரு என்பதே லக்ஷ்மியைக் குறிக்குமே. இவ்வூருக்கு வந்தருளிய அருணகிரிநாதர் பாடிய திருப்புகழின் ஒரு பகுதியைக் கூறுகின்றேன்.

மாது புகழை வளர்க்கும் ... திருவாமூர்
வாழு மயில் இருக்கும் ... குமரேசா
காதல் அடியார் கருத்தின் ... பெருவாழ்வே
காலன் முதுகை விரிக்கும் ... பெருமாளே.

திருவாமூர் மாது புகழை வளர்க்கும். மாது என்பது அப்பரின் தாயார் ஆகிய மாதினியார், தந்தையார் ஆகிய புகழனார் ஆகியோரையும் குறிப்பால் உணர்த்தும். அருணகிரியார் யமனுக்கு எச்சரிக்கை விடுக்கின்றார்.

"திருவாமூரில் வாழும் பக்தர், பக்தைகள் முன் நீ வரக்கூடாது. வந்தால் முருகன் உன் முதுகை விரிப்பான்."

திலவகதியார் இல்லையேல் நமக்கு அப்பர் அடிகள் கிடைத்திருப்பாரா?

பல நாயன்மாரின் தாய்மார் பெயர்களோ, மனைவியார் பெயர்களையோ நாம் அறியோம். இதற்கான பட்டியலை அமைக்கத் தொடங்கினால் அது நீளும். ஒன்றை மட்டும் நினைவிற் கொள்வோம். இல்லறம் நடத்திய சிவனடியார்கள் நாயன்மாராக மலரக் காரணமாக இருந்தோர் அவ்வந் நாயனார்க்கு வாய்த்த மனைவியரே. இதை 40,000 கோயிலில் சொல்லுவேன். இத்தரும பத்தினிகளுள் மூவரைப் பற்றி மட்டுமே, பல சொல்லக் காமுறாமல், பயனில சொல்லாமல் சில செய்திகளே கூறுவல்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருத்தொண்டத் தொகையைப் பாடியவர் இருவர் என்பார் சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார். முதலடியின் பகுதியைப் பாடியவர் சிவபெருமான். அதைச் சிரம் மேல் தாங்கி பாடலைச் சிவன் அருளால் நிறைவு செய்தவர் நம்பி ஆரூரர். தில்லைவாழ் அந்தணர் முதல் இடம்பெறுகின்றனர். அடுத்து வருபவர் திருநீல கண்டத்துக் குயவனார். இவர்தம் இயற்பெயரோ இவருடைய மனைவியார் இயற்பெயரோ நாம் அறியோம். இருவருமே வாய் ஓயாமல் நீலகண்டம், நீலகண்டம் என்று யாண்டும், எஞ்ஞான்றும் ஜபித்து வருவர். தாம் பாட முன்வந்த போது நம்பி ஆரூரர், ஏன் இந்நாயனார் பெயரை முதலிலே கூறினார்? காரணம் காண்பம்.

அந்நாளில் ஆடவனுக்குத் திருமண வயது 16; பெண்ணிற்கு 12. இந்தப் பழக்கம் உலகெங்கும் வியாபித்து இருந்தது.

ஜூலியட் என்பாள் பதினான்கு வயதை எட்டி விட்டாள். "ஐயகோ, இன்னமும் இவளுக்கு நாயகன் கிட்டவில்லையே?" என்று வருந்துகிறாள் அவள் தாய். மகளோ தனக்குத் திருமணம் வேண்டாம் என்று கூறுகிறாள். அவளிடம் அவள்தாய் சொல்லுகிறாள்.

"Well, think of marriage now,
Younger than you,
Here in Verona, ladies of esteem
Are made already mothers."

(நன்று நின் திருமணம் பற்றி எண்ணுக.
உன்னை விட இளைய, மதிப்போடு கூடிய பெண்கள்
முன்னமேயே தாய்மார் ஆகி உளர் ...)

தமிழ்நாட்டில் 12 வயதில் பெண்ணின் திருமணம் நிகழ்தல் வேண்டும். புனிதவதியாருக்கு வயது அதைத் தாண்டி விட்டது. என் தெய்வமாம் சேக்கிழார் பெருமான், புனிதவதியார் "இல் இகவாப் பருவம்" உற்றார், என்று அருளிவிட்டார். திருமணமாகாத பெண் 12 வயதைத் தாண்டி விட்டால், அவள் தன் வீட்டை விட்டு வெளியே வருதல் கூடாது. அவள் உற்ற பருவம் "இல் இகவாப் பருவம்" ஆகும். எந்தப் பெண்ணுக்கும் ஒரே கணவன் தான். ஆண் விரும்பினால் சிலரை மணக்கலாம். சங்க காலத்திலிருந்தே ஒரு கணவன் பரத்தையிடமும் இன்பம் துய்க்கலாம். அவன் மனைவி அதை ஏற்க வேண்டும். என்ன கொடுமை.

பரிபாடல் கூறும் செய்தி ஒன்றைக் கூறுகிறேன். திருமணமான பெண் ஒருத்தி வைகையில் நீராடுகிறாள். அங்கு ஒரு பரத்தையும் நீராடுகிறாள். அப்பரத்தை அணிந்து இருக்கும் நகையைக் கண்ட இவள், "அடி நீ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அணிந்திருக்கும் நகை என்னுடையது'' என்ன, அப்பரத்தை, "இது உன்னுடையதாக இருந்தது; இப்போது என்னுடையது; இதை எனக்குப் பரிசாகத் தந்தவன் உன் புருஷன்; மேலும் நீ ஏதாவது சொன்னால், உன் கால் சிலம்பையும் கழற்றிவிடுவேன்'' என்றாள். நொந்து போன மனைவியை அருகிருந்தோர் சமாதானப் படுத்தினர்.

இப்பின்புலத்தை நினைவில் கொள்ளுங்கள்.

திருநீல கண்டத்துக் குயவனார் மிகச் சிறந்த சிவபக்தர். கறைக்கண்டன் கழலடியே காப்பாகக் கொண்டவர். என்றாலும் அவர் சேக்கிழார் பெருமான் அருளியவாறு, "இன்பத் துறையில் எளியர் ஆனார்.'' இந்நிலையை அக்கால சமுதாயம் ஏற்றுக் கொண்டது என்று கூறமாட்டேன். சகித்துக் கொண்டது. மனைவியரும் சகித்துக் கொண்டனர்.

ஆனால் நாயனாரின் மனைவியார் இதை சகிக்க ஆற்றாதவராக இருந்தார். ஏன்? சிவ சின்னங்களை அணிந்து கொண்டு சிவ தியானத்தில் ஈடுபட்டிருக்கும் கணவர், காமத்தைக் கட்டுப்படுத்த முடியாதவராக இருப்பது, காமதகனம் செய்திருக்கும் கண்ணுதலுக்கு உரிய அன்புத் தொண்டு நிலையை அலட்சியம் செய்தவர் ஆகிவிடுவாரே! சமாதானம் செய்ய முயன்று மனைவியைத் தீண்ட வந்த கணவரை நோக்கி, "தீண்டு வீராயின் எம்மைத் திருநீல கண்டம்'' என்றார் மனைவியார்.

பேதியா ஆணை கேட்டப் பெரியவர், அக்கணமே "பெயர்த்து நீங்கினார்.'' அவ்விடம் விட்டுப் பெயர்ந்தார்; அக்காம விழைவினின்றும் நீங்கினார். இதன் பொருளை சுகப்பிரமம் அவர்கள் இப்படி விளக்கினார்: "பெண்ணே நான் இணைவிழைச்சை விரும்பினேன். உண்மை. ஆனால், அந்த விருப்பத்தினை நான் நிர்த்தனப் பிரியனான நீலகண்டன் மீது வைத்திருக்கும் பெருங் காதலோடு ஒப்பிடத் தக்கதோ; இல்லை, இல்லை, ஒருகாலும் இல்லை.''

நம் நாயனார் பெயர்த்து நீங்கி, ஏதிலார் போல நோக்கி, "நீ 'எம்மை' என்றதனால் எந்த மாதினையும் நான் மனத்தினாலும் தீண்ட மாட்டேன்'' என்றுரைத்தார். அப்போது நாயனார் வயது 18 இருக்கலாம். எப்படியும் அவர் இருபது வயதினைத் தாண்டவில்லை. மனைவியோடு ஒரே கூரையின் கீழ்தான் வாழ்ந்தார்கள். நெருப்பும் பஞ்சும் அருகருகே இருந்தன. ஆனால் தீப்பிடிக்கவில்லை. என்ன அதிசயம்!

இருவரும் மேற்கொண்ட நிலையை எவரும் அறியார். தம்பதியருக்கு வயது ஏறியது. "வளமலி இளமை நீங்கி'' அவர்களுககு வடிவுறு மூப்பு வந்தது. உடல் தளர்ந்தாலும், சிவபக்தி தளரவில்லை. நாயனார் எண்பதாம் வயதைத் தாண்டிவிட்டார். அவர் மனைவியார் 76 ஆம் அகவையில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருந்தார். அறுபது ஆண்டுகளுக்கு மேல் உடல் உறவு இன்றி இருந்தனர். இதை யாரும் அறியார்.

இவர்கள் பெருமையை உலகுக்கு அறிவிக்கவே சிவபெருமான் சிவயோகி வேடத்தில் வந்து, குயவனார்க்கு திரு ஓடு ஒன்று தந்து, அது மறையுமாறு செய்து, வழக்காடி நாயனாரையும் மனைவியாரையும் குளத்தில் மூழ்கி எழ வைத்து, இருவரையும் விண்வெளியில் இருந்து இங்ஙனம் விளித்தார்: "வென்ற ஐம்புலனால் மிக்கீர்!" இதன் பொருள் என்ன? சிவனாரைப் போல் நாயனாரும் மனைவியாரும் காம தஹனம் செய்து பெருவாழ்வு வாழ்ந்து காட்டினர் என்பது தானே.

இந்நிகழ்ச்சி நம்பி ஆரூரரை உலுக்கி விட்டது. நம்பி ஆரூரர் யார்? பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு, ஒரு நாள் சிவனார் தம் திருமேனியை ஓர் ஆடியில் கண்டார். அவ்வுருவத்தை நோக்கி "சுந்தரா, வருக" என்றார். அங்ஙனம் தோன்றியவர் சுந்தரர். சிவ கைங்கரியத்தில் பல ஆயிரம் வருடங்கள் ஈடுபட்டு இருந்தார். பாற்கடல் கடையப்பட்ட போது ஆலகாலவிடம் தோன்றியது. அப்போது அனைவரும் சிவனாரிடம் அடைக்கலம் புகுந்தனர். புகவே, சிவனார், சுந்தரரை நோக்கி, "அவ்விடத்தை இவ்விடத்துக் கொணர்க" என்று பணித்தார். சுந்தரரும் பிரபஞ்ச அளவு வியாபித்து நின்றதைத் திரட்டித் தம் கையில் எடுத்து வந்து சிவனாரிடம் சமர்ப்பிக்க, அதைத் தம் கண்டத்தில் தேக்கி, நீலகண்டர் ஆயினார். அன்று முதல் சுந்தரர் ஆலால சுந்தரர் ஆயினார். இறைவன் விபூதி மடலைத் தாங்கியிருந்தார். சிவனாருக்கு மலர் பறித்து மாலை தொடுத்தல் என்ற பணியில் ஈடுபட்டனர். இவரைப் போலவே உமையின் சேடியர் கமலினியும் அநிந்திதையும், மலர் பறித்து உமையம்மைக்கு மாலை தொடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இம்மூவரும் கயிலைத் தோட்டத்தில் தினமும் சந்தித்து வந்தனர். அவர் அவர் பணி மீது அவர் அவரும் கருத்தாய் இருந்து வந்தனர். ஆனால் ஒருநாள் சுந்தரர் அவ்விருவர் மீது தம் மனத்தைப் போக்கினார். காதல் மாதரும் காட்சியில் கண்ணினார். இப்படி நிகழ்வானேன்? இஃதோர் சிவ லீலை. சுந்தரரைப் பூமியில் பிறக்க வைத்து அவர் மூலம் திருத்தொண்டத்தொகை பாடுவிக்க வேண்டும். திருத்தொண்டத் தொகையாலேயே சைவம் தழைக்கும். இத்தொகையைச் சற்றே விளக்கி திருத்தொண்டர் அந்தாதி எழுந்தது. இவ்விரண்டு பனுவலையும் ஆதாரமாகக் கொண்டு பெரிய புராணம் அவதாரமாயிற்று.

திருத் தொண்டத் தொகை வித்து;
திருத் தொணடர் அந்தாதி செடி;
பெரிய புராணம் மகாவிருக்ஷம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆதார நூல் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை. ஆகவே இத்திருத்தொண்டத் தொகை தரவே, சுந்தரர் மாது இருவர் மீது மனம் போக்கினார். மனம் போக்கியதால் கயிலையிலிருந்து புவிக்கு வர வேண்டிய நிலை அவர்க்கு ஏற்பட்டு விட்டது. தொகை நூலைத் தொடங்கி வைத்தவர் சிவனார். அவர் தம்மைத் தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று அறிவித்தார். சரி; பனுவலை மேலும் எப்படித் தொடர வேண்டும்?

கண நேர நோக்கினால் சுந்தரர் பூமிக்கு வர வேண்டியதாயிற்று. கவனியுங்கள். Dag Hamarskjold கூறியது இதுவே. பளிச்சென்று இருக்கும் மேஜை விரிப்பில் ஒரு சிறு தூசு இருந்தாலும் அது கண்ணை உறுத்தும். அது உயரமான சஞ்சாரத்தில் ஒரு சுயஇன்ப நினைவு மரணத்தில் முடிந்து விடக் கூடும்.

"On a really clean table-cloth the smallest speck of dirt annoys the eye. At high altitude a moment's self-indulgence may mean death."

சுந்தரருக்கு ஏற்பட்டது ஒரு கண நேர அஜாக்கிரைதானே! ஆனால் குயவனார் ஒரு கண நேர அஜாக்கிரதைக்கும் இடம் கொடாமல் வாழ்ந்து காட்டினாரே. அந்நாயனாரும் தில்லையில் வாழ்ந்தவர் அல்லரோ? ஆகவே அந்நினைவு சுந்தரருக்குள் தோய்ந்திருந்ததால், 'திருநீல கண்டத்து குயவனார்க்கு அடியேன்' என்று பாடத் தொடங்கினார்.

இளையான்குடி மாற நாயனார் தம் பெருஞ்செல்வம் முழுவதையும் தொண்டர்தம் பணிக்கு அர்ப்பணித்தவர். கடும் வறுமைக்கு ஆளானார். அவரும் அவர் துணைவியாரும் கொடிய பட்டினியோடு மாழாந்து இருந்தனர். இரவு நேரம்; மாரிக்காலம்; கடுங்குளிர். இந்த நேரம் பார்த்துப் பரமசிவனுக்குப் பசி எழுகின்றது. மலைமலையாய் தம் முன் நிவேத்திய வகைகள் படைக்கப்பட்டாலும் அப்பெருமானுக்குப் பசி தோன்றாது. அன்றாடம் பிட்டு சுட்டு விற்று, கிடைக்கும் சொற்பத் தொகை கொண்டு ஒரு வேளை உண்டு வாழும் வந்தியாம் பிட்டு வாணிச்சியைப் பார்த்த உடனே சிவனார்க்குப் பசி எழும்.

இப்போது பசி உற்ற பெருமான், பட்டினி கிடக்கும் நாயனார் வீட்டுக் கதவைத் தட்டுகிறான். மழையில் நனைந்து வந்தவரை நாயனார் வரவேற்று. அவர் ஆடையின் ஈரம் நீங்க உதவினார். பசியோடு அவர் வந்திருப்பதை அறிந்த நாயனார், தம் மனைவியை விளித்து,

நமக்கு முன்பு இங்கு உணவு இலையாயினும்
இமக் குலக்கொடி பாகர்க்கு இனியவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமக்கு நாம் இன் அடிசில் தகவுற
அமைக்கு மாறு எங்ஙனே அணங்கே!

என்றார். தூய இல்லாள் அகத்திருக்க, இல்லாத பொருள் உண்டோ? நலிவைத் தாங்கி நயக்கும் கற்புடைய அத்துணைவியாரும், மறுமாற்றமாகத் தம் கணவரிடம்,

மறறொன்றும் காண்கிலேன்
ஏதிலாரும் இனித் தருவார் இல்லை
போதும் வைகிற்றுப் போமிடம் வேறில்லை

என்று கூறித் தம்மையே நொந்து கொண்டார். அங்ஙனம் நொந்து நின்ற நிலையிலும், கணவனைப் பார்த்து, “இன்று பகலில் தாங்கள் விதை நெல்லை எடுத்துச் சென்று விதைத்து விட்டு வந்தீர்கள். அவையிற்றை வாரிக் கொணர்ந்தால். வல்லவாறு அமுது ஆக்க இயலும்” என்றார். இதைக் கேட்ட கணவனார், திடீரென்று பெருஞ்செல்வம் கைவந்தவர் போல் மகிழ்ச்சியில் திளைத்தார். கூடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு, கண்ணை மறைக்கும் நள்ளிரவில், கொட்டும் மழையில், காலால் வழி தடவி, கைகளினால் விதை நெல்லைக் கோலி, வாரி, கூடையை நிறைத்துக் கொண்டு வீடு திரும்புகிறார். கணவர் வருகைக்காக வீட்டு வாயிலில் காத்துக் கொண்டு இருந்த மனைவியார் கூடையை வாங்கி, சேறுடன் சருவியிருந்த நெல்மணிகளைக் கழுவினார். அடுப்பு மூட்ட விறகில்லை. நாயனார் மனையில் இருந்த, கூரையைத் தாங்கி நிற்கின்ற அலக்குகளை அறுத்து வைத்தார். மனைவியார் நெல்லை வறுத்து, அரிசி ஆக்கி உலையில் இட்டார். மனைவியார், ‘கறிக்கு என் செய்வது’ என்று கூற, நாயனார் கொல்லைப்புறம் சென்று, குழி நிரம்பாத புன்செய் குறும் பயிர் தடவித் தடவி, பறித்து வந்தார். அவற்றைக் கழுவி, தம்கைத் திறத்தால் வேறு வேறு கறியமுதம் ஆக்கினார்.

இதற்கு இடையில் வந்த விருந்தினர் உறங்கிப் போய்விட்டார்.

நாயனார் அவர் துயிலை அகற்றி, அமுது செய்தருள வேண்டினார். வந்தவர் உடனே சோதியாய் எழுந்துத் தோன்றினார். செழுந்திரு மனைவியாரும், சிவனார் பூசை செய் திருத்தொண்டரும் திகைத்து நின்றனர். அத்திவ்ய தம்பதியாரை நோக்கி சிவனார் கூறியதாவது, “அன்பனே! அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும் என் பெரும் உலகை எய்தி இரு நிதிக் கிழவன் தானே முன் பெருநிதியம் ஏந்திமொழிவழி ஏவல் கேட்ப இன்பம் ஆர்ந்திருக்க” என்று அருளினார்.

இப்புராணம் சாற்றும் செய்தி இதுவே. உத்தம மனைவியிடம் பேர் ஆற்றல் கரந்திருக்கும். அது எப்போது வெளிப்படும்? கணவன் முற்றுமாய்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கலங்கி நிற்கும் நிலையில் அது வெளிப்பட்டு, அவனுக்குக் கை கொடுக்கும். "Every noble wife has a reserve-power. She is indeed a reservoir of power."

இனி, நான் போற்ற இருக்கும் பெருமாட்டி பற்றி, நாயேன் யாது கூறிவிட முடியும்? பேர் எழிலாட்டியாம் இவ்வுத்தமி ஒரு நாயனாரின் புதல்வியாக அவதரித்து, வேறு ஒரு தீவிர சிவபக்தராய் விளங்கிய நாயனாரை மணந்தவர். இந்தச் சிவசுந்தரியின் பெருமையை யாரே அறிவார்? மகாகவி பாரதியின் சொற்கள் கொண்டு சொல்லுவேன். இவ்வுத்தமியின் உன்னதத்தை, 'நக்க பிரான் அறிவான்; பிற நரர் அறியார்.'

மானக்கஞ்சாற நாயனார் கஞ்சானூரில் அவதரித்தவர். இவ்வூர் கஞ்சானகரம் என்ற பெயர் பூண்டுள்ளது. இந்நாயனார் அதி தீவிர சிவபக்தர். இவரை என் தெய்வம் இப்படி அறிமுகம் செய்கிறது.

அப் பதியில் குலப் பதியாய் அரசர் சேனாபதியாம்
செப்ப வரும் குடி விளங்கத் திரு அவதாரம் செய்தார்;
வைப் பனைய மேன்மையினார் மானக் கஞ்சாறனார்.

தம்முடைய பொருள்கள் எல்லாம் சிவனுக்கும், சிவன் அடியார்க்கும் உரியன, என்று கருதிச் செயல்பட்டார். குறிப்பறிந்து அடியார் தேவைகளை நிறைவு செய்பவர். இவர் விரும்பிய, இனிப்பிறவாமை வரத்தை இவருக்கு நல்க, இவருக்கு ஒரு பெண் பிறந்தார். அப்பெண்ணை, மழைக்கு உதவும் பெரும் கற்பின் மனைக்கிழத்தியார் ஆகிய நாயனார் மனைவி ஈன்றார். சிவநலம் சிவணிய சிவ பக்தையான அச்செல்வி வளர்ந்து மணப் பருவத்தை எய்தினார். செம்மணியின் தீபமாய் ஒளிர்ந்தார். நீண்டு குழன்று நெய்த்து இருண்டு நெடுநீலம் பூண்டு புரிந்து சரிந்து கடை சுருண்டு அவர் கூந்தல் விளங்கிற்று. அவருக்கும் ஏயர்கோன் கலிக்காமர் என்ற மகத்தான சிவபக்தருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமண நாளும் வந்தது. தையலின் தளிர்க் கையைத் தம் தடக்கையால் பிடிக்க வேண்டிய மணமகன் இன்னும் வந்து சேரவில்லை. அப்போது இருநிலத்தின் மிசை தோய்ந்த எழுதரிய திருவடியும், திருவடியில் பஞ்ச முத்திரையும் திகழ்ந்து இலங்கு, சிவனார் ஒரு மாவிரதியார் கோலத்தில் அங்கு வந்தார்.

மாவிரதி என்பார் கடுமையான விரதங்களை அனுட்டிப்பார். சவம் தாங்கு மயானத்தின் சாம்பல், எலும்பு, தலையோடு, மயிர்க்கயிறு தரித்தே இருப்பர். மயிர்க்கயிறு அவரது பூணூல். அது நீண்ட தலைமயிரால் உருவாக்கப்படுவது. அதற்குப் பஞ்சவடி என்று பெயர். வந்த மாவிரதியை மனமகிழ்வோடு வரவேற்றார் மானக்கஞ்சாறர். அவரைத் தாமும் வணங்கி, தம் மகளையும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வணங்கச் செய்தார். மணமகள் வணங்கிய போது, மஞ்சு தழைத்தென வளர்ந்த மலர்க் கூந்தலை நோக்கினார். "அணங்கு இவள்தம் மயிர் நமக்கு பஞ்சவடிக்காம்" என்றார். உடனே மானக்கஞ்சாறர் அடற்சுரிகைதனை உருவி "பொருள் செய்தாம் எனப் பெற்றேன்" என்று எண்ணி, பூங்கொடிதன் கருங்கூந்தல் அடியில் அரிந்து எதிர்நின்ற மருள் செய்த பிறப்பறுப்பார் மலர்க்கரத்தினில் நீட்ட, வாங்கியவர் போல் நின்ற மாவிரதியார், ரிஷபா ரூடராய் மலைவல்லியோடு அவர்க்குக் காட்சி தந்து அவர் மீது மலர் மழை பொழிவிக்க, அடியவரும் தொழுது எதிர்விழுந்தார். சிவனார் கூறுகிறார். "எழும் பரிவு நம் பக்கல் உனக்கிருந்த பரிசு இந்தச் செழும் புவனங்களில் ஏறச் செய்தோம்" என்று அருளினார். அக்கணமே சிவனார் பெருங் கருணைத் திறம் போற்றும் பெரும் பேறு மானக்கஞ்சாறர் நேர் பெற்றார். அதாவது, சிவனாரோடு கலந்து விட்டார்.

சிறிது நேரம் கழித்து மாப்பிள்ளை ஏயர்கோன் அங்கு வந்தனர். நிகழ்வுகளைக் கேட்டருளி, புந்தியினில் மிக உகந்து புனிதர் ஆனார். அருள் போற்றிச் சிந்தை தளர்ந்து அருள, திருவாக்கின் திறம் கேட்டு மனம் தளரும் இடர் நீங்கி வானவர் நாயகராய் புனைந்த மலர்க் குழல் பெற்ற பூங்கொடியை மணம் புணர்ந்தார்.

ஏன் ஏயர்கோன் மனம் தளர்ந்தார்? பலரும் பலவாறு விளக்கி உள்ளனர். தெய்வச் சேக்கிழார் எளியேனுக்கு அருளிய விளக்கம் இதுவே. திருமணத்திற்கு முன்பே சிவனார் கூந்தலைப் பெற்றுக் கொண்டு விட்டார். திருமணத்திற்குப் பின்பு சிவனார் கேட்டிருப்பின் தாமே அதை வழங்கியிருக்க முடியுமே? அவ்வருளை அங்ஙனம் பெறமுடியாமல் போயிற்றே என்று சற்றுத் தளர்வுற்றார். எனினும் திருவருள் திறம் அவர் விளங்கிக் கொள்ள, தளர்ச்சி நீங்கினார்.

திருமணத்திற்கு முன்பு ஒரு பெண் தந்தைக்கு உரியவள்; அதன் பின்பு கணவருக்கு உரியவள். அவளுக்கு என்று ஒரு தனி உரிமையை தியாக வடிவான ஒரு பெண் எப்போதும் எண்ணுவதில்லை. அடடா! என்ன பண்பாடு! எத்தகைய பெண்ணின் பெரிய நிலை. இந்நிலை பண்டு தமிழகத்தில் இருந்தது. இந்நிலை நின்ற பெண்ணை மகாகவி பாரதியார் இப்படிப் போற்றுகிறார்:

காதல் செய் மனைவியே சக்தி கண்டீர்;
கடவுள்நிலை அவளாலே எய்தலாகும்.

இங்கு ஈண்டியிருக்கும் கணவன்மாரே! இந்நிலையை ஏற்றுங்கள் போற்றுங்கள். அதுவே நன்னிலை சிவணிய இல்லறம். இல்லறம் அல்லது நல்லறம் அன்று. ரிஷிகள் அனைவருமே தத்தம் மனைவியாரோடே வாழ்ந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இனிவரும் நிகழ்ச்சிகள், பெரியபுராணத்தில் ஏயர்கோன் கலிக்காமர் புராணத்தில் பதிவாகியுள்ளன. ஏயர்கோன் திருப்பெருமங்கலத்தில் அவதரித்தவர். வேளாளர் குடி விளங்க வந்தவர். ஏயர்கோக்குடிதான் மன்னி நீடிய வளவர் சேனாபதிக்குடியாம். மிகப்பெரிய சிவபக்தர்.

நம்பி ஆரூர் தம்மீது பரவைநாச்சியார் கொண்ட ஊடலைத் தீர்க்க, இருமுறை சிவனாரைத் தூது அனுப்பினார் என்ற செய்தி கேட்டு, அவர் மீது கடுஞ்சினம் பூண்டார்; புலம்பினார்; வெருவினார். இச்செய்தி கேட்டும் தாம் வாழ நேர்ந்ததால் தம்மையே நொந்து கொண்டார். தூது விட்ட சுந்தரர் தம்முன் வர நேர்ந்தால் என் நிகழ்த்துவேன், தெரியுமா? என்று அறிவித்தார்.

இதைக் கேள்வியுற்ற சுந்தரர், ஏயர்கோன் சினம் தணிந்து தம்மையும் நண்பராக ஏற்றருள வேண்டும் என்று சிவனாரை உருகி, உருகி, வேண்டினார். சிவனார் ஏயர்கோனுக்குத் தீராத கொடுஞ் சூலை அருளி, சுந்தரரிடம், "நீ போய் அந்நோயைத் தீர்ப்பாய்" என்று அருளினார். சுந்தரர் மகிழ்ச்சியோடு புறப்பட்டார். அவர் வருகையை அறிந்த ஏயர்கோன் பரம்பரை பரம்பரையாக சிவனுக்கு அடிமை பூண்ட எனக்கு இச்சுந்தரன் வந்து என் நோயைத் தீர்ப்பதோ! அவன் வருகை அறிந்த நான் "என் வயிற்றைக் கிழித்து இச்சூலை நோயைப் போக்குவன்" என்று கூறி தம் வயிற்றைக் கிழித்து தம் உயிரையே போக்கிக் கொண்டார்.

இந்நிலையில், அவர் மனைவியார்: "இங்கு யாரும் அழுதல் கூடாது" என்று கூறி கணவர் உடலை மறைத்து வைத்தார். தம் வீட்டை அலங்காரம் செய்வித்தார். மேலும் "புணர்நிலை வாயில், தீபம் பூரண கும்பம் வைத்து துணர் மலர்மாலை தூக்கித் தொழுது சுந்தரரை எதிர்கொண்டார். வந்த நம்பிக்கு மலர்த்தவிசு அளித்தார்; அர்ச்சனைகள் புரிந்தார். பண்பினில் வழாமை நின்றார். "ஏயர்கோன் எங்கே?" என்று நம்பிகள் வினவ, பண்டே தாம் பெற்ற ஆணையின்படி, ஏவல் மாக்கள், "மற்றிங்கு ஏதம் ஒன்றில்லை; உள்ளே பள்ளி கொள்கின்றார்" என்ன, நம்பிகள் "யான் உடனேயே அவரைக் காண்டல் வேண்டும்" என்று கூறி அவ்வறையுள் நுழைந்தனர். "துன்றிய குருதி சோரத் தொடர்குடர் சரிந்து உள் ஆவி பொன்றியே கிடந்தார் தம்மைக் கண்டார்" சுந்தரர். விதிர்விதிர்த்தார். "யானும் அவர் சென்ற வழியே செல்வேன்" என்று கூறி அங்கு இருந்த குற்று வாளைப் பற்ற, சிவனார் அருளாலே உயிர்த்து எழுந்த ஏயர்கோன், "கேளிரே ஆகிக் கெட்டேன்" என்று கதறி, சுந்தரர் பற்றியிருந்த வாளைப் பிடித்துக் கொள்ள, சுந்தரர் அவரை வணங்கி வீழ்ந்தார். ஏயர்கோனும் சுந்தரர் திருவடியில் வீழ்ந்தார். இருவரும் எழுந்து நின்று செஞ்சடா அடவி மேல் ஆற்றை, பணியை, இதழியை, தும்பையை, அம்புலியின் கீற்றைப் புனைந்த பிஞ்ஞகனாரைப் போற்றி நின்றனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருவரும் நண்பர் ஆயினர். இப்படி ஒரு சாதனை நிகழக் காரணமானவர் ஏயர்கோன் மனைவியார் தாமே! அப்பெருமாட்டியின் திருப்பெயர் என்ன? தெரியாது. ஆனால், அப்பெருமகள் சலியாத சிவபக்தியின் திருஉரு என்போம்; நடமாடும் சிவன் அருள் என்போம்; சைவத் தியாகிகளின் தலைவர் என்போம்; சிவனாரையே வியக்க வைத்த வனிதை என்போம்; உமையம்மையே போற்றவல்ல உத்தமோத்த உத்தமி என்போம்; சைவப் பெண்டிர் குலதெய்வம் என்போம்; சீர்த்தியின் சிகரத்தில் வதியும் செம்மனச் செல்வி என்போம்; பெருமையின் பேர் அரசு என்போம்; கற்பின் கனக வைப்பு என்போம்; பொறுமையின் பூஷணம் என்போம்; பூரண நிறையுடைய பூரணி என்போம்; சகல காரணி என்போம்; நித்திய நிரஞ்சனி என்போம்; சீர் உறு சிற் சக்தி என்போம்; சிவம் சிவணிய சிவை என்போம்; சைவம் தழைக்க வந்தருளிய ஜகந்மாதா என்போம்.

அடடா, சொல்லுவதறியேன், வாழி!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7. பெரியபுராணத்தில் பாசம்

பாசம் என்றால் கயிறு என்று பொருள். நூலினால் வனையப்பட்டது கயிறு. உலோகத்தால் வனையப்பட்டது சங்கிலி. கயிறும் சங்கிலியும் சுற்றிப் பிணைக்கும் தன்மைய. இவை நல்லனவற்றையும், தீயனவற்றையும் பிணைக்கவல்லன.

நல்லனவற்றை ஆன்மாவோடு பிணைக்கும் பாசம் போற்றற்குரியது. இதையே "பாசம் பரஞ்சோதிக்கு" என்றார் மணிவாசகர். தீயதைப் பிணைக்கும் பாசம் அறுத்தெறியப்பட வேண்டும். அங்ஙனம் அறுத்தெறியும் கடவுளை "பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே" என்று மணிவாசகர் அருளியுள்ளார்.

நல்ல பாச உணர்வு உலகை வளர்க்கும்; உயிருக்கு வலிவூட்டும். முதல் குழந்தை பிறக்கும் மட்டும் அப்பெண்ணினிடம் பால் சுரப்பதில்லை. குழந்தை பிறந்த அக்கணமே அவளிடம் பால் சுரக்கும். இதையே "இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால், நல்லாய்! உளவாமால்" என்று சிவஞானபோத உதாரண வெண்பா சாற்றுகிறது. "மிக்கோங்கும் சிந்தை உருக முலை உருகும் தீஞ்சுவைப்பால் வந்து மடுப்பக்கண்டு வாழ்ந்திருப்ப – பந்தித்த பாசப் பெருங்கயிற்றாற் பல்லுயிரும் பாலிக்கும் நேசத்தை வைத்த நெறிபோற்றி!" என்று போற்றிப் பஃறொடை அருளியுள்ளது.

நற்பாசத்தால் உந்தப்படும்போது சில சமயம் மறக்கருணை வெளிப்பட நேரிடும்.

கொண்டுவரு நோயின் குறிப்பறிவார் - மண்டெரியிற்
காய்ச்சிச் சுட அறுக்கக் கண்ணுரிக்க நன்னிதியம்
ஈய்த்துத் தாய்தந்தை தமர் இன்புறுதல்

பற்றியும் போற்றிப் பஃறொடை கூறியுள்ளது.

ஒருமைந்தன் தன்குலத்துக்குள்ளான் என்பதும் உணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடன்என்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன்.

ஏன்? இதற்குவிடை போற்றிப் பஃறொடை பகர்கின்றது;

ஓடிய தேரின்கீழ் உயிர்போன கன்றாலே
நீடுபெரும்பாவம் இன்றே நீங்குமென – நாடித்தன்
மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே வழக்கு...

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாசத்தைப் பரத்தின்மேல் வைத்தல் வேண்டும்; பதார்த்தத்தின்மேல் வைத்தல் கூடாது. இங்ஙனம் வைக்காமல் வாழும்போது நம்முள் பாசம் வேர்விட்டு, அடிமரம் பெருத்து, கப்பும் கிளையுமாய்ச் செழித்து வளரும்.

இறைவனைக் குறித்து எழுந்த சொற்களும், தொடர்களும் பலப்பல. அவற்றுள் பொருள் என்பதும் ஒன்று. பரமனை பழம்பொருள் என்றும் பரம்பொருள் என்றும் போற்றுவர். இவ்விறைவனே "பாசவேர் அறுக்கும் பரம்பொருள்" என்று மணிவாசகர் போற்றுகிறார். இப்பாச விருட்சத்தின் வேரும், வேரடி மண்ணும் இல்லாமலே வெந்துபோகப் பொசுக்கவல்லது முக்கட்பரஞ்சோதி.

பாசம் என்ற சொல்லுக்கு 16 பொருள்கள் உள. இங்கு இரண்டு பொருள்கள் பற்றியே என்பேச்சு அமையும். பாசம் என்றால் (1) விருப்பம் அல்லது பற்று; (2) மும்மலம். பாசம் மும்மலங்களையும் குறித்தாலும், ஆணவ மலம் ஒன்றைமட்டும் குறிக்கவும் பயன்படுத்தப்படும். நாம் வாழும் பிரபஞ்சம் பிரகிருதி மாயா உலகம். இதில் ஆணவ மலம் கொடிகட்டி ஆட்சி செலுத்தி வருகிறது. ஆகவே இவ்வுலக சம்பந்தம் மிகக் கொடுமையானது.. இது சைவ சித்தாந்தத்தால் மட்டும் சாற்றப்படுவது என்று எண்ண வேண்டாம். மேலை நாடுகளிலும் இக்கருத்து நிலவி வருகிறது. கிரேக்க நாட்டில் இதை உணர்ந்த பல ஞானிகள் வாழ்ந்து வந்தனர்.

மாமுநி மில்டனார் கிரேக்கநாட்டுப் பின்னணியில் ஒரு சிறு கவிதை நாடகத்தைத் தம் இளவயதில் வரைந்தார். அதன் பெயர் '**கோமஸ்**' என்பதாகும். தூய கன்னி ஒருத்தியின் கற்பைக் காக்க வேண்டிய பொறுப்பை ஒரு தேவலோக தூதன் ஏற்றான். '**தைர்சிஸ்**' என்ற பெயர்பூண்டு அவன் மானுட உலகத்திற்கு வர இருக்கிறான். அப்போது, அத்தூதன் தான் அணிந்திருக்கும் தூய அமுதமயமான ஆடை உலகத் தொடர்பால் மாசுபடக் கூடாது என்று எண்ணி அதனை பத்திரப்படுத்தி வைத்துவிட்டு பூமியில் இறங்க முடிவு செய்கிறான். அதுசமயம் அவன் கூறியதாவது:

"I would not soil these pure ambrosial weeds with the rank vapours of this sin-wornmould," (பாவத்தால் போர்த்தப்பட்டிருக்கும் இவ்வுலகின் மாசுடைய காற்றால் இத்தூய உடைகள் பாழ்பட வைக்கமாட்டேன் நான்.)

பிரகிருதி மாயா உலகத் தொடர்பு அவ்வளவு கொடிது. இதைப் பெரியபுராணம் சித்திரிக்கும் அழகு ஒரு தனிச்சிறப்புடையது. சொல்லாமற் சொல்லும் பெரிய புராண உத்தியை என் என்பது?

நம்பி ஆரூரர் எப்போது தோன்றினார்? பலப்பல யுகங்களுக்கு முன்னால் ஒருநாள் சிவபெருமான் தம் உருவை ஆடியில் கண்டார். அவ்ஆடி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவருடைய பிரதிபிம்பத்தைக் காட்டியது. அதைக் கண்டருளிய பெருமான் அவ்வுருவைப் பார்த்து "சுந்தரா, வா" என்றருளினார். சுந்தர உருவத்துடன் சுந்தரரும் வெளிவந்தார். பிறகு அவர் சிவபெருமான் பணியில் ஈடுபட்டார். "வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொருளாகிய வள்ளல் சாத்தும் மதுமலர் மாலை" புனைதலும் அப்பெருமான் அணியும் திருநீற்றை ஏந்தி நிற்கும் பணியும் சுந்தரரால் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் பல யுகங்கள் கழிந்தன. அமிர்தம் வேண்டி பாற்கடல் கடையப்பட்டது. கடலினில் அமுதொடு கலந்த ஆலகால விடம் எழுந்து பார் முழுதும் பரந்தது. அனைவரும் சிவனாரிடம் அடைக்கலம் புக அப்பெருமான் அவ்விடத்தைத் திரட்டிக் கொண்டுவர சுந்தரரைப் பணித்தார். அவரும் பரந்து நின்றவிடத்தைச் சுருக்கித் தம் கரத்தில் எடுத்துக் கொண்டுவந்தார். அதை எம்பெருமான் உண்டு நீலகண்டர் ஆனார். ஆலால விடத்தை ஏந்தி வந்ததால் சுந்தரர் ஆலால சுந்தரர் ஆனார். இது நிகழ்ந்து பல யுகங்கள் கழிந்தன.

ஒருநாள், சுந்தரர், கமலினி, அனிந்திதை என்றுள்ள உமையம்மையின் சேடியர்மீது ஒரு கணத்திற்கும் குறைவான நேரம் மனம் போக்கினார். அதனால் அவர் பூமியில் பிறக்க நேர்ந்தது. அப்போது நம்பி ஆரூரர் என்ற திருநாமத்தோடு விளங்கினார்.

அவருடைய பதினாறாம் ஆண்டில் அவருக்குத் திருமணம் நிச்சயம் ஆயிற்று. அவர் பண்டு வேண்டிய படியே அவரது திருமணநாளில் சிவபெருமான் அத்திருமண வீட்டில் அவரைத் தடுத்தாட்கொள்ள வந்தனர். பலப்பல யுகங்கள் பெருமானோடு நெருங்கிப் பழகிய நம்பி ஆரூரர், வந்தவர் யாரென்று அறிந்துகொள்ள முடியவில்லை. அவரோடு வாதிட்டு அவரைப் "பித்தன்" என்று ஏசினார். சுந்தரர் சிவனாரோடு சேர்ந்திருந்த காலம் பலப்பல யுகங்கள். பிரிந்திருந்த காலமோ மானுடப் பஞ்சாங்கப்படி 16 ஆண்டுகளே. ஆனால் சுந்தரருக்கு இந்தக் காலத்தில் பிரகிருதி மாயா உலக சம்பந்தம் ஏற்பட்டுவிட்டபடியால் அவர் தம்மானை அறியாது போனார். ஆணவ மல வியாபகத்துக்கு உட்பட்ட சில ஆண்டுகளில் சுந்தரருக்கு நேர்ந்த கதியை எண்ணிப்பாருங்கள். சாலோக, சாமிப்பிய, சாரூப பதமுத்திகளில் பலப்பல யுகங்கள் திளைத்திருந்த சுந்தரரின் கதி இதுவானால் நம்மனோர் நிலைபற்றிக் கூறவும் வேண்டுமோ?

இவ்ஆணவ மலமே பாசம் என்று சைவ சித்தாந்தம் பறை சாற்றுகிறது. சங்கர பகவத்பாதர் அருளிய தரிசனத்தில் இவ்ஆணவ மலம் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. என்றாலும், சுந்தரர் சாற்றிய நெறி உலகளாவி நிற்கிறது. சைவ சித்தாந்தமோ எனில் அதுதோன்றிய இடத்தில்கூட முறையாகக் கற்கப்படவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என் நண்பர் ஒருவர் சங்கர பகவத்பாதரை மிகவும் போற்றுகிறவர். அவர் ஒருசமயம் கிரேக்க ஞானி ஒருவர் விடுத்த மூன்று வினாக்ளில் சங்கரர் சாற்றிய வேதாந்தம் பிரதிஷ்டை ஆகி இருக்கிறது என்று அறைந்தார். அவ்வினாக்கள் பின்வருமாறு:

1. What is God?
2. What is not God?
3. What is in between?

'பொருள் ஒன்றே' என்றருளிய சங்கரரின் கூற்றை இம்மூன்று வினாக்களும் உறுதி செய்கின்றன என்று அவர் கூறினார். அப்பொழுது அவரிடம் நான் கூறியதாவது: What is God? - Pati. What is not God? - Pasu. What is in between? - Passam. இம்மூன்று கேள்விகளுக்கான விடைகள் பண்டே திருமூலரால் அருளப்பட்டிருக்கின்றனவே!

பதி பசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப்போல் பசுபாசம் அனாதி
பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்
பதியணுகிற் பசுபாசம் நில்லாவே.

சிவ ஆகம சாரமான இப்பாடல் சைவ சித்தாத்தத்தின் அஸ்திவாரம்.

சைவ சித்தாந்தத்தில் ஆன்மாவும், உயிரும் ஒன்றே. உயிர்கள் சிருட்டிக்கப்படவே இல்லை. அவை என்றும் உள. பாசமும் சிருட்டிக்கப்படவே இல்லை. இப்பேருண்மையைத் துணிந்து கூறும் சிவாகமங்களே சைவ சித்தாந்தம். "சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்" என்று சிவஞான சித்தியார் சுபக்கப்பாடல் அறிவிக்கின்றது.

இயற்கையில் உயிர்கள் மூவகையாக உள்ளன. ஆணவ மலம் ஒன்றால் மட்டுமே பற்றப்பட்ட உயிர்கள் விஞ்ஞானகலர். ஆணவம், கன்மம் இவை இரண்டாலும் பற்றப்பட்ட உயிர்கள் பிரளயாகலர். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றாலும் பற்றப்பட்ட உயிர்கள் சகலர்.

இங்கு ஒரு கேள்வி எழும். மாயை இல்லையேல் சரீரம் இல்லை. மாயைக்கு உட்படா விஞ்ஞானகலர் பிரளயாகலர் ஆகியோருக்கு எங்ஙனம் சரீரங்கள் தோன்றமுடியும்? இதற்கான விடையை கொரடாச்சேரி வாலையானந்தசுவாமி வழங்கியுள்ளார். இவர்கள் வைந்தவ்ய சரீரம் பெற்றவர்கள். அதாவது சுத்தமாயா சரீரம் உடையவர்கள். விந்துவில் தோன்றியது வைந்தவ்யம், விந்து என்றால் சுத்தமாயை.

சிவாக்கிர யோகிகள் மூவகை ஆன்மாக்கள் பற்றி இங்ஙனம் அருளியுள்ளார்:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"சாமுசித்தரவார்: சாமாநியமான இஷ்டா பூர்த்தாதி தருமங்களுககுப் பரமான விசிட்ட சிவதருமமாகிய சரியை கிரியா யோகம் இயற்றி அதனால் நின்மல அந்தக் கரணராய், அந்தத் தேகம் விட்டும் அந்த ஞானம்கெடாமல் மீளவும் ஜனிக்கும் பொழுதும் அந்த ஞானத்துடனே ஜனித்துச் சிவபாவனை பண்ணுமவர்."

"வைநயிகராவர்: விநயசீலராய் உலகத்திற்கு உயர்ந்தோர் போதிக்கும் ஞானத்தினாலும், குரு உபதேசத்தினாலும், சிவ சாத்திரத்தினானும், நித்தியாநித்ய வஸ்து விவேகிகளாய், மனோவாக்குக் காய வியாபாரங்களினால் சர்வ கன்மங்களையும் துடைக்கப்பட்டவர்களாகிக் கிரமத்தின் மோட்சத்தை அடைபவர்."

"பிரகிருதராவார்: பூமியில் ஜனித்த மேற்சொப்பனத்தின் ஞானம்போல் அறிந்தறியாமலும், கிளிஞ்சிலை வெள்ளியென்று அறிவதுபோல வபரீத ஞானியுமாய் அதனாலே தேகாதிகளை ஆன்மா என்றும், பிரகிருதி ஜன்னிய வஸ்துக்களையே பரமென்றும் எண்ணுமவர்."

வைணவ வியாக்கியானத்தில் ஓர் அற்புத வாசகம் உண்டு. ரிஷிகள் ஆத்ம சொரூபம் கைவரப் பெற்றவர்கள். ஏனையோர் அங்ஙனமல்லர். ஆகவே, திருப்பாவைக்கான மூவாயிரப்படி வியாக்கியானம் இப்படித் தொடங்குகிறது. "தேக ஆத்ம அபிமானிகளுக்கும், ஆத்ம சொரூபம் கைவரப் பெற்றிருக்கும் ரிஷிகளுக்கும் பர்வத பரமாணுவோட்டை வாசிபோரும்." இதன் பொருளென்ன? ரிஷிகள் மலை போன்றவர்கள் என்றால், சாமானியசகலர் பரம அணுப்போன்றவர்.

மும்மலங்களுக்கும் மூலமாய் இருப்பது மூலமலமாகிய ஆணவ மலம். அசுத்த மாயை சிறிய வெளிச்சமாகிய அறிவு தருவதாய், அதே நேரத்தில் மயக்கம் தருவதாய் இருப்பது. கன்மமானது மயக்குவதும், மயக்காததும் என இருவகைத்து, அவற்றுள் மயக்கும் கன்மமே விஞ்ஞானகலர்களுக்கு இல்லையாம்.

விஞ்ஞானகலர் விஞ்ஞானத்தால் கலைநீக்கம் பெற்றவர். பிரளயாகலர் பிரளயத்தில் கலைநீக்கம் பெறுவர்.

பசுக்களைப் பிணிக்கும் பாசம் ஆணவ, கன்ம, மாயா மலங்களாம். இவற்றுள் முதலாவது ஆணவ மலமே. செம்பிற் களிம்புபோல் ஆணவ மலம் உயிர்களை அனாதியே பற்றி நிற்பது. செம்பு என்று உண்டோ, அன்றே அதில் களிம்பும் உண்டு. அதுபோன்றே, ஆணவ மலம் அனாதியே உயிர்களைப் பற்றி நிற்பது. இம்மலம் ஆன்மாவின் குற்றம்; குணம் அன்று. குணமாயின் என்று ஆணவ மலம் உயிரினின்றும் நீக்கப்படுகிறதோ, அன்று குணியாகிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆன்மாவும் இல்லையென்று ஆகிவிடும். Anava Mala is the ancestral blindness of the soul if we can say so. புளி முதலியன கொண்டு களிம்பு தற்கால நீக்கம்பெறும். ஆனால் புடமிட்டு இரசகுளிகையை சேர்க்கும்போது களிம்பு முற்றுமாக மறையும். அப்பொழுது செம்பு பொன்னாகும். இது வேதகத்தின் விளைவு. விண் களி கூர்வதோர் வேதகம் வெளிப்படுதல் பற்றி மணிவாசகர் திருப்படையாட்சியில் அருளியுள்ளார்.

ஆணவ மலம் என்பது பொருளால் ஒன்றே ஒன்றுதான். அதன் சக்திகள் பலப்பல. ஒரே இருள் பலகண்களை மறைப்பது போல, ஒரே ஆணவ மலம் பல ஆன்மாக்களை மறைக்கும்.

ஆணவத்தின் சொரூப இலக்கணம் அறியாமையைச் செய்வதே. ஆன்மாவின் அறிவு, இச்சை, செயல் ஆகியவை முற்றும் நிகழவொட்டாமல் இம்மலம் தடுக்கும். ஆன்மா என்ற ஒன்று உண்டு என்பதே தோன்றாதவாறு ஆன்மாவை மறைத்து, தன்னையும் மறைத்துக்கொள்ளும்.

> **ஒரு பொருளும் காட்டாது இருள் உருவங்காட்டும்**
> **இருபொருளும் காட்டாது இது. – திருவருட்பயன்**

இதனை மாமுனி மில்டனார் வாக்குக் கொண்டு "double darkness" (இரண்டு இருள்) என்னலாம். இம்மலத்தை உமாபதியார் 'இருட்பாவை' என்றே வர்ணிப்பார்.

இம்மூலமல உண்மையால் இம்மல நீக்கத்திற்கென்று கன்ம, மாயா மலங்கள் உளவாயின. இவ்விரண்டும் பின்வந்தன. ஆகவே இவை ஆகந்துக மலம் எனப்படும். ஆணவ மலம் நீங்கும்போது இவையும் ஒருசேர நீங்கும். "மல மாயை தன்னொடு வல்வினை இன்றே" என்பது சிவஞானபோதம்.

ஆணவ மலம் அறிவிற்கு மறுதலையாய் உயிர்களை நேரே தடை செய்து நிற்றலால் அது பிரதிபந்தம் ஆம். கன்ம மலம், ஆணவ மலத்தின் பயனை உயிர்கட்கு உறுவித்து நிற்றலால் அஃது அனுபந்தம் ஆம். மாயாமலம் கன்ம மலத்தால் தொடர்புபடுத்தப்பட்டு நிற்றலால் அது சம்பந்தமாம்.

ஆணவ பந்தம் உயிர்களை மேல்நோக்கி எழவிடாது அழுத்தும். உயிர்கள் மேலான பரம்பொருளை நோக்காது கீழான கன்மத்தையே நோக்கும். இதனால் ஆணவ மலத்தின் ஆட்சி பெருகும். உயிர்கள் கன்ம வழியே மாயையை வந்து பற்றும். உயிர் கன்ம வழியே சுழலும். இம்மூன்றினுக்கும் இடையீடு இல்லை. ஆகவே, இவை மூன்றும் அனாதியே. செயற்பாட்டில் ஆணவ மலம் முதலிடம் பெறும். மற்றவை அடுத்தடுத்து செயல்படும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பில் களிம்பும்
சொல்லிற் புதிதன்று; தொன்மையே — வல்லி
மலகன்மம் அன்றுளவாம்...

ஆணவ மலத்தோடு ஒப்ப அனாதியாய் சொல்லப்படும் கன்மம் மூல கன்மம். இதனால் ஆன்மாவிற்கு விருப்பு வெறுப்பு இயல்பாம். இவ்வேண்டுதல் வேண்டாமை ஒழிய வேண்டும். ஆகவேதான்

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

என்கிறது வேதம்.

மாயை மூவகைப்படும். சுத்தம், அசுத்தம், பிரகிருதி என்பன அவை. சுத்த மாயை ஆணவ மலத்தோடும் கன்ம மலத்தோடும் கலவாது தூயதாய் நிற்கும் பகுதி. அசுத்த மாயை இவற்றோடு கலந்து நிற்கும் பகுதி. பிரகிருதி மாயை அசுத்த மாயையினின்றும் தோன்றுவது. பிரகிருதி மாயையே மூலப்பிரகிருதி எனப்படும்.

அசுத்த மாயையினின்றும் தோன்றும் கலை என்னும் தத்துவத்தின் காரியமாய் நிற்பது பிரகிருதி மாயை.

சுத்த மாயை, மாயை எனப்படாது விந்து எனப்படுதலின் அதன் காரியங்கள் வைந்தவம் என்றும், அசுத்த மாயையே மாயை எனப்படுதலின் அதன் காரியங்கள் மாயேயம் என்றும், பிரகிருதி மாயையின் காரியங்கள் பிராகிருதம் என்றும் சொல்லப்படும்.

பாசமாம் மும்மலம் பற்றிய அடிப்படைச் செய்திகளைப் பார்த்தோம். இனி பெரியபுராணத்தில் பாசம் என்பது பற்றி ஒரு சிறிது காண்போம்.

பெரியபுராணம் கயிலையில் தொடங்கி கயிலையில் நிறைவுறுகிறது. இதைப் போலவே பாசம் என்பது பெரியபுராணத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் கூறப்பட்டிருக்கிறது. இதை மறத்தலாகாது. இப்புராணத்திற்கு தெய்வச்சேக்கிழார் சூட்டிய பெயர் திருத்தொண்டர்புராணம் என்பதே.

இங்கிதன் நாமம்கூறின் இவ்வுலகத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுள் சார்ந்துநின்ற
பொங்கிய இருளை ஏனைப்புறஇருள் போக்குகின்ற
செங்கதிரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம்
என்பாம்

சிந்தையுள் சார்ந்து நின்ற பொங்கிய இருள் என்பது பாசமே. இதன் நீக்கமே பெரியபுராணத்தின் குறிக்கோள் ஆகிறது. வெள்ளானைச் சருக்கத்தில்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'தலைக்குத் தலைமாலை' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடிய நம்பி ஆரூரது கருத்துப் பற்றி தெய்வச் சேக்கிழார் கூறுவதாவது:

"இவ்வுலகினில் பாசம் அடுத்த வாழ்க்கையைப் பரமன் அறுத்திட வேண்டும்."

தலத்துவந்து முன்உதயம்செய் பரவையார் சங்கிலியென்னும்
நலத்தின்மிக்கவர் வல்வினை தொடக்கற நாயகி அருளாலே
அலத்த மெல்லடிக் கமலினியாருடன் அணிந்திதையராகி
மலைத்தனிப் பெருமான் மகள் கோயில் தந்தொழில்
வழிநின்றார்.

மேலும் கிட்டத்தட்ட பெரியபுராணத்தின் நடுப்பகுதி என்று கொள்ளக்கூடிய இடத்தில் பாசநீக்கம் பேசப்பட்டிருக்கிறது. அதற்குரிய பாடல்:

இந்த மாநிலத்தின் இருள்நீங்கிட
வந்த வைதிக மாமணி யானவர்
சிந்தை ஆரமுதாகிய செஞ்சடையார்
தந்தையார் கழல் தாழ்ந்து எழுந்து ஏகினார்

பாச நீக்கத்தின் அருமை பெருமைகள் பெரியபுராணத்தின் தொடக்கத்திலும், நடுவிலும், முடிவிலும் பேசப்பட்டிருக்கின்றன.

இனி பெரியபுராணத்தில் பாசம் பற்றி அங்கங்கும் கூறப்பட்டிருக்கும் செய்திகள் சிலவற்றைத் தொகுத்துக் காண்போம்.

நம்பி ஆரூரர் தம் மனத்தைப் பரவையாரிடம் பறிகொடுத்துவிட்ட தம் நிலையை உணர்ந்து இவ்வாறு இரங்கிக் கூறுகிறார்.

பாசமாம் வினைப் பற்றறுப்பான் மிகும்
ஆசைமேலும்ஓர் ஆசை அளிப்பதோர்
தேசு மன்ன என்சிந்தை மயக்குற
ஈசனார் அருள் என்னெறிச் சென்றதே.

"பாசமாம் வினைப்பற்றை அறுக்க என்மாட்டு ஆர்வம் உண்டு. அவ்வார்வத்தையும் அடிப்படுத்து ஓர் ஆசை என்னிடம் எழுகிறதே. என்சிந்தை மயக்குறுமாறு ஈசனார் அருளாம் இப்பெண் எங்குச் சென்றனள்? பெண்ணாசை ஈசன்மீதுள்ள பாசத்தையும் கீழ்ப்படுத்துமோ?" இவ்வாறு பாசத்தின் கொடுமையை சுந்தரர் உணர்கிறார்.

இரவு வர, சுந்தரர் கொண்ட காதல் மேலும் மேலும் மிகுகிறது. கப்பிய இருளின் கொடுமையை தெய்வச் சேக்கிழார் இங்ஙனம் வருணிக்கின்றார்:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பஞ்சின் மெல்லடிப் பாவைய ருள்ளமும்
வஞ்சமாக்கள் வல்வினையும் பரன்
அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான்.

இப்பாடலில் ஆணவமலக் கொடுமையும், அதனோடு சிவணிய வல்வினைச் செய்தியும் இணைத்துக் கூறப்பட்டுள்ளன.

உணவு வேட்டு இரவில் வந்தருளிய அடியாருடைய பசியைப் போக்க, இளையான்குடிமாற நாயனார், மைபோல் படர்கின்ற இருளின் ஊடே சென்று கைகளால் சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன கோலி, வாரி, இடா நிறையக் கொண்டு வீடு திரும்பினார். மனைவியாரும் இன்னடிசில் சமைக்கலுள்ளார். என்றாலும் அப்பெருமாட்டி, 'கறியமுதுக்கு என் செய்வல்?' என்று கலங்கினார். அப்பொழுது நாயனார் புழக்கடைக்கு அன்பிற் பொலிந்து சென்று

குழிமுதல் நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப்பாசப்
பழிமுதல் பறிப்பார்போல பறித்து அவை கறிக்கு

நல்கினார். இங்கு பாசம் வேரும், வேரடி மண்ணும் இல்லாமல் அகற்றப்பட்ட செய்தி அருளப்பட்டிருப்பது கண்டு இன்புறலாம்.

அன்றாடம் பிட்டினைச் சமைத்து அதைவிற்றுக் கிடைத்த சிறு ஊதியத்தால் தம் பசியினை ஓரளவு போக்கி வந்த வந்தி எனும் முதியோளின் குறையைப் போக்கவந்த பெருமான், அவள் அட்டிய அனைத்துப் பிட்டும் உதிர்ந்து போகும்படி செய்து எஞ்சாமல் அனைத்தையும் உண்டு அருளினான். இதன் பெருமையை விளக்கவந்த வாரியார் சுவாமிகள் கூறுவார். 'அப்பெருமாட்டிக்கு அன்று விற்று முதல் இல்லை. ஏன்? வினை முதல் இல்லையாகி விட்டதால்.'

நாயனார் பாசப் பழிமுதல் பறித்து, இறை நேசத்தில் தம் மனைவியோடு என்றென்றும் நிற்கிறார்.

காழ்ப்பு பிடர்பிடித்து உந்த அதிசூரன் தன் ஆட்களோடு வந்து ஏனாதிநாத நாயனாரை எதிர்த்தான். அங்ஙனம் வந்த ஆட்களை நாயனார் வெட்டிச் சிதைத்தார். அஞ்சி ஓடிப்போனவரே எஞ்சி நின்றனர். அவர்கள் நிலை பற்றி சேக்கிழார் பெருமான் அருளிய பாடல் இது:

தலைப்பட்டார் எல்லாருந் தனிவீரர் வாளில்
கொலைப்பட்டார் முட்டாதார் கொல்களத்தை விட்டு
நிலைப்படட மெய்யுணர்வு நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதற் குற்றம் போலாயினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தன்பரிசும் வினைஇரண்டும் சாருமல மூன்றுமற
அன்புபிழம்பாய்த் திரிவார் அவர் கருத்தின் அளவினரோ!

அவர் தம்மை மறந்தார்; தம் நாமம் கெட்டார்; தலைப்பட்டார் தலைவன் தாட்கே. திண்ணனார் கண்ணப்பரானார்.

அவன் அருளாலே தான் அவன்தாள் வணங்க ஒல்லும். அவனருளே கண்ணாகக் காணின் அல்லால், நம் கண்கொண்டு முக்கண்ணனைக் காண்டல் ஏலாது. இது சீவனுக்கு உள்ள நிலை மட்டுமா? சிவன் நிலையும் அந்நிலையே. சிவனாரும் அடியவர் அன்புத் திறத்தை அவ்வடியவர் கண்கொண்டே காண்டல் வேண்டும் என்று கருதியே கண்ணப்பர் கண்ணைத் தம் கண்ணில் அப்பிக் கொண்டார். இப்படிக் கூறியவர் கிளென் இ. யோகும் என்னும் அமெரிக்கச் சைவர். ஒரு கண்ணைக் கொண்டு பார்த்த அளவிலேயே, பூரணன் பரிபூரண நிலையில் திளைத்து, மறு கண்ணை வேண்டேன் என்று சங்கல்பித்துக் கொண்டான்.

பேறினி இதன்மேல் உண்டோ பிரான் திருக்கண்ணில்வந்த
ஊறுகண்டஞ்சித் தங்கண் இடந்தப்ப உதவுங்கையை
ஏறுயர்த்தவர் தங்கையால் பிடித்துக்கொண்டு "என் வலத்தில்
மாறிலாய்! நிற்க," என்று மன்னு பேரருள் புரிந்தார்.

கவனியுங்கள். சிவபெருமான் சிவவேடராகிய கண்ணப்பருடைய கையைத் தம் கையால் பிடித்தார். இதுவே பாணிக்கிரகணம் (spiritual marriage). பெரியோரை வணங்கும்போது மனைவி கணவனின் வலப்பக்கத்தில் நிற்க இருவரும் பணியவேண்டும். இங்கு மனைவி கணவனின் வலப்பக்கத்தில் நிற்றல் வேண்டும் என்று சாத்திரம் விதித்திருக்கிறது. சிவனார் இடப்பக்கத்தில் உமை என்னும் மனைவி. வலப்பக்கத்தில் கண்ணப்பர் என்னும் பெருங்காதலி. அடடா! எவ்வாச்சியங் கொண்டு இதனை யான் உரைக்க வல்லேன்!

இயக்கி ஒருத்தி அருத்தியுடன் ஒரு பூமாலையை ஏந்திவந்து இறைவனுக்கு அணிவிக்க முற்பட்டபோது அவள் ஆடை நெகிழ, அதைத் தன் முழங்கைகளால் அமுக்கி நின்றிட நேர்ந்தது. அவள் கொணர்ந்த மாலையின் செவ்வி மாறாமுனம் அதை விரைந்து ஏற்க எண்ணிய பனந்தாள் பெருமான் குனிந்து அதனை ஏற்றார். அவள் அன்பிற்குத் தலைவணங்கிய பெருமான் வணங்கியபடியே நிலைத்து நின்றனன். பெருமானை வணங்கவந்த சோழன் எம்பெருமான் வணங்குதலைக் கண்டு மனம்புழுங்கி பரமன் பண்டுபோல் நிமிர்ந்து நிற்றல் வேண்டும் என்று பாடுபட்டான். அவன் முயற்சி திருவினையாக்கவில்லை. செய்தியறிந்த குங்குலியக் கலயனார் இறையருளாலே இறைவன் இலிங்கத்திருமேனியை நிமிர்த்த திருவுளம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பற்றினார். பனந்தாள் பரமனைப் பணிந்து ஒருமை அன்பின் மலர்ப் பிணையினால் இறைவன் திருமேனியைத் தம் கழுத்துடன் பிணைத்து வருந்தி இழுத்து இழுத்து இளைத்தார். இவ்வன்பர் ஒருமைப்பாடு கண்டு இறைவன் பண்டுபோல் நிமிர்ந்து நின்றார். பாசத்தை வென்றவர், மலர்ப் பாசத்தால் மகாதேவனை நேயத்தே நின்றசீர் நிமலனார் ஆக்கினார்.

நண்ணிய ஒருமை அன்பின் நாருறு பாசத்தாலே
திண்ணிய தொண்டர்பூட்டி இளைத்தபின் திறம்பிநிற்க
ஒண்ணுமோ! கலயனார் தம்ஒருப்பாடு கண்டபோதே
அண்ணலார் நேரேநின்றார் அமரரும் விசும்பில் ஆர்த்தார்.

நாருறு பாசத்தால் பிணைத்தவரை தெய்வச்சேக்கிழார் திண்ணிய தொண்டர் என்றே போற்றுகிறார்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்.

தீக்குள் விரலை வைத்து நந்தலாலாவைத் தீண்டிய இன்பம் பெற்றார் மகாகவி பாரதியார். தீயாடியின் திறம்போற்றும் திருநாளைப் போவார் அப்பெருமானைப் போலவே தீயில் மஞ்சனம் செய்தருளினார். அவர் பெருமையைக் கூறி முடித்த சேக்கிழார் பெருமான், நீரால் மாசுகழுவும் திருக்குறிப்புத் தொண்டர் திறம் போற்ற விழைந்து இவ்வாறு கூறியருளினார்:

மாசுடம்பு விடத்தீயின் மஞ்சனஞ் செயதருளியெழுந்
தாசில் மறைமுனியாகி அம்பலவர் தாளடைந்தார்
தேசுடைய கழல்வாழ்த்தித் திருக்குறிப்புத் தொண்டர்வினைப்
பாசமுற முயன்றவர்தம் திருத்தொண்டின் பரிசுரைப்பாம்.

தூய சிவனடியாரை நெருப்பு தீண்டவும் அஞ்சும். அருணகிரியார் கூறுவதுபோல அவர்கள் நெருப்பையும் எரிப்பர். சிவபெருமான் மீது வாரம் மிக்குடையாரை ஒரு வாரம் நீற்றறையில் இட்டு வைத்தனர். அங்ஙனமிட்ட சமணர் கார் இருள் உண்டகுழாம் போலும் கரிய உருவுடையவர். இத்தகு தேருநிலை இல்லாதார் நீற்றறையைத் திறந்தார்கள்.

ஆனந்த வெள்ளத்தினடைமூழ்கி அம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தழுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தான் இலராகி உவந்திருந்தார் அப்பர்பெருமான்.

அப்பெருமானைக் கடைசியில் கல்லோடு கட்டி கடல் நடுவுள் தள்ளினர்.

பெருகிய அன்பினர் பிடித்த பெற்றியால்
அருமலரோன் முதல் அமரர் வாழ்த்துதற்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கரிய அஞ்செழுத்தையும் அரசு போற்றிடக்
கருநெடுங் கடலினுள் கல் மிதந்ததே.

அப்பெருங் கல்லுமங்கரசு மேல்கொளத்
தெப்பமாய் மிதத்தலில் செறிந்த பாசமும்
தப்பிய ததன்மிசை இருந்த தாவில்சீர்
மெய்ப்பெருந் தொண்டனார் விளங்கித் தோன்றினார்.

இருவினைப் பாசமும்மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ்மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத்தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ.

இங்ஙனம் சமண்பாசம் செற்றவரை, கருணை நா அரசினைத் திரைக்கரங்களால் சிரத்தில் தாங்கிட வருணனும் செய்தனன் முன்பு மாதவம்.

வாகீசப் பெருமான் சிவபெருமான் அருளால் தாம் கொண்ட இருவிழைவுகளை நிறைவு செய்துகொள்ளப் பெரிதும் விரும்பினார். (1) சமண்சோறு உண்டு வளர்ந்த சரீரத்தைத் தொலைத்திட விரும்பினார். (2) ஞானப்பிள்ளையார் பல்லக்கினைத் தாமும் சுமந்து செல்ல விரும்பினார். இவ்விரு செயல்களாலே அவப்பாசத்தை நீக்கி சிவப்பாசத்தைப் பெருக்கிக்கொள்ள சாலவும் விரும்பினார். பின் நிகழ்வுகளைக் கணித்துப் பார்க்கும்போது இதற்காகவே அப்பர் அடிகள் கயிலை யாத்திரையை மேற்கொண்டனர் என்று சொல்லலாம்.

மார்பமுந் தசை நைந்து சிந்தி வரிந்த என்பு முரிந்திட
நேர்வருங் குறிநின்ற சிந்தையின் நேசம் ஈசனைநேடுநீடு
ஆர்வம் அங்கு உயிர்கொண்டுகைக்கும் உடம்பு அடங்கவும்
ஊண்கெடச்
சேர்வரும் பழுவம் புரண்டு புரண்டு சென்றனர்
செம்மையோர்.
அப்புறம் புரள்கின்ற நீளிடை அங்கம்எங்கும் அரைந்திடச்
செப்பருங்கயிலைச் சிலம்படி சிந்தை சென்றுறும் ஆதலால்
மெய்ப்புறத்தில் உறுப்பழிந்தபின் மெல்ல உந்து முயற்சியும்
தப்புறச் செயலின்றி அந்நெறி தங்கினார் தமிழாளியார்.

செயலின்றி அப்பர் இருந்தமையை சைவசித்தாந்தம் ‘செயல் அறல்’ என்று போற்றும். இனி விளைவன எல்லாமுமே சிவனாரின் அருட்செயல்களே. செயல் அறலில் தம்மைப் பொருத்திக் கொண்ட அடிகளைக் காண சிவனாரே முனிவர் வேடம்கொண்டு அவர் முன்பு எழுந்தருளுகிறார். அங்ஙனம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எழுந்தருளும்போது பெருமான் தம்மோடு நன்நெடும் புனல் தடம் ஒன்று கொண்டு வந்தார். முனிவராம் சிவனார் அப்பரை நோக்கி, "கயிலை மால்வரையாவது காசினி மருங்கு பயிலும் மானுடப் பான்மையோர் அடைவதற்கு எளிதோ? அன்று; ஆதலின் வந்த வழியே மீளும்" என்று அருளினார். முந்நூல் முனி சொன்ன வாசகம் கேட்டு முனிவருள் நனிசிறந்த நாவுக்கரசர் இங்ஙனம் நவின்றார்:

ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்.

இவ்வடிகளின் பொருட்செறிவை சேக்கிழார் அருள் துணைகொண்டு விளங்கிக்கொள்ளல் வேண்டும். அப்பர் அடிகள் கூறுவது என்னவென்றால், தாம் மேற்கொண்ட முயற்சியில் தம்முடைய உடல் மாளும். ஒருகால் மாளாது போயினும், அவ்வுடல் கொண்டு தாம் மீளுவதாக இல்லை. அதுவரை அப்பர் பெற்றிருந்த உடம்பு பிரகிருதி மாயா தொடர்பு உள்ள உடல். சமண் சோறு உண்டு வளர்ந்த உடல். ஆகவே அது அழிதல் வேண்டும் என்று சால ஆசைப்பட்டார். அப்பர் அடிகள் கூறியவாறே சிவனார், வேண்டுவார் வேண்டுவதே ஈபவன். அடிகள் விரும்பியதை நிறைவு செய்து தரவே நன்னெடும் புனல்தடம் ஒன்றுடன் அவர் முன்பு தோன்றியருளினார். அப்பர் கூற்றைக் கேட்டருளிய இறைவன் அருளிப்பாட்டை சேக்கிழார் பெருமான் இங்ஙனம் அருளியுள்ளார்:

"ஆங்கு மற்றவர் துணிவறிந்தவர் தமை அறிய
நீங்கு மாதவர் விசும்பிடைக் கரந்து நீள்மொழியால்
"ஓங்கு நாவினுக் கரசனே எழுந்தி" ரென்றுரைப்பத்
தீங்கு நீங்கிய யாக்கை கொண்டு எழுந்து ஒளி திகழ்வார்.

இதுகாறும் அப்பரைத் தொற்றிநின்ற பிரகிருதி மாயா சரீரம் அழிந்தது. அத்தீங்கு நீங்கவே பிரணவ சரீரம் கொண்டு எழுந்து ஒளிகூடித் திகழ்ந்தார் அப்பர் அடிகள். ஆன்மாவுக்கு சாவில்லை. சாவு என்பது சரீரம் அழிதல். பழைய சரீரம் அழிந்தது. தம் சாவிற்கு அப்பரடிகள் நீரில் மூழ்கித் தொடக்கறுத்தார். இப்போது அவர் பெற்ற சரீரம் பிரணவ சரீரம். அது வேண்டு நடைநடக்கும். நடந்தால் சுவடு விழாது. நிழல் காட்டாது. இத்திப்பிய சரீரம் கொண்டு தம் இரண்டாம் விழைவை அடிகள் நிறைவேற்றிக் கொள்ளுகிறார். பூந்துருத்தியில் தமக்காக, திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்று அமைத்துக் கொண்டார். அந்நாளில் அடிகளை தரிசனம் செய்ய ஞானசம்பந்தர் எழுந்தருளுகிறார்.

அந்தணர் சூளாமணியார் பூந்துருத்திக் கணித்தாக
வந்தருளும் பெருவார்த்தை வாகீசர் கேட்டருளி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'நந்தமை யாளுடையவரை நாம் எதிர்சென்று இறைஞ்சுவது
முந்தை வினைப்பயன்' என்று முகமலர அகமலர்வார்.

'எதிர்சென்று பலஃவன்' என எழுகின்ற பெருவிருப்பால்
நதிதங்கு சடைமுடியார் நற்பதங்கள் தொழுதந்தப்
பதிநின்றும் புறப்பட்டுப் பரசமயஞ் சிதைத்தவர்பால்
முதிர்கின்ற பெருந்தவத்தோர் முன்னெய்த வந்தணைந்தார்.

திருச்சின்னம் பணிமாறக் கேட்ட நாற்றிசையுள்ளோர்
பெருக்கின்ற ஆர்வத்தால் பிள்ளையார்தமைச் சூழ்ந்த
நெருக்கினிடையவர் காணாவகை நிலத்துப்பணிந்துள்ளம்
உருக்கிஎழும் மனம் பொங்கத் தொண்டர் குழாத்துடன்
அணைந்தார்.

வந்தணைந்த வாகீசர் வண்புகலி வாழ்வேந்தர்
சந்தமணிச் சிவிகையினைத் தாங்குவார் உடன்தாங்கி
சிந்தை களிப்புற வந்தார்.

இறைவன் பல்லக்கைச் சுமப்பாரை ஸ்ரீபாதம் தாங்கிகள் என்று போற்றுவர். இறைவன் பல்லக்கை வலம்வருவார் ஸ்ரீபாதம் தாங்கிகளையும் சேர்த்தே வலம் வருவார். இறைவன் ஸ்ரீபாதம் தாங்குதல் எத்துணை சிறப்போ, அத்துணை சிறப்பு இறைவன் அடியார் ஸ்ரீபாதம் தாங்குவோருக்கு உண்டு. நாயன்மாருள் இவ்வொரு தனிச்சிறப்பை அப்பரே பெற்றருளியவர்.

ஞானசம்பந்தர் ஒருவரே திருஞானசம்பந்தர். நாம் அனைவரும் ஊன சம்பந்தர். ஊனம் என்பது அவத்தால் விளையும் பவம். "பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமும்" பெற்றவர் அப்பெருமான். அவரையே குருவாகக் கொண்டு ஒளிர்ந்து வரும் பரம்பரை வள்ளலார் பரம்பரை ஆகும். வள்ளல் என்பவர் யார்? வேறு எவராலும் வழங்க முடியாத ஒன்றை வழங்குபவரே வள்ளல். முத்தி எனும் பெரும்பதத்தைத் தம்முடைய திருமணத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் வழங்கியருளிய நனிசால மிகப்பெரிய வள்ளல் ஞானப்பிள்ளையார்.

வருமுறைப் பிறவி வெள்ளம் வரம்பு காணா தழுந்தி
உருவெனுந் துயரக் கூட்டில் உணர்வின்றி மயங்குவார்கள்
திருமணத்துடன் சேவித்து முன்செலுஞ் சிறப்பினாலே
மருவிய பிறவி நீங்க மன்னு சோதியினுட் புக்கார்.

சிறுத்தொண்டர் மிகப்பெரிய சிவத்தொண்டர். திருஞானசம்பந்தர் புராணத்துள் இவரை சேக்கிழார் பெருமான் "வலிய பாசம் செற்ற புகழ்ச் சிறுத்தொண்டர்" என்று நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். மனையறத்தின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேராகி நின்ற இவருடைய பத்தினியார் உதவியால் சிவபைரவருக்கு இவர் தம் பிள்ளையையே கறிசமைத்து அர்ப்பணித்தார். உண்ண அமர்ந்த சிவபைரவர்,

சொன்னமுறையிற் படுத்த பசுத்தொடர்ந்த உறுப்பெல்லாங் கொண்டு
மன்னுசுவையிற் கறியாக்கி மாணஅமைத்தீரே என்ன
அன்னமனையார், "தலை இறைச்சி அமுதுக்கு ஆகாதெனக் கழித்தோம்"
என்ன 'அதுவுங்கூட நாம் உண்ப' தென்றார் இடர்தீர்ப்பார்.
சிந்தை கலங்கிச் சிறுத்தொண்டர் மனையாரோடும் திகைத்து அயரச்
சந்தனத்தார் எனும் தாதியார்தாம் "அந்தத் தலை இறைச்சி
வந்ததொண்டர் அமுது செய்யும்போது நினைக்க வருமென்றே
முந்த அமைத்தேன் கறி அமுது" என்று எடுத்துக்கொடுக்க முகமலர்ந்தார்.

இதுதொடர்பாக தருமை ஆதினத்தில் அருட்செங்கோல் ஓச்சிவரும் ஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அருளிய செய்தியை இங்கு வெளிப்படுத்துதல் என் தலையாய கடன். மகாசந்நிதானம் கூறியதாவது: பைரவர் வேட்டது கொடுமையிலும் கொடுமை என்று தோற்றுகின்றதல்லவா? அப்படியாயின் பைரவரை சேக்கிழார் பெருமான் இடர்தீர்ப்பார் என்று வருணித்திருப்பாரா? பெருமானிடம் அனைத்தையும் எஞ்சாமல் படைக்கவேண்டும். அப்படி படைக்கப்படாமல் இருந்திருந்தால், "சீராளா வா" என்று விளித்தபோது சீராளன் தலையில்லாமல் வந்திருப்பாரே! ஆகவே, அனைத்தையும் அப்பெருமானுக்கு அர்ப்பணித்தல் வேண்டும். இம்மாபெரும் கொள்கைவழி ஒழுகிவந்த மணிவாசகர் அருளியிருப்பதை இப்போது காண்போம்.

அன்றே என்-தன் ஆவியும்
உடலும், உடைமை எல்லாமும்
குன்றே அனையாய்! என்னை ஆட்
கொண்டபோதே கொண்டிலையோ?
இன்று, ஓர் இடையூறு எனக்கு உண்டோ?
எண்தோள், முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய்; பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே?

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

மணிவாசகர், “இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ?” என்று வினவினார். இடையூறு எங்ஙனம் எழமுடியும்? சிவபெருமான் இடர்தீர்ப்பார் அல்லரோ? இறைவன் எது செய்தாலும் அது உயிர்களின் ஆக்கத்திற்காகச் செய்யப்படுவது. ஆகவேதான் சிவஞான சித்தியார், “எக்கிரமத்தினாலும் இறைசெயல் அருளே என்றும்” என்று இயம்புகிறது.

மும்மல பாச நீக்கமே பெரியபுராணத்தின் குறிக்கோள் என்று தொடக்கத்திலேயே கூறியுள்ளேன். இப்பாச நீக்கம் புராணத்தின் முடிவான வெள்ளானைச் சருக்கத்தில் மும்முறை முழங்கப்பட்டிருக்கிறது. இவற்றுள் ஒன்றை முன்பே கூறிவிட்டேன். எஞ்சியுள்ள இரண்டையும் இப்போது எடுத்துச் சொல்லி என்னுரையைத் தலைக்கட்டுவேன். அவை இவையே:

அடியனேன் பிழைபொறுத்து எனை ஆண்டு
கொண்டு அத்தொடக்கினை நீக்கி
முடிவிலா நெறிதரும் பெருங்கருணை என்தரத்ததோ

என்பது நம்பி ஆரூரர் நவின்ற சொற்கள்.

“மருவு பாசத்தை அகன்றிட வன்தொண்டர் கூட்டம் வைத்தாய்” என்று கழறியவர் கழறிற்று அறிவார். இவ்வாசகங்கள் மண்மாசு அகன்ற வான்படு கைலையில் எழுந்தவை.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனை
பத்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்து சிவம்ஆக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார்? அச்சோவே!

சேக்கிழார் சென்னி தீண்டும்
சிவன் சேவடி போற்றி! போற்றி!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

8. பண்கள்

ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும்
துரிசுகளுக்கு உடனாகி
மாழைஒண்கண் பரவையைத்
தந்து ஆண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என் ஆரூர் இறைவனையே.

நந்தமிழை முத்தமிழ் என்று ஏற்றுவர், போற்றுவர். இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற மூன்றும் முத்தமிழில் அடங்கும்.

இசைத்தமிழ் என்றால் என்ன? தமிழிசை என்றால் என்ன?

இசைத்தமிழ் என்பது தமிழ் இசைக்கான இலக்கணத்தை வரையறுத்துத் தருவது. இந்த இலக்கணத்திற்கு ஏற்ப இசைக்கப்படும் பாடல்கள் தமிழிசைப் பாடல்கள். தேவார மூவர் போன்றோர் இசை இலக்கணத்திற்கு ஏற்ப இசைத்தப் பாடல்கள் இசைத்தமிழ்.

இன்று, பெரும்பாலும் தமிழில் பாடப்படும் பாடல்கள் இசைத் தமிழும் அன்று, தமிழ் இசையும் அன்று.

இசை இலக்கண நூல்கள் பண்டு ஏராளமாகப் பல்கி இருந்தன. அகத்தியம், ஆற்றிசை, இசை நுணுக்கம் என்ற பெயரில் விளங்கிய இரு நூல்கள், இசைத்தமிழ் 16 படலம், இந்திர காளியம், களரியாவிரை, காமவின்னிசை, குணநூல், குருகு, கூத்துவரி, சயந்தம், சிற்றிசை, சிற்றிசைச் சிற்றிசை, செயிற்றியம், நுண்ணிசை, பஞ்ச பாரதீயம், பரதம், பழங்காலப் பரிபாடல், பெருங்குருகு, பெருநாரை, பேரிசை, மகிழிசை, முதுகுருகு, முதுநாரை, முறுவல், வியாழமாலை அகவல், வெண்டாளி முதலியன மறைந்து போயின.

இன்று வழங்கி வரும் பரிபாடல் பாடல்கள் மூலம் நாம் அறியும் விசேடச் செய்தி இதுவே. இப்பாடல்கள் ஸ்வர அக்ஷரங்கள் கொண்டு அமைக்கப்பட்டன. அதாவது இசை கொள்ளும் எழுத்துக்களால் இவை உருவாயின. பாடலில் கூறப்பட்ட செய்திகள் தேவைப்படும் இசையோடு பொருந்தும் வல்லின, இடையின, மெல்லின எழுத்துக்களால் உருவாக்கப்பட்டன. இது அசாதாரணமான காரியம். இசை இலக்கணத்தில் துறைபோகிய புலவரால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மட்டுமே இவ்வகைப்பாடல்களைப் பாடமுடியும். பாடும் புலவர் ஒருவராகவும், இசை அமைத்துத் தருபவர் வேறு ஒருவராகவும் இருப்பர். இவ்விருவரும் இசைந்து இப்பரிபாடலைப் போற்றுவதற்குரிய வழியைப் பரப்பினர். மூல நூல் பாடல் ஆசிரியர்தம் உள்ளக்கிடக்கை, இசைத்திறம், இசை நுட்பங்கள் அன்ன பிறவற்றை அப்படியே வெளியிட வல்லவரே, பாடலுக்கு இசை அமைக்க முடியும். இங்கு இலக்கணமும் இலக்கியமும் அத்துவிதப் பட்டு இருக்கும்; ஆகவே நனிசிறக்கும்.

தேவார மூவர் அருளிய பாக்களை இசைக்கும் பான்மை காலப்போக்கில் மறைந்து போனதால் அம்முறையை மீட்டெடுக்க திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த ஒரு பாடினி தெரிவு செய்யப்பெற்று, அப்புனிதவதியின் மூலம் அப்பாடல்களை இசைக்கும் முறை வரையறை செய்யப்பட்டது.

குரல் இனிமை என்ற ஒன்றை வைத்துக் கொண்டு மனம் போன போக்கில் பாடுதல் மரபு, பண்பாடு, கலைத்திறன் ஆகியவற்றிற்கு ஊறு விளைத்தல் ஒருதலை.

இசைக்கலையை வளர்த்து வந்தவர்கள் தமிழ்ப்பாணர்களே. குலவிச்சை கல்லாமற் பாகம் படும். ஆகவே பாணர்களைப் போற்றி அப்பாணர்கள் செழித்தோங்க அளிக்கப்பட்ட இடமே யாழ்ப்பாணம்.

“பண்ணின் பயனாம் நல்லிசை” என்று எளியேனின் தெய்வமாம் சேக்கிழார் பெருமான் அருளியுள்ளார். பண் காரணம்; நல்லிசை காரியம். குரல் வளத்தின் வெளிப்பாடு இசையாக இருக்கலாம்; ஆனால் நல்லிசையாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பண் ஈனும் இசையே நல்லிசை.

பண் என்பது யாது?

கேளுங்கள்; பச்சைத் தமிழில் கூறுகின்றேன். உடலை, உள்ளத்தை, உயிரைப் பண்படுத்துவது பண். இசைப் பான்மையைத் தெரிப்பது பண். பண்ணிற்கு ஊனம் நேரிடல் கூடாது.

பண்ணே, பண்ணே, பண்ணே,
பண்ணுக்கே யோர் பழுதுண்டாயின்
மண்ணே மண்ணே மண்ணே.

இப்படிப் பாடியருளியவர் மகாகவி பாரதி.

பாட்டுக் கொரு புலவன் பாரதி யடா - அவன்
பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடி னானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனே னடா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று நெக்குருகிப் பாடினார் கவிமணி. கவிமணி "பண்ணோடு ஒருவன் பாடினானடா" என்று பாடி பண்ணிற்கு அழுத்தம் தந்திருப்பதை மறக்க வேண்டாம்.

பாட்டிற்குத் தாளம் உயிர். தாளம் என்பது லயம். ஸ்ருதி மாதா; லயம் பிதா. தாளம் தவறினால் பாட்டு நசித்துப் போம். பாட்டு புகைவண்டி; தாளம் தண்டவாளம். தண்டவாளத்தை விட்டு புகைவண்டி கீழிறங்கினால் பயணிகள் கதி என்னாகும்?

தாளம் தாளம் தாளம்
தாளத்திற் கோர் தடை யுண்டாயின்
கூளம் கூளம் கூளம்.

பெருங்கவிஞர் கம்பதாசனும், "பண் இளைப்பாறிட தாளம் உண்டு" என்றே பாடினார். இந்த இளைப்பாறல் இல்லையேல் மூச்சு முட்டும்.

அன்பர்களே! தம் பிஞ்சுக் கரங்களால் ஒத்தறுத்துப் பாடிய ஞானசம்பந்தப் பிள்ளைக்கு இறைவன் பொன்தாளம் அருளினான் கோலக்காவில். பொன்னில் ஓசை தோன்றாது. ஆகவே திருவைந்தெழுத்துப் பொறிக்கப் பெற்ற அப்பொற்றாளத்திற்கு ஓசை அருளினாள் ஓசை கொடுத்த நாயகி. நம்மிறைவனும் ஓசை ஒலி யெலாம் ஆனவன் அல்லனோ!

தாளமே காலப் பிரமாணத்திற்கு ஆதாரம். தாளமறியாரே தப்பிலும் அடிப்பர்; தவிலிலும் அடிப்பர்.

கண்கொண்டு படித்தலை வாசித்தல் என்பர். என்றாலும் விரல் மேவி எழுப்புவதும் வாசிப்பே. ஆனாய நாயனார் புராணத்தில் எளியேன் தெய்வமான சேக்கிழார் பெருமான் அருளியுள்ளதைக் கூறுகிறேன்.

வள்ளலார் வாசிக்கும் மணித்துளை வாய் வேய்ங்குழலின்
உள்ளுறை அஞ்செழுத்தாக ஒழுகி எழும் மதுர ஒலி
வெள்ள நிறைந்து எவ்வுயிர்க்கும் மேல்
அமரர்தருவிளைதேன்
தெள்ளமுதினுடன் கலந்துசெவி வார்ப்பது எனத் தேங்க ...

ஆனாயநாயனார் குழல் வாசிப்பின் இன்னோசை எங்கு எங்கும் ஐந்தெழுத்தின் ஏழிசையாய்ப் பரிணமித்தது.

எம்மருங்கும் பண்ணின் ஓசை பரப்பப்பட்டதை தெய்வச் சேக்கிழார் இப்படிப் பாடியருளியுள்ளார்.

எண்ணிய நூற் பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பு
யென்னும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

**வண்ண இசை வனப்பெல்லாம் மாதுரிய நாதத்தில்
நண்ணிய பாணியும் இயலும் தூக்கு நடை முதற்கதியில்
பண்ணமைய எழும் ஓசை எம்மருங்கும் பரப்பினார்.**

வண்ண இசை வகை, நண்ணிய பாணியும், இயலும், பண்ணமைய என்ற சொற்றொடர்களைக் கவனியுங்கள்.

இப்போது குறள் கூறுவதைக் கூறுகிறேன். "பண்ணென்னாம் பாடற்கு இயைபு இன்றேல் கண் எண்ணாங் கண்ணோட்ட மில்லாத கண்."

இதற்கான பரிமேல் அழகர் உரைப் பகுதி இதுவே. "பண்களாவன: பாலை யாழ் முதலிய நூற்று மூன்று. பாடல் தொழில்களாவன வார்தல் முதலிய எட்டும், பண்ணல் முதலிய எட்டும், மிடற்றின் கண் எடுத்தல், படுத்தல், நலிதல், தம்பிதம், குடிலம் என்னும் ஐந்தும், பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு முதலிய எழுபத்து ஆறுமாம்."

இவற்றோடு இயையாத வழி பண்ணால் பயன் விளையாது. உபமேயத்திற்கு உதாரணம் கூற வந்த வள்ளுவர், இங்கு உபமானத்திற்குப் பண்ணைத் தெரிவு செய்துள்ளார்.

பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ணம் பற்றிய விவரங்களை, பேர் அறிஞர் மு.அருணாசலம் அவர்கள் வரைந்த 'தமிழ் இசை இலக்கிய வரலாறு,' 'தமிழ் இசை இலக்கண வரலாறு' ஆகிய இரு நூல்களிலும், நா.மம்மது அவர்கள் வரைந்த 'தமிழ் இசைப் பேரகராதி'யிலும் தேடினேன். இவையிற்றில் பற்பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. என்றாலும் எனக்குத் தெளிவு பிறக்கவில்லை. இஃதென் தவக்குறைவே.

மு.அ. அவர்கள் ஒன்றைத் தெளிவுபடுத்தியுள்ளார். அது இதுவே: "வண்ணம், தூக்கு என்பன மறைந்து விட்டன." மேலும் அவர் கூறுவதாவது: "தொல்காப்பியர் செய்யுளுக்கு உரிய வனப்புகள் என்று எட்டுக் கூறுகிறார். அவை அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பனவாகும். இவை குறித்த கருத்துக்கள் வழக்கு இழந்தன என்று நாம் கூறுவது பிழையாகாது." இவற்றை எல்லாம் எண்ணியே என்னுடைய பெரியபுராண ஆங்கில மொழிபெயர்ப்பில், ஆனாயநாயனார் பற்றிக் கூறுமிடத்தில் நான் இவ்வாறு கூறியுள்ளேன்.

"Tamil Isai, it is to be regretted, had burnt its boats, and is today lying marooned in a jungle-island, dusk with horried shades. Music, it should be remembered, belongs to the *tamasa kala* and its practitioner is one who is playing with a venomous

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

adder. He that makes a living out of it, is invariably visited with a punishment which is more than he can fear. Our saint singers took care to dedicate it wholly, solely and exclusively to God."

"A song, be it known, is to be informed by bhakti. A mellifluous kind of singing, aimed at an agreeable, well-rounded tone, an even scale from top to bottom, an unbroken legato, a nicety of intonation, an eloquence of phrase and cadence, a purity of vowels and an avoidance of shouting, nasality, harsh or crude sounds, disjointed registers, undue vehemence and any other form of vulgarity: these form not the soul of a song."

"... ... It is not an exhibition of vocal virtuosity that is called for. It is bhakti that should be the content."

மேலே தொடர்ந்து பேசுமுன் ஒருமிக முக்கியமான செய்தியைக் கூறல் வேண்டும். பென்னம் பெரிய வடமொழி வாணராகிய வேங்கடத்துக் கந்தனார் என்பவரிடம் நான் வேதாந்த பாடம் பயின்றேன். அவர் கூறிய ஒரு செய்தி கேட்டு நான் அதிர்ந்து போனேன். அவர் சொன்னார்: "இசை என்பது தாமஸ கலையைச் சார்ந்தது. முக்குணங்களில் தாமஸ குணமே மிக மோசமானது." இதைக் கேட்டுத் திடுக்கிட்ட நான், அவரை வினவ எண்ணிய என்னை, அவர் பேச விடாமல் இப்படிக் கூறினார். "அன்பனே, உங்கள் ஞானசம்பந்தப் பெருமான் ரேட்டுப் பேசிக் கொண்டு கச்சேரி செய்தவர் அல்லர். தம் இசை முழுவதையும் ஈசனுக்கே அர்ப்பணித்தார். இசை என்பது முழுமையாக ஈசனுக்கே அர்ப்பணம் செய்யப்பட வேண்டும். வேறு வகையில் அதைப் பயன்படுத்தினால் அது பாவச் செயலாகும். ஆகவே இசையை வைத்து ஜீவனம் செய்வோர், சொற்ப வருமானத்தில் தங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டும். அங்ஙனம் செய்யாதவர் குணசாலிகள் அல்லர்."

அடடா, எவ்வளவு பெரிய உண்மை இது. "சஞ்கீத ஞானமு பக்தி வினா."

தமிழ் என்ற சொல்லுக்கு பக்தி என்று பொருள். "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்று ஞானப் பிள்ளையாரை நம்பி ஆரூரர் போற்றி இருக்கிறார். "திருமிழலை இருந்து நீர் தமிழோடிசை கேட்கும் இச்சையாற் காசுநித்தல் நல்கினீர்" என்றும் நம்பி ஆரூரர் அருளியுள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நம்மாழ்வாரும்,

சொன்னால் விரோதமிது; ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ
என் நாவின் இன்கவியான் ஒருவருக்கும் கொடுக்ககில்லேன்
தென்னா தெனா என வண்டு முரல் திருவேங்கடத்து
என்னானை என்னப்பன் எம்பெருமான் உளன் ஆகவே

என்று அருளியுள்ளார்.

கவிவலவரான புலவர்களை விளித்து நம்பி ஆரூரர் கூறியது இதுவே.

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்கினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மையேதரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுறவில்லையே.

ஒருவன் வாழ அவனுக்குத் தேவைப்படுவன உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் ஆம். பிறவெல்லாம் மிகையே. ஆகவேதான் நம்பி ஆரூரர், "இம்மையே தரும் சோறும், கூறையும்" என்று அருளினார். உபலக்ஷணத்தால் வசிக்க இடமும் இவற்றோடு கொள்ளப்படும்.

இரண்டாவது முக்கிய கருத்து இதுவே. 'கல்வி கரையில' என்பர். இசையும் அங்ஙனே. இசைச் சூழலுக்கு உட்பட்டவன் உடல் மெலியும். ஆரோக்கியமும் குறையும். மணிவாசகர் இப்படி அருளியுள்ளார். திருக்கோவையாரிலிருந்து , ஒரு பாடல். இது தலைவனை விளித்துப் பாங்கன் கூறியது. "தலைவனே, உன் உடல் மெலியக் காரணம் என்ன? மதுரையில் சங்கத் தமிழை ஆய்வு செய்தனையா? அல்லது ஏழிசையில் ஈடுபட்டனையா?" பாடலைக் கூறுகிறேன்.

சிறைவான் புனல் தில்லை சிற்றம்
பலத்தும் என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலில்
ஆய்ந்த ஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ? அன்றி
ஏழிசை சூழல் புக்கோ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இறைவா, தடவரை தோட் கென் கொ
லாம் புகுந்து எய்தியதே?

தடவரைத் தோள் உடையானும் ஏழிசைச் சூழல் புகும்போது உடல் மெலிவுக்கு உட்படுவான்.

என்னுடைய திருக்கோவையார் ஆங்கில மொழிபெயர்ப்பில் நான் பதிவு செய்து வைத்திருக்கும் ஒரு செய்தியை இங்குக் கூறுகிறேன்.

"Music sevenfold: An idea of the ancient Tamil musical scale can be gleaned from the Cilappatikāram, a Tamil classic. The author – a born prince and a prince of poets –, introduces the musical scale when describing a dance performed by a group of seven girls. These seven bear the very names of the musical notes, they being குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி and தாரம். The septet is divided into 22 mattirai-s. It can thus be seen that the ancient Tamils knew all about π (pi) which is 22/7. We are told when a division of 22 by 7 is attempted, even a computer/calculator breaks down. No wonder the student of Tamil gets famished as he exercises himself in tracing the infinite ramifications of music.

"Poet Tiruloka Sitaram, in his 'Gandharva Gānam' speaks of the seven goddesses of music (ஏழிசைப் பெண்டிர்) materialising from the music of யாழ்."

பரந்துபட்ட தமிழ் இசைக் கலை பல்கிப் பெருகிய விதம் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. பெரியவர் மு.அ.பதிவு செய்து வைத்திருக்கும் சில செய்திகளை மட்டும் கூறுகிறேன். பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்னும் நாற்பெரும் பண்களும் அகம், புறம், அருகு, பெருகு என்னும் நால்வகை நிலையால் நானான்கு 16 ஆகும் என்று கூறி 16 மலர்களின் பெயர்களைக் கூறுகிறார். 17 முதல் 36 ஈறாக உள்ள பண்களின் பெயர்களை பாலை யாழ் என்ற தலைப்பில் தருகிறார். 37 முதல் 68 ஈறாக உள்ள பண்களின் பெயர்கள் குறிஞ்சி யாழ் என்ற தலைப்பில் அடங்குகின்றன. மருத யாழில் 69 முதல் 84 ஈறாக உள்ள பண்கள் இடம்பெறுகின்றன. 85 முதல் 100 ஈறாக உள்ளவை செவ்வழி யாழில் இடம் பெறுகின்றன. இவற்றோடு தாரப் பண்திறம், பையுள் காஞ்சி, படுமலை என்ற மூன்று தனிப்பண்கள் சேர்க்கப்பட்டு, பண்கள் 103 ஆகின்றன. இதுவே தமிழ் இசை இலக்கண

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மரபு. நாளடைவில் பண்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போயிற்று. பண்கள் 11, 991 என்று கணக்கிடப்பட்டன. இவை ஆதி இசை என்று பெயர் பெற்றன. இவை முழுமையாகப் பயன்படாது போனதால் இவற்றில் 103 பண்களே வழக்கில் இருந்து வந்தன. இது போலவே பிற்காலத்தில் 15 சுரங்களை உடைய மேளம் வகுத்து, அதில் 960 மேளங்களை விரிவாக்கினர். இவையும் முழுமையாகப் பயன்படாமற் போகவே இவற்றிலிருந்து 72 மேளங்களை உருவாக்கிக் கொண்டனர். இவ் 72 மேளகர்த்தா ராகங்களை இசைவாணர்கள் இன்று நன்றாக அறிவர்.

யாப்பருங்கலத்தின் விருத்தியுரை மூலம் தூங்கிசை, ஏந்திசை, அடுக்கிசை, பிரிந்திசை, மயங்கிசை என்றுள்ள வண்ணங்கள் ஐந்தினையும், அகவல், ஒழுகிசை, வல்லிசை, மெல்லிசை என்றுள்ள வண்ணங்கள் நான்கினையும், குற்றெழுத்து, நெட்டெழுத்து, வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என்றுள்ள வண்ணங்கள் ஐந்தினையும் கூட்டி, உறழ நூறு வண்ணங்கள் பிறந்தன.

காட்டாக ஒன்றை மட்டும் கூறுகிறேன். தூங்கல் வண்ணத்தில் 20 வண்ணங்கள் அடங்கும்.அவைதாம் முதுபிடி நடந்தாற் போலவும், கோம்பி நடந்தாற் போலவும், நாரை நடத்தாற் போலவும் வரும். அவை ஒருபுடை ஒப்பினால் தூங்கிசை வண்ணம் எனக் கொள்க.

மற்ற வண்ணங்கள் பற்றிப் பேச நேரமில்லை. தமிழ்ப் பண்களே ராகங்களின் பெயர் பெற்றன. கருநாடக சங்கீதம் என்பது தமிழையே. தியாகப்பிரமம் தெலுங்கில் தமிழிசை பாடினார். மொழி தெலுங்கு, இசை தமிழ்.

செய்யுள் பற்றிய இராகம் பதினொன்றை மகாபாரத சூடாமணி தருகின்றது.

1. வெண்பா, 2.தாழிசை	– சங்கராபரணம்
3. அகவல்	– தோடி
4. கலி விருத்தம்	– பந்துவராளி (சாதாரிப் பண்)
5. கலித்துறை	– பைரவி (கௌசிகப் பண்)
6. தேவாரம்	– பூபாளம்
7. விருத்தம்	– காம்போதி, மத்யமாவதி, கல்யாணி
8. தோடயம்	– சௌராஷ்ட்ரம், நாட்டை
9. உலா	– மங்கள கௌரி
10. பிள்ளைக்கவி	– கேதார கௌளம்
11. பரணி	– கண்டாரவம்

பிரபந்த தீபிகையில் மேலும் பற்பல செய்திகள் உள.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தியாகையர் பாடியது தமிழிசையே என்று கூறினேன். பாரதிதாசன் ஒரு சங்கீத வித்துவான் என்று பலரும் அறியார். அவர் 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' என்ற சஞ்சிகையை நடத்தி வந்தார். 1935இல் அவர் தியாகப் பிரமத்தின் பல தெலுங்குப் பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்து அவற்றிற்கான சுரங்களையும் தந்திருக்கிறார். இத்தகவலை எனக்கு உதவியவர் அன்பர், பேராசிரியர் ய.மணிகண்டன்.

'முத்திக்கு வித்தாகும் பைந்தமிழ்ப் பண்' என்ற தலைப்பில், 1997இல் தஞ்சை இராசராசேச்சரம் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலரில், நான் கூறியிருப்பதை இங்கு கூறுகிறேன்.

"திருநெல்வேலி ஹிந்து காலேஜில் ஆசிரியராக இருந்தவரும் எட்டயபுரம் ஜமீனில் சில காலம் மேனேஜராக இருந்தவரும், தமிழ்த் தாத்தாவின் நண்பருமாகிய மகாலிங்கையர் எனபவரை, தமிழ்த்தாத்தா ஒரு சமயம் மயிலை முனிவர் என்று போற்றப்பட்ட நீதிபதி மணிஐயரிடம் அழைத்துச் சென்றார். மகாலிங்கையர் இனிய சாரீரம் படைத்தவர். ஐயாற்றுத் தாண்டகத்தில், "ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே உலகுக்கு ஒரு சுடராய் நின்றாய் நீயே" என்று வரும் அடியை மகாலிங்கையர் பாடிய போது, மணி ஐயர் "ஹா! ஹா!" என்று கூறிக் கொண்டு எழுந்து நின்று தலைமேல் கைகளைக் குவித்துக் கொண்டார். அவர் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் பாய்ந்தது. "என்ன பாடல்! என்ன பாவம்! இரண்டும் இசையும் போது மனத்தை எப்படி உருக்குகின்றன! எவ்வளவு உயர்ந்த பாடல்கள் தமிழிலே இருக்கின்றன" என்று கூறினார் (நினைவு மஞ்சரி, முதற்பாகம், பக்கங்கள் 15-16 காண்க).

"தமிழ்த்தாத்தா மேலும் கூறுவதாவது: "ஒவ்வொரு ராகத்திற்கும் ஒவ்வொரு மலரை அடையாளமாகக் கூறுவார்கள். சில ராகங்களைப் பாடும் போது சில மலர்களின் வாசனை உண்டாகும் என்றும் சொல்லுவார்கள். சில ராகங்களில் சில மலர்கள் மலரும் என்றும் சொல்லுவார்கள்.

"ராகங்களுக்கும் பூக்களுக்கும் தொடர்பு உண்டு என்பதை மணி ஐயர் சோதனை மூலம் கண்டறிந்தவர். ஒரு தட்டிலே மகரந்தப் பொடிகளை தூவி விட்டு ஐயர் அதன் அருகில் ஒரு வித்துவானை அமர்த்தி பாடச் செய்தார். பல இடங்களில் சிதறுண்டு இருந்த அந்தப் பொடிகள் தாமாகவே சேர்ந்து கொண்டன.

"கீதம் உடலை வளர்க்கும்; சங்கீதம் உயிரைச் சிலிர்க்க வைக்கும். . . ஏழிசையாய் இசைப் பயனாய் இலங்கும் சிவனாரை "பண்ணில் ஓசை, பழத்தினில் இன்சுவை" என்று வாகீச வேதம் அடையாளம் காட்டுகிறது. பண் சுமந்த பாடல் பரகதிக்கு வழிகாட்டும் என்பது சைவத்தின் கொள்கை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"இத்தகு பண்ணின் பெருமையை நாம் மறந்து வாழ்ந்து வருகிறோம். பண்ணைப் பேணி வளர்த்த பாணர்களைத் தீண்டத்தகாதவர் என்று கூறி ஒதுக்கிவிட்ட பாவத்தால், பண்ணினால் ஆய பயனை விழித்திருந்தும் நாம் இழந்து விட்டோம்.

"தமிழ்ப் பண்களிலே கௌசிகம் என்று ஒன்று உண்டு. இதை பைரவி ராகத்தில் அமைத்துப் பாடுவர். கௌசிகத்தை வைணவர்கள் கைசிகம் என்று வழங்குவர். கைசிகத்தின் பெருமையை கைசிக புராணம் பரக்கப் பேசுகிறது. இப்புராணம் கூறும் அற்புதச் செய்தி ஒன்றைக் கூறுகிறேன்.

"திருக்குறுங்குடி என்னும் திவ்யக்ஷேத்திரத்திற்குப் புறத்தே உள்ள சேரி ஒன்றில், பஞ்சம ஜாதியில் தோன்றிய ஒரு பக்தர், ஒவ்வொரு நாளும் இரவில் வீணையோடு திருக்கோயிலுக்கு எழுந்தருளுவார். அனுமதிக்கப்பட்ட எல்லையில் நின்று கொண்டு இவர் பாசுரங்களைப் பண்ணோடு பாடி வருவார். இதனாலே இவருக்கு நம்பாடுவான் என்ற பெயர் உண்டாயிற்று. இவர், தம் கைங்கர்யத்தைத் தொடர்ந்து நிகழ்த்தி வந்தார். இப்படி இவர் பொழுதைப் பொன்னாக்கி வாழ்ந்து வரும் காலத்தில் ஒரு கார்த்திகை சுக்கில பக்ஷ ஏகாதசி தினத்தன்று, இரவில் தம் பணியை நிகழ்த்தச் சென்று கொண்டிருக்கும்போது ஒரு பிரும்ம ராக்ஷஸன் இவர் வழியில் குறுக்கிட்டு இவரை உண்ண வந்தனன். அந்தணனாக வாழ்ந்து வந்த இவன், தான் தொடங்கிய யாகத்தை முறையாக நிறைவு செய்யாமல் போகவே, பிரும்மராக்ஷஸனாக மாறிப் போனான்.

"என் பசிக்கு நீ உணவு ஆவாய்" என்று இவன் நம்பாடுவானிடம் கூற, அவர் "என் விரதத்தை முடித்துவிட்டு நான் திரும்பும்போது உனக்கு உணவு ஆவேன்" என்றார். முதலில் இவரை நம்பாத பிரும்மராக்ஷஸன், இவர் கூறிய பிரதிக்ஞைகளைக் கேட்டு, இவரை நம்பிப் போகவிட்டான். இவரும் தாம் வழக்கமாக நிகழ்த்தும் பணியை முடித்துவிட்டுத் திரும்பினார். தம்மை உண்டு பசியாறுமாறு பிரும்மராக்ஷஸனிடம் கூறினார். இவர் பெருமையை உணர்ந்து கொண்ட பிரும்மராக்ஷஸன், அந்நாள் வரை இந்த பக்தர் பாடி வந்த பண் சிவணிய பாக்களின் பலனைத் தனக்கு அளிக்குமாறு வேண்ட. அவர் அதை மறுத்துவிட, அவருடைய காலில் விழுந்து "அந்நாள் பாடிய பண்களின் ஒரு பண்ணின் பயனையேனும் தனக்கு வழங்க வேண்டினான். அவரும் மனமிரங்கி இரவில் தாம் பாடிய கைசிகப் பண்ணின் பயனை அவனுக்கு அருளினார். அதன் விளைவாக அவன் பாவம் விலக, அவன் மோக்ஷம் அடைந்தான்."

"மேலே கூறப்பட்ட செய்தி உண்மையே. கௌசிகப் பண்ணிற்கு மோக்ஷம் அருளவல்ல திறமை உண்டு. தம் திருமணத்திற்கு வந்தவர் அனைவருக்கும் மோக்ஷம் கிட்ட வேண்டும் என்று திருஞானசம்பந்தர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவுள்ளம் பற்றினார். அவர் சிவஜோதியில் புகுமுன்பு அவர் பாடிய பதிகம் "காதலாகிக் கசிந்து" என்று தொடங்கும் பதிகம். இதுவே ஞானப்பிள்ளையார் பாடிய கடைசிப் பதிகம். இதை ஞானப் பிள்ளையார் கௌசிகப் பண்ணில் பாடி அருளினார். பதிகத்தை நிறைவு செய்த திருஞானசம்பந்தர் "இம்மணத்தில் வந்தோர் ஈனமாம் பிறவிதீர ஞான ஜோதியில் புகுக" என்று ஆணையிட்டார். தாமும் தம் காதலியின் தளிர்க்கை பற்றி, நாதன் எழில் வளரும் சோதியை நண்ணி, அதன் உட்புகுந்து எம்மிறையோடு ஒன்றிவிட்டனர்.

"எவ்வேறுபாடுமின்றி அனைவரும் இப் பண்ணின் வல்லபத்தலே மோக்ஷம் பெற்றனர். தமிழ்ப் பண்ணின் பெருமையை விளக்க இதற்குமேல் என்ன விளம்ப வேண்டும்!

மேலும், ஒரே ஒரு பண்ணின் பெருமையைக் கூற உள்ளேன். அதற்கு முன் ஒரு சில செப்பல் வேண்டும்.

தேவார மூவரும் பாடிய பண்கள் 8. அவையாவன: 1. இந்தளம், 2.காந்தாரம், 3. காந்தார பஞ்சமம், 4. குறிஞ்சி, 5.கொல்லி, 6. சீகாமரம், 7. பழம்பஞ்சுரம், 8.பியந்தைக் காந்தாரம்.

சம்பந்தரும் அப்பரும் பாடியவை 2. 1. சாதாரி, 2.பழந்தக்கராகம்.

சம்பந்தரும் சுந்தரரும் பாடியவை 8. 1.கொல்லிக் கௌவாணம், 2.கௌசிகம், 3. தக்கராகம், 4. தக்கேசி, 5. நட்டபாடை, 6. நட்டராகம், 7.புறநீர்மை, 8. பஞ்சமம்.

சம்பந்தர் மட்டும் பாடிய பண்கள் 4. 1.அந்தாளிக் குறிஞ்சி, 2.செவ்வழி, 3.மேகராகக் குறிஞ்சி, 4.வியாழக் குறிஞ்சி.

சிவாகமம், நவசந்தி பூஜையில் இன்ன இன்ன பண்கள் இசைக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறது. உத்தரகாமிகாகமம் திக்பலியில் பயன்படுத்தப்பட வேண்டிய பண்கள் பற்றி கூறியுள்ளது. அதற்கான விவரங்களை வழங்கியவர் குடவாயில் பாலசுப்ரமணியன் ஆவார்.

1. கிழக்கு : இந்திரனுக்குச் சமதாளமும், காந்தாரப் பண்ணும்.
2. தென்கிழக்கு : அக்னிக்கு பத்தாபணதாளமும், கொல்லிப் பண்ணும்.
3. தெற்கு : யமனுக்கு ப்ருங்கிணி தாளமும், கௌசிகப் பண்ணும்.
4. தென்மேற்கு: நிருதிக்கு மல்ல தாளமும், நட்டபாடைப் பண்ணும்.
5. மேற்கு: வருணனுக்கு நவதாளமும், காமரப் பண்ணும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6. வடமேற்கு: வாயுவிற்கு பலிதாளமும், தக்கேசிப் பண்ணும்.

7. வடக்கு: குபேரனுக்குக் கொடிக தாளமும், தக்கராகமும்.

8. வடகிழக்கு: ஈசானனுக்கு டக்கரி தாளமும், சாளர பாணியும்.

சாளரபாணிப் பண் திருவிசைப்பாவில் காணப்படுகின்றது. இப்பண்ணில் பாடுவார் இன்று இலர்.

இனி சாதாரிப் பண் பற்றி ஒரு சிறு விளக்கம். வடநாட்டு இசைவாணனான ஏமநாதனை இசையில் வெல்ல வேண்டும் என்று பாணபத்திரருக்குப் பாண்டியன் கட்டளை இட்டான். அவரும் இதற்காக சோமசுந்தரக் கடவுளை வேண்டினார். இறைவன் வயது முதிர்ந்த விறகு வெட்டியாக ஏமநாதன் முன்வந்து சாதாரிப் பண்ணில் இசைக்க, அவன் வெலவெலத்துப் போனான். விறகுவெட்டி, தன் திறமையின்மையால் தான் பாணபத்திரரால் ஒரு சீடனாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று ஏமநாதனிடம் கூறியிருந்தார். நடுநடுங்கிப் போன ஏமநாதன் இரவோடு இரவாக ஊரை விட்டே ஓடிப் போய்விட்டான்.

இசைவாணர்கள் உடற்றொழிற் குற்றங்கள், பாடற்றொழிற் குற்றங்கள் ஆகிய இவை நேரா வண்ணம் பாடுதல் வணடும். விறகு வெட்டியாக வந்த இறைவன் எப்படிப் பாடினான்?

பாடும் போது, வயிறு குழியவாங்கல், அழுமுகம் காட்டுதல், வளைந்த புருவம் நெற்றியில் ஏறுதல், தலை நடுக்குறல், கண் ஆடுதல், மிடறு வீங்குதல், பையைப் போல வாய் திறத்தல், பற்களைக் காட்டுதல் ஆகிய உடலில் உண்டாகும் தொழிற் குற்றங்களும்,

நிறமற்ற வெள்ளோசை, இன்னா ஓசை, கீழோசை, வெடித்த குரல், மூக்கோசை ஆகிய மிடற்றோசை குற்றங்களும், ஒரு பண்ணைப் பாடும் போது வேறு ஒரு பண்ணிலே விலகி நின்று ஒலித்தல், அளவு கடந்த ஓரோசை நீங்கிப் பல வோசையாய் வருதல், காகம் கத்தினாற்போல ஓசை புரிதல், பெருமூச்செறிந்து துள்ளல் ஆகிய பாடற்தொழில் குற்றங்களும், பிற குற்றங்களும் இன்றிப் பாடினான் விறகு வெட்டியாக வந்த இறைவன்.

வயிறதுகுழி வாங்கல், அழுமுகங்காட்டல், வாங்குஞ்
செயிரறு புருவம் ஏறல் சிரநடுக்குறல் கண் ஆடல்
பயிரறு மிடறு வீங்கல் பையென வாய் அங்காத்தல்
எயிறது காட்டல் இன்ன உடல் தொழில் குற்றம் என்ப.

வெள்ளை காகுளி கீழோசை வெடிகுரல் நாசி இன்ன
எள்ளிய எழாலின் குற்றம் எறிந்து நின்று இரட்டல் எல்லை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தள்ளிய கழிபோக்கு ஓசை இழைத்தல் நெட்டுயிர்ப்புத்
தள்ளித்
துள்ளல் என்றின்ன பாடல் தொழில் குற்றம் பிறவும் தீர்த்தே

பாடும் காலத்தில் பாடுவோன், எழுதிய சித்திரம் போல் அசைவற இருந்து பாடுதல் வேண்டும்.

இன்று இப்படிப் பாடுவார் உளரோ?
இன்று இல்லாவிட்டாலும் எம்மிறை யருளால்

இத்தகையோர் தோன்றுவர். முத்தமிழும் காக்கப்படும்.

பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை
பெண்ணொடு ஆண் என்று பேசற்கரியவன்
வண்ணமில்லி வடிவு வேறாயவன்
கண்ணில் உண்மணி கச்சி யேகம்பனே.

தமிழிசையை ஏற்றுவோம், போற்றுவோம்;

ஓம், ஓம், ஓம்! சொன்னேன் அதுவே சுகம்.

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

9. மனோன்மணீயம் சாற்றும் தத்துவச் செய்தி

1855 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் ஒரு மிக முக்கியமான ஆண்டு. அவ்வாண்டில்தான் தமிழ்த் தாத்தா உ.வே.சுவாமிநாத ஐயர், 'தி ஹிந்து', 'சுதேசமித்திரன்' ஆகிய நாள் இதழ்களைத் தோற்றுவித்த ஐயாறு ஜி.சுப்ரமணிய ஐயர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை ஆகிய மூன்று மகாபுருடர்கள் தோன்றினர்.

பிள்ளை அவர்கள் ஆலப்புழையில் வேளாளர் மரபில் தோன்றினார். வேளாளர்தம் பெருமைக்கு எல்லை இல்லை. திருஞானசம்பந்தர் தம் ஆக்கூர் திருப்பதிகத்தில் "வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும் தாளாளர்" என்று அருளியுள்ளார். உமாபதி சிவம் அவர்கள்

காராளர் அணி வயலில் உழுது தங்கள்
  கையார நட்ட முடி திருத்தி இந்தப்
பாராளும் திறல் அரசன் கவித்த வெற்றிப்
  பசும்பொன் முடிதிருத்துங் கலப்பை பூண்ட
ஏரால் எண்திசை வளர்க்கும் புகழ் வேளாளர்
  ஏரடிக்கும் சிறு கோலால் தரணி ஆளச்
சீராரு முடியரசர் இருந்து செங்கோல்
  செலுத்துவர்; வேளாளர் புகழ் செப்பலாமோ!

என்று கூறியுள்ளார்.

தம் பிள்ளைப் பிராயத்திலேயே, பிள்ளை அவர்கள் புலன் கொளுவ மனம் முகிழ்த்த சுருள் நீக்கி மலர்விக்கும் கலை பயிலத் தொடங்கினார். ஆலப்புழையில் புதிதாகத் தொடங்கப்பட்ட பிரவேச தேர்ச்சிப் படிப்பு வரை கல்வி பயின்றார். அக்கலாசாலைத் தலைவரான பீல் என்பார், பிள்ளை அவர்களின் நுண்மாண் நுழைபுலத்தைக் கண்டு வியந்தும் நயந்தும் அவரைப் பாராட்டினார். பிறகு திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் சேர்ந்தார். பத்தாவது வகுப்பில் இவர் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்வு பெற்றார். பெறவே, அரசு இவர்க்குத் திங்கள்தோறும் எட்டு ரூபாய் உதவித்தொகை அளித்து வந்தது. அந்நாளில் எட்டு ரூபாய்க்கு ஒரு சவரன் வாங்க முடியும், இவருடைய பி.ஏ., தேர்வு முடிவு வரை இத்தொகை இவருக்குத் தொடர்ந்து வழங்கப்பட்டது.

1876இல் திருவனந்தபுரத்தில் முதன்மையாகவும், சென்னை மாகாணத்தில் நான்காவதாகவும், பி.ஏ.தேர்வில் இவர் சித்தி பெற்றார். அதே ஆண்டில் கல்லூரித் தலைவர் ராஸ் அவர்கள், அக்கல்லூரியிலேயே எஃப்.ஏ.,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பி.ஏ. வகுப்புகளுக்கு வரலாற்று நூலும், பி.ஏ. முதல் வகுப்பிற்குத் தத்துவ நூலும் கற்பிக்கும் ஆசிரியராக இவரை நியமித்தார். சென்னைக் கல்வித்துறைத் தலைவராக இருந்த முனைவர் டங்கன், திருநெல்வேலி ஆங்கில-தமிழ் கலாசாலைக்குத் தக்க தலைவர் ஒருத்தரைத் தெரிவு செய்து தருமாறு ராஸ் அவர்களைக் கேட்டுக் கொள்ள, அவர் பிள்ளை அவர்களை அப்பதவிக்குப் பரிந்துரைத்தார். 1877 ஆம் ஆண்டு இறுதியில், பிள்ளை அவர்கள் அக்கலாசாலையின் தலைவர் ஆனார். பிள்ளை அவர்களின் உழைப்பால் பத்தாவது வகுப்பு வரை இயங்கி வந்த அக்கலாசாலை எஃப்.ஏ., வகுப்பு அமைந்த, இரண்டாம் தரமுடைய கல்லூரியாக உயர்ந்தது.

பிள்ளை அவர்கள் திருநெல்வேலியில் வாழ்ந்து வந்த காலத்தில்தான், அவருக்குக் குருவடிவாகிக் குவலயந்தன்னில் திருவடி வைத்துத் திறம் இது பொருள், என்று அறிவு கொளுத்தினார் கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள். தம் குருநாதர் அருளால் பிள்ளை அவர்கள் கற்பவை கற்றுத் துறைபோகி நின்றார். நம் பேராசிரியர் தம்முடைய நல்வினைப் பயனைத் துய்க்கத் தொடங்கினார். இக்காலத்தில்தான் மனோன்மணீயம், நூல் தொகை விளக்கம் என்னும் அரிய நூல்களை இயற்றத் தொடங்கினார்.

திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியின் தத்துவத் துறையில் பேராசிரியராக விளங்கிய முனைவர் ஹார்வி, தம் தாய்நாடு திரும்ப வேண்டியிருந்ததால், 1879 ஆம் ஆண்டு தாம் வகித்த பதவியில் பிள்ளை அவர்களை அமர்த்தினார். 1880 ஆம் ஆண்டு பிள்ளை அவர்கள் எம்.ஏ., பட்டம் பெற்றார். கோயில் கல்வெட்டுக்களையும் அரிதின் முயன்று ஆய்வு செய்து வரலானார்.

பிள்ளையவர்களின் பெருமையைக் கேள்விப்பட்டு, திருவனந்தபுரம் மகாராஜா, பிள்ளை அவர்களைக் கமிஷன் ஆஃப் செபரேட் ரெவின்யூ என்று நியமனம் செய்தார். கூடுதலான ஓய்வு கிடைத்தபடியால் பிள்ளை அவர்கள் சட்டக் கல்லூரியில் பயின்று வரலானார்.

பிறகு, 1885இலிருந்து தம் வாழ்நாள் இறுதி வரை இவர் தத்துவப் பேராசிரியராகவே பணிபுரிந்து வந்தார்.

1884இல் பல பெரியோர்களோடு இணைந்து இவர் சைவப் பிரகாச சபையை நிறுவினார்.

ஜெர்மனியில் விளங்கிய கோட்டிங்ஹாம் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் ஆஃப் ஃபிலாஸஃபி பட்டத்தை வழங்க முன் வந்தது. அப்பட்டம் பெற அந்நாட்டில் ஆறுமாத காலம் தங்க வேண்டும். அதைச் சாதிக்க இவரால் முடியவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சென்னை மாகாண கவர்னர் இவருக்கு லண்டன் ஹிஸ்டாரிகல் சொசைடி மூலம் எஃப்.ஆர்.ஹெச்.எஸ்., பட்டத்தைப் பெற்றுத் தந்தார். ராயல் ஏஷியாடிக் சொசைடி இவருக்கு எம்.ஆர்.ஏ.எஸ். பட்டம் வழங்கிக் கௌரவித்தது. 1891இல் இவர் ஃபெலோ ஆஃப் மெட்ராஸ் யுனிவர்சிடி ஆனார்.

பிள்ளை அவர்களின் பெருமையை நன்கு உணர்ந்திருந்தவர் திருவனந்தபுரம் மகாராஜா அவர்கள். பிள்ளை அவர்கள் அகால மரணம் அடைந்ததால் இவருடைய மகனான நடராஜ பிள்ளைக்கு மகாராஜா மாதம் முப்பது ரூபாய் உதவித்தொகை வழங்கி வந்தார்.

பிள்ளை அவர்கள் மிகச் சிறந்த ஆய்வாளர். கூர்த்த மதி உடையவர். இவரது நோக்கு, நோக்கரிய நோக்கு; இவரது உணர்வு நுணுக்கரிய நுண்ணுணர்வு. கலைமகள் இவருடைய நாவில் குடியிருந்தாள். சைவத்தின்பால் இவர் கொண்ட ஈடுபாடு அளவிடற்கரியது. இவரது சரித்திரப் புலமையால் சைவர் பெற்ற பயன் நனிசாலப் பெரிதாகும். ஏஜ் ஆஃப் ஞானசம்பந்தர் என்ற இவரது ஆங்கில ஆய்வுக்கட்டுரை, மூவர் முதலிகளின் காலத்தை ஐயந்திரிபுகளுக்கு இடமின்றி அறிந்துணர வழிவகுத்திருக்கிறது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தரான பெரியவர் வ.அய்.சுப்பிரமணியன் அவர்கள் இக்கட்டுரையைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலச் சஞ்சிகையில் மீளவும் வெளியிட்டு உதவியுள்ளார்.

தமிழ்த்தாத்தா உட்படப் பல சான்றோர்கள் இவரது நட்பைப் பெற்று மகிழ்ந்து வந்தனர். பிள்ளை அவர்கள் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், ஆய்வாளர், போதக ஆசிரியர், நூலாசிரியர், ஞானாசிரியர், நாடகாசிரியர், தமிழ் உற்ற தொய்வை நீக்கி அருளியவர். இவர் பேர் அருளாளரும் ஆவார். அயல் அறியா வண்ணம் நலிவுற்றோர்க்குப் பேர் உதவி செய்து வந்த நனி சால மிகப் பெரியவர். நேர்மையாளராய், சீலமுடையோராய், வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வழி காட்டிய பெருமகனார் இவர். இவருடைய திருவடிபட்ட இம்மண்ணை வணங்கி மகிழ்கிறேன்.

மனோன்மணீயத்தைப் பிள்ளை அவர்களே 1891இல் வெளியிட்டார். இந்நூல் சென்னைப் பல்கலைக்கழக எஃப்.ஏ., வகுப்பிற்குத் தொடக்கத்தில் பாட நூலாக அமைந்தது. பிறகு பி.ஏ., வகுப்பிற்கும் பாட நூலாக அமைந்தது.

இந்நூலின் இரண்டாம் பதிப்பை வையாபுரிப்பிள்ளை அவர்கள் 1922இல் வெளியிட்டார். 31 ஆண்டுகள் வரை இது மறுபதிப்புப் பெறாததால், இதன் பிரதி கிடைப்பது அரிதாயிற்று. பள்ளி அகரம் நீ.கந்தசாமிப்பிள்ளை என்ற பேர் அறிஞர் இந்நூல் முழுவதையும் தம் அழகிய கையெழுத்தில் பதிவு செய்து ஓதி வந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல் வெளிவந்த காலத்தில் ஜி.யு.போப் அவர்கள், கோவை பாடிய பூண்டி அரங்கநாத முதலியார் அவர்கள், சி.வை.தாமோதரம் பிள்ளை அவர்கள் ஆகியோர் இந்நூலை மனம் திறந்து ஏற்றினர், போற்றினர்.

மூன்றாம் பதிப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் 1933இலும், நான்காம் பதிப்பு 1942இலும் வெளியிடப்பட்டன. இந்நூலின் ஆறாம் பதிப்பைக் கழகம் 1948இல் வெளியிட்டது. 1950, 1954, 1956, 1957, 1960, 1963, 1966, 1967 என்ற கணக்கில் இந்நூலைக் கழகம் அச்சிட்டு வருகிறது. என்றாலும் வெளிவரும் அச்சுப்படிகள் பொலிவு இழந்து காணப்படுகின்றன. பிழைகளும் இவையிற்றில் கூடி வருகின்றன. பல நிறுவனங்கள் இந்நூலைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன. மயிலை சீனி. வெங்கடசாமி அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு சாந்தி நிலையத்தார் 1961இல் ஒரு பதிப்பை வெளியிட்டனர். இதில் ஒரு சிறப்புக் காணப்படுகிறது. லிட்டன் பிரபு வரைந்ததும், 195 செய்யுள்களைக் கொண்டதுமான 'தி சீக்ரட் வே' என்ற ஆங்கிலப் பனுவலே மனோன்மணீயம் தோன்ற வகை செய்தது. ஆலிவர் கோல்டுஸ்மித் வரைந்த கதைப்பாடலே சிவகாமியின் சரிதை உருவாகக் காரணமாயிருந்தது. லிட்டன் பிரபு வரைந்த 195 ஆங்கிலச் செய்யுள்களும், கோல்டு ஸ்மித் வரைந்த 40 ஆங்கிலச் செய்யுள்களும் மயிலை அன்பரால் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு, சாந்தி நிலையத்தார் பதிப்பில் இணைக்கப்பட்டிருக்கின்றன.

பிள்ளை அவர்கள் தம் ஆங்கில முகவுரையில் கூறியிருப்பது இதுவே: "The plot of the play is based on one of Lord Lytton's Lost Tales of Milites called the Secret Way..." ஆகவே மனோன்மணீயம் பயில்வார் லிட்டன் வரைந்த பனுவலையும் அறிந்து வைத்திருத்தல் நலம் பயக்கும்.

மனோன்மணீயம் ஒரு மேடை நாடகமாக அமைக்கப்படவில்லை என்று பேராசிரியரே தெளிவுபடுத்தியுள்ளார். என்றாலும் இது மேடை நாடகமாகவும், திரைப்படமாகவும் உருப்பெற்றதை அனைவரும் அறிவர்.

மனோன்மணி என்பவளே நாடகத்தலைவி. இப்பெயரை ஒரு தத்துவக் கொத்து என்பேன். மேலும் இந்நாடகம் வேதாந்த பரமானது. ஆகவே மனோன்மணி என்ற பெயருக்கான விளக்கத்தையும், அடிப்படை வேதாந்தச் செய்திகளையும் நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் நம் பேராசிரியரின் குருநாதர். குரு என்ற சொல்லுக்கு இருளைப் போக்குகின்றவர் என்று பொருள். இகலோக வாழ்விற்கு வழிகாட்டி ஆசான். பரலோக வாழ்விற்கு வழிகாட்டி குரு. இராமகிருஷ்ண பரமஹம்ஸர் குரு. விவேகானந்தர் அவருடைய சீடர். குரு என்பார் பாத்திரம் அறிந்து பிச்சை இடுவார். பாத்திரம் என்பது சற்பாத்திரம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

பிச்சை என்பது ஞானக்கொடை. தக்கான் ஒருவனுக்கே நல்லறிவு வழங்க வேண்டும். இல்லையேல் விளைவது விபரீதமே.

வானரம் மழை தனில் நனையத் தூக்கணம்
தானொரு நெறி சொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமும் கல்வியும் நயந்த நூல்களும்
ஈனருக்கு உரைத்திடில் இடரதாகுமே.

சீடனைப் பற்பல சோதனைகளுக்கு உட்படுத்திய பிறகே குருவானவர் அவனுக்கு உபதேசம் செய்வர். இம்முறையில் தான் பரமஹம்சர் நரேந்திரனை விவேகானந்தனாக ஆக்கினார்.

பேராசிரியர் சங்கர வேதாந்தத்தில் ஊறித் திளைத்தவர். வேதத்தின் அந்தமாகிய வேதாந்தம் உபநிடதமே. கோடகநல்லூர் சுவாமிகள் ஆதி சங்கர பகவத்பாதர் வரையறுத்து அருளிய வேதாந்த வழி ஒழுகி வந்தவர். Arthur Schopenhauer (ஆர்தர் ஷொபன்ஹர்) வேதங்களை மொழிபெயர்ப்பின் மூலமே ஓதிச் சிலிர்த்து நின்றவர். அவர் கூறியதாவது: "The Vedas area the most rewarding and the most elevating book(s) which there can possibly be in the world! (They have) thus become the solace of my life and will be the solace of my death."

ஜெர்மன் மேதைகளான கதே, தொய்ஸன் போன்றோர் உபநிடதங்களில் ஊறித் திளைத்தவர்கள். மகாகவி பாரதியாரும்,

பன்னிரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே

என்று அருளியுள்ளார். மேல்நாடுகளில் விவேகானந்தர் வேதாந்தத்தையே பிரசாரம் செய்து வந்தார்.

இவ்வேதாந்தம் சுந்தர முனிவருக்கு அநுபூதியாயிற்று. வேதாந்தத்தை த்வைத, அத்வைத, விசிட்டாத்வைத, சைவ சித்தாந்தப் பரமாக அவ்வச் சமயங்களைச் சார்ந்தவர் விளக்கி இருக்கின்றனர். த்தைவ பரமாக விளக்கியவர் மத்வாசாரியார்; அத்வைத பரமாக விளக்கியவர் சங்கர பகவத் பாதர்; விசிட்டாத்வைத பரமாக விளக்கியவர் இராமானுஜர்; சைவ சித்தாந்த பரமாக விளக்கியவர் மெய்கண்ட தேவர். என்றாலும் சைவ சித்தாந்தம் கூறும் அத்வைதம் வேறு; சங்கர வழியினர் கூறும் அத்வைதம் வேறு. மேலும் மாயைக்குச் சங்கரர் கூறிய விளக்கம் வேறு; மெய்கண்டார் கூறிய விளக்கம் வேறு. சங்கரர் கூறிய விளக்கத்தையே தேச பக்தர் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களும், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களும் ஏற்றனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சில சொற்கள் பல சமயங்களுக்கும் பொதுவானவையாக இருக்கும். ஆனாலும் அவ்வச் சமயங்களும் அச்சொற்களுக்குக் கூறும் பொருள் வேறுபாடு உடையனவாக இருக்கும். இதை உணராவிடில் விளைவது குழப்பமே.

பகவத்பாதர் விளக்கிய வழியில் வேதாந்தம் என்றால் என்ன? என்று புரிந்து கொண்டால்தான் பிள்ளை அவர்கள் கூறியவற்றை நாம் அறிந்து கொள்ள முடியும். மனோன்மணியத்தை ஓதி அதன் முழுப்பயனைப் பெற விரும்புவோர் சங்கர வேதாந்த ஞானம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

நான் பிறப்பால் சங்கர வேதாந்தி; கொள்கையால் சைவசித்தாந்தி. பேராசிரியர் பிறப்பால் சைவ சித்தாந்தி; கொள்கையால் சங்கர வேதாந்தி. உண்மையான சித்தாந்தியோ, சங்கர வேதாந்தியோ, பிறருடைய வைதிகக் கொள்களைப் பழிக்கவோ, தெழிக்கவோ, இழிக்கவோ மாட்டார். அப்படிச் செய்தல் அவர்தம் கருத்துமன்று, கடனுமன்று. ஜீவகன் குல குரு இக்கருத்தையே வலியுறுத்தியுள்ளார்.

சங்கர வேதாந்தம் பற்றி வடமொழியிலும், இந்தியிலும், ஆங்கிலத்திலும் நூற்றுக்கணக்கான பனுவல்கள் உள. தமிழில் ஒரு சிலவே உள. இவையிற்றுள் ஒரு சில நூல்களின் பெயர்களையாவது நான் கூறுதல் வேண்டும். அவையாவன: கைவல்லிய நவநீதம், விசார சாகரம், விருத்திப் பிரபாகரம், பஞ்சதசி, விசார சந்திரோதயம், பாலபோதம், விருத்தி ரத்னாவளி, நாநாஜீவ வாதக் கட்டளை, சசிவன்ன போதம், மகாராஜா துறவு, வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், வேதாந்த சூடாமணி, ஈசுவர கீதை, பிரம கீதை, ஞான வாசிட்டம், வேதாந்த பரிபாஷை, சித்தாந்த பிந்து, ஆத்ம புராணம், தத்துவராயர் அருளிய பாடுதுறை, பிரம சூத்திர பாடிய மொழிபெயர்ப்புகள், சாத்திரக் கோவையில் அடங்கிய 16 நூல்கள், ரிபு கீதை, இவை பெரும்பாலும் மொழிபெயர்ப்பு நூல்களே. கைவல்லிய நவநீதம் அங்ஙனம் அன்று.

கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் சுவாநுபவாஸ மஞ்சரி (1904), சுவாநுபூதி ரஸாயனம் (1904), பிரமகீதை உரை (1936) ஆகியவற்றை அருளியுள்ளார். மேலும் சுவாமிகள் அருளிய நிஜானந்த விலாசம் என்னும் நூலை வெளியிட்டவர் நம் பேராசிரியர். 1904இல் வெளிவந்த இரண்டாம் பதிப்பு என் நூல் நிலையத்தில் இருக்கிறது. மேலும் சுந்தர சுவாமிகள் கரபாத்திர சுவாமிகள் அருளிய அத்வைத போத தீபிகை என்னும் நூலைத் தமிழில் பெயர்த்திருக்கிறார். இங்கு நான் குறிப்பிட்ட நூல்களை முறையே பயின்றவர் நம் பேராசிரியர்.

பல வடமொழி நூல்கள் தமிழில் பெயர்க்கப்பட்டிருக்கின்றன. தமிழிலிருந்து வடமொழியில் பெயர்க்கப்பட்ட முக்கியமான நூல்கள் இரண்டே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒன்று கைவல்லிய நவநீதம். இரண்டாவது பெரிய புராணம். உபமன்னியு பக்த விலாசம் என்ற பெயரிலும் (அகஸ்திய) சிவபக்த விலாசம் என்ற பெயரிலும் பெரிய புராணம் வடமொழி ஆக்கம் பெற்றுள்ளது. மேலும் சிவரஹஸ்ய ஒன்பதாம் அம்சம் பெரிய புராண மொழிபெயர்ப்பே.

தமிழில் உள்ள கைவல்லிய நவநீதத்திற்குப் பத்து உரைகள் உள. வடமொழியில் இந்நூலைப் பெயர்த்தவர் சங்குகவி என்பவர். ஆங்கிலத்திலும், ஜெர்மன் மொழியிலும் இதை மொழியாக்கம் செய்தவர் சார்ல்ஸ் க்ரால் என்பவர், இவருடைய ஆங்கில மொழிபெயர்ப்புப் புத்தகத்தில், ஆங்கிலத்தில் நூறு பக்கங்கள் கொணட தமிழ்மொழி இலக்கணம் வரையப்பட்டிருக்கிறது. 1855இல் வெளிவந்த இந்நூலை நான் 1995இல் மீளவும் பதிப்பித்தேன்.

கைவல்லிய நவநீதம் சாற்றும் வேதாந்த அடிப்படைக் கருத்துக்களை நான் கூறவேண்டும். இவை மனோன்மணியத்தைப் புரிந்து கொள்ள உதவும்.

முதலில் அதிகாரி என்ற சொல்லுக்கான பொருளைப் புரிந்து கொள்ளுவோம். ஒரு நூலை அறிந்து கொள்ளும் தகுதி உடையவனே அதிகாரி ஆவான். எந்தச் சைவனும் எடுத்த எடுப்பிலேயே மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்தை ஓதத் தொடங்கக் கூடாது. அடிப்படைக் கட்டளை நூல்களைப் படித்துத் தெளிந்த பிறகு உண்மை விளக்கம், திருவருட் பயன் ஆகிய நூல்களைப் பயின்று, சிவஞான சித்தியார் உதவியோடு போதத்தைப் பயிலல் வேண்டும். அனைத்தையும் குரு முகமாகக் கேட்டல் சிறப்புடையது.

மாமுநி மில்டனார் வரைந்த பாரடைஸ் லாஸ்ட் என்ற காப்பியத்தை, நான் கல்லூரியில் வாசிக்கும் காலத்தில் பயில விரும்பி, சுயமாக இக்காரியத்தில் இழிந்து நின்றேன். ஒவ்வொரு முறையும் நான் கண்டது தோல்வியே. சட்டப்படிப்பை மேற்கொண்ட காலத்தில், கோடை விடுமுறையில் என் ஆசிரியரோடு ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் படித்தேன். 15 நாடகங்களைப் படித்து முடித்த பின்னர் மாமுநி மில்டனார் காவியத்தைப் படிக்கத் தொடங்கி வெற்றி கண்டேன். The understanding of Milton is the reward of consummate knowledge என்பர்.

பலரும் மனோன்மணியத்தை மேலோட்டமாகவே பயின்றிருக்கின்றனர். ஒரு சிலர் ஓரளவு ஊன்றிப் படித்து உள்ளனர். படிக்கப் படிக்க, நம் தகுதிக்கு ஏற்பப் பொருள் காட்ட வல்லது மனோன்மணியம். 'புகப் புக இன்பமடா போதெல்லாம்' என்ற பாரதியாரின் வாக்கை இங்கே நினைவு கொள்ளுவோமாக.

மனோன்மணியத்தைப் புரிந்து கொள்ள வேதாந்த ஞானம் வேண்டப்படும். வேதாந்தம் பயிலுதற்குரிய அதிகாரி யார்? அவ்வதிகாரிக்குத் தேவைப்படுவது என்ன?

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சாதன சதுஷ்டயம் என்று ஒன்று கூறப்படுகிறது. இதற்குப் பொருள் நான்கு சாதனங்கள் என்பதே. இவை,

1. நித்தியா நித்திய விவேகம்,
2. இகபர விராகம்,
3. சமாதி ஷட் சம்பந்தி,
4. முமூக்ஷுத்வம்.

நிலைக்கும் பொருள் எது, நிலையில்லாப் பொருள் எது என்பதை உணர்தலே நித்தியா நித்திய விவேகம்.

நில்லாதனவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை

என்பது வள்ளுவம்.

நிலையான பொருள் எது? நாமமும் உருவமும் இல்லாமல் என்றும் நிலைத்திருக்கும் பொருளே பொருள். இதற்கு த்ருக் என்று பெயர். த்ருஸ்யம் என்பது நாம ரூபமாகத் தோன்றி அழியத்தக்க அநித்தியப் பொருள். நித்தியா நித்திய விவேகம் த்ருக் த்ருஸ்ய விவேகம் என்றும் வழங்கும்.

பூ உலகிலும் சுவர்க்க உலகிலும் காணப்படும் சுவை கூடிய பொருள்கள் நிலையற்றவை. இவற்றை உவர்த்து எறிதலே இகபர விராகம் என்பது.

சுவர்க்கம் வேறு; மோக்ஷம் வேறு. இந்த வாசியை மேனாட்டுச் சமயங்கள் அறியா.

சிற்றின்பங்கள் பலப்பல. பேரின்பம் ஒன்றே. பேரின்பம் பெறுவதையே வீடுபேறு என்பர். மோக்ஷம் வழங்குவது அந்தமில் பேரின்பம். ஆகவேதான் அப்பர் அடிகள் 'சொர்க்கங்கள் பொருள் அலவே' என்று அருளியுள்ளார்.

சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை என்ற ஆறும் சமாதிஷட் சம்பத்தியாம்.

சமம் என்பது அந்தக் கரணங்கள் மீது ஆளுமை பூணல். சித்தம், மனம், புத்தி, ஆங்காரம் ஆகியவையே அந்தக்கரணம். மனம் இச்சையின் வடிவம். அது தன் இஷ்டப்படி திரியும். ஆகவேதான், 'மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்' என்று எச்சரித்துள்ளார்கள். நம் நல் இச்சைப்படி மனம் செயல்பட வேண்டும். இதையே மகாகவி 'உலாவும் மனச் சிறு புள்ளினை எங்கணும் ஓட்டி மகிழ்ந்திடுவோம்' என்றார். இது தொடக்க நிலை. முடிவுநிலை மனோநாசம்.

தமம் என்பது புறக்கரணங்களின் மீது ஆட்சி பூணுதல். அகக் கரணங்களை அடக்கியவரே புறக்கரணங்களை அடக்க வல்லார். சப்த, ஸ்பரிஸ, ரூப, ரஸ, கந்தங்களை வெல்லுவதே தமம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு

என்பது வள்ளுவம். இந்நூற்பாவிற்குப் பரிமேல் அழகியர் அருளிய உரையை மீட்டும் மீட்டும் படிக்க வேண்டும்.

உபாதி என்பதைத் தமிழில் விடல் என்பர். இணைவிழைச்சு, பணம், பல்வகை அபிமானங்கள் என்றுள்ளவற்றை நீக்கி விடுதவே விடல் ஆகும். மேற்சொன்னவை துயர் தரும்.

திதீட்சை என்பதையே சகித்தல் என்பர். காமம், குரோதம் முதலிய குணங்களை அடக்குதலும், சுக துக்கங்கள் நேரும் போது இவை ஊழால் விளைந்தன என்று பொறுத்துக் கொள்ளுதலும் திதீக்ஷை ஆம்.

சித்தத்தை விடயங்களில் செல்ல ஒட்டாது தடுத்து, கேட்டறிந்த ஞான விஷயங்களிலும், ஈசுர சிந்தையிலும் எப்போதும் ஊன்றியிருத்தல் சமாதானம் எனப்படும்.

சிரத்தை என்பது ஆசாரியரிடத்திலும், ஞான நூல்களிலும் பக்தி செலுத்துதல் ஆகும், ஈசுவரரிடத்துப் பூரணபக்தி வைத்தல் வேண்டும். ஞானாசிரியரைக் கடவுளாகவே கொள்ளல் வேண்டும்.

முமூக்ஷுத்வம் என்பது முக்தியை விரும்பும் இச்சை. முமூக்ஷு என்பார் வீடு காதலிப்பாரே. முத்தியில் விருப்பம் தீவிரப்பட்டு இருத்தல் வேண்டும்.

வேதாந்த ஞானம் பெற உதவும் சாதனங்கள் பற்றி ஓரளவு பார்த்தோம். இனி மனோன்மணீயம் என்ற தலைப்பு தன்னகத்தே தேக்கி வைத்துள்ள தத்துவச் செய்தி காண்பம். பிள்ளை அவர்கள் வரைந்த நாடகத்தின் தலைவி மனோன்மணி. தம்முடைய நாளில் இப்பெயர் எப்படி எழுதப்பட்டு வந்ததோ அப்படியே பிள்ளை அவர்களும் அப்பெயரை அமைத்திருக்கிறார் என்றாலும் இப்பெயர் வடமொழியில் எங்ஙனம் எழுதப்பட்டது என்பது பற்றியும் நான் குறிப்பிடுதல் வேண்டும். மநஉந்மநீ மநோன்மநீ ஆயிற்று. இச்சொல்லில் உள்ள நகரங்கள் அனைத்துமே தந்நகரங்கள். தமிழ்ச் சுவடிகளில் காணப்படும் இப்பெயரில் றன்னகரமும், டண்ணகரமும் காணப்படுகின்றன. வடமொழியில் நீ என்று முடியும் இப்பெயர் தமிழில் ணி என்றே முடிகின்றது. மனோன்மணியம் என்று அமையாது மனோன்மணீயம் என்று தலைப்பு அமைந்திருப்பதற்குக் காரணம் வடமொழிப் பெயரில் அமைந்த இறுதி எழுத்து நீ என்ற நெடிலாக இருப்பதுவே என்று தோன்றுகிறது. அப்பர் அடிகள் பாடல் ஒன்றைக் காண்பம்.

ஏயிலானை யெனிச்சை யகம்படிக்
கோயிலானைக் குணப் பெருங் குன்றினை

வாயிலானை மனோன்மணியைப் பெற்ற
தாயிலானைத் தழுவு மென் ஆவியே.

மனோன்மணி என்ற பெயர் யாரைக் குறிக்கின்றது? திருவெம்பாவையைக் கற்பார் மனோன்மணி பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.

திருவாசகத்திற்கு வரையப்பட்ட உரைகள் சுவடிகளிலேயே தேங்கி விட்டன. உரையோடு கூடிய அச்சுப் பதிப்பு 1897இல்தான் வெளிவந்தது. பட்டாளம் வாசுதேவ முதலியாரும், பிருங்கிமாநகரம் சீனிவாச முதலியாரும் தனித்தனியே உரைநூலை 1897இல் வெளியிட்டனர். மனோன்மணீயத்தின் முதற்பதிப்பைப் பிள்ளை அவர்கள் 1891இலேயே வெளியிட்டு விட்டனர். நம் பேராசிரியர் திருவாசகத்தில் துறை போகியவர். திருவாசக உரையைச் சுவடி மூலமே அவர் பயின்றவர். மனோன்மணீயத்தில் அவரது திருவாசக ஈடுபாடு அங்கங்கும் வெளிப்படுகிறது. அவற்றுள் ஒரு சில காண்பம்.

தென்பாண்டி நாடே சிவலோக மாமென
முன்வாத வூரர் மொழிந்தனர்

என்கிறார் பேராசிரியர்.

அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த
அப்பர் சடையப்பன்

என்று திருவம்மானை சாற்றுகிறது.

யாரொடு நோவேன்? யார்க்கெடுத்துரைப்பேன்?
வார் கடல் உலகில் வாழ்கிலன்
மாளுவன் திண்ணம் மாளுவன் வறிதே

என்கிறார் பிள்ளை அவர்கள்.

யாரோடு நோகேன் யார்க்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே

என்று வாழாப் பத்து உரைக்கின்றது.

சித்தம் மத்துறத் தயிரில் திரிந்து
பித்துறச் செய்த

என்கிறார் பிள்ளை அவர்கள்.

மத்துறு தயிரில் புலன் தீக்கதுவக் கலக்கி

என்கின்றது நீத்தல் விண்ணப்பம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறும்பு செய்யெறும்புங் கோடி கோடியாய்
புழுக்களும் பூச்சியும் பிழைக்குமாறு என்னை

என்று பிள்ளை அவர்கள் சாற்றியுள்ளார்.

எறும்பிடை நாங்கூழெனப் புலனால் அரிப்பு உண்ட

என்று நீத்தல் விண்ணப்பம் கூறுகிறது.

தாயினும் சிறந்த தயாநிதி மனோன்மணி

என்கிறார் பிள்ளை அவர்கள்.

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

என்று சிவபுராணம் அருளுகிறது.

எய்ப்பினில் வைப்பாய் இருந்த பேர் அருளைப் போற்றுகிறார் நம் பிள்ளை அவர்கள். திருவண்டப்பகுதி,

காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க

என்று வாழ்த்துகிறது.

திருவாசகத்தின் ஒரு முக்கியமான பகுதி திருவெம்பாவை. இங்கு சூசிப்பிக்கப்படும் நவ சக்திகளில் முதன்மை இடம் பெற்று விளங்குவது மனோன்மணி. இப்பெயரின் பெருமையை அந்நாளில் சைவச் சான்றோர் நன்கு அறிந்து வைத்திருந்தனர். திருவாசக உரைச் சுவடியில் திருவெம்பாவைக்கு அமைந்த முன்னுரையைப் பார்ப்போம்:

பிரபஞ்ச சிருட்டியைத் திருவுளத் தடைத்து, வயிந்தவ சக்தியைச் சிருட்டிக்கத் தொடங்கும் அவதரம் திருப்பள்ளி எழுச்சி என வழங்கும்.

"இனி அந்தச் சுத்தமாயையை நாத விந்துக்களாகவும், சாதாக்கியமாகவும், சுத்த வித்தையாகவும் அஞ்சு தலமாயிருக்கும். நாதவிந்துக்களாகிய தலங்களிலே பரமும், பரையும் அதிட்டிக்குஞ் சாதாக்கியமாகிய தலத்திலே சதாசிவ மூர்த்தி எழுந்தருளியிருப்பர். போகாங்களாகிய அணுசதாசிவர் சேவிக்கவும், இதன் கீழே ஈசுரற்கு அதிட்டானமாகிய மகேசுர தலத்திலே அனந்தாதி அட்டவித்தியேசுரர் சேவிக்கவும், இதன் கீழே உருத்திரர்க்கு அதிட்டானமாகிய சுத்தவித்தியா தலத்திலே மந்திரேசுவரர் சேவிக்கவும், இப்பிரபஞ்ச அனுக்கிரக காரியமாகப் பராசக்தியில் தோன்றிய ஞானக் கிரியைகள் ஒத்த இச்சையே திருமேனியான சதாசிவ மூர்த்தி, தன் திருவருளால் அந்த மகேசுவர தத்துவத்திலே சத்தி மண்டலத்தில் இருந்த மனோன்மணி சத்தியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி சர்வபூத தமனியைச் சிருட்டிக்க, அந்த சர்வபூத தமனி பெலப்பிரதம

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமனியைப் பிரேரிக்க,அந்தச் சத்தி பெல விகரணியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி காளியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி சேட்டையைப் பிரேரிக்க, அந்தச் சத்தி வாமையைப் பிரேரிக்க, இப்படி பிரேரியா நிற்க நவசக்திகள் பிரேரகத்தினால் மாயை அதிட்டித்து இருக்கிற அனந்த தேவராலே அசுத்த மாயை காரியப்பட்டுப் பிருதிவி முடிவான பிரபஞ்ச காரியம் நடவா நிற்கும்."

காசிப சில்ப சாத்திரமும் மேலே கூறப்பட்ட செய்திகளையே கூறுகின்றது. சரசுவதி மகால், இந்நூலின் முதல் இரண்டு பாகங்களை இவ்வாண்டு மீள் பதிப்புச் செய்திருக்கின்றது. இரணடாம் பாகம் 76 ஆம் பக்கம் நம் கவனத்திற்குரியது.

நவசக்திகளில் தலைமை இடம் மனோன்மணிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதை நம் பேராசிரியர் நன்கு அறிவர். மேலும், 1879இல் கொழும்பு புதினலங்காரி அச்சுக்கூடத்தில் ஒரு சிறிய நூல் வெளியிடப்பட்டது. இச்சிறு நூலில், மலையாளம் உசரவிளை குமராண்டி ஞானியார் அவர்கள் அருளிச் செய்த பாடல்களும், மனோன்மணி பூசை அகவலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 19 ஆம் நூற்றாண்டில் பாராயண நூலாக விளங்கி வந்த இச்சிறு நூல் நம் பிள்ளை அவர்கள் பார்வையில் பட்டிருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

பொருத்தமான பெயர்களைச் சூட்டுவதில் நம் பேராசிரியர் வல்லவர். நம் நாடகத்திற்கும், நாடகத் தலைவிக்கும், நாடகப் பாத்திரங்களுக்கும் மிகப் பொருத்தமான பெயர்களையே இவர் சூட்டியுள்ளார். அவ்வப் பாத்திரங்களின் குணாதிசயங்களை அப்பெயர்களே நன்கு சூசிப்பிக்கின்றன.

பிள்ளை அவர்கள் வடமொழி வேதங்களையும் ஆகமங்களையும் ஏற்காதவர் என்று தமிழ்நாட்டில் ஒருசிலர் கூறிவருகின்றனர். இது தவறு. அறிஞர்களுக்கு விசனமூட்டுவது. பிள்ளை அவர்களே தம் முகவுரையின் தொடகத்தில் மூன்று அற்புதமான பாடல்களைப் பொறித்திருக்கின்றார். அவையிற்றைக் காண்போம்.

மறை முதற்கிளந்த வாயான் மதி முகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வைப்பிற் பாடை யனைத்தும் வென்று
ஆரியத்தோடு
உறழ் தமிழ்த் தெய்வத்தை உள்நினைந்து ஏத்தல் செய்வாம்.

இருமொழிக்கும் கண்ணுதலார் முதற் குரவர் இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர் இசை பரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீஇனார் என்றால் இவ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விருமொழியும் நிகர் என்னும் இதற்கு ஐயம் உளதோ?

கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?

'ஆரியம் போல் உலக வழக்கு ஒழிந்து' என்று அவர் கூறியதற்கு அவரே தந்துதவிய குறிப்புரை விளக்கம் இது: 'உலகு வழக்கு அழிதலாவது: இப்போது எந்த நாட்டிற்கும் சொந்த மொழியாக வழங்காமை. இதனால்தான் தேவபாஷை என வழங்குவது போலும்.'

எந்த நாளிலும் வடமொழி பேச்சு மொழியாக இருந்ததில்லை. பேச்சுமொழி பிராகிரதமே.

மேலும் தாம் பாடிய பாயிரத்தில் கனம், ஜடை என்ற வேத வழக்கைப் பிள்ளையவர்கள் பழித்தார் என்பர். ஆசிரியரே அளித்த விளக்கத்தை அறியாதவரே இங்ஙனம் கூறுவர். தம் குறிப்புரையில் பேராசிரியர் கூறியிருப்பது என்ன என்று காண்பம். 'சங்கிதை, பதம், கிரமம், சடை, கனம், வருணக்கிரமம் முதலியன வேதத்தின் மூல பாடம் ஒரு சிறிதும் பிழையாதிருத்தலை நோக்கி ஏற்பட்டவை. இவற்றுள் கனம், சடை என்பன வேதத்தை மொழி மாற்றி உருவிட்டுக் கூறும் முறை. கனம் வருந்திப் படிக்க வேண்டியதாயுள்ள முறை. சடை: சடைபோற் பின்னிக்கூறும் முறை.'

பிள்ளை அவர்கள் தம் நாடகத்தில் நூற்றுக்கணக்கான சமுஸ்கிரத பதங்களைச் சரளமாகப் பயன்படுத்தியுள்ளார். இதன் பொருள் என்ன? அவர் வாழ்ந்த காலத்தில் விளங்கிய சான்றோர் இப்பிரயோகங்களை நன்கு அறிந்திருந்தவராகத் திகழ்ந்தனர். 700க்கும் மேற்பட்ட வட சொற்கள் மனோன்மணீயத்தில் காணப்படுகின்றன. முனைவர் அ.தக்ஷிணாமூர்த்தி அவர்கள் இச்சொற்களுக்கான ஒரு பட்டியலைத் தம்மிடம் வைத்திருக்கிறார். மயிலை சீனி.வெங்கடசாமி அவர்கள் தம் பதிப்பு, பக்கம் 18இல் கூறியிருப்பது இதுவே:

“விபஞ்சனம், க்ஷேமம், வாயசம், சம்போ சங்கர அம்பிகா பதே, தயாநிதே, கிரகித்தனர், வியர்த்தம், பிசிதமரம், பாக்கிய சிலாக்கியன், சுதந்திர பங்கர், நிசித வேலரசாடவி, உசிதம், அரகர குரு கிருபாநிதே, சுவானம், தனுகரணம், பிரணவ நாதமே தொனிக்கும், அந்நியோந்நிய சமாதானச் சின்னம், உத்தமோபாயம், இராச்சியபரண சுதந்திரம், விளம்பனம், பச்சாதாபப் படுத்துவம், யதார்த்தம், பிரபுத்துவம், கிருபணன், ஏகாந்தப் பெருங்ககனம், வேஷரகசியம், அகோராத்திரம், பஞ்சாசத்கோடி, பிரத்தியக் பிரபோதயம்,

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

கரதலா மலகம், சுதேசானுராகம், துவாதசாந்தம், தாதான்மியம், குணப் பிரதமம் முதலியன இவர் ஆளும் வடமொழிச் சொற்கள், தொடர்கள்.

"திருவடி, கற்பனை, சாடு, திருமேனி, திருவாணை, மாற்றொலி, வெள்ளம்முங்கி, யதார்த்தம், பரசியம் முதலியன மலையாள மொழியில் வழங்குகிற சொற்கள்."

பிள்ளை அவர்கள் வடமொழியை விடவும் தமிழ் சிறந்தது என்று காட்டுவார். "வடமொழி தேவ பாஷை; தமிழ் மகாதேவ பாஷை" என்பது என் கொள்கை.

பிள்ளை அவர்கள் பென்னம் பெரிய தத்துவப் பேராசிரியர். பாரத, மேனாட்டுத் தத்துவங்களில் துறை போகியவர். நான் என்னும் சொல்லுக்குப் பொருள் காண்டலே தத்துவ விசாரசாரம் என்பது உலகப் பெரியோர்களின் துணிபு. நான் என்பதை விளக்கவே சங்கரர் பல செய்திகளைக் கூறியுள்ளார். பிள்ளை அவர்கள் சங்கரர் அருளிய பஜகோவிந்தப் பாடல் கருத்துக்களைத் தம் நாடகத்தின் மூன்றாம் அங்கம், நான்காம் களத்தில் காட்டியுள்ளார்.

டெல்ஃபி என்னும் இடத்தில் பண்டு, வரும் பொருள் உரைக்க வல்ல இறையாளர் நிலையம் ஒன்று விளங்கிற்று. இதில் இரண்டு வாசகங்கள் கிரேக்க மொழியில் பொறிக்கப்பட்டிருந்தன. ஒன்று க்னாதி ஸிஔடன்; மற்றது மீடன் அகன். முன்னதன் பொருள் 'உன்னை நீ அறிக' என்பதாம்.

மகாகவி பாரதியாரும், 'நினை நன்று மருவுக மைந்தனே' என்று கூறியுள்ளார். 'நான் ஆர்? என் உள்ளம் ஆர்?' என்றே மணிவாசகரும் வினவினார்.

வேதாந்தக் கருத்துக்கள் அனைத்துலகத்திற்கும் பொதுவானவை. ஆத்ம விசாரம் என்பதை ஒவ்வொருவரும் மேற்கொள்ளல் வேண்டும்.

மனோன்மணீயத்தில் நிஷ்டாபரர் என்று ஒருத்தர் வருகிறார். அவருடைய பெயரிலேயே வேதாந்தம் வெளிப்படையாக அமைந்திருக்கிறது. கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல் என்பனவே வேதாந்த, சித்தாந்த மார்க்கங்கள். கேட்டல் என்பது அனுபவப் பொருளைத் தேசிகன் வாயால் கேட்டல். சிந்தித்தல் கேட்ட பொருளை அமைதியாகச் சிந்தித்தல். நற்சிந்தனையின் விளைவே தெளிதல். ஐயம் திரிபுகளற்ற நிச்சய புத்தியே தெளிதல். இறைமையில் நிலைத்திருத்தல் நிட்டை. இதைச் சமாதி என்பர்.

உலகம் ஒரு பேய்த் தேர்; இங்கு நிகழ்வது இந்திர ஞாலம். நம் முன் இயங்கும் உலக ஞானம், உண்மை ஞானம் பெற்றார் முன் இயங்காது. வேதாந்தம் அனுபவத்திற்குரியது. வாய் வேதாந்தம் பொருள் அற்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நடைமுறையில் உலகம் உண்மை. இவ்வுண்மையை வ்யாவகாரிக சத்யம் என்பர். இது நிலைத்த உண்மை அன்று. இதன் இருப்புத் தற்காலிகமானது. பாரமார்த்திகமே ஈறு நிற்கும் உண்மை. வியாவகாரிக உண்மையைக் கடந்தவனே 'உலகம் மாயை' என்று கூறலாம். கடக்காத வரையில் உலக உண்மையை ஏற்க வேண்டும். அதனுடைய முறைகளை, சட்ட திட்டங்களை மதிக்க வேண்டும். அறிவு வேறு; அநுபூதி வேறு. அறிந்தது அநுபவமாக வேண்டும். அனுபவ ஞானிகளே மேலோர்.

மக்கள் பல படிநிலைகளில் உள்ளனர். உண்மையும் பல திறத்தனவாகக் காட்சிப்படும். யாருக்கு எது கூறப்பட்டது என்பதை விளங்கிக் கொள்ளல் வேண்டும். 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என்பது அந்தணர்க்குக் கூறப்பட்டது என்றும், உழைத்துப் பிழைக்க வேண்டிய நிலையில் உள்ளவர்களுக்குக் கூறப்பட்டது அன்று என்றும் முகவை இராமானுஜ கவிராயர் கூறியுள்ளார்.

கோயிலாவ தேதடா, குளங்களாவ தேதடா
. . . . .
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே

என்பது சித்தர் நிலை வேட்டு முயல்வார்க்கு உரைக்கப்பட்ட வாசகம்.

'நான் யார்?' என்ற வினாவிற்குத் தம் 19 ஆம் வயதில் விடை கண்டார் பகவான் ரமணர். ஆத்ம விசாரமே குறிக்கோளாக அமைய வேண்டும். குறிக்கோளற்ற வாழ்வு வியர்த்தம்.

பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலி வொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோளிலாது கெட்டேன்
சேலுலாம் பழனவேலித் திருக்கொண்டிச் சரத்து ளானே

என்பது அப்பர் அடிகள் அருளிய அற்புத வாசகம்:

பாலஸ் தாவத் க்ரீடா ஸக்த:
தருணஸ் தாவத் தருணீ ஸக்த:|
வ்ருத்தஸ் தாவத் சிந்தா மக்ன:
பரே ப்ரம்மணி கோபிந ஸக்த:||

இப்படி, அடிகளைச் சங்கரர் வழி மொழிகிறார்.

ஆத்ம விசாரம் உண்மையை வழங்கும். நிஷ்டாபரர் உசாவுகிறார்:

. . . எங்கு நாம் உள்ளோம்?
நீர் யார்? நான் யார்? ஊரெது? பேரெது?

Digitization by Hindu-Heritage Foundation of America, HHFA(USA)

வாழ்க்கையே ஒரு போர்தான். 'போருக்கு நின்றிடும் போதும், உளம் பொங்கலில்லாத அமைதி மெய்ஞ்ஞானம்' என்றார் பாரதியார்.

இருவகையா துக்கம் பற்றி வேதாந்தம் கூறும். ஒருவகை, துக்கமாகத் தொடங்கித் துக்கமாக முடியும்; இரண்டாம் வகை இன்பமாகத் தொடங்கித் துக்கமாக முடியும். இதையே,

நோவும் சாவும் ஒன்றே; அன்றியும்
உலகெலாம் நோக்கில் உடல் ஒரு பொருளோ?

என்றும்,

பஞ்சாசத் கோடி எனப் பலர் போற்ற
எஞ்சாதிருந்த இப்புவி அனைத்தும்

துக்க மயம் என்றும் நிஷ்டாபரர் கூறுகிறார். 'இன்னாதம்ம இவ்வுலகம்; இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே' என்பது புறநானூறு புகலும் உண்மை.

பார்க்கப் பார்க்க இப்படியே துயரம்
மீக்கொளும்; அதனால் விடும் உலக எண்ணம்;
சுட்டதோர் சட்டி கைவிட்டிடல் என்னத்
துறப்பதிங்குலகம். . .

என்கின்றார் நிஷ்டாபரர்.

உண்மை விரக்தியே தூய ஞானத்திற்கு அடிகோலும். நிஷ்டாபரர் ஞானமார்க்கம் உரைக்கக் கருணாகரர் கன்ம மார்க்கப் பெருமை கழறுகிறார். இருவர் கூற்றையும் செவிமடுத்த சுந்தர முனிவர்,

. . . . . . ஏன் உங்கட்கும்
சமயிகட்கு ஆம் சச்சரவு?
அமையும் உங்கட்கு அவர் அவர் நிலையே

என்று அருளுகின்றார். முனிவர் வாசகம் பற்றி நம் பிள்ளை அவர்கள் தம் குறிப்புரையில் கூறுவதாவது: 'முடிவில் வரும் கலித்துறை சுந்தரர் சமைத்த சுரங்கத்தைத் தத்துவ உபதேசமாக உருவகப்படுத்தி, அநுபூதியாலன்றி உபதேசசார்த்தம் வெளிப்படாது என்று வற்புறுத்துகிறது.'

நாம் அறிந்து கொள்ள வேண்டிய வேதாந்த சித்தாந்தம் இதுவே:

அவர் அவர் வினை வழி அவர் அவர் வந்தனர்;
அவர் அவர் வினைவழி அவர் அவர் அனுபவம்;
எவர் எவர்க்கு உதவினர்? எவர் எவர்க்கு உதவிலர்?
தவர வர் நினைவது தமை உணர்வது வே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தம் நாடகத்தை எங்ஙனம் வாசிப்போர் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று பேராசிரியர் கூறியதையே இங்குக் கூறி என்னுரையை நிறைவு செய்கிறேன்.

"இல்லறம் துறவறம் பத்தி ஞானம் முதலிய மோக்ஷ சாதனங்கள் பொருத்தமுடைய சந்திகளில் வெளிப்படையாக அமைந்திருப்பதுமல்லாமல் இக்கதையினையே ரூபகமாலாங்காரமாகக் கருதில், தத்துவ சோதனை செய்யும் முமூக்ஷுகளுக்கு அனுகூலமாகப் பலிக்கவும் கூடும். அப்படி உருவக மாலையாகக் கொள்ளுங்கால், ஜீவனைச் சார்போதகமான ஜீவாத்மா ஆகவும், அவனைத் தன்வயப்படுத்தி யாட்டுவித்த குடிலனை மாயாசத்தியாகவும், மனோன்மணியை ஜீவாத்மாவின் பரிபக்குவ காலத்துதிக்கும் முத்திக்குரிய உத்தம பாகமாக சுத்த தத்துவமாகவும், அவள் தோழி வாணியைப் புத்தி தத்துவமாகவும், அவள் காதலனாகிய நடராஜனை ஞானதாதாவான உபாசனா மூர்த்தியாகவும், புருடோத்தமனை அனுக்கிரஹ சத்தியாகவும், சுந்தர முனிவரைக் கருணாநிதியாகிய ஞானாசிரியராகவும், ஜீவகனுக்குத் தலைநகராகக் கூறிய முத்திபுரம் என்னும் மதுரையை ஜீவாத்மா உதித்தொடுங்கும் மூலஸ்தானமாகவும், அவனும் குடிலனும் சேர்ந்து கட்டிய நெல்வேலிக் கோட்டையை மயாகாரியமான அன்னமயாதி பஞ்ச கோசத்தாலமைந்த சரீரமாகவும், அதிலிருந்து மனோன்மணி கண்ட கனாவைச் சுத்தாந்தக் கரண ஜநிதமான பரோக்ஷ ஞானமாகவும். சேரதேசத்தில் புருடோத்தமன் கண்ட கனாவைப் பரமபசுபதியான ஈசுவரனது அருளின் ஸ்புரணமாகவும், மனோன்மணியும் புருடோத்தமனும் சந்திக்கக் காரணமாக முடிந்த முனிவர் கட்டிய சுருங்கையைப் பிரத்தியக்ஷானுபூதிக் கேதுவான பாச விமோசன பந்தாவாகவும், பிறவும் இம்முறையே பாவித்து உய்த்துணர்ந்து கொள்ள வேண்டியது."

ஓம் தத் சத்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

10. தத்துவஞானி பாரதியார்

தத்துவம் ஆடச் சதாசிவந் தானாட
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே. - திருமந்திரம்

தத்துவம் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள. முதல்பொருள் உண்மை என்பது. பொருளின் குணத்தையும் இச்சொல் குறிக்கும். மேலும் இயல்பான அமைப்பு என்ற பொருளும் இதற்கு உண்டு.

மூலப்பொருளைத் தத்துவம் என்று குறிப்பிடுவர். சாங்கியம் தத்துவங்கள் இருபத்து ஐந்து என்று கூறும். சைவ சித்தாந்தம் தத்துவங்கள் முப்பத்து ஆறு என்று காட்டும். ஐந்து சிவதத்துவங்கள், ஏழு சுத்தாசுத்த தத்துவங்கள், இருபத்து நான்கு பிரகிருதிமாயா தத்துவங்கள்—ஆக தத்துவங்கள் 36.

தத்வமஸி என்பது ஒரு மகாவாக்கியம். தத் என்பதோடு த்வம் என்பது கூட, தத்வம் என்ற வார்த்தை எழுகின்றது.

த்வம் என்பதைத் தொம்பதம் என்பர்.

தோன்றிய தொம்பதம் தற்பதஞ் சூழ்தர
ஒன்ற அசிபதம் இம்மூன்றோடு எய்தினோன்
ஆன்ற பராபரம் ஆகும் பிறப்பிற
வேன்றனன் மானாச் சிவமா யிருக்குமே. - திருமந்திரம்

உடல் வலிமையையும் இந்திரிய பலத்தையும் தத்துவம் என்பர். மேலும் அதிகாரம் என்ற பொருளும் இச்சொல்லுக்கு உண்டு.

தத்துவத்திற்கு உள்ள எல்லாப் பொருள்களிலும் அச்சொல்லை மகாகவி பயன்படுத்தியிருக்கிறார்.

தத்துவம் சிவணிய ஒரு தனிச்செம்மொழியே தமிழ்மொழி. என்றாலும், நம்மில் பலர் இவ்வுண்மையை மறந்து போய்விட்டோம்.

உலகம் என்பது என்ன? இதற்குத் தொல்காப்பியர் கூறும் விடை இதுவே:

நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வளி என்பது காற்று; விசும்பு என்பது ஆகாயம். ஆகாயமே எங்கும் பரவி அனைத்தையும் தாங்குகிறது. இதை மகாகவி இப்படி விளக்குகிறார்.

மண்ணிலே வேலி போடலாம். வானத்திலே வேலி போடலாமா?
போடலாம்.
மண்ணிலும் வானந்தானே நிரம்பி இருக்கின்றது.
மண்ணைக் கட்டினால் அதில் உள்ள வானத்தைக் கட்டியதாகாதா?
உடலைக் கட்டு; உயிரைக் கட்டலாம்.
உயிரைக் கட்டு; உள்ளத்தைக் கட்டலாம்.
உள்ளத்தைக் கட்டு; சக்தியைக் கட்டலாம்.
அநந்த சக்திக்குக் கட்டுப்படுவதிலே வருத்த மில்லை.

உலகம் பஞ்சபூத மயக்கம் என்றார் தொல்காப்பியர். இவை தூல பஞ்சபூதம். இவை ஐந்தும் சூக்கும பஞ்சபூதத்திலிருந்து பிறந்தவை. இவை தன்மாத்திரைகள் என்று பேசப்படும்.

பிரபஞ்ச அளவிலே தன்மாத்திரை என்று பேசப்படுவது உடல் அளவில் புலன்கள் என்று கொள்ளப்படும். சப்த, ஸ்பரிஸ, ரூப, ரஸ, கந்தங்கள்: இவையே தன்மாத்திரைகள். சப்தம் என்பது ஓசை; ஸ்பரிசம் என்பது ஊறு; ரூபம் என்பது ஒளி; ரஸம் எனபது சுவை; கந்தம் என்பது நாற்றம்.

வள்ளுவரும் நீத்தார் பெருமை பேசுமிடத்து "சுவை யொளி யூறோசை நாற்றமென் றைந்தின் வகை தெரிவான் கட்டே யுலகு" என்று அருளியுள்ளார்.

வள்ளுவருக்கு உரிய பெருமை பரிமேலழகருக்கும் சான்றோரால் வழங்கப்பட்டது. மேற்சொன்ன நூற்பாவிற்குப் பரிமேல் அழகர் அருளிய விளக்கத்தைப் புரிந்து கொள்ளக்கூடிய தமிழரை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவர் கூறியதாவது: "அவற்றின் கூறுபாடாவன பூதங்கட்கு முதலாகிய அவைதாம் ஐந்தும், அவற்றின்கண் தோன்றிய அப்பூதங்கள் ஐந்தும், அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்துமாக இருபதுமாம். 'வகை தெரிவான்கட்'டென உடம்பொடு புணர்த்ததனால் தெரிகின்ற புருடனும் அவன்தெரிதற் கருவியாகிய மான் அகங்கார மனங்களும், அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றாம். தத்துவம் இருபத்து ஐந்தினையும் தெரிதலாவது: மூலப்பகுதி ஒன்றில், தோன்றிய தன்மையின் பகுதியே யாவதல்லது விகுதியாகாது எனவும், அதன்கண் தோன்றிய மானும், அதன்கண் தோன்றிய அகங்காரமும், அதன்கண் தோன்றிய தன்மாத்திரைகளுமாகிய ஏழும் தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும், தங்கண் தோன்றுவனவற்றை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
நோக்கப் பகுதியாதலும் உடைய எனவும், அவற்றின்கண் தோன்றிய மனமும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பூதங்களுமாகிய பதினாறும் தங்கண் தோன்றுவன இன்மையின் விகுதியே யாவதல்லது பகுதியாகாதெனவும், புருடன், தான் ஒன்றில் தோன்றாமையானும், தன்கண் தோன்றுவன இன்மையானும் இரண்டும் அல்லன் எனவும், சாங்கிய நூலுள் ஓதியவாற்றான் ஆராய்தல். இவ்விருபத்து ஐந்துமல்லது உலகெனப் பிறிதொன்றில்லை என உலகினது உண்மை அறிதலின், அவன் அறிவின் கண்ணதாயிற்று. இவை நான்கு பாட்டானும் பெருமைக்கு ஏது ஐந்தவித்தலும் யோகப் பயிற்சியும் தத்துவ உணர்வும் என்பது கூறப்பட்டது."

இச்செய்திகள் அனைத்தையும் அறிந்தவர் நம் மகாகவி. இதில் கூறப்பட்ட தத்துவ உணர்வினைஅவர் இயல்பாகவே பெற்றிருந்தார். அவர் இயற்றிய "காலமாம் வனத்தில்" என்று தொடங்கும் பாடலை ஊன்றிப் படித்தால் இவ்வுண்மை வெளிப்படும்.

மகாசங்காரம் என்பது என்ன? அனைத்தும் மாயையில் ஒடுங்க, மாயை சத்தியில் ஒடுங்க, சத்தி சிவத்தில் ஒடுங்குதலாகும். இதையே மகாகவி,

ஆதியாஞ் சிவனும் அவன் சோதியான சக்தியுந்தான்
அங்குமிங்கு மெங்கும் உளவாகும் - ஒன்றே
யாகினால் உலகனைத்தும் சாகும்

என்று காட்டியுள்ளார்.

தத்துவ உணர்வு பெற்ற பாரதியார் பகவத்கீதையைத் தமிழில் தந்தார். அவர் அவ்வப்பொழுது கையாளும் மொழியும் தத்துவ பாஷையாகும்.

சாத்திரப் பயிற்சியால் தத்துவ உணர்வு கிட்டும். தத்துவ உணர்வால் தெளிவு கிட்டும். தெளிவு என்பது நிச்சய புத்தி.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு." இத்தகு அறிவொடு திகழ்ந்தவர் பாரதியார். அவரிடம் மருளும் இல்லை; இருளும் இல்லை. அவர் ஐயத்தின் நீங்கி தெளிவில் திளைத்தவர்.

வாத வகைகளில் argumentum ad verecundiam என்பது ஒன்று. It is an appeal to reverence for some respected authority. மதிப்புடைய சான்றோர் வாக்கை வாதத்தில் பயன்படுத்தும் உத்தியிது. என்றாலும் எவருமே பூரணர் அல்லர் என்பதை நாம் மறத்தல் ஆகாது. A man of genius and virtue is but a man என்று Macaulay கூறியுள்ளார். மகாகவியும் இதே கருத்துடையவர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

பாரதியார் புத்தரை, சங்கர பகவத் பாதரை, இராமானுஜரை, மத்வரை, விவேகானந்தரை — மேலும் இவர் போன்றோரைப் போற்றியவர். ஆனால் இவருள் எவரையுமே அவர் முற்றுமாக ஏற்கவில்லை.

பாரதியார் வேத, இதிகாச, புராணங்களைப் போற்றியவர். என்றாலும் இவற்றையும் அவர் முழுமையாக ஏற்கவில்லை.

அவர் வேதம் புதுமை செய் என்றார். இதன் பொருள் என்ன? பழைய உண்மைகளுக்குப் புதிய துலக்கங்கள் காண்டல் வேண்டும் என்பதே. இச்செயலை அவரே மேற்கொண்டார். He redefined many of the well-known concepts. இவை பற்றிப் பின்னர் காண்பம்.

அவர் சாத்திரங்களைப் போற்றினார். எவை உண்மைச் சாத்திரங்கள், எவை போலி என்று கண்டார். உண்மைச் சாத்திரங்களை ஏற்றார். அவற்றிற்கு விளக்கங்களும் வரைந்தார். போலிச் சாத்திரங்களைப் பழித்தார், இழித்தார், தெழித்தார்.

பாரத நாட்டின் பெருமைக்குச் சாத்திரங்களும் ஒரு காரணம் என்று கண்டார் அவர். அங்ஙனம் காணவே, பாரத நாட்டை,

சாரத்திலே மிகு சாத்திரங்கண்டு
தருவதிலே உயர்நாடு

என்று போற்றினார்.

சாத்திரங்களைப் பரப்பியதில் தமிழ்நாட்டிற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு என்றும் அவர் சாற்றியுள்ளார். தமிழ்நாட்டை,

பல்விதமாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு

என்று அறிவித்தார். இக்கருத்தை, அவர் கொண்ட அபிமானத்தால் கூறினார் அல்லர். சங்கரர் அத்வைதத்தை நிறுவினார். இராமானுஜர் விசிஷ்டாத்வைதத்தைத் தாபித்தார். மெய்கண்டார் முப்பொருள் உண்மையை நிறுவினார். இவர்கள் அனைவரும் தமிழர்கள். சங்கர பகவத் பாதர் ஒரு தமிழர். அவர் 9 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வாழ்ந்தவர். 9 ஆம் நூற்றாண்டு சேரநாட்டில் நிலவிய மொழி தமிழே.

சாத்திர உண்மைகளைப் பாமரரும் போற்றி வந்தனர். சான்றோரும் ஏற்றினர். காதலில் ஆழ்ந்தவனும் போற்றினான். காதலியிடம் காதலன் கூறிய செய்தி ஒன்றை பாரதியார் இப்படிப் பதிவு செய்து வைத்திருக்கிறார்.

சாத்திரக்காரரிடம் கேட்டு வந்திட்டேன்– அவர்
சாத்திரஞ் சொல்லியதை நினக் குரைப்பேன்;

நேற்று முன்னாளில் வந்த உறவன்றடி - மிக
நெடும் பண்டைக் கால முதல் நேர்ந்து வந்ததாம்.

பாரத நாடு, குறிப்பாக தமிழ்நாடு சாத்திரக் களஞ்சியம்.

பாரத மாதாவைப் பாரதியார் இப்படிப் போற்றுகிறார். 'சுருதிகள் பயந்தனை; சாத்திரம் கோடி சொல்லரு மாண்பின் ஈன்றனை.'

உண்மைச் சாத்திரங்களை உணர முடியாதவரையும், இனம் காண முடியாதவரையும் அவர் தயவு, தாக்ஷண்யம் இன்றிக் கடிந்தார். 'நெஞ்சு பொறுக்குதில்லையே' எனத் தொடங்கும் பாடலில்,

சாத்திரங்கள் ஒன்றும் காணார் - பொய்ச்
சாத்திரிப் பேய்கள் சொலும் வார்த்தையை நம்பியே

பலர் மோசம் போனதைக் கூறியுள்ளார்.

பல்லி சொல்லுக்குப் பலன் கூறும் சாத்திரம், ருது சாத்திரம், சகுன சாத்திரம் போன்றவற்றை அவர் எள்ளி நகையாடினார். வயிறு பிழைக்கப் பயன்படுத்தப்படும் சோதிட சாத்திரத்தை அவர் சாடினார். Astrology is good, but astrologers are bad என்ற உண்மையை அவர் அறிவார். உம்பர் வானத்து மீனையும் கோளையும் ஓர்ந்து அளந்ததோர் பாஸ்கரன் மாட்சியை அவர் மனமாரப் புகழ்ந்தார். போலி ஜோஸ்யர்களையும், நிமித்தக்காரரையும் அவர் சொல்லாலே நையப் புடைத்தார்.

போலிச் சாத்திரங்கள் பற்றிய பாரதியார் விமரிசினம் இதுவே:

சாத்திரங்கள் பல தேடினேன் - அங்கு
சங்கை யில்லாதன சங்கையாம் - பழங்
கோத்திரங்கள் சொல்லு மூடர்தம் - பொய்மைக்
கூடையில் உண்மை கிடைக்கு மோ?

இன்னதுவே சாத்திரம் என்று அவர் விளக்கினார். "சாத்திரங் கண்டாய் சாதியின் உயிர்த்தலம்; சாத்திரம் இன்றேல் சாதியில்லை; பொய்மைச் சாத்திரம் புகுந்திடின் மக்கள் பொய்மையாகிப் புழுவென மடிவர்."

உண்மைச் சாத்திரம் எத்தன்மைத்து? அவர் கூறுகிறார்.

சாத்திரம் - அதாவது மதியிலே தழுவிய
கொள்கை, கருத்து. குளிர்ந்திடு நோக்கம் -
ஈங்கிதிற் கலக்கம் எய்திடுமாயின்
மற்றதன் பின்னர் மருந்தொன் றில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழ்ச் சமுதாயத்தின் மீது அவர் பூண்டிருந்த பரிவிற்கு எல்லையில்லை. கடுமையான மழைக்காலத்தில் தமிழ் மக்கள் எருமைகளைப் போல, எப்போதும் "ஈரத்திலே நிற்கிறார்கள்; ஈரத்திலே உட்காருகிறார்கள்; ஈரத்திலேயே நடக்கிறார்கள். ஈரத்திலேயே படுக்கிறார்கள்; ஈரத்திலேயே சமையல்; ஈரத்திலேயே உணவு" என்று இப்பரிதாபத்தைப் பதிவு செய்த பாரதியார், தம் பதிவிற்கு முத்தாய்ப்பு வைத்தது போல் கூறியதாவது: "உலர்ந்த தமிழன் மருந்துக்குக்கூட அகப்பட மாட்டான்."

இதற்குக் காரணம் 'விதிவசம்' என்று அவர்கள் நினைப்பது கண்டு வெகுண்டு எழுகிறார்.

ஆமடா, விதிவசந்தான்.
அறிவில்லாதவர்களுக்கு இன்பமில்லை என்பது
ஈசனுடைய விதி.
சாஸ்திர மில்லாத தேசத்திலே நோய்கள் விளைவது விதி.
தமிழ்நாட்டிலே சாஸ்திரங்கள் இல்லை; உண்மையான
சாஸ்திரங்களை வளர்க்காமல், இருப்பனவற்றை
மறந்துவிட்டு, தமிழ்நாட்டுப் பார்ப்பார் பொய்க்
கதைகளை மூடரிடம் காட்டி வயிறு பிழைத்து
வருகிறார்கள்

என்று அவர் அஞ்சாமல் அறைந்தார்.

தூய்மை என்பது கடவுள் நிலையை ஒட்டிய நிலை. புறத்தூய்மை, அகத்தூய்மை இரண்டுமே முக்கியமானவை. புறத்தூய்மையையும் சாத்திரமே கற்பிக்கிறது. கற்பிக்கவே, மகாகவி, **'சந்தி தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்'** என்றார்.

உண்மைச் சாத்திரங்களைப் பாரதியார் போற்ற மறந்ததில்லை. தமிழ்த்தாயைப் போற்றும்போது, அவள் கூற்றாக இப்படி ஒரு செய்தியை மகாகவி அறிவித்துள்ளார்.

சாத்திரம் பலதந்தார் - இந்தத்
தாரணி யெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்.

மேலும், மகாகவி,

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்

என்று கட்டளை இட்டிருக்கிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திலகரைப் போற்ற வந்த பாரதியார் கூறியதாவது:

அவ்வவர்
தாமகத்து வியப்பப் பயின்று ஒரு
சாத்திரக் கடல் என்ன விளங்குவோன். . .

திலகர் ஒரு சாத்திரக்கடல். சரி, சைவ சித்தாந்த சாத்திரத்தின் மூலமந்திரம் என்ன? அதுவே திருவைந்தெழுத்து. அதைப் பஞ்சாக்ஷரம் என்பர். ஓம் என்பதே பஞ்சாக்ஷரத்தின் சுருக்கம்.

பாரதியார், திலகர் நாமம் எப்படி பக்தர்களால், தேசபக்தர்களால் போற்றப்படுகின்றது என்று கூறியுள்ளார்? அவர் கூறியதாவது:

அஞ்செழுத்தினைச் சைவர் மொழிதல் போல்
அன்பொடு ஓதும் பெயருடை ஆரியன் திலகன்.

ஓம் என்பதே ஐந்தெழுத்தின் சுருக்கமான வடிவம் என்று கூறினேன். இந்த ஓம் என்பதே பிரமப் பொருள்தான். சிவனாரை "ஓங்காரமாய் நின்ற மெய்யா" என்று மணிவாசகர் போற்றுகிறார்.

ஓமெனப் பெரியோர்கள் ஓதும் "பிரணவத்தை எப்போதும் சிவரூபமாகவே தியானிக்க வேண்டும். இது நான்கு அம்சங்களோடு கூடியது. நான்கு அம்சங்களும் நான்கு வேதங்களாம். முதல் அம்சம் அகாரம்; இரண்டாம் அம்சம் உகாரம்; மூன்றாம் அம்சம் மகாரம்; நான்காம் அம்சம் அர்த்தமாத்திரையாகிய மிக சூக்ஷ்மமான நாதரூபம்."

அர்த்த மாத்திரையை அரை மாத்திரை என்று அப்பர் அடிகள் அருளியுள்ளார். "அரை மாத்திரைக்குள் அடங்கும் அடி" என்பதே வாக்கீக வேதம்.

மணிவாசகர் சிவனைத் தத்துவன் என்றே கூறியுள்ளார். "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்பது மணிவாசகம்.

தத்துவன் என்றால் உண்மைப் பொருள் என்று அர்த்தம். இந்த உண்மை விளக்கத்தை வழங்கியவர் சோளங்கிபுரம் சிவ. அருணகிரி முதலியார் அவர்கள். முதலியார் அவர்கள் வடமொழி வேதக்கடல் கடந்து தமிழ்வேதக் கடலின் எல்லை தேர்ந்தவர்.

எக்காலத்தும் அழியாமல் நித்தியப் பொருளாய் உள்ளவர் மஹா தேவர் என்பது தோன்ற "த்வம் பசுபதி:" என்று ஜபாலோபநிடதம் செப்பியது. இத்தகு மஹாதேவரே தத்துவன் எனப்படுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மகாகவியும் விநாயகரை, "தத்துவமாகிய பிரணவமே" என்று விநாயகர் நான்மணிமாலையில் போற்றியுள்ளார்.

தத்வோபதேசம் என்பது சிவஞானம் அதாவது சிவோபதேசமாம்.

ஓம், தத், சத் என்ற மூன்றும் பரம்பொருளையே குறிக்கும். பாரதியாரும்,

ஸத்தெனத் தத்தெனச் சதுர் மறையாளர்
நித்தமும் போற்றும் நிர்மலத் தேவா!

என்றே விநாயகரை, தம்முடைய நான்மணி மாலையில் தோத்தரிக்கின்றார்.

"தத் த்வம் அஸி" என்பதோர் மஹா வாக்கியம். இதன் பெருமை ஏட்டில் அடங்காது. பாரதியாரும்,

யாமறிந்த மதங்கள் பல உளவாம் அன்றே;
யாவினுக்கு முட் புதைந்த கருத்து இங்கு ஒன்றே

என்று கூறி அதுவே தத்துவம் அஸி, அதாவது தத்வமஸி என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார். பாரதி அறுபத்து ஆறில் அறுபத்து ஆறாம் பாடலைப் பார்ப்போம்.

பூமியிலே வழங்கிவரு மதத்துக் கெல்லாம்
பொருளினை நாமிங்கு எடுத்துப் புகலக் கேளாய்;
சாமிநீ; சாமி நீ; கடவுள் நீயே;
தத்வமஸி; தத்வமஸி, நீயே யஃதாம்;
பூமியிலே நீ கடவுள் இல்லை யென்று
புகல்வது நின் மனத்துள்ளே புகுந்த மாயை;
சாமி நீ அம்மாயை தனை நீக்கி
ஸதாகாலம் "சிவோஹ"மென்று ஸாதிப்பாயே.

பரமன் பாவனைக்கு அப்பாற்பட்டவன். மாயையிலிருந்து வெளிப்பட்ட மனத்தின் பாவனையால் அப்பரமனோடு ஒன்ற முடியாது என்று கூறும் சைவ சித்தாந்தம், சிவோஹம் பாவனை மூலமே பதியோடு ஒன்ற முடியும் என்று அருளிய ரஹஸ்யத்தை இங்கு பாரதியார் கூறியிருப்பதைக் கண்டு பேர் ஆச்சரியம் கொள்ளாத சைவர் எவருமிலர்.

கேனோபநிடதம் தேக்கி வைத்திருக்கும் தத்வோபதேச சாரமாகவே பாரதி பாடிய பாடல் ஒன்று உண்டு. அதன் பேர் பரசிவ வெள்ளம் என்பது.

"உள்ளும் புறமுமா யுள்ளதெலாந் தானாகும்
வெள்ளமொன்றுண் டாமதனைத் தெய்வம்" என்பர் வேதியரே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பதி அகத்தும் உண்டு, புறத்தும் உண்டு; அகப்புறத்தும் உண்டு.

ஞானம், ஞேயம், ஞாதிரு என்பவை பற்றி இப்பாடலில் மகாகவி இப்படி அருளியுள்ளார்.

"காண்பார்தங் காட்சியாய்க்
காண்பாராய்க் காண்பொருளாய்
மாண்பார்ந் திருக்கும்
வகுத்துரைக்க வொண்ணாதே."

இப்பாடலில், "பாவித்தால் போதும் பரமநிலை எய்துதற்கே" என்றுள்ள சொற்கள் சிவோஹம் பாவனை பற்றிய.

பக்தி ஊனினை உருக்கி, உள் ஒளி பெருக்கும். பக்தி தத்துவக் கொடை தரும். இது பாரதி கண்ட உண்மை. 'பக்தியினாலே' என்று தொடங்கும் பாடலில், பக்தியினால் "மனத்திடை தத்துவம் உண்டாம்" என்று அறிவித்துள்ளார்.

பாரதியார் தரும் துலக்கங்கள் தத்துவ சாரமானவை. ஒரு சில காண்பம்.

"கவலைப் படுதலே கரு நரகம்மா."

"கவலை யற்றிருத்தலே முக்தி."

"நல்ல குணங்களே நம்மிடை யமரர் பதங்களாம்."

"நெஞ்சம் துவளாது இருத்தல் சுகம்."

"அஞ்சி உயிர்வாழ்தல் அறியாமை."

"நல்லருளை ஐயமறப் பற்றல் அறிவு."

"உண்மைகள் கண்டவர் இன்பங்கள் சேர்வார்."

"உண்மையின் பேர் தெய்வம் என்போம்."

"பொய்யகலத் தொழில் செய்வதே – பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்."

"உற்றவர் நட்டவர் ஊரார் – இவர்க்கு
உண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவம் ஆவது கண்டோம்."

"உலகோர் நலம் உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி."

"ஊருக் குழைத்திடல் யோகம்."

"நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்."

(வருந்துதல் : முயலுதல், உழைத்தல்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"போருக்கு நின்றிடும் போதும் – உளம்
பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞானம்."
(அன்றாட வாழ்க்கையே ஒரு போர்தான்.)

"தோன்றி அழிவது வாழ்க்கை – இதில்
துன்பத்தோ டின்பம் வெறுமை என்று ஓதும்
மூன்றில் எது வருமேனும் – களி
மூழ்கி நடத்தல் பரசிவமுக்தி."

அன்பை அடிப்படையாகக் கொண்டதே தத்துவமாம். அன்பையே தம்முடைய மதமாக அறிவித்தவர் பாரதியார். அவர் கூறியதாவது: "... நீவிர் என் மதத்தைக் கொண்மின்... உங்களுக்குத் தொழில் இங்கே அன்பு செய்தல் கண்டீர்."

துன்பங்கள் அனைத்தும் அன்பில் அழியும். ஆனால் அன்புக்கு அழிவில்லை.

'வேதம் புதுமை செய்' என்ற பாரதி, வேத தத்துவங்களைத் தமிழில் தந்திருக்கிறார்.

"தமஸோமா ஜ்யோதிர் கமய" என்னும் வேதம். இதைச் சாதிப்பார் "அல்லினுக்குள் பெருஞ் சுடர் காண்பவர்" என்கிறார் பாரதியார்.

"அஸதோமா ஸத் கமய" என்னும் வேதம். இதை, "கல்லினுக்குள் அறிவொளி காணு"தல் என்கிறார் மகாகவி.

"ம்ருத்யோ மா அம்ருதம் கமய" என்னும் வேதம். இதை "புல்லினில் வயிரப் படைகாணு"தல் என்கிறார் பாரதியார்.

மகாகவி தத்துவ ஆய்வை விரும்புகின்றவர். வறட்டு விசாரத்தை வெறுப்பவர். பேடியர் ஞானப் பிதற்றலை அறவே கண்டனம் செய்பவர்.

பாகவதத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் கூறியது ஒன்று உண்டு. அவர் சொன்னார்: "முக்தியைக் கொடுத்தாலும் கொடுப்பேன்; பக்தியைக் கொடுக்க மாட்டேன்."

பக்தி நெறி படர்வார் வீடும் வேண்டா விறல் படைத்தோர். பாரதியாரை வாழ வைத்தது பக்தியே. தம் தேச பக்தியையும், தமிழ்மீது கொண்ட பக்தியையும், கடவுள் பக்தியையும் தம் பாடல்களில் ஸோமரஸமாய்ப் பிழிந்து சொக்க வடித்து வைத்தார். சொல்லின் திறம் ஓய்ந்த மோனத் திருக்காட்சியை, சொல்லின் வளமெல்லாம் முறுகுற்று, கனிந்து, கசிவந்த தித்திப்பில் தோய்த்துத் தேமரத் தமிழோசையில் வார்த்து ஒன்பான் சுவை சிவணியப் பாடல்களாக வழங்கினார். சொல்லுராய்ந்த தீயின் சுடரெழக் கனிந்த நாவுடைய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாவலரான பாவலர், மண்மாசு அகன்ற வான்படு சொற்கள் கொண்டு உயிர்த்து நிற்கும் தத்துவ சாகரம் படைத்தார்.

பக்தியின் மகிமையினால், "உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளி தரும்; அக்கினி தோன்றும்; ஆண்மை வலியுறும்; திக்கெலாம் வென்று ஜெயக்கொடி நாட்டலாம்" என்றுரைத்தார்.

அகவிழியைத் திறந்திடில் விண் இங்கு தோன்றும்,
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்

என்று ஆனந்தக் கூத்து, இன்களி மகிழ்வோடு ஆடினார்.

நம்மிடம் பொருள்கள் வசப்பட்டிருந்தும், அவை நம்மால் அறியப்படா புழைக்கடை மூலிகைகள் ஆயினவே என்று கலுழ்ந்தார். நிலவைத் துய்க்க சந்திர மண்டலத்தைப் படை எடுக்க வேண்டுமா? அதன் ஒளி நம் கால்களை வருடுகின்றனவே. இவ்வூறு சுவையைத் துய்க்க வேண்டாமா? பாரதி உருவாக்கிய பாத்திரம் ஒன்றின் பெயர் வசுபதி. பாரதியே வசுபதி. வசுபதி பாடுகிறான்:

இன்பம் வேண்டில் வானைக் காண்பீர்
வானொளி தன்னை மண்ணில் காண்பீர்.

வேதமொழி விளங்கவில்லையே என்று ஏங்குவார் பலர். பிறவியினால் ஒருவன் பார்ப்பான் ஆக மாட்டான். "வேதம் அறிந்தவன் பார்ப்பான்" என்று தீர்மானமாக இச்செய்தியை வெளியிட்ட பாரதி, இயன்றளவு வேதங்களையும், உபநிடதங்களையும் தமிழில் வழங்கினார். மேலும் அவர் கூறினார்:

அனலைப் பணிந்து மலர் தூவுவோம்
தமிழில் பழ மறையைப் பாடுவோம்.

நாதப்பிரமமாக நாம் ஆகிவிட முடியுமே. எங்கும் நிறைநாத பிரமமாம் பசை மிதப்பில் ஒட்டிக் கொள்ளாமல் வாழ்தல் நம் சாமர்த்தியம் அல்லவா? வாக் தேவியை வசப்படுத்து. வேத விற்பன்னன் ஆகலாம். ரிக் வேதம் கூறுவது இவையே.

ப்ரஜாபதிர் வை இதம் ஆஸீத்|
ஆதியில் இருந்தது பிரமமே.
தஸ்ய வாக் த்விதீய ஆஸித்|
அதோடு வாக்கு வெளிப்பட்டது.
வாக் வை பரமம் ப்ரம்ம|
வாக்கே பரம பிரமம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆக இந்த வாக்கை வசப்படுத்த வேண்டும். "நல்ல மந்திரம் போல் சொல்லின்பம் வேண்டுமடா" என்ற பாரதியார், "சொல் ஒன்று வேண்டும்; தேவ சக்திகளை நம் முன்னே நிலைபெறச் செய்யும் சொல் வேண்டும்" என்றும் கூறினார். தமிழில் பழமறையைப் பாடினால் வான்பொருளை வரவழைக்க முடியும் என்று துணிந்தார்.

தேவர் வருக என்று சொல்வதோ - ஒரு
செம்மைத் தமிழ் மொழியை நாட்டினால்
ஆவல் அறிந்து வருவீர் கொலோ?

என்று வினவினார். இதற்காக அவர் வாணியைச் சரண் புகுந்தார். அவர் கூறுவதாவது:

வாணியைச் சரண் புகுந்தேன் - அருள்
வாக்களிப்பாள் எனத் திட மிகுந்தேன்.

இதனால் "வியன் உலகு அனைத்தையும் அமுது என நுகரும்" வேத வாழ்க்கை அவருக்கு வசமானது. ஆகவே அவர் பேதங்களைக் கடந்தார். ஒருமை நிலை உற்றார். அனைத்தும் தாமே என்ற அநுபூதியைக் கூடினார்.

காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெலாம் நாம் அன்றி வேறில்லை
நோக்க நோக்க களியாட்டம்

என்று ஜயபேரிகை கொட்டினார்.

பாரதியாருக்குச் சங்கர வேதாந்த, சைவ சித்தாந்தத் தத்துவ நுட்பங்கள் தடக்கை நெல்லிக்கனி ஆயின.

வையகத்தே சட வஸ்து இல்லை;
மண்ணும் கல்லும் சடமில்லை;
மெய்யுரைப்பேன் பேய் மனமே
மேலும் கீழும் பயமில்லை

என்று அறிவித்தார். எதையும் சிவமாகவே அவர் கண்டார். அப்பர் அடிகளும் "அங்கங்கும் சிவமாய் நின்றார் தாமே" என்றனர் அல்லரோ!

சைவ சித்தாந்தக் கடவுள் அம்மையப்பர். எத்திறம் ஈசன் நின்றான், அத்திறம் அவளும் நிற்பள் என்ற உண்மை மகாகவிக்கு வசமானது. அவர் பெற்ற போதம் சிவஞானபோதமாயிற்று. ஆகவே,

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

ஆதிப் பரம்பொருளின் ஊக்கம் – அதை
அன்னை யெனப் பணிதல் ஆக்கம்

என்று பாட்டு எடுத்தார். இது சிவஞானபோதத்தின் இரண்டாம் சூத்திரம் அன்றோ!

அவையே தானேயாய் இருவினையின்
போக்கு வரவு புரிய – ஆணையின்
நீக்கமின்றி நிற்கும் அன்றே.

அன்றே என்றால் தொன்றுதொட்டே என்று பொருள். அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய் என்று பிரித்துக் கொண்டு இந்நூற்பாவிற்கு விளக்கம் காண்டல் வேண்டும்.

அவையேயாய் : அபேதமாய்
தானேயாய் : பேதமாய்
அவையேதானேயாய் : பேதாபேதமாய் –

அதாவது அத்வைதம், த்வைதம், வசிஷ்டாத்வைதம் ஆகியவை இதில் இடம்பெறுகின்றன.

பாரதி பாடலில் வரும் "ஆக்கம்" என்ற சொல் "அனைத்தும் அவளால் வந்த ஆக்கம்" என்ற சிவஞான சித்தியார் வாக்கை நமக்குக் காட்டுகிறது.

இதே வகையில் பாரதியார் பாடிய சில அடிகள் சாத்திரம் பயிலாதாரைத் திக்குமுக்காடச் செய்யும். பாரதியாரின் "கண்ணன் என் சீடன்" என்ற பாடல் இப்படித் தொடங்குகிறது.

யானே யாகி என்னலால் பிறவாய்
யானும் அவையுமாய், இரண்டினும் வேறாய்
யாதோ பொருளாம் மாயக் கண்ணன். . .

ஏதாவது புரிகிறதா? இங்கு பாரதியார் அறிவிப்பது சைவ சித்தாந்தம் சாற்றும் அத்வைதம். இவ்வத்வைதம் ஒன்றாய், வேறாய், உடனாய் உள்ள உறவுநிலையை அறிவுறுத்தும்.

யானே ஆகி : ஒன்றாய் / அபேதமாய்

என்னலால் பிறவாய் : வேறாய்

யானும் அவையுமாய் : உடனாய்

இவையிற்றை விளக்க ஒரு தனிச்சொற்பொழிவே நிகழ்த்த வேண்டும். என் செய்ய?

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

பாரதியார் பாடிய, 'திக்குத் தெரியாத காட்டில்' என்று தொடங்கும் பாடலில் போற்றப்படும் கண்ணன் முக்கண்ணனே.

இப்பாடலின் தத்துவார்த்தத்தை அறிஞர் அறிவர். இப்பாடல் முப்பொருள் உண்மை சாதிப்பது.

காட்டில் சிக்கிக் கொண்ட பெண் : பசு / ஆன்மா.

பாட்டில் தஞ்சம் அளிக்கும் கண்ணன் : பதி.

காடும், காட்டில் உள்ளவையும்: பாசம்.

இப்பாடலில் இருவினைப் பயன்களும் காட்சி தருகின்றன.

பாட்டில் கூறப்பெறும் 'பாடி நகர்ந்து வரும் நதி' ஜீவநதி.

நேசக்கவிதை சொல்லும் பறவை: காமம்.

அஞ்சக் குரல் பழகும் புலிகள்: குரோதம்.

ஆசை பெற விழிக்கும் மான்கள்: மோகம்.

நீண்டே படுத்திருக்கும் பாம்பு: மதம்.

தன்னிச்சை கொண்டலையும் சிங்கம்: லோபம்.

கலங்கும் யானை: மாற்சரியம்.

கொலை வேடன் : ஐம்புலன்கள்.

சரண் அடையும் பெண் : இருவினை ஒப்பு, மலபரிபாகம் உற்று சக்தி நிபாதம் பெறுபவள்.

இப்பாடலில் ஐம்புல வேடன் சாத்திரங்களைப் பொருட்படுத்தவில்லை என்பதை பாரதியார் வெளிப்படையாகவே காட்டியுள்ளார்.

காலம் தோற்றுவிக்கப்பட்ட ஒன்று. ஆகவே அதற்கு அழிவு உண்டு. வித்தியாதத்துவத்தின் முதல் தத்துவம் காலம்.

ஊழிக்கூத்து என்ற தலைப்பில் அமைந்த பாடலில், "தானே எரியும் கோலம் கண்டே சாகும் காலம்" என்றும், "காலத்தொடு நிர்மூலம் படுமூவுலகும்" என்றும் மகாகவி பதிவு செய்துள்ளார்.

சிவஞானபோதம் சூத்திரம் மூன்று. மாயா இயந்திர தநுவினுள் இருக்கும் ஆன்மா இறைவன் உணர்த்த உணரும் என்று அறிவிக்கின்றது. இச்செய்தியை மகாகவி போகிற போக்கில் கூறியிருக்கிறார். அவர் கூறியதாவது: "தெய்வம் யாவும் உணர்த்திடும் தெய்வம். . ." "தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்" என்பது பிழையான பாடம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மனஸ் தத்துவத்தைப் பற்றி பாரதியார் அங்கங்கும் கூறியுள்ளார். அந்தக் கரணம் நான்கனுள் மனமும் ஒன்று. இந்த மனம் எதையும் ஐயுறும். இந்த மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம் என்று நாம் அறிவிக்கப்பட்டிருக்கிறோம். அதாவது மனம் வழி ஆன்மா படரக் கூடாது. ஆன்மா மனத்தைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். அந்தக் கரணம் நான்கு தத்துவங்கள் கொண்டது. சித்தம் ஒரு பொருள் இருப்பதை அறியும். மனம் அப்பொருள் இதுவா அல்லது வேறு ஒன்றா என்று ஐயுறும். புத்தி அது இன்னதுதான் என்று நிச்சயிக்கும். அதன்பின் ஆங்காரம் செயல்பட எழும்.

ஐயுறும் மனத்தைப் பாரதியார் "பொல்லாப் புழு" என்கிறார். மனம் மயக்கும்; புத்தி தெளிவிக்கும். இதையே மகாகவி, "மனமே, பொல்லாப் புழு உனைக் கொல்ல நினைத்த பின் புத்தி மயக்கம் உண்டோ?" என்று கூறியுள்ளார். மனம் லயப்பட்டல் மட்டும் போதாது. அதாவது மனம் ஒடுங்கினால் அது முழு வெற்றி அன்று. ஒடுங்கியது மீளவும் தோன்றும். ஆகவேதான் ரமண மகரிஷி, மனோநாசம் இயற்றப்பட வேண்டும் என்றார். மகாகவியும் மனத்தைக் கொல்ல வேண்டும் என்றார்.

மனம் என்பது மாயையில் (matter இல்) தோன்றியது. ஆகவே அதை mind என்று மொழிபெயர்க்கக் கூடாது. Mind என்பது consciousness, அதாவது உணர்வு.

ஒரோ வழி மனம், உளம் என்ற பொருளையும் பெறும். "மனத்துக் கண் மாசில னாதல்" என்று வள்ளுவரும் கூறியுள்ளார். மனம் தூய்மை பெற்றால், அதனால் விளைவது நன்மையே. ஆன்மா கட்டளை இடும் இடத்திற்கு மனம் செல்ல வேண்டும். மனம் சலித்துக் கொண்டே இருப்பதால் அதை நல்ல முறையில், வழியில், பணி கொள்ள வேண்டும். அங்ஙனம் செய்வதாக மகாகவி கூறுகிறார். "உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும் ஓட்டி மகிழ்ந்திடுவோம்" என்கின்றார் அவர்.

சைவ சித்தாந்தம் கூறும் ஆறு அத்வாக்கள் பற்றி பாரதியார் நன்கு அறிவார். "காலமாம் வனத்தில்" என்று தொடங்கும் பாடலில்,

ரீங்காரம் இட்டு உலவும் வண்டு. . . மூல
அத்துவாக்கள் எனும் கால்கள் ஆறு உடையது

என்று பதிவு செய்திருக்கிறார்.

பாரதியார் அங்கங்கும் தத்துவச் செய்திகளை கூறி உள்ளார். "நிலாவையும் வானத்து மீனையும்" என்று தொடங்கும் ஒரு பாடலை பாரதியார் பாடியுள்ளார். அப்பாடல் இப்படி முடிகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"மண்ணுலகத்து நல்லோசைகள் காற்றெனும்
வானவன் கொண்டு தந்தான்
பண்ணில் இசைத்து அவ்வொலிகள் அனைத்தையும்
பாடி மகிழ்ந்திடுவோம்
நண்ணிவரு மணியோசையும் பின் அங்கு
நாய்கள் குரைப்பதுவும்
எண்ணு முன்னே "அன்னக் காவடி பிச்சை" என்று
ஏங்கிடுவான் குரலும்.
"வீதிக் கதவடைப்பதுங் கீழ்த்திசை
விம்மிடுஞ் சங்கொலியும்
வாதுகள் பேசிடு மாந்தர் குரலும்
மதலை யழுங்குரலும்
ஏதெது கொண்டு வருகுது காற்று இவை
எண்ணில் அகப்படுமோ?
சீதக் கதிர் மதி மேற்சென்று பாய்ந்தங்கு
தேன் உண்ணுவாய் மனமே."

மாலைக்கால நிகழ்ச்சிகளைப் பட்டியல் இட்ட பாரதி, பாட்டின் முடிவிலே "சீதக் கதிர்மதி மேற்சென்று பாய்ந்து அங்கு தேன் உண்ணுவாய் மனமே" என்று பாடலைத் தலைக்கட்டுகிறார். அப்படி அவர் முடிவாகக் கூறியது என்ன?

பாரதியார் ஒரு சித்தர். அவரே கூறியதாவது: "எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்..." அவர் கோவிந்த ஸ்வாமி, யாழ்ப்பாணத்துச் சுவாமி, குள்ளச்சாமி போன்ற சித்தர்களோடு நெருங்கிப் பழகியவர். ஆம், அவரும் ஒரு சித்தரே. மேற்சொன்ன பாட்டிலே அவர் காட்டியிருப்பது சிவயோக நெறி.

மூலாதாரத்து மூண்டெழு கனலை, அதாவது குண்டலி சக்தியை, மெல்ல மெல்ல ஒவ்வோர் ஆதாரத்தையும் தாண்டும்படி செய்து, முடிவிலே சந்திர மண்டலத்தை அது முட்டும்படி செயல் வேண்டும். அப்போது அமிர்த பிந்து சொட்டும். ஒரு சொட்டு அமிர்த பிந்து சித்தனுக்கு ஓராண்டு உணவு. இந்தச் சித்தயோகியால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழமுடியும். திருமூலர் ஒரு சித்தயோகி. இவரே சிவயோகி. இச்சிவயோக சாதனை பற்றியே மேற்சொன்ன பாடல் கூறியுள்ளது.

பாரதியார் வரைந்த கதைகள் பலப்பல. அதில் ஒன்று பேய்க்கூட்டம். இதன் இரண்டாம் பகுதியில் பாரதியார் கூறியிருப்பதை இப்போது கூற உள்ளேன். சுடுகாடு ஒன்றில் பாரதியார் உபதேசம் பெற்றார். இனி பாரதியார் பேசட்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"அந்தப் பரதேசி பின்னும் சொல்லுகிறான்: "மனுஷ்ய வாழ்க்கை சதமில்லை. பிறப்பை உடனே ஒழி. மண்ணில் பிறக்காதே. வானத்தில் ஏறு. சந்திர கலைகளில் உண்டாகும் அமிர்தத்தைப் பானஞ் செய்யும் யோகி ஒருவன்தான் உன் பாட்டில் கண்டபடி பயப்படாமல் இருக்க முடியும். அதைவிட்டு நமக்குத்தான் அகல எழுதத் தெரியுமென்று நீ கிறுக்கித் தள்ளி விட்டாய். குண்டலினி அக்கினியைத் தலைக்குக் கொண்டு போ. அப்போது அமிர்த கலசம் ஒழுகும். அந்த அக்கினியும் அமிர்தமும் ஒன்ற இன்ப வெள்ளத்திலே நீந்தலாம். இன்பம் இருந்தால் பயமில்லை. இருவினைக் கட்டை அறு. . . எல்லாம் சிவன் என்றறி."

பாரதியார் சிவயோகம் பயின்றவர். நெல்லையப்பர், அவர் ஓர் ஜீவன் முக்தர் என்கிறார். ஜீவன் முக்தர் பற்றி பாரதியார் கூறியதைக் கூறி இவ்வுரையை நிறைவு செய்கிறேன்.

சித்தத்திலே சிவ நாடுவார் – இங்கு
சேர்ந்து களித்து உல காளுவார் – நல்ல
மத்த மத வெங்களிறு போல் – நடை
வாய்ந்து இறுமாந்து திரிகுவார் – இங்கு
நித்த நிகழ் வனைத்துமே – எந்தை
நீண்ட திருவருளால் வரும் – இன்பம்
சூழ்ந்து கவலைகள் தள்ளியே
சோதி அறிவில் விளங்கவும் – உயர்
சூழ்ச்சி மதியில் விளங்கவும் – அற
நீதிமுறை வழுவாமலே – எந்த
நேரமும் பூமித் தொழில் செய்து – கலை
ஓதிப் பொருள் இயல் கண்டு தாம் – பிறர்
உற்றிடும் தொல்லைகள் மாற்றியே – இன்ப
மோதி விழிக்கும் விழியினார் – பெண்மை
மோகத்தில், செல்வத்தில், கீர்த்தியில்,
ஆடுதல், பாடுதல், சித்திரம் – கவி
யாதியனைய கலைகளில் – உள்ளம்
ஈடுபட்டென்று நடப்பவர் – பிறர்
ஈன நிலை கண்டு துள்ளுவார் – அவர்
நாடும் பொருள்கள் அனைத்தையும் – சில
நாளினில் எய்தப் பெறுகுவார் – அவர்
காடு புதரில் வளரினும் – தெய்வக்
காவனம் என்றதைப் போற்றலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாரதி கூறியது போல நம்பி ஆரூரர் வாழ்ந்தார் என்பதை எண்ணிப் பாருங்கள்.

திருலோக தரிசனத்தோடு என் உரை முடியும்.

நாக படத்துயர் நச்செ முமாயினும்
நாடி எழுந்து சுழல்
வேக முடன் னழகேறி வளைந்து
வளைந்தது விளையாடச்
சோக மும்மிழ் குரல் சோரத் தழுவலில்
சொர்க்க சுகம் வருமோ?
ஏக நிலை யுறவே யதனோடு உயிர்
ஏங்கும் பொருள் எதுவோ?
ஊனுடலும் முயிர் உணர்வமுதும் விழை
உண்மைப் பொருள் ஒன்றே
தேனுகு தமிழில் தீ யுமிழ் காதல்
தெய்வ நலம் கனியும்
மானுருள் விழியின் மானுயர் கவிதை
மாட்சி புகழ்ந்திடுவேன்
வானுளதாகும் தேயுறு மண்ணிலோர்
வார்த்தை கிடைத்திலதே.

ஓம் தத் ஸத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

11. திருலோக சீதாராம் வாழ்வும், தமிழ்த்தொண்டும்

திருலோக சீதாராம் என்ற திருப்பெயர் ஒரு மந்திரத் திருநாமமாகவே எனக்கு விளங்கி வருகின்றது. இப்பெயரில் ஒரு தனி வசீகரம் கரந்து உள்ளது. 'திருலோக' என்ற குறியீட்டுத் தொடர் விரிக்கப்பட்டால், 'திருவையாறு லோகநாத ஐயர்' என்ற முழுமை வெளிப்படும். வளர்ந்த ஊர், தந்தையர் பெயர் ஆகிய இரண்டையும் இணைத்துத் தம் பெயரை அவர் உலகிற்கு அறிவித்த பாணியே அலாதியாக உள்ளது. அவருடைய தந்தையாரின் தந்தையார் பெயர் சீதாராம ஐயர்; அவருடைய தாயாரின் பெயர் மீனாட்சி அம்மாள். திருலோகத்தின் தாயின் பெயர் மீனாட்சிசுந்தரம்.

லோகநாத ஐயர் திருவையாற்றில் ஜவுளி வியாபாரம் செய்து வந்தார். அவருடைய வீடு பாவாசாமி அக்ரஹாரம் என்ற தெருவில் அமைந்து இருந்தது. திருலோக சீதாராம் 1917 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று பிறந்தார்.

திருலோகத்தின் குடும்பத்தினர்க்கு 'ஹோதா' என்ற விருதுப்பெயர் உண்டு. வேள்வி ஒன்றை இயற்றுவார் பெயரை, வேள்விக் காலத்தில் கூறுதல் ஆகாது என்று மிருதி தடை செய்துள்ளது. அவரை யஜமான் என்றோ, அத்வர்யு என்றோ, ஹோதா என்றோ விளித்தல் வேண்டும். திருலோகத்தின் முன்னோர் ஒருவர் பலப்பல வேள்விகளைத் தொடர்ந்து இயற்றி வந்ததால் அப்பெரியார் 'ஹோதா' என்றே போற்றப்பட்டு வந்திருக்கிறார். அப்பெயர் அவர் வழி வந்தோருக்கும் அமைந்து விட்டது. இந்தத் திருநாமம் திருலோக சீதாராம் அவர்கட்கும் சிறப்பாகப் பொருந்தும். அவர் கூறியிருப்பது யாதெனில்,

> **செயல்தீர்ந்த செம்பொருளின் நாட்டம் மிக்குச்**
> **செய்கின்ற வேள்வி இந்தச் சிறிய வாழ்வு**

என்பதாம்.

திருலோக சீதாராம் மூன்று வயதுடைய சிறுவராக இருந்தபோதே அவருடைய தந்தையார் காலமாகி விட்டார். அப்போது அவருடைய சகோதரி லலிதாவிற்கு வயது ஒன்று. அவர் தம்பி, தாயின் வயிற்றில் கருவாய் இருந்தார். அவர் தாய் 22 ஆம் வயதிலேயே கைம்பெண்ணாகி விட்டார். வாழ்வு முழுதும் கைம்பெண் விரதத்தைக் கடுமையாக அநுட்டித்து வந்தார்.

திருலோக சீதாராம் திருவையாற்றில் கல்வி பயின்று வந்தார். பொருளாதார வசதி இன்மையால் அவர் கல்வி, அவரது எட்டாம் வகுப்போடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1930இல் நின்றுவிட்டது. குடும்பம் தத்தளித்தது. சில காலம் திருலோகத்தின் தாய் ஊரான தொண்டைமான் துறையில் அக்குடும்பம் இருந்து வந்தது.

அவருடைய 16 ஆம் வயதிலே அவர் பெரம்பலூரில் “இந்திய வாலிபன்” என்ற பத்திரிகையைத் தோற்றுவித்து நடத்தினார். 1936இல் அவருக்குத் திருமணம் நடந்தேறியது. அவர் மனைவியின் பெயர் ராஜாமணி. பிறகு விழுப்புரத்தில் “பால பாரதம்” என்ற பத்திரிகையைத் தோற்றுவித்தார். சில காலம் “ஆர்க்காடு தூதன்” பத்திரிகையையும் அவர் நடத்தி வந்தார்.

விழுப்புரத்தில் இவர் வசித்த காலத்தில், இவருடைய தம்பி பஞ்சாபகேசன் பொதுவுடைமைக் கட்சியில் தீவிரமாகச் செயல்பட்டார். இதனால் அவருக்கு ஊறுவிளையும் என்று கூறிய திருலோகம் அவரை ஒருநாள் கடுமையாகக் கண்டித்தார். அதைப் பொறாத தம்பி வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். இரண்டு நாளாக தம்பி வரவில்லை என்பதையறிந்து இவர் மிகவும் துயர் உற்றார். தம்பி வரும் வரையில் உணவு உட்கொள்வதில்லை எனறு முடிவெடுத்து, பூஜை அறைக்குள் சென்று விளக்கை ஏற்றினார். பாரதி கவிதை நூலைப் பாராயணம் செய்யத் தொடங்கினார். அல் உறங்கவில்லை. பகலில் பாராயணம். ஒரு நாள் கழிந்தது. இரண்டாம் நாள் மதியம் தம்பி வந்துவிட்டார். இவர் ஓடிச் சென்று தம்பியைக் கட்டிக் கொண்டார். “இனி உன்னைக் கோபிக்கமாட்டேன்; என்னை விட்டுப் பிரியாதே” என்று அழுது கொண்டே கூறினார். தம்பியும் பெரிதும் நெகிழ்ந்து போனார்.

விடாமல் பாரதியாரின் பாடல்களை மறித்து மறித்து ஓதியதால் பாரதியார் பாடல்கள் அனைத்தும் இவருக்கு மனப்பாடம் ஆயிற்று. திருலோகத்தின் நினைவாற்றல் அற்புதமானது. எதையும் ஓர் அல்லது இருமுறை படித்தால் படித்த செய்தி இவர் மனத்தடத்தில் நீங்காமல் நின்று விடும். சிறு வயதிலேயே பள்ளிப் படிப்பை இவர் நிறுத்தி விட்டாலும், தொண்டைமான் துறையில் வசித்து வந்த பெரும்புலவர் அந்தகக் கவிஞர் இராமசாமி படையாச்சியிடம் முறையாகத் தமிழ் கற்றார். அவர் பிரசங்கம் செய்யும் போது அவருக்காக தமிழ்ப் பாடல்களை இவரே வாய்விட்டுப் படிப்பார்.

திருலோகம் பங்குபெற்ற பத்திரிகைகள் “இந்திய வாலிபன்”, “பாலபாரதம்”, “ஆர்க்காடு தூதன்”, “கிராம ஊழியன்” என்பன. திருச்சி சிவஞானம்பிள்ளை நடத்தி வந்த “சிவாஜி” பத்திரிகையை இவர் விலை கொடுத்து வாங்கினார். Good-willக்கு ரூ.10,000/- கொடுத்தார். அதற்காக சீட்டெழுதிக் கொடுத்து, நாளடைவில் கடனைத் தீர்த்தார். “சிவாஜி” பத்திரிகையைப் பங்குதாரர்கள் மூலம் நடத்தி வந்த இவர், நாளடைவில் அதன் பூரண உரிமையாளர் ஆனார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருச்சியில் இவர் வசித்தபோது பேராசிரியர், முதல்வர் சாரநாதன் அவர்களின் நட்பைப் பெற்றார். ஃபிரான்சிஸ் தாம்ஸன் ஆங்கிலப் பாடலான, 'The Hound of Heaven' என்ற கவியை சாரநாதன் திருலோகத்துக்கு கற்பித்தார்.

"இதைத் தமிழாக்கம் செய்ய உன்னால் முடியும்; ஆகவே செய்க" என்று பேராசிரியர் ஆணை தந்தார். அவ்வாறே செய்து முடித்து, பேராசிரியரிடம் தந்தார். பிறகு, தம் மொழிபெயர்ப்பு சரிதானா என்று தெரிந்து கொள்ள தேசியக் கல்லூரிக்குச் சென்றார். அப்போது பேராசிரியர், தாம்ஸனின் பாடலை மாணவர்களுக்குப் போதித்து வந்தார். அவர் கண்ணில் படாமல் மறைவில் நின்று கொண்டு பாடத்தைத் திருலோகம் கேட்டார். இடையிடையே பேராசிரியர், திருலோகத்தின் மொழிபெயர்ப்பை மாணவர்களுக்குப் பரவசத்தோடு படித்துக் காட்டி வந்தார். சொற்பொழிவு முழுவதையும் கேட்ட திருலோகம், நிறைவோடு பேராசிரியரைப் பார்க்காமலேயே வீடு திரும்பினார்.

திருலோகம் அவர்களின் தாய்மொழி தெலுங்கு. அம்மொழியிலும் இவர் பல பாடல்களை இயற்றியுள்ளார். தமிழ்ச் சந்தங்களையே ஆதாரமாகக் கொண்டு தெலுங்கில் கவிதை இயற்றி வெற்றியும் கண்டார். இவருடைய தெலுங்குப் பாடல்களைக் கேட்ட முன்னாள் சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதி அரசரான அமரர் ராஜமன்னார் இவரை வியந்தும் நயந்தும் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

எட்டாம் வகுப்பைத் தாண்டாத திருலோக சீதாராம் ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தார். மிகச் சிறந்த சொற்பொழிவுகளைத் தமிழிலும், தெலுங்கிலும், ஆங்கிலத்திலும் நிகழ்த்தியுள்ளார். நோபல் பரிசு பெற்ற ஜெர்மனியரான ஹெர்மன் ஹெஸ்ஸேயின் 'சித்தார்த்தா' என்ற நவீனத்தை மொழிபெயர்க்க மூன்று அறிஞர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவருள் ஒருவர் சீதாராம். இரண்டாமவர் பாலபாரதி ச.து.சு.யோகியார். மூன்றாமவர் பெயர் நினைவில் இல்லை. மூவரிடமிருந்து மாதிரி மொழிபெயர்ப்புகள் பெறப்பட்டன. இவையிற்றை சீர்தூக்கி ஆய்வதற்கு ஆங்கிலப் பேராசிரியரான சுவாமிநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மூவருடைய மொழிபெயர்ப்புகளையும் ஆய்ந்த பேராசிரியர், திருலோகத்தின் மொழிபெயர்ப்பு திரிலோகத்தையும் வளைய வரும் என்று தீர்ப்புக் கூறவே, தென்மொழிகள் புத்தக டிரஸ்டு திருலோகத்தின் மொழிபெயர்ப்பை ஏற்று 1957இல் வெளியிட்டனர். இதற்கான மீள் பதிப்பு 'தமிழினி'யால் 1998இல் வெளியிடப்பட்டிருக்கிறது. மூலநூல் ஜெர்மன் மொழியில் வெளிவந்தது. அதற்கு அமைந்த ஆங்கில மொழிபெயர்ப்பை ஆதாரமாகக் கொண்டே திருலோகம் தமிழில் அதை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மொழிபெயர்த்தார். எப்படி இவ்வளவு பொருத்தமாகவும், அழகாகவும், சுவை குறையாமலும் தமிழில் மொழிபெயர்க்க இயன்றது என்று நான் வியந்து அவரை உசாவிய போது, மூலநூலுக்கும் ஆதிமூலமான இந்தியச் சூழல் தம்மால் நன்கு பயிலப்பட்ட ஒன்று அன்றோ? என்று அவர் விடையிறுத்தார்.

ஹெர்மன் ஹெஸ்ஸேயுடன் அவர் ஓர் அத்துவித உறவு பூண்டிருந்தார். ஹெஸ்ஸேயின் மரணம் பற்றி ஓர் இரவில் வானொலிச் செய்தியைக் கேட்ட அவர், தம் மனைவியிடம் தாம் குளிப்பதற்கு ஏற்பாடு செய்யச் சொன்னார். காரணம் கேட்ட மனைவியிடம், “என் பந்து ஒருவர் இறந்து போனார். ஆகவே நான் முழுக்குப் போட வேண்டும்” என்றார். மனைவியார், “யானும் குளிக்க வேண்டுமே” என்ற போது, “எனக்குத்தான் அவர் உறவினர். உனக்கு அல்லர்” என்று கூறி மறைந்த பந்துவிற்காக ஒரு முழுக்குப் போட்டார். இது பற்றி அவர் கூறியதாவது: “ஹெஸ்ஸேயிற்காக நான் தீட்டுக் காக்கவில்லை; என்றாலும் ஒரு முழுக்குப்போட்டேன்” என்று அவர் பத்திரிகையில் பதிவு செய்து வைத்தார்.

திருலோகம், தாமஸ் ஹூட் என்பாரின் புகழ் பெற்ற “சோகப்பாலம்” என்ற பாடலைப் பாசரசு காரியாலயம், புத்தகம் நான்கில் வெளியிட்டார். தமிழில் அப்பாடலுக்குக் “கசங்கிய மலர்” என்று மகுடமிட்டிருந்தார். “உதயம்” என்ற தலைப்பில் சீதாராமின் பாடல்களின் ஒரு சிறிய தொகுப்பு 1958இல் புதுப்புனல் வெளியீடாக வெளிவந்தது. இதில் லாங்ஃபெலோவின் அற்புதப் பாடலான ‘Arrow and the Song’ இன் தமிழாக்கம் வெளிவந்தது. திருலோகத்தின் மொழிபெயர்ப்புத் திறனுக்குக் கட்டியம் கூறும் இப்பாடலை மூலத்துடன் இப்போது இசைக்கிறேன்.

I shot an arrow into the air
It fell to earth I know not where;
For so swiftly it flew, the sight
Could not follow it in the flight.

வில் வளைத்து நாணேற்றி விட்ட சரம் ஒன்று
விண்வழியே சென்றெங்கோ வீழ்ந்துமறைந் திடவும்
நில்லென்று தடுத்தெதிரே நின்றகுறி எதுவோ?
நிலையறியா கட்புலனோ நினைக்கவசம் ஆகும்?

I breathed a song into the air
It fell to earth, I knew not where;
For who has sight so keen and strong
That it can follow the flight of song!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அன்றொரு நாள் நெஞ்சத்தில் ஆர்த்தெழுந்த கவிதை
ஆகாய வீதியிலே அலைபரவுங் காலை
நின்றெதிரே தேக்கியதோர் நெஞ்செதுவென் றறியேன்
நிலைகாணச் செலுமதனை நிறுத்தியுடன் செலவோ?

Long, long afterward, in an oak
I found the arrow, still unbroke
And the song, from beginning to end
I found again in the heart of a friend.

பன்னெடுநாள் சென்ற தன்பின் பச்சைமரம் ஒன்றில்
பாய்ந்திருந்த என்சரத்தைப் பார்த்துவியந் திட்டேன்
தன்னுளத்தில் என்கவிதை தேக்கியவன் முழுதும்
தனியிருந்து பாடிடவும் தலையசைத்து நின்றேன்.

கவிமணியின் பாணியைப் பின்பற்றி, திருலோகம் தமிழில் பெயர்த்தது மிகவும் போற்றற்குரியது. சீதாராம் மொழிபெயர்ப்புத் திறனை விளக்க பல காட்சிகள் காட்ட வேண்டும். கால வரையறை கருதி இந்த அளவில் நிறுத்திக் கொள்கிறேன்.

குடந்தையில் ஆங்கிலப் பேராசிரியர் K.G.சேஷாத்திரி அவர்கள், பி.ஏ.வகுப்பு மாணவர்கள் ஆங்கிலப் பாடல்களை விளங்கிக் கொள்வதில் இடர் உற்றதை உணர்ந்தார். பேராசிரியர் இதற்கு ஒரு யுக்தி செய்தார். பாடநூலில் உள்ள அனைத்து ஆங்கிலப் பாடல்களையும் திருலோகத்திடம் தந்து அவையிற்றிற்கான தமிழ்ச் செய்யுள்களை அவரிடம் பெற்றுக் கொண்டு, தம் மாணவர்களுக்குப் போதித்து வெற்றி கண்டார்.

1957 ஆம் ஆண்டில் சமகாலப் புலவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ஒரு பாடலைத் தெரிவு செய்து ஒரு தொகுப்புநூல் சமைத்துத் தருமாறு ஹிமாலயப் பிரசுரங்கள் நிறுவனத்தார் திருலோகத்தை வேண்டிக் கொண்டனர். சிறிதுகூட காலம் தாழ்த்தாமல் 55 புலவர்கள் பாடிய 55 பாடல்களைத் தெரிவு செய்து, ஒரு சிறந்த முன்னுரையும், ஒவ்வொரு புலவர் பற்றிய சிறிய அளவிலான - ஆனால் மதிப்பில் உயர்ந்த அறிமுகக் குறிப்புகளையும் வரைந்து கொடுத்தார். 'புதுத் தமிழ்க் கவிமலர்கள்' என்ற பெயரில் இந்நூல் வெளியாயிற்று. விலை ஒரு ரூபாய் மட்டுமே. திருலோகத்தைப் போன்று அந்நாளில் எவரே இப்படி ஒரு தமிழ்த் தொண்டை இயற்றினார்! இந்நூலில் தேசிக விநாயகம் பிள்ளை, பாரதிதாசன், நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளை, ச.து.சு.யோகி, சுத்தானந்த பாரதி, ரசிகமணி டி.கே.சி., ராய.சொக்கலிங்கம், பேராசிரியர் அ.சீநிவாசராகவன்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கி.வா.ஜகந்நாதன், பிச்சமூர்த்தி, மீ.ப.சோமசுந்தரம், பெ.தூரன், கம்பதாசன், கொத்தமங்கலம் சுப்பு, துறைவன், சுரபி, அப்பாசாமி, கலைவாணன், புதுமைப்பித்தன், சாலிவாஹனன் போன்றோர் பாடல்கள் அலங்கரிக்கின்றன. இவரால் தொகுக்கப்பட்ட பாடல் அனைத்தும் இவருக்கு மனப்பாடம்.

இவருடைய மிகச் சிறந்த நெடும்பாடலான கந்தர்வ கானம் பற்றிய வரலாற்றை இங்கு நான் கூற வேண்டும். இவருடைய நீண்ட பாடல் ஒன்றை ஒரு மணி நேரத்திற்கு வானொலியில் ஒலிபரப்ப வேண்டும் என்றும், அது நன்கு அமைய வேண்டும் என்றும் இவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அந்நாளில் முன்பதிவு செய்து, பிறகு ஒலிபரப்புவது என்ற முறை அமலில் இல்லை. நேரடி ஒலிப்பரப்பே மேற்கொள்ளப்பட்டது. திருச்சி வானொலி இயக்குநர் அச்சமுறும் நிகழ்வு ஒன்று நேர்ந்தது. ஒலிபரப்புக்கு ஒரு வாரம் முன்பே ஒலிபரப்பப்பட வேண்டியதன் படிமம் ஒன்று அனுப்பப்பட வேண்டும். ஒலிபரப்புக்கு மூன்று நாள்களே எஞ்சியிருக்க, இவர் பாடலின் படிமத்தை அனுப்பி வைக்கவில்லை. கவலையில் ஆழ்ந்த இயக்குநர் திருலோக சீதாராம் வீட்டுக்கு வந்து, “பாடல் எழுதப்பட்டு விட்டதா?” என்று கேட்க, “இன்றிரவு உருவாகிவிடும்” என்று இவர் பதட்டமில்லாமல் விடை பகன்றார். இதைக் கேட்ட இயக்குநர், தம் அச்சத்தை வெளியிட்டார். “அஞ்சாதீர்கள். நாளை காலை பத்து மணிக்கு படியெடுக்கப் பாடல் உங்களுக்குக் கிடைக்கும்” என்று இவர் கூறிவிட்டு, அன்றிரவு பத்து மணிக்குத் தம்முடைய வெற்றிலைச் செல்லத்தை நிரப்பிக் கொண்டு, நண்பர் அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். நள்ளிரவு வரை எதை எதையோ எழுதி அடித்த வண்ணம் இருந்தார். பிறகு நடுநிசி தாண்டியவுடன் பத்து நிமிடம் தியானத்தில் இருந்துவிட்டு எழுதத் தொடங்கினார். காலை ஐந்து மணிக்குப் பாடலை எழுதி முடித்து விட்டு, பல் துலக்கி, காபி அருந்தியவுடன் பாட்டிற்கான சுத்தப் படியை வரைந்தார். பத்து மணிக்கு வானொலி நிலையத்திற்கு வந்த அப்படியை இயக்குநரிடம் சமர்ப்பித்துவிட்டார். அவர் அதைப் படித்துப் புளகாங்கிதம் உற்றார்.

மீண்டும் ஒரு பிரச்னை வந்தது. ஒரே குரலில் ஒரு மணி நேரம் நிகழ்ச்சியை ஒலிபரப்ப சட்டம் இடந்தரவில்லை. என்ன செய்வது என்று இயக்குநர் தவித்தார். உடனே திருலோகம், “கதையின் நடுவல் அசரீரி வரும். அதை வேறு குரலில் பதிவு செய்ய வேண்டும். இதற்காக பாரதியாரின் பெயர்த்தி லலிதா பாரதியை நான் ஏற்பாடு செய்கிறேன்” என்று கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டார். உரிய நாளில் திருலோகம் பாட, லலிதா பாரதி இடைஇடையே அசரீரியாக சில பகுதிகளைப் படித்தார். அதுநாள் வரையில் வானொலியில் இப்படி ஓர் அற்புத நிகழ்ச்சி நடந்தேறியதில்லை என்று பாராட்டாதார் எவருமில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

துணிவிற்குப் பெயர் போனவர் திருலோகம். எதையும் இவர் சமாளிக்க முடியும். இவரை பாரதிதாசன், "அஞ்சா நெஞ்சன் திருலோகம்" என்று பாடி வாழ்த்தியிருக்கிறார்.

மனிதாபிமானம் மிக்கவர் திருலோகம். அன்றாடம் மக்கள் அனைவரும் படும் அல்லல்களைப் பற்றி ஒரு நாள் தீர்க்க ஆலோசனை செய்தார். இதற்கு முடிவே இல்லையா என்று வருந்தி, ஒரு முடிவிற்கு வந்தார். அது இதுவே: ஒருவன் இறந்து போனால், உலக உபாதைகள் அவனை ஏதும் செய்யா. ஆகவே, நேற்றே இறந்து போனேன் என்று கற்பனை செய்து கொள்ளலாமே! அப்படியானால் இன்றைய கவலைகள் பற்றி ஏதும் சிந்திக்க வேண்டாம். என்றாலும், உயிர் இன்னமும் இருக்கின்றது. ஆகவே இயல்வது கரவாமல் முடிந்த உபகாரத்தை உலகிற்குச் செய்யவும் முடியும். இந்த எண்ணம் தமக்குத்தாம் முதன் முதலில் வந்தது என்று அவர் எண்ணவில்லை. பன்னரும் உபநிடதங்களில் இது நிச்சயமாகப் பதிவாகியிருக்கும். ஆகவே அவற்றைப் பரிசீலனை செய்ய வேண்டும். இதற்கென ஒரு குழு கூடி ஆய்வு செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார்.

இவர் கருதியவாறே ஒரு குழு அமைக்கப்பட்டது. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் முடிவெடுத்தார். மேலும் அதற்கு ஆண்டு விழாவும் தேவை என்று கண்டார். ஆண்டுக்கொருமுறை நடக்கும் கூட்டத்திற்குத் 'தேவசபை' என்றும், பிற கூட்டங்களுக்கு 'அமரர் சங்கம்' என்றும் பெயர் சூட்டினார். 'இங்கே அமரர் சங்கம் தோன்றும்' என்று பாரதி கூறியது இப்படியும் தோன்றலாமே என்று கருதினார்.

முதல்கூட்டம் எங்களுடைய கிராமத்தில், அதாவது திருநெய்த்தானத்தில் கூட்டப்பட்டது. கடோபநிஷத் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தேவ சபையின் பிரகஸ்பதியாக வடமொழிப் புலவர் சுவாமிநாத ஆத்ரேயர் தெரிவு செய்யப்பட்டார். திருலோகம் சமுஸ்கிருதம் அறியார். ஆகவே, இந்த ஏற்பாடு. பின்னாளில் பண்டிட்ஜி நரசிம்ம ராகவன், கரிச்சான் குஞ்சு ஆகிய இருவரும் ஆத்ரேயருடன் இணைந்தனர். காலையில் உபநிடத விளக்கம். இதில் பண்டிதர்கள் தர்க்கம் நடக்கும். பிற்பகல் திருலோகம் மட்டும் பேசுவார். கூட்டம் முடிந்ததும் அவர் அவரும் உடனே புறப்பட்டுச் செல்ல வேண்டும். எந்தக் கேள்வியும் அப்போது கேட்கக் கூடாது. அடுத்த கூட்டத்தின் முதல்நாள் இரவில் கேள்விகளை எழுப்பலாம் என்று அறிவித்தார். முதல் நாள் இரவு நடக்கும் கூட்டத்திற்கு 'அசுரசபை' என்று பெயர் கொடுத்தார். யார் வேண்டுமானாலும் கேள்விகள் கேட்கலாம். அவற்றிற்கான விடையை மறுநாள் பிற்பகல் இவர் அளிப்பார். சிறப்பான முறையில் இக்கூட்டங்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருநெய்த்தானம், மன்னார்குடி, பெருமாள் மலை அடிவாரம், திரு ஆனைக்கா, பராய்த்துறை, முக்கொம்பு போன்ற இடங்களில் நடந்தன. சபையில் திருலோகம் பேசுவதை நான் குறித்துக் கொண்டு வந்தேன். அவை சிறுசிறு புத்தகங்களாக வெளிவந்தன. திருலோகத்தின் கருத்து உபநிடத உண்மைகளோடும், பாரதியின் எண்ணங்களோடும், ரோம சக்கரவர்த்தி மார்குஸ் அரேலியஸ் கூற்றுக்களோடும் ஒத்து இருந்ததைக் கண்டுபிடித்தோம்.

கூட்டத்தில் பேராசிரியர் K.G. சேஷாத்திரி, M.S. நாடார், சமுஸ்கிருத பண்டிதர்கள், சுகபிரமம் ராமசாமி சாஸ்திரிகள், வழக்கறிஞர்கள், மருத்துவக் கல்லூரி முதல்வர் சிவராஜன், பின்னாளில் அட்டர்னி ஜெனரலாக விளங்கிய G. ராமசாமி, திருவாசகம் திருக்குறள் ஆகியவற்றை மொழிபெயர்த்த வன்மீக நாதன் பிள்ளை, மேலும் பலர் கலந்து கொண்டனர்.

வாக்கு என்பது பற்றி கவிஞர் திருலோக சீதாராம் கூறிய விளக்கம் அற்புதமானது. வாக்கு என்பதை கிரேக்கர்கள் Logos என்றனர். அறிவிப்பது நாக்கு; அறைவது நாக்கு; உசுப்புவது வாக்கு; உரைப்பது நாக்கு; ஊமைக்கும் வாக்கு உண்டு (இது சைவ சித்தாந்தம் சாற்றும் உண்மை). நன்று, தீது ஆகியவற்றின் ஆதாரம் வாக்கு. நா காக்க, உயிர் இன்பச் செம்பொன்னை உருக்கும் உளத்தீ நாக்கு.

வாக்குக்குள் அனைத்தும் உள; அனைத்துள்ளும் வாக்கு உண்டு. கல்லும் கவி பேசும். மரத்துள் கனி போலும், கனியுள் மரம்போலும் இருப்பது வாக்கு.

திருலோக சீதாராம் மனுதர்ம சாத்திரத்தைத் தமிழில் கண்டவர். சீதாராம் பாரதியின் ஞானபுத்திரர். பாரதியாரின் குடும்ப சேவைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். பாரதியாரின் மனைவி செல்லம்மாள் கடுமையான நோய்வாய்ப்பட்டபோது, இவர் அனைத்தையும் போட்டது போட்டபடியே விட்டுவிட்டு, செல்லம்மாளுக்குக் கைங்கர்யம் செய்யப் புறப்பட்டுப் போனார். மூன்று மாத காலம் கடுமையாக உழைத்தார். அல் உறங்கார்; பகலில் ஊழியம் செய்வார். செல்லம்மாள் திருலோகத்தை தாம் கருவுற்றுப் பெறாத பிள்ளை என்றே கொண்டாடி வந்தார். இவரது மடியில் சாய்ந்தபடியே செல்லம்மா உயிர் நீத்தார்.

இவ்வாறு செல்லம்மாள் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில்தான் அவர் வீட்டில் மனுதர்ம சாத்திரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் இருப்பதைக் கண்டு அதைப் படிக்கத் தொடங்கினார். படித்து முடித்ததும் அதைத் தமிழில் மொழிபெயர்க்க விழைவு கொண்டார். அதைச் சாதிக்கவும் செய்தார். இந்நூலை ஏ.கே.கோபாலன், தென்னிந்திய மொழிகள் டிரஸ்டு மூலம் 1961இல் வெளியிட்டார். அவரே இதை மீண்டும் 1989, 1994 ஆகிய

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
ஆண்டுகளில் மீள்பதிப்பும் செய்துள்ளார். மனுதர்ம சாத்திரத்திற்கு தமிழில் வெளிவந்த மொழிபெயர்ப்புகளில் தலைசிறந்ததாக விளங்கும் மொழிபெயர்ப்பு திருலோகம் இயற்றிய மொழிபெயர்ப்பே.

திருலோக சீதாராம் தமிழினுக்கு, மொழிபெயர்ப்பாளராய், கவிஞராய், கட்டுரையாளராய் செய்துள்ள தொண்டு மகோன்னமானது. இவர் தமிழ்ச் சொற்களின் நீள, அகல, உயர, ஆழ்ந்த கன பரிமாணங்களை உணர்ந்தவர். சொற்களைக் கையாளுவதில் இவருக்கு இருந்த வல்லமை பிறரிடத்தில் காண்டற்கு அரிய ஒன்று. தமிழ்மொழியில் ஊறித் திளைத்தவர். முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பெயர்த்து அப்பெற்றித்தாயுள்ள என்று முள தென்றமிழை அவர் நன்கு வசப்படுத்தி வைத்திருந்தார். இது வகையில் அவர் கூறியதைக் கூறுகிறேன்:

“மொழி என்பது மனிதன் பெற்றுள்ள வரங்களில் தலைசிறந்த ஒன்று. தனது எண்ணங்களைப் பிறர்க்கு உணர்த்தவும், எல்லையற்ற காலமெல்லாம் நிலைநிற்குமாறு செய்யவும், மொழி மனிதனுக்குப் பயன்படுகிறது. சொற்களே எண்ணங்களின் சிறகுகள்.”

“பேச்சு, பாட்டு என்ற இருவகை இயக்கங்கள் சொற்களுக்கு அமைந்திருக்கின்றன. நேருக்கு நேர் செய்தியை விளக்குவது பேச்சு. இது அறிவின் தெளிவுக்கு ஒரு தோற்றம்.”

“மனித உள்ளத்தில் அறிவுடன் உணர்ச்சி என்பதொன்றும் உண்டல்லவா? சொற்களின் பொருள் எல்லைக்குள் உணர்ச்சிகள் அடங்கி விடுவதில்லை. உணர்ச்சிகளை அப்படியே வெளியிட சொற்களுக்கு ஆற்றல் இல்லையாயினும், தங்கள் நடிப்பின் பாவனைகள் மூலமாக அவ்வுணர்ச்சிகளைக் குறிப்பால் உணர்த்தி விடுகின்ற சொற்களின் இயக்கமே பாட்டு. பாட்டு என்பது உணர்ச்சிகளின் பண் வடிவம்.”

“சொற்களின் பேச்சு நடையை வசனம் என்றும், பாட்டை அதாவது பண் ஒழுங்கைக் கவிதை என்றும் கொள்ளுகிறோம்.”

“சொற்களின் வரலாறு ஆச்சர்யமானது. அவை நம்மினும் மூத்தவை. நமக்கு முன் இங்கு வாழ வந்துள்ள கோடானு கோடி மக்கள் பன்னெடுங்காலம் அவற்றை உச்சரித்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆசாபாசங்கள், இன்பதுன்பங்கள், வெற்றி வீழ்ச்சிகள் யாவும் மனோ சக்திகளாகச் சொற்களைச் சுற்றிப் படர்ந்து ஏடுகளாகப் படிந்து அவற்றிற்குப் பொருளும், கனமும், சுவையும், உயிர்ப்பும் ஊட்டியிருக்கின்றன.”

“சொல்லும் பொருளும் ஒன்றுடன் ஒன்று கலந்தும், ஒன்றில் ஒன்று கரந்தும், ஒன்றுள் ஒன்று புதைந்தும், ஒன்றை ஒன்று கவிந்தும் இரண்டறக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிடக்கின்றன. எனவே, பொருள் சொல்லை உமிழும்; சொல் பொருளை விளைக்கும். சொற்களுக்கும் நம்மைப் போன்றே அகப் புற வாழ்க்கை உண்டென்று அறிய வேண்டும்."

"யோக சமாதியில் ஆழ்ந்துள்ள ரிஷிகள் போல் ஒவ்வொரு சொல்லும் பொருள் நிறைந்து ததும்புகிறது."

"கணந்தோறும் நாம் குதப்புகின்ற எண்ணற்ற சொற்களில் அவற்றின் புறப்பொருள் மட்டுமே பொலிகிறது. ஆழ்ந்த உணர்ச்சிகளைச் சுமந்துவரும் கவிதையில் சொற்களின் அகவாழ்வு மலர்ந்து வருகிறது."

"சொற்களின் மர்மங்களை அறிந்த கவிஞர்களே சொல்லுக்கு அடங்காத இன்பங்களைச் சுட்டிக்காட்ட அச்சொற்களுக்குக் கட்டளை இடவல்லவர்கள். அத்தகைய ஆற்றலர்களின் ஆணைக்கு இணங்கி அவர்களின் இதயத் துடிப்பிற்கு ஏற்பத் தாளம் தவறாமல் சொற்கள் ஆடி வருகின்ற நடனமே கவிதை."

"சொல்லையும் பொருளையும், இவை இயைந்த யாப்பையும் காரணமாகக் கொண்டு கவிதை வடிவெடுத்தபோதிலும், இவை மட்டும் கவிதையல்ல. எனவே யாப்பமைதி கொண்ட செய்யுளே கவிதையாகி விடாது. ஏனென்றால் செய்யுள் என்பது கவிதை பவனி வருகின்ற ஒரு சிங்காரத் தேர். தேரே தேவி ஆகிவிடுமா?"

"பவனி வரும் பட்டத்தரசி தனது அரண்மனையில் இறங்கி நடந்து வருவாள்தானே! அது போன்று உரைநடையிலும் கவிதை ஒளி தெறிக்கத்தான் செய்யும்."

"நடைக்கும், நடனத்துக்கும் மதிப்பு வெவ்வேறுதான். அதுபோல் உரைநடையைக் காட்டிலும் யாப்பமைதி கொண்ட செய்யுளில் உலா வரும் போதுதான் கவிதைத் தேவியின் கொள்ளை அழகைக் கண்ணாரக் கண்டு களிக்கலாகும்."

"கவிதை ஒரு கலை. கலை வேறு, கட்டுமானம் வேறு. கட்டுமானம் ஒரு தொழில். படைப்பு உணர்ச்சியின் வெளியீடு, தொழில் அறிவின் ஊக்கம்."

"அறிவு ஆடை நெய்யும்; உணர்ச்சி அதில் அழகை நெய்யும். அறிவு வீடு கட்டும்; உணர்ச்சி அதில் அழகைக் காட்டும். அறிவு உணவு சமைக்கும்; உணர்ச்சி அதில் அறுசுவை கூட்டும். சுருங்கச் சொன்னால், அறிவு பயனை நாடும்; உணர்ச்சி அழகை நாடும். அறிவின் வேலை கட்டுமானம்; உணர்ச்சியின் வேலை கலை, அதாவது படைப்பு. படைப்பு ஓர் உயிர்த் தத்துவம். தன் மீதே தான் கொண்ட தீராத வேட்கையின் விளைவாக தன்னைத் தான் பெருக்கிக் கொள்ளும். உயிரின் இன்ப விளைவுதான் படைப்பு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளத்தில் ஊற்றெடுக்கும் இன்பச் சுமை தன்னைப் புலப்படுத்திக் கொள்ளும் பொருட்டு வளமார்ந்த சொற்களின் பண்ணீர்மையில் வந்து கொலுவமரும்போது அது கவியாகிறது. இன்ப உணர்வுதான் அடிப்படை. மகவு, மகிழ்ச்சியின் படைப்பு. அதைவிட அதற்கு வேறு என்ன பொருள் இருக்கிறது? பிரபஞ்சப் படைப்பு ஆண்டவனுடைய அலகிலா விளையாட்டின் விளைவு."

"சொற்களின் திறம் ஓய்ந்த மோனத்திருக்காட்சி கடவுள் என்றால், சொல்லின் வளம் முருகுற்றுக் கனிந்து கசிவந்த தித்திப்பே கவிதை."

இப்படி மொழி, சொல், பேச்சு, பாட்டு, கட்டுமானம், கலை, அறிவு, உணர்ச்சி, வசனம், கவிதை, கடவுள் என்பனவற்றிற்கு யாரே திருலோகம் போல் விளக்கம் தந்துள்ளார்!

ஏனையோரைப் போன்று திருலோகம் ஒரு சாதாரணக் கவிஞர் அல்லர். தத்துவ இயல், உள இயல், ஆன்ம இயல் ஆகிய அனைத்து இயல்களையும் துறைபோக உணர்ந்த ஒரு metaphysical கவி ஆவார். அவர் பாடல்களின் பொருள் மேலே மிதக்கும் தன்மையது அன்று. அவர் வாசகர்களுக்குத் தகத்தக அருள்புரிவார். அவர் கவிகளுக்குள் புகப்புக இன்பம் பிலிற்றும். மாதிரிக்கு ஒரு பாடலைக் காட்டுகிறேன்;

கோலம் மிகுந்தொளி கூட்டி மயக்கமும் காட்டி எழும்
காலம் என்றே பெருங் கற்பனைக்கே மயலாகி நின்று
சாலப் பல பல நாடகம் சார்ந்து சதாசிவமாய்
ஞாலத் திசை வெளியே படர்ந்தேங்கு முயிரினமே
கூட்டிப் பெருக்கிக் கழித்து வகுத்துங் கணக்கறியாப்
பாட்டிற் படுதுயர் ஏதும் பகுத்தறியாது
ஏட்டிற் பெருக்கி எழுதிய வெல்லாம் இலக்கியமாய்ப்
போட்டு வைப்போம் இது போதும் இதே நாம்புரி தவமே.

திருலோக மொழியில் பயிற்சி உள்ளவர்களே இப்பாடலைப் புரிந்து கொள்ள முடியும். அவர் சுயமாகச் சிந்தித்து, முனைமுறியாச் சொல்லடுக்கி அதீதப் பொருளை வெளிப்படுத்துபவர்.

அவர் சீர் அவிழும் சுடர் மீனொடு வானத்தையும் சமைத்தே ஓர் அழகாக விழுங்கிடும் உள்ளமும் அங்ஙனம் உண்டதைக் கவிதைச் சுவையாக உமிழும் வல்லபமும் கைவரப் பெற்றவர். என்றாலும் ஒரு கவிஞன் தனது மூலத்தையே நமக்கு உணர்த்திவிட முடியுமா என்பது சந்தேகம் என்றே அவர் அறிவித்தார். ஏனெனில் கவிதையில் நமக்கு வழங்குவது எல்லாம் சிருஷ்டி பரவசத்தில் கணநேரக் களிமயக்கில், தனது உள்ஒளியில் அவன் கண்ட திருக்காட்சியின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தித்திப்பைப் பற்றிய சேதியே தவிர, அந்தக் காட்சியையே அவன் நமக்கு வழங்கிவிடுவதில்லை என்பதே அவர் உணர்ந்த உண்மை. மேலும் அவர் கூறுவதாவது:

"ஏனெனில் அவன் கண்ட காட்சி அவனுக்கே மறந்துவிட்ட கனவு. எனவே, கவியின் மூலஸ்தானத்தை ஒரு விமர்சகன் போய் எட்டிப் பார்த்துவிட முடியும் என்பது நடவாத காரியம்."

முன்பொரு பாடல் எழுதினேன் - அந்த
மூலப்பிரதி கைவசம் இல்லை

என்ற நம் கவியின் வாக்கு படைப்புத் தொழிலின் ஆற்றலையும், அதன் அந்தரங்கத் திகைப்பின் வேதனையையும் ஒருங்கே பேசுகிறது.

பிளேட்டோ கூறியது போல், இவரும் "கவிஞர்கள் தாங்களே அறிந்து கொண்டுவிட இயலாத மகத்தான பரம ஞானங்களைப் பேசி விடுகிறார்கள்" என்று சாற்றியுள்ளார். மேலும் அவர் கூறுவதாவது: "நீ எங்குமே கவிதையைக் காண முடியாது, உன்னிடம் கவிதை இல்லை எனில்."

பரவெளியில் பறந்தும், மனக்கடலில் முத்துக் குளித்தும் வருகின்ற சித்த புருஷர் நம் சீதாராம். அவர் நமக்குத் தெரிவிக்கின்ற செய்தியின் சாரம் யாதெனில் கவிதை என்பது ஆத்மாவின் சாளரம் என்பதுதான். ப்ராண, ப்ரஞ்ஞை நிலைகளைக் கடந்து ஆத்ம லயத்தில் ஆழ்ந்திருக்கும் சீதாராம் பாழையும் ஊழையும் பண்ணில் பிசைந்து கவி வடிவில் தந்திருக்கிறார். காலமெல்லாம் கவிந்து நிற்கும் அந்த திவ்ய கோலத்தைப் பல்வேறு கோணங்களில் நின்று பற்றி வாங்கி இதமுறு இன்பரஸங்களாக வடித்து நமக்கு வழங்குவதே இவர் தொழில். பாரதியும், "நமக்குத் தொழில் கவிதை" என்றார்.

நல்ல கவிதை உணர்ச்சியின் மணி முடியில் முகிழ்க்கின்றது என்பது சாதாரண உண்மை. ஆனால் ஒப்பு உயர்வு அற்ற கவிதை உணர்ச்சியின் விளிம்பிற்கு அப்பால் உள்ள பொருள்களையும் பூரணமாக ஈர்த்து வாங்கிச் சொற்களில் தேக்கி வைத்தலாகும். அதாவது, சொற்களில் சிக்காப் பொருள்களைச் சொற்களில் சிமிழ்ப்புற வைத்தலே கவிதையின் சாகசம். இந்தச் சாகசம் நம் கவிஞரின் பிறப்புரிமை. ஆகவே அவருடைய ஒவ்வோர் அக்ஷரமும் பீஜாக்ஷரம்; ஒவ்வொரு வாக்கியமும் மகா வாக்கியம்.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய கவிஞர்களில் அநேகமாக அனைவருமே பாரதியின் கவிதை ஒளியில் கரைந்து போனவரே. ஆனால் நம் கவிஞரோ என்றால் பாரதியில் கரைந்து போய்விடாமல் பாரதியை அப்படியே முழுமையாக வாங்கி, அதில் தன்னிறைவு பெய்து ஒரு மகா

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

முழுமையாம் தனிக் கவிதையைப் படைத்து இருக்கிறார். எடுத்துக் காட்டாக ஒரு நறுக்கு:

கானில் வெயில் மழை காலம் பல கண்ட
கட்டை இரண்டினை ஏன் கடைந்தாய்?
தேனழல் சிந்திச் சிரித்துப் பின்னே உயிர்த்
தேசில் கனிந்து திளைத்திடத்தான்.

தேனழலும், உயிர்த் தேசும் பாரதியை நினைவுபடுத்தலாம். ஆனால் அவை பாரதி அல்ல.

ஒரு சில வாக்கியங்களில் சீதாராமின் பெருமையைக் கூறி முடிக்கிறேன்.

திருலோகம் சொல் உராய்ந்து எழுந்த தீயின் சுடர் எழக் கனிந்த நாவுடைய நாவலர். பாரதிக்குப் பிறகு, கலைமகள் இவருடைய நாவையே தனது சிம்மாசனமாகக் கொண்டாள். இவர் சொற்படு நயமறிவார். இசை தோய்ந்திடத் தொகுப்பதின் சுவை அறிவாராம் விற்பனத் தமிழ்ப் புலவர். மேலும் இவர், திசைமிதித்தேறி வானத்துப் பைங்காலில் வளையவரும் ஆற்றல் பெற்றவர். சொல்லெடுத்துச் சூக்குமத்தில் விட்டெறிந்து சுட்டபழம் உதிர்க்கும் சதுரர். மண்மாசு அகன்ற வான்படு சொற்கள் கொண்டு கவியும், உரைநடையும் புனைபவர். உண்மையில் இவர் ஓர் சித்த சாகரம். அச்சாகரத்தில் அவர் நல்வினைப் பயன்கள் பல்கின. அங்கு தத்துகின்ற திரையுஞ் சுழிகளும், தூக்கி எற்றிடும் காற்றும் உள்ளோட்டமும், சுத்த மோனப் பகுதியும், வெண்பனி சூழ்ந்த பாகமும், சுட்ட வெந்நீரும், அன்ன பிறவும் பலப்பல உள. இவரது மந்திரச் சொற்களால் சுந்தரத் தமிழ் கொழித்து ஒளிர்கிறது. தீக்கடைந்து எழுந்த சொல் இவர் சொல். அச்சொல்லின் சிறப்பைச் சாற்ற சொற்கள் பரவெளியில் மட்டுமே உள; மண்ணில் ஓர் வார்த்தை கிடைத்திலதே!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர்

தி.ந..இராமச்சந்திரன் சதாபிஷேக வெளியீடு